சுதேச
மித்திரன்
ஏப்ரல் 22,'56 விலை 4 அணா



ராமுவுக்கு வீடு திரும்ப நடுக்கம்...
என் துணி அழுக்காகி விட்டது, சோமு. அம்மா கோபித்துக் கொள்வாளே இப்போ.
என் துணி கூளுந்தான் அடிக்கடி அழுக்காகிறது, ராமு. ஆனுல் எங்கம்மா கோபித்துக் கொள்வதில்லை வா, போவோம்.
சோமுவின் வீட்டில்:
ஏன் அழுகிறுன் இவன்?
துணிகளை அழுக்காக்கிக் கொண்டான், ஆகவே வீட்டுக்குப்போக பயப்படுகிறுன்
ராமுவின் வீட்டில்:
மறுபடியும் அழுக்கோடு வந்தாயாடா! இன்மேலே உன்னை விளையாடப் போகவிடமாட்டேன்.
குழந்தையை கோபிக்காதீங்க. விளையாடும் போது குழந்தைகள் அழுக்காவது சகஜம்.
அரும்பாடுபட்டு ஒவ்வொரு நாளும் அடித்துத்துவைக்கிறேன், அதன் பிறகு துணிகள் சீக்கிரம் கிழிந்து விடுகின்றன.
அது வாஸ்தவம். அடித்துத்துவைத்தால் நூலிழைகள் நைந்து, துணிகள் சீக்கிரமே கிழிந்து விடும்
(அடித்துத் துவைத்த துணி பூதக் கண்ணுடி மூலம்)
ஆனுல் ஸன்லைட் சோப் உபயோகிக்கும் போது நீங்கள் அடித்துத்துவைக்கவே வேண்டியதில்லை. வளமையான அதன் நுரை எல்லா அழுக்குகளையும் அகற்றுகிறது. உங்கள் துணிகளும் நெடுங்காலம் உழைக்கும்.
உண்மைதான்: துரிதமாக நுரைத்துக்கொள்ளும் ஸன்லைட் சோப் துணிகளை அடித்துத்துவைக்காமலேயே தூய்மையாகவும் பிரகாசமாகவும் வெளுக்கிறது. இதனுல் துணிகள் நீடித்திருக்கிறது, எனக்கும் பணம் மீச்சம்.
SUNLIGHT SOAP
ஸன்லைட் சோப்
துணிகளை நீடித்திருக்கச் செய்கிறது.
இந்தியாவில் தயாரித்தது
S. 237-X

பொருளடக்கம்

Vol: XXVII] துன்முகி௵ சித்திரைமீ 10உ ஏப்ரல் 22, 1956 [No. 12

நிலேத்து நிற்க வழி 3
காற்று வாக்கிலே —அரட்டை 4
பிரமுகர் வரிசை 5
பரமானந்த நாடகம் —கோமதி சுவாமிநாதன் 6
இளங்கோ தீர்காயு —பி. கோதண்டராமன் 10
தலேநகர் தபால் 12
துப்பறியும் சுப்புடு —சந்தனு 13
திரிவேணி —ஹேமா ஆனந்ததீர்த்தன் 14
எழுத்துலகம் —எஸ். ராஜா 17
சட்டம் பேசுகிறது —வழக்கறிஞர் 18
புனருத்தாரணம் —புஷ்யன் 19
புது உலகம் —வெ. ராதாகிருஷ்ணன் 24
இருட்டு —எம். வி. வெங்கட்ராம் 27
அதிசய வீணை —வாண்டு மாமா 35
மோக முள் —தி. ஜானகிராமன் 38
அடிக்கத் தொியாதவர் —எஸ். விஜயராகவன் 44
நாராயணீயம் —அனந்தராம தீக்ஷிதர் 47
நடந்த விஷயம் —என். பி. ஹரிஹரன் 49
இலங்கை லிகிதம் 50
கலா மண்டபம் 51
நகர அரங்கம் —ஸஞ்சாரி 54
வாசுதேவாச்சார் கீர்த்தனை 55

"மித்திரன்" வாரப்பதிப்பில் வெளிவரும் கதைகளில் பெயர்கள், சம்பவங்கள் எல்லாம் கற்பனையே; அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல

திரைக்குப் பின்

ஆர்வி

எழுதும் தொடர் கதை

★

விரைவில்

'மித்திர'னில் ஆரம்பமாகிறது.

காலச் சக்கரம்



உண்மை சொருபம்!
முஸ்லிம் லீகின் மறுபதிப்புத்தான் ஜனசங்கம்
—நேரு
முஸ்லிம் வகுப்புவாதம்
ஹிந்து வகுப்புவாதம்
கொன்று தீர்த்தாகிவிட்டது!
அமெரிக்க உதவிபெற்று, ராணுவக் கூட்டுகளில் பாகிஸ்தான் சேர்ந்திருப்பதால், காஷ்மீரில் வாக்கெடுப்புக்கு அஸ்திவாரமே தகர்க்கப்பட்டு விட்டது.
—நேரு
சியாட்டோ
யு.எஸ் உதவி
பாக்தாத் ஒப்பந்தம்
வாக்கெடுப்பு
பால் உற்பத்தியைப் பெருக்க உத்தேசித்துள்ளனர் சென்னை சர்க்கார்
ரூ 2 கோடியில் பால் பெருக்கும் திட்டம்

வாழிய செந்தமிழ் சுதேசமித்திரன் வாழ்க நற்றமிழர்

வாரப்பதிப்பு

நிலைத்து நிற்க வழி

கைத்தறித் தொழிலின் இன்றைய நிலை பெருமளவுக்குத் திருப்தியளிப்பதாக இருக்கின்றது. உற்பத்தி ஐம்பது சத விகிதம் உயர்ந்திருப்பதோடு, கைத்தறி ஜவுளிக்குக் கிராக்கியும் அதிகரித்திருக்கிறது. சில வருடங்களுக்கு முன் இத்தொழிலுக்கு நேர்ந்த ஆபத்து தவிர்க்கப்பட்டு, இந்த அளவேனும் முன்னேற வசதி கிடைத்திருப்பது குறித்து நிச்சயம் பெருமிதமடையலாம்.

ஆயினும், அபிவிருத்தி ஏற்பட்டதற்குக் காரணமென்ன என்பதையும் ஆராயவேண்டும். நெருக்கடியான தருணத்தில் சென்னை சர்க்கார் உறுதியுடன் இத்தொழிலுக்கு ஆக்கமளிக்க முற்பட்டனர். மில்களின் போட்டியிலிருந்து தப்ப வழிகள் தேடப்பட்டன. மில் துணிகளுக்கு 'ஸெஸ்' விதிப்பதன் மூலம் அவற்றின் விலை உயர்த்தப்பட்டது. அதே சமயத்தில் கைத்தறித் துணிகளுக்குச் சலுகை காட்டப்பட்டது. கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் செல்வ உதவி அளிக்கப்பட்டது; தனித் தறியாளரும் முன்னேற தூண்டுதல் கிடைத்தது. பிரசார பலத்தினால் கைத்தறித் துணியை ஜனங்கள் நாடும்படி செய்யப்பட்டது. பலதரப்பட்ட இத்தகைய உதவியினால் நிலைத்த தொழில், எக்காலத்திற்குமே இந்த ஆதரவை எதிர்பார்த்து நிற்க முடியுமா? சுயபலத்தைக் கொண்டே நிலைக்கச் செய்வது சாலச் சிறந்ததல்லவா என்பது சிந்திக்கத்தக்கது.

தொழில் வளமுற்று, நிலைபெற சில மாறுதல்கள் இன்றியமையாதவை என்று மத்திய வர்த்தக மந்திரி ஸ்ரீ டி. டி. கே. அகில இந்திய கைத்தறியாளர் மகாநாட்டில் வற்புறுத்தினார். கைத்தறி நெசவாளருக்கு உதவிபுரியச் சர்க்கார் கட்டுப்பட்டிருப்பதை அவர் மறுக்கவில்லை. ஆனால், கைத்தறிக்குப் பதில் விசைத்தறிகளை நெசவாளர் ஏற்கவேண்டுமென்பது அவர் கருத்து. ஆடைகளுக்கான தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகையில், 25 வருஷங்களில் எல்லாக் கைத்தறிகளும் விசைத்தறிகளாக மாறினால்கூட தேவையைப் பூர்த்தி செய்ய இயலாது என்பது அவர் அபிப்பிராயம்.

இம்மாறுதலைச் சாதிக்கச் சர்க்கார் பண உதவியளிப்பரென்றும், யாரையும் கட்டாயப்படுத்தப் போவதில்லையென்றும், இதனால் ஒரு நெசவாளிகூட வேலையின்றித் தவிக்கும் நிலைமை [illegible] விரும்பவில்லையென்றும் மந்திரியார் உறுதிமொழியளித்திருப்பதால், அவரது அந்தரங்கசுத்தியை நெசவாளர் ஏற்றுக்கொண்டு எந்த அளவுக்கு மேற்படி யோசனையை காரியகரமாக்கலாமென ஆராயவேண்டும். முக்கியமாகப் பண்டம் வாங்குவோர் இந்நிலையை—மில் துணி சரசமாகக் கிடைக்க வழியிருப்பினும் அதிக விலை கொடுத்தே வாங்கவேண்டிய நிர்ப்பந்த நிலையை—எவ்வளவு காலம் பொறுத்திருப்பர் என்பதையும், விசைத்தறி உபயோகத்தால் மில் போட்டிக்கு ஈடு கொடுத்துத் தாமும் சரிபட வழி உண்டல்லவா என்பதையும் நிதானமாகச் சிந்திக்கவேண்டும். நெசவாளருக்குக் கஷ்டமில்லாமல், கைத்தறித் துணிக்கும் ஆக்கம் ஏற்படும் வகையைத் தேடிக்கொள்வது சிறந்த மார்க்கமாகும்.

ஆரம்ப ஆசிரியருக்கு அனுகூலம்

ஆரம்ப ஆசிரியர்களுக்குக்கூட நல்ல காலம் பிறந்துவிட்டது போலிருக்கிறது. அவர்களுக்கு ஆறுதல்தரும் நல்ல செய்தியை மத்திய உதவிக் கல்வி மந்திரி வெளியிட்டிருக்கிறார். அதன் பிரகாரம், தேர்ச்சி பெறாத ஆசிரியர்களின் குறைந்தபட்ச சம்பளம் ரூ. 40 ஆகவும், தேர்ச்சி பெற்றவர்கள் சம்பளம் ரூ. 50 ஆகவும் உயர்த்தப்படுமாம். இதைத்தவிர வழக்கம்போல் பஞ்சப்படி நீடிக்குமாம்.

ஆசிரியர் தொழிலிலிருந்து பிரிக்க முடியாத கஷ்டங்களையும், சரியான ஊதியம் கிடைக்காதவரை தகுதியானவர் முன்வர மாட்டார்களென்பதையும், இந்த சம்பள உயர்வு அதிகமில்லையென்பதையும் மந்திரியார் ஒப்புக்கொண்டிருக்கிறார். ஆயினும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கல்வி இலாகா கோரிய தொகை அனுமதிக்கப்படாததால் இந்த அளவுக்குத்தான் சம்பள உயர்வு சாத்தியமென்கிறார். இதுவரை சொல்லளவில் இருந்துவந்த அனுதாபம் துளியேனும் செயலில் பரிணமித்திருப்பது குறித்து நாம் திருப்தியடையலாம்.

சம்பள உயர்வால் ஏற்படும் அதிகச் செலவில் பாதியை மான்யமாகக் கொடுக்க மத்திய சர்க்கார் முன்வந்திருக்கின்றனர். பாக்கிக்கான பொறுப்பை ராஜ்ய சர்க்கார்கள் ஏற்கவேண்டும். ஆகவே, இப்பிரச்னை இதோடு தீரவில்லை; ஆசிரியர்கள் நாளையே இவ்வுயர்வையும் எதிர்பார்க்க முடியாது. வழக்கமாக அனுதாபச் சொற்களோடு நிறுத்திக்கொள்ளும் ராஜ்ய சர்க்கார்கள் இந்த சந்தர்ப்பத்தையாவது பயன்படுத்திக்கொண்டு நியாயம் வழங்குமென எதிர்பார்க்கிறோம்.

காற்று வாக்கிலே..

கர்த்தப மகாத்மியம் !

"அட சீ, கழுதை"! அலட்சியமாக அதட்டலாகச் சொல்லும் காலம் மலையேறிவிட்டது! அண்மையில் ஒரு நாள், விசேஷ மரியாதைகளுடன் விமானப் பிரயாணம் செய்தார் கனம் கழுதையார். அமெரிக்க ஜனாதிபதிக்கு ஸ்பெயின் சர்வாதிகாரியின் அன்பளிப்பு! பாரதத்தின் நல்லெண்ணத் தூதுவர்களாகக் கரிகள் சென்றால், நம் நன்மதிப்பைக் காட்டக் கர்த்தபத்தை அனுப்பலாமே என்று அவர் எண்ணியிருக்கலாம். கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி. . . இதில் தகராறெல்லாம் தவறான—விலாசத்துக்குப் பொருந்தாத—பரிசு போய்ச் சேர்ந்ததுதான். ஜனாதிபதித் தேர்தல் திருவிழாவையொட்டியது பரிசு. ஐஸன்ஹோவர் கட்சியின் தேர்தல் சின்னமோ யானை. உண்மையில் அவர் எதிர்க் கட்சியின் சின்னமே கழுதை. மாற்றுக் கட்சிக் கழுதையை, ஆட்சி பீடத்தவருக்கு அனுப்பியது வினயமா, விஷமமா? விளங்காத புதிர்! "எதிர்க்கட்சியைக் கட்டி வைத்து உதை" என்று வேண்டுமானால், வியாக்யானம் கூறலாம்.

நம் ஊரிலும் கடந்த காலத் தேர்தலின் போது நம் நாட்டு "மன்னர்"களுக்கு இந்த "சின்ன"த் தடுமாற்றம் சர்வசாதாரணமாயிருந்தது. கழுதைக்கும், குதிரைக்கும் வித்தியாசம் தெரியாமல் திணறல்; வாக்காளர் திண்டாட்டம், சில அபேட்சகர்களுக்குக் கொண்டாட்டமாகவும் முடிந்தது. இரண்டு கட்சிகள் இருந்து, ஜனாதிபதித் தேர்தலின்போது நாடே இரண்டுபட்டு, ஜன்ம விரோதிகளிடை போராட்டம்போல ஆர்ப்பாட்டமாக, அமர்க்களமாகப் போட்டி நடந்தாலும், கொள்கை மயக்கத்தில், குட்டை குழப்புவதில் இறுதியில் இரண்டும் ஒன்றே என்ற முடிவுக்கு வந்திருக்கலாம், ஜனநாயகத்தின் அரண் என மார் தட்டிக்கொள்ளும் அமெரிக்காவிடமிருந்து கொள்ளை, கொள்ளையாகப் பணமும், பீரங்கியும் உதவியாகப் பெற்றிருக்கும் பாஸிஸ்ட் பிராங்கோ. கோபித்துக்கொள்ளவும் வகையில்லை. கழுதையைக் கண்ட பிறகுமா புத்தி தெளியவில்லை என்று பதிலடி பிறந்தால்? என்ன தர்மசங்கடம்!

ஜனநாயகமே ஒரு கழுதை என்பது சிலரது சித்தாந்தம். நம் ஊரில் ஒரு பெரியார் இருக்கிறாரே, அவர் அடிக்கடிக் கூறுமொரு திவ்ய வாக்கு. தமிழர்கள் அனைவரும் தான் சொன்னபடியே கேட்டு ஆட வேண்டுமென்பது அவரது போக்கு. ஆனால், தேர்தலில் போட்டியிடமட்டும் தயாரில்லை. குட்டு வெளிப்பட்டுவிட்டால்! பாருங்களேன், பக்கத்து இலங்கை நாட்டில் வாக்காளர் கொடுத்த உதை, ஆளும் கட்சி இருந்த இடம் தெரியவில்லை; அநேகமாக நிர்மூலம். அந்தக் கட்சித் தலைவரும், தானே சாஸ்வதப் பிரதமர் போலத்தான் பறைசாற்றி வந்தார். அவர் தலை தப்பியதே தம்பிரான் புண்ணியம்! 'வெள்ளையரின் அடிவருடிகளாக இருந்து, இந்திய மக்கள் அடிமைப்பட உடந்தையாக விருந்த திராவிடக் கழகங்களா இன்று மக்கள் நலனில் உண்மை அக்கறை கொண்டவையாக நடிப்பது?' என்று நம் நிதி மந்திரி அனுதினமும் சாடுகிறார். திராவிட வீரன் இராவணன் தீவிலோ ஆங்கிலோ—அமெரிக்கக் கும்பலுக்கு வால் பிடித்து வந்தவருக்குப் படுதோல்வி கிட்டியுள்ளது. நேருவின் நண்பருக்கே மகத்தான வெற்றி. கொத்தலாவலையின் கொட்டமடங்கியது கண்டு பிரிட்டிஷ், அமெரிக்கப் பத்திரிகைகள் திகிலடைந்து ஓலமிடுகின்றன; பூச்சாண்டி காட்டுகின்றன. கழுதை கத்தியென்ன பயன்? ஜனநாயகம் தீர்ப்பளித்துவிட்டது. வெளி விவகாரங்கள், உள்நாட்டு நிர்வாகம் இரண்டிலும் அன்றைய ஆட்சியாளர் போக்கில் மக்களது அளவு கடந்த அதிருப்தியும், அருவருப்பும் நிரூபணமாகிவிட்டன. அவர்களது அன்பர்கள் இனியும் விஷமத்தனமாக வாலாட்டினால், உதைதான்கிடைக்குமென்றும், சூசகமாகத் தெரிவிக்கப்பட்டுவிட்டது. பொறுமைக்கும்எல்லையுண்டல்லவா?

கழுதை செத்தாலும் விடமாட்டேன் என்று நம்மூர் தலைவரொருவர்தான் வீண் பிடிவாதம் பிடிக்கிறார். ஆனால், வடக்கே முஸ்லிம் லீக் சிருஷ்டித்த பாகிஸ்தானிலோ அதன் விபரீதப் போக்கை அம்பலமாக்கினார், அதன் பகுதியை ஆளும் பிரதமரே. ஆதரிப்பதாக வாக்களித்துத் துரோகம் இழைக்கும் இழிச்செயலை வெட்டவெளிச்சமாக்கினார். என்ன செய்வது? எல்லாம் பதவிநாதன் திருவிளையாடல்! மூலபலத்திலேயே பிளவு கண்டுவிட்டது. மிரட்டலுக்கு மசியாது, பயங்கொள்ளிகளுக்கே சமரச மார்க்கமெனக் கண்டித்து, மக்கள் தீர்ப்பளிக்கத் தேர்தலுக்கு நிற்கலாமென அறைகூவினால், கொல்லைப்புற வழியாக வந்து பதவிபீடங்களில் ஒட்டிக் கொண்டிருப்பவர்களுக்குக் குலைநடுக்கம். ஜனநாயகம் பேசுபவரைக் காலை வாரிவிட்டு, பதவியை ஸ்திரப்படுத்திக்கொள்வதில் வேட்கை, வேட்டை. நல்ல தமாஷ்!

ஊர் சிரிக்கும் இந்த லட்சணத்தில் பாரதத்தின் மீது அடாப் பழி சுமத்த மட்டும் வாயிருக்கிறது. பாக். ஆக்கிரமிப்பிலுள்ள காஷ்மீர் பிரதேசத்திலிருந்து ஹிந்துக்கள் முற்றிலும் விரட்டியடிக்கப்பட்டது உலகமறிந்த விஷயம். பாகிஸ்தானிலும் கிட்டத்தட்ட அதே லட்சணந்தான். ஆனால், காஷ்மீரிலிருந்து முஸ்லிம்களை வெளியேற்றி, அவர்களுடைய இடத்தில் ஹிந்துக்களைக் குடியேற்றுவதாக இந்தியா மீது புகார். கழுதை கீழே தள்ளியதுமல்லாமல் குழியும் பறிக்கிறதாம்! கடந்த எட்டு ஆண்டுகளாகக் காஷ்மீர் பிரச்னை மீது இரு நாடுகளுக்கும் நடந்த விவாதம், குறித்த தஸ்தாவேஜிகள் வண்டிக்கணக்கில் சேர்ந்திருப்பதாக மலைக்கிறார் நேரு. அந்தப் பிரச்னையைப் பைசல் செய்ய வேண்டுமானால், கழுதைப் பட்டாளமொன்றை அனுப்பி வைக்கலாம்!

—அரட்டை.



தமிழ் வருஷப் பிறப்பன்று மயிலை ரஸிக ரஞ்சனி சபா மண்டபத்தில் சென்னை தமிழ் எழுத்தாளர் சங்க ஆதரவில், திருவாய்மொழி பதிப்பு வெளியீட்டு விழா நடைபெற்றது. ராஜாஜி வைபவத்துக்குத் தலைமை தாங்கினார். (வலது) கல்கி ஞாபகார்த்தமாக காந்தி நகர் பள்ளிக்கூட மைதானத்தில், அடையாறு ஆர்ட் அகெடமி ஆதரவில் அமையவிருக்கும் மண்டபத்திற்கு 'மித்திரன்' ஆசிரியர் ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீனிவாஸன் [illegible]

வாழிய செந்தமிழ் — சுதேசமித்திரன் — வாழ்க நற்றமிழர்
வாரப்பதிப்பு

நிலைத்து நிற்க வழி

கைத்தறித் தொழிலின் இன்றைய நிலை பெருமளவுக்குத் திருப்தியளிப்பதாக இருக்கின்றது. உற்பத்தி ஐம்பது சத விகிதம் உயர்ந்திருப்பதோடு, கைத்தறி ஜவுளிக்குக் கிராக்கியும் அதிகரித்திருக்கிறது. சில வருடங்களுக்கு முன் இத்தொழிலுக்கு நேர்ந்த ஆபத்து தவிர்க்கப்பட்டு, இந்த அளவேனும் முன்னேற வசதி கிடைத்திருப்பது குறித்து நிச்சயம் பெருமிதமடையலாம்.

ஆயினும், அபிவிருத்தி ஏற்பட்டதற்குக் காரணமென்ன என்பதையும் ஆராயவேண்டும். நெருக்கடியான தருணத்தில் சென்னை சர்க்கார் உறுதியுடன் இத்தொழிலுக்கு ஆக்கமளிக்க முற்பட்டனர். மில்களின் போட்டியிலிருந்து தப்ப வழிகள் தேடப்பட்டன. மில் துணிகளுக்கு 'ஸெஸ்' விதிப்பதன் மூலம் அவற்றின் விலை உயர்த்தப்பட்டது. அதே சமயத்தில் கைத்தறித் துணிகளுக்குச் சலுகை காட்டப்பட்டது. கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் செல்வ உதவி அளிக்கப்பட்டது; தனித் தறியாளரும் முன்னேற தூண்டுதல் கிடைத்தது. பிரசார பலத்தினால் கைத்தறித் துணியை ஜனங்கள் நாடும்படி செய்யப்பட்டது. பலதரப்பட்ட இத்தகைய உதவியினால் நிலைத்த தொழில், எக்காலத்திற்குமே இந்த ஆதரவை எதிர்பார்த்து நிற்க முடியுமா? சுயபலத்தைக் கொண்டே நிலைக்கச் செய்வது சாலச் சிறந்ததல்லவா என்பது சிந்திக்கத்தக்கது.

தொழில் வளமுற்று, நிலைபெற சில மாறுதல்கள் இன்றியமையாதவை என்று மத்திய வர்த்தக மந்திரி ஸ்ரீ டி. டி. கே. அகில இந்திய கைத்தறியாளர் மகாநாட்டில் வற்புறுத்தினார். கைத்தறி நெசவாளருக்கு உதவிபுரியச் சர்க்கார் கட்டுப்பட்டிருப்பதை அவர் மறுக்கவில்லை. ஆனால், கைத்தறிக்குப் பதில் விசைத்தறிகளை நெசவாளர் ஏற்கவேண்டுமென்பது அவர் கருத்து. ஆடைகளுக்கான தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகையில், 25 வருஷங்களில் எல்லாக் கைத்தறிகளும் விசைத்தறிகளாக மாறினால்கூட தேவையைப் பூர்த்தி செய்ய இயலாது என்பது அவர் அபிப்பிராயம்.

இம்மாறுதலைச் சாதிக்கச் சர்க்கார் பண உதவியளிப்பரென்றும், யாரையும் கட்டாயப்படுத்தப் போவதில்லையென்றும், இதனால் ஒரு நெசவாளிகூட வேலையின்றித் தவிக்கும் நிலைமை ... விரும்பவில்லையென்றும் மந்திரியார் உறுதிமொழியளித்திருப்பதால், அவரது அந்தரங்கசுத்தியை நெசவாளர் ஏற்றுக்கொண்டு எந்த அளவுக்கு மேற்படி யோசனையை காரியகரமாக்கலாமென ஆராயவேண்டும். முக்கியமாகப் பண்டம் வாங்குவோர் இந்நிலையை—மில் துணி சரசமாகக் கிடைக்க வழியிருப்பினும் அதிக விலை கொடுத்தே வாங்கவேண்டிய நிர்ப்பந்த நிலையை—எவ்வளவு காலம் பொறுத்திருப்பர் என்பதையும், விசைத்தறி உபயோகத்தால் மில் போட்டிக்கு ஈடு கொடுத்துத் தாமும் சீர்பட வழி உண்டல்லவா என்பதையும் நிதானமாகச் சிந்திக்கவேண்டும். நெசவாளருக்குக் கஷ்டமில்லாமல், கைத்தறித் துணிக்கும் ஆக்கம் ஏற்படும் வகையைத் தேடிக்கொள்வது சிறந்த மார்க்கமாகும்.

ஆரம்ப ஆசிரியருக்கு அனுகூலம்

ஆரம்ப ஆசிரியர்களுக்குக்கூட நல்ல காலம் பிறந்துவிட்டது போலிருக்கிறது. அவர்களுக்கு ஆறுதல்தரும் நல்ல செய்தியை மத்திய உதவிக் கல்வி மந்திரி வெளியிட்டிருக்கிறார். அதன் பிரகாரம், தேர்ச்சி பெறாத ஆசிரியர்களின் குறைந்தபட்ச சம்பளம் ரூ. 40 ஆகவும், தேர்ச்சி பெற்றவர்கள் சம்பளம் ரூ. 50 ஆகவும் உயர்த்தப்படுமாம். இதைத்தவிர வழக்கம்போல் பஞ்சப்படி நீடிக்குமாம்.

ஆசிரியர் தொழிலிலிருந்து பிரிக்க முடியாத கஷ்டங்களையும், சரியான ஊதியம் கிடைக்காத வரை தகுதியானவர் முன்வர மாட்டார்களென்பதையும், இந்த சம்பள உயர்வு அதிகமில்லையென்பதையும் மந்திரியார் ஒப்புக்கொண்டிருக்கிறார். ஆயினும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கல்வி இலாகா கோரிய தொகை அனுமதிக்கப்படாததால் இந்த அளவுக்குத்தான் சம்பள உயர்வு சாத்தியமென்கிறார். இதுவரை சொல்லளவில் இருந்துவந்த அனுதாபம் துளியேனும் செயலில் பரிணமித்திருப்பது குறித்து நாம் திருப்தியடையலாம்.

சம்பள உயர்வால் ஏற்படும் அதிகச் செலவில் பாதியை மான்யமாகக் கொடுக்க மத்திய சர்க்கார் முன்வந்திருக்கின்றனர். பாக்கிக்கான பொறுப்பை ராஜ்ய சர்க்கார்கள் ஏற்கவேண்டும். ஆகவே, இப்பிரச்னை இதோடு தீரவில்லை; ஆசிரியர்கள் நாளையே இவ்வுயர்வையும் எதிர்பார்க்க முடியாது. வழக்கமாக அனுதாபச் சொற்களோடு நிறுத்திக்கொள்ளும் ராஜ்ய சர்க்கார்கள் இந்த சந்தர்ப்பத்தையாவது பயன்படுத்திக்கொண்டு நியாயம் வழங்குமென எதிர்பார்க்கிறோம்.

பிரமுகர் வரிசை:

ஹெர்பர்ட் மாரிஸன்

இளவரசுப் பட்டம் கட்டிக்கொண்ட பிறகு ராஜ்யம் பறிபோனால். . . ? இந்த மாதிரி அதிர்ஷ்டம் இவரிடம் இரு முறை வந்து உரசிவிட்டுச் சென்றிருக்கிறது. தொழிற் கட்சியின் அடுத்த தலைவர் ஹெர்பர்ட் மாரிஸன்தான் என்று பிரிட்டிஷ் மக்கள் இரண்டு தடவை எதிர்பார்த்து ஏமாந்திருக்கின்றனர்.

முதல் தடவை தலைமைப் பதவி இவரைவிட்டு அட்லி பக்கம் திரும்பியதற்கு, ஹெர்பர்ட் மாரிஸன் துடியான ஒரு தீவிரத் தலைவன் என்பதுதான் காரணம். நான்கு மாதங்களுக்கு முன்பு, துடியான ஒரு வாலிபத் தலைவர்தான் காலத்தின் தேவை எனத் தொழிற் கட்சியினர் கருதி, மாரிஸனைப் புறக்கணித்து கெயிட்ஸ்கெலைத் தேர்ந்தெடுத்தனர்.

இடையருது பார்லிமெண்டில் தொழிற் கட்சியின் உப தலைவராக இருந்து வந்திருக்கும் மாரிஸன் சுயமுயற்சியால் முன்னணிக்கு வந்தவர். சாதாரண போலீஸ்காரனின் புத்திரனாகப் பிறந்து, அரிச்சுவடி மாத்திரம் கற்றுக்கொண்டு, ஓட நடக்க அமர்த்தப்பட்ட பையனாக வாழ்க்கையைத் தொடங்கி, கடைச் சிப்பந்தியாகி, இறுதியில் ஒரு பத்திரிகையின் உதவி மானேஜரானார். அவருக்கிருந்த தொழிற் சங்க சிரத்தையும், புத்தி சாதுர்யமும் அவரைத் தொழிற் கட்சியில் பிரபலஸ்தராக்கிவிட்டன. அந்தப் பிராபல்யம் முதல் தொழிற் கட்சி சர்க்காரில் அவரைப் போக்குவரத்து மந்திரிப் பதவியில் கொண்டு போய்விட்டது.

யுத்த விரோதியாக இருந்தபோதிலும், ஹெர்பர்ட் மாரிஸனின் தேச பக்தி அவரை சர்ச்சில் மந்திரி சபையில் அங்கம் வகிக்கத் தூண்டிவிட்டது. 69 வயதுக்குள் உள்நாட்டு, அயல் நாட்டு மந்திரிப் பதவி வரை எட்டிய இவரது அரசியல் ஆரோகணம், வாக்கு வன்மை, எழுத்து வன்மை ஆகிய சிறப்பியல்புகளின் பயனாகும்.

திடீரென்று நடுவழியில் தடம் புரண்ட கூட்ஸ் வண்டி என் பிரயாணத்தின் போக்கையே மாற்றிவிட்டிருந்தது. மாலை ஐந்து மணிக்குக் காட்டுப்பட்டி ஸ்டேஷனை அடைந்து அங்கிருந்து 'மலர் வனம்' கிராமத்திற்குப் போக நான்கு மைல் வண்டிப்பாதையையும் இருள் கவியு முன்னமேயே கடந்துவிடலாம் என்பது என்னுடைய திட்டம். ஆனால் அன்று ரயில் போக்குவரத்து தடைப் பட்டதன் காரணமாக, என்னைச் சுமந்து சென்ற துரிதமில்லாத ரயில் இரவு பத்தேகால் மணிக்கு என்னைக் காட்டுப் பட்டியில் தன்னந் தனியனாக இறக்கி விட்டு விடைபெற்றுச் சென்றது. தூக்க மயக்கத்தில் விளக்கை ஆ ட் டி வ ண் டி யை அனுப்பிக்கொண்டிருந்த ஸ்டேஷன் மாஸ்டரின் கையில் டிக்கட்டைத் திணித்துவிட்டு ஸ்டேஷனுக்கு வெளியே வந்தேன்.

அந்த ஸ்டேஷனுக்குக் காட்டுப்பட்டி என்ற பெயர் பொருத்தமாகத்தான் இருந்தது. நான்கு மைல் சுற்றளவிற்கு மனித வாடையேயில்லாத இடம். கருவேல மாக்காடுகள் திட்டு திட்டாக இருந்தன. மலர்வனம் போன்ற பக்கத்து கிராமங்களுக்கு வசதியளிக்க சமீபத்தில்தான் அந்தச் சிறு ஸ்டேஷனைத் திறந்திருந்தார்கள்.

ஸ்டேஷன் மாஸ்டர் தன் அறைக்குள் நுழைந்து கதவைச் சாற்றிக்கொண்டார். எனக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. ஸ்டேஷன் பிளாட்பாரத்திலேயே முடங்கிக் கிடந்துவிட்டுக் காலையில்தான் மலர்வனம் போகும் வழியைப் பார்க்க வேண்டும் என்று தோன்றியது. அந்த வேளையில் என் நண்பன் ஜயசந்திரனை ஸ்டேஷனில் நான் எதிர்பார்க்கத் தயாரில்லை. கல்யாண மாப்பிள்ளையாகிய அவனுக்கு எத்தனை ஜோலிகளோ! மாலை ஐந்து மணி வண்டிக்கு வந்து பார்த்துவிட்டு, ஊர் திரும்பியிருக்கலாம்!

யோசித்துக்கொண்டே அந்த நிசப்தமான நிலவொளியிலே சில நிமிஷங்கள் நின்றேன். யாராவது துணை இருந்தால், அப்போதே நடந்து போய்விடலாம். தனி வழி நடக்க மனதிலே தைரியமில்லை. ஏனென்றால் மணிபர்ஸிலே பணம் இருந்தது.

என் சிந்தனையைக் கலைத்தது கலகலவென்று சலங்கை ஒலியுடன் வலது பக்கத்திருப்பத்தில் வந்துகொண்டிருந்த வில் வண்டி ஒன்று. கம்பீரமான காளைகள் பூட்டப்பட்டிருந்த வண்டி. வண்டிக்காரன் லாகவமாகக் கீழே குதித்து வண்டியை ஒரு பக்கமாக நிறுத்திவிட்டு என்னை நோக்கி வந்தான். "ஐயா! ரயில் பத்து மணிக்கு வரும்னுகளே! வந்துட்டுப் போயிருச்சோ?" என்று ஏமாற்றமும் பயமும் நிறைந்த குரலில் கேட்டான்.

அவனுடைய மீசை, தலைப்பாகை, அவன் ஓட்டிவந்த வண்டி, எல்லாமே அவனை, ஒரு செல்வந்தரின் வீட்டு வேலையாள் போல்தான் காண்பித்தன. அவன் பதட்டத்திலிருந்து, தன் யஜமானருக்காகத்தான் வண்டி கொண்டுவந்திருக்கிறான் என்றும் தோன்றியது.

"வண்டி சற்று முன்தான் வந்தது. என்னைத் தவிர வேறு யாருமே இங்கு இறங்கவில்லை" என்றேன்.

"சாமி காப்பாத்திருை! எங்க யசமான் வரேன்னு சொல்லியிருந்தாரு! சாயங்காலம் ஒரு நடை வந்துட்டுப் போனேன்! இனிமேல் நாளைக்கு மத்யானம்தான் வருவாரு" என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டு வண்டியைப் பார்க்கத் திரும்பினான். இரண்டடி நடந்தவன் திடீரென்று நின்று, மீண்டும் என்னை நோக்கி வந்தான்.

"நீங்க எங்கே போகணும்? இப்படி ஒண்டியாக இங்கே நிற்பது அபாயமாச்சே இந்த வேளையிலே! ஸ்டேஷன் மாஸ்டர் ஐயாகிட்டே சொல்லி, சாமான்கள் அறையிலே யாவது படுக்கக்கூடாது?" என்றான் அநுதாபத்துடன்.

"நான் மலர்வனம் போகணும்! ரயில் இப்படி திடீர் என்று தாமதமாக வரும் என்று நினைக்கவில்லை. . . ?"

"மலர்வனத்திற்கா? .. யாரு வீட்டுக்குங்க?"

"பெரிய பண்ணை ஜயசந்திரனின் ஆப்த நண்பன் நான். அவனுடைய கல்யாணத்திற்காகத்தான் வந்திருக்கிறேன். நாளைக்கு மறு நாள் கல்யாணம்..."

"ஓஹோ!...நான் இப்போ மலர்வனத்துக்கு அப்பாலே இருக்கிற புதுப்பாக்கம்தான் போறேன். நீங்க வண்டியிலே குந்துங்க! கொண்டு விடறேன்" என்று சொல்லிக்கொண்டே என் கையிலிருந்த பெட்டியை வாங்கிக்கொண்டான்.

"நீ மகாராஜனாக இருப்பாய்" என்று மனதிற்குள் வாழ்த்திக்கொண்டே அவனைப் பின்தொடர்ந்துபோய் வண்டியில் ஏறிக்கொண்டேன்.

2

தாளம் தவறாத நாட்டியக்காரியின் சதங்கை ஒலிபோல இசைத்துக்கொண்டு அந்த வண்டி மாடுகள் ஓடிக்கொண்டிருந்தன. பிரயாணம் மனதிற்கும் உடலுக்கும் இதமாகவே இருந்தது. ஸ்டேஷன் கட்டிடம் கொஞ்சம் கொஞ்சமாக நிலவொளிப் பார்வையிலிருந்து மறைந்துகொண்டு வந்தது.

"பெரியபண்ணை வீட்டுத் தம்பி உங்களுக்கு நெருங்கின பழக்கமோ?" என்றான் வண்டிக்காரன்.

"ஆமா! நாங்க கல்லூரியில் ஒன்றாகப் படித்தவர்கள்."

"தம்பி கல்யாணத்திற்கு வந்திருக்கிறீங்களாக்கும். கல்யாண ஏற்பாடு தடபுடல்படுது!..."

"ஒரே மகன்! அத்தனை செல்வத்திற்கும் அதிபன். தடபுடலாகத்தானே இருக்கும்!"

பரமானந்த நாடகம்

— கோமதிஸ்வாமிநாதன்

"ஹூம்! கல்யாணம் என்னவோ அந்த ஐயாவுக்கு இரண்டாம் கல்யாணம் தானே?"

நான் திடுக்கிட்டேன். ஜயசந்திரன் கடந்த இரண்டு மூன்று வருஷமாக கிராமத்தில் இருந்தான் என்பது என்னவோ உண்மை. ஆனால், அவன் அந்தக் காலத்தில் மணம் செய்துகொண்டான் என்று எனக்குத் தெரியாது.

"என்னப்பா! புதுசா இருக்கு விஷயம்? இரண்டாம் கல்யாணமா?" என்றேன்.

வண்டிக்காரன் சிரித்தான். "ஏன்! அந்தப் பொண்ணு—அதுதான் கல்யாணப் பொண்ணு மோஹனா இருக்கே! அதுக்குக்கூட இது இரண்டாம் கல்யாணம்தான்" என்றான் வண்டிக் காளைகளை விரட்டிக்கொண்டே!

எனக்கு வண்டிக்காரனின் புத்தி நிதானத்தைப்பற்றி சந்தேகம் ஏற்பட்டது. ஒரு வேளை பெரிய பண்ணை வீட்டாருக்கு ஆகாதவனோ என்றுகூடத் தோன்றியது. இல்லாதபோனால் இப்படி அநியாயமாக வதந்திகளைப் பரப்பமாட்டானல்லவா?

என் மௌனத்தின் காரணத்தைப் புரிந்துகொண்டவன்போல் அவனே பேசினான். "என்னங்க! திடுக்கிட்டுப் போனீங்களா?...அவங்க இரண்டு பேருமே ஏற்கெனவே கோவிலில் கல்யாணம் பண்ணிக்கிட்டாங்க! அது ஒத்திகைக் கல்யாணம் மாதிரி! நிஜமாக மேளதாளத்துடன் மறுபடியும் அவங்களுக்கே கல்யாணம் நாளைக்கு மறு நாள்! உங்களுக்கு விஷயத்தை உங்க சிநேகிதர் சொல்லலே போலிருக்கு!" என்றான். அவன் பேசிய விதம் என் ஆவலை ஒரேயடியாகத் தூண்டிவிட்டது.

"ஒத்திகைக் கல்யாணம், அரங்கேற்றக் கல்யாணம் என்றெல்லாம் சொல்லுகிறாயே? என்னப்பா! பெரிய நாடக விஷயமாக இருக்கும் போலிருக்கே?" என்றேன் ஆர்வத்துடன்.

"நாடகமேதான்! சரியான நாடகம். அதிகம் பேருக்குத் தெரியாது! ஏதோ எனக்குத் தெரிந்தவரை சொல்கிறேன்". மூக்கணாங் கயிற்றை வண்டிக் கூட்டின் சட்டத்தில் மாட்டிவிட்டு என் பக்கம் கொஞ்சம் சாய்ந்து உட்கார்ந்துகொண்டான். மாடுகள் நிதானமாக அந்த நிலவொளிப் பாதையில் நடந்துகொண்டிருந்தன.

3

"பெரிய பண்ணை ஐயா போன வருஷம் குற்றாலம் போயிருந்தபோது அவங்களுக்கும் மோஹனா அம்மா குடும்பத்திற்கும் பழக்கம் ஏற்பட்டது. மோஹனாவின் தந்தை பரமானந்தம் மிகுந்த செல்வந்தர். கிராமவாசி. அவருக்கு ஒரே பொண்ணு மோஹனா. தாயை இழந்தவள். சென்னைக் கலாசாலையில் கூட இரண்டு வருஷங்கள் படித்தவள். நல்ல அழகு. குணமும்கூட. ஜயசந்திரனுக்கு மோஹனாவை மிகவும் பிடித்துவிட்டது. மோஹனாவிற்கும்தான். ஆனால், அவர்கள்

நின்றார்.

பரமானந்தத்தின் உறவினர் வழியிலே ஒரு பையன் இருந்தான். அவன் இலங்கையிலே வியாபாரத் துறையிலே ஈடுபட்டு அமோகமாக சம்பாதித்துக்கொண்டிருந்தான். அவனுக்கு மோஹனாவை முடிபோட்டு விடவேண்டுமென்று திட்டம் போட்டிருந்தார். ஆகவே, ஜயசந்திரன்-மோஹனா உறவு அதிக பலமடையு முன்பே, அதைக் கத்தரிக்க எண்ணி தன் குற்றால வாசத்தைக் குறைத்துக்கொண்டு தன் கிராமமாகிய பொன்வேலிக்குத் திரும்பினார். மோஹனா ஏக்கமே உருவாக ஊர் திரும்பினாள். ஜயசந்திரனின் மனமும் உடைந்து விட்டது.

மலர்வனம் வந்த பிறகு ஜயசந்திரன் தன் தந்தையிடம் மனதை விட்டுச் சொன்னான். அவரும் தன் காரியஸ்தன் மூலம் பரமானந்தத்திடம் விவாகப் பேச்சுகளைத் துவக்கினார். ஆனால், பரமானந்தம் இடம் கொடுக்கவே இல்லை. தன் உறவுப் பையனுக்குத்தான் மோஹனா என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டார். அந்த ஏமாற்றத்திலேதான் ஜயசந்திரன் உள்ளத்திலும் ஒரு திட்டம் பிறந்தது.

மோஹனா உள்ளம் துவண்டுவிட்டது. தந்தையோ அவள் மனதைப் புரிந்து கொள்ளாத பிடிவாதக்காரராக இருந்தார். அந்த நிலையில் பொன்வேலிக்கு வந்த ஒரு குடுகுடுப்பைக்காரன், மோஹனாவின் உள்ளத்திலே தென்பை ஊட்டினான். அவள் நினைத்திருக்கும் மணாளன் அவளுக்கு நிச்சயம் கிட்டுவான் என்று ஜோசியம் சொன்னான். அத்துடன், மந்தரித்த ரக்ஷாபந்தனம் ஒன்றை கடித உருவில் ரகசியமாக வைத்துக்கொள்ளும்படி கொடுத்துவிட்டுப் போனான். அதில் கண்டிருந்ததைப் பார்த்த மோஹனா உவகை கொண்டாள். ஆண்டவன் தன் பக்கம் இருப்பார் என்ற நிச்சயமும் கொண்டாள்.

ஒரு வாரத்திற்குள், பொன்வேலி கிராமச் சாவடிக்கு அருகிலுள்ள மைதானத்தில், ஒரு மேடை நிர்மாணிக்கப்பட்டது. நகரத்திலிருந்து வந்திருந்த ஒரு பயில்முறை நாடக கோஷ்டி, மூன்று சிறந்த நாடகங்களை நடத்திக் காண்பிக்கும் என்ற விளம்பரங்களும் காணப்பட்டன.

பரமானந்தம் பொன்வேலியில் சிறந்த செல்வந்தராக மாத்திரம் அல்லாமல் ஒரு சிறந்த நாடக ரசிகராகவும் இருந்தார். நாடக கோஷ்டியினர் வந்தவுடன் அவரை வந்து கண்டு, மரியாதை செய்து, அவரை தினசரி நாடகத்திற்கு விஜயம் செய்யும்படி கேட்டுக்கொண்டார்கள். மூன்றாவது தினத்தன்று அவரை மேடையிலேற்றி கௌரவிக்க விரும்புவதாகவும் தெரிவித்தனர்.

பரமானந்தத்திற்கு உச்சி குளிர்ந்தது. நாடக கோஷ்டிக்கு வேண்டிய ஒத்தாசைகளெல்லாம் தாராளமாகக் கிடைக்க வழி செய்தார். ஒவ்வொரு நாளும் மோஹனாவுடன் வந்து, முன் ஆசனத்தில் அமர்ந்து நாடகங்களை ரசித்தார். நாடகங்கள் மிகவும் உயர்ந்த முறையில் நடந்தன.

மூன்றாவது தினம். கடைசி தினமும்

மானந்தமும் மோஹனாவும் வாத்தியக்காரர்களுக்குப் பின்னிருந்த ஆசனங்களில் அமர்ந்து நாடகத்தை ரசித்துக் கொண்டிருந்தார்கள்.

பாதி நாடகத்தில் நடிகர்கள் குழுவைச் சேர்ந்த ஒரு உப நடிகன் வந்து பரமானந்தத்தை அரங்கத்திற்குள் அழைத்துச் சென்றான்.

சில நிமிஷங்கள் கழித்து நாடகத்தின் மத்தியில் பாராட்டுப் பேச்சு ஆரம்பமாயிற்று. நாடக கோஷ்டித் தலைவனுக்கு உடல் நலம் சரியில்லையாதலால் உபதலைவன் பிரதானமாக நின்று, பரமானந்தத்தை மேடைக்கு அழைத்து வந்து நாற்காலியில் அமர்த்தினான். பரமானந்தத்தின் ரசிகத்தன்மையையும் அவர் உதவியையும் சிலாகித்தான். மாலையும் அணிவித்தான்.

பரமானந்தம் உற்சாகத்துடன் பேச எழுந்தார். நடிகர்களையும் நடிப்புத் திறனையும் பாராட்டினார். கடைசியாக, "நண்பர்களே! உங்களுக்கு ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி ஒன்று சொல்லப் போகிறேன். இந்தப் பயில்முறை-அமெச்சூர்-நாடக கோஷ்டியின் தலைவன் ஒரு செல்வச் சீமான் வீட்டுப் பிள்ளை, கல்வி அறிவில் தேர்ந்தவன். அவனுக்கே என் மகள் மோஹனாவைத் திருமணம் செய்து கொடுக்க நிச்சயித்து விட்டேன்" என்றார். கரகோஷம் வானைப் பிளந்தது. மோஹனா நாணத்தால் தலை குனிந்து கொண்டாள். பரமானந்தம் மீண்டும் தன் ஆசனத்திற்கு வந்ததும் நாடகம் தொடர்ந்து நடக்க ஆரம்பித்தது.

பரமானந்தம் கிளம்பி விட்டார். தலைவலி என்று பக்கத்தில் இருந்தவரிடம் சொன்னார். மோஹனாவும் பின்தொடர்ந்தாள். நாடக ஸ்வாரஸ்யத்தில் அவர்கள் போனதை ஒருவரும் கவனிக்கவில்லை. அரங்கத்திற்கு அப்பாலிருந்த ரஸ்தாவிற்கு வந்ததும், வில் வண்டியொன்று தயாராக இருந்தது. இருவரும் ஏறிக் கொண்டார்கள். வண்டி பறந்தது.

"அப்பாவிற்கு மயக்கம்..." என்றாள் மோஹனா.

"காலை வரை தான் கணக்காக இருக்கும்" என்று பதிலளித்தான் பரமானந்தத்தின் வேடம் கச்சிதமாகப் பொருந்தியிருந்த ஜயசந்திரன். மீசை, நரைத்த டோபா, கடுக்கன் இவைகளைக் கழட்டிக் கொண்டே, "மோஹனா! எப்படி என் நாடகம்? வேடப்பொருத்தம் எப்படி?" என்றான்.

"இதென்ன சாதாரண நாடகமா? துணிச்சலான நாடகம். அப்பாவைக் காலையில் சரிக்கட்ட வேண்டியது உங்கள் பொறுப்பு" என்றாள் மோகனா.

"அப்பப்பா! ஒரு வாரமாக உங்கள் அப்பாவைக் கவனித்து, அவர் போல் நடந்து, பேசித் தலையாட்டப் படாத பாடுபட்டேன்" என்றான் ஜயசந்திரன்.

வண்டி ஊர் எல்லையிலிருந்த அம்மன் கோவிலின் வாசலில் நின்றது. நள்ளிரவு. சந்நிதியில் குருக்கள் தேங்காய் பழத்துடன் தயாராக இருந்தார். அம்மன் சந்நிதியில் ஜயசந்திரன்

மோஹனாவின் கழுத்தில், தயாராக வைத்திருந்த தாலியைக் கட்டினான்.

"இதுவும் நாடகம் இல்லையே?" என்றாள் மோஹனா நா தழதழக்க.

"இது வாழ்க்கை நாடகத்தின் முதல் காட்சி" என்றான் அவன். குருக்கள் தீபாராதனை காட்டி பிரசாதம் கொடுத்தார்.

மோஹனா தன் வீட்டிற்கு ஜயசந்திரனோடு வந்தபோது, அவள் தகப்பனாரும் மயக்க நிலையிலேயே அங்கு கொண்டு வரப்பட்டிருந்தார். அவர் மேடைக்குள் ஏறினதுமே, அங்கு அவரை மயக்கத்திற்குள்ளாக்கி படுக்க வைத்துவிட்டு அவர் வேடத்தில் இருந்த ஜயசந்திரன் மேடையில் தோன்றினான். அவனேதான் குடுகுடுப்பாண்டியாக வந்து திட்டத்தை மோஹனாவிடம் தெரிவித்திருந்தான். கல்லூரி, கலாசாலை நாட்களில் அவனுக்குக் கிட்டியிருந்த உயர்ந்த மேடை அனுபவம் இந்தத் திட்டத்தில் வெற்றியளித்தது.

காலையில் தன் நினைவிற்கு வந்த பரமானந்தத்திடம் மோஹனாவும் ஜயசந்திரனும் விஷயத்தைச் சொன்னார்கள். அவர் சீறினார். "இதை அனுமதிக்க மாட்டேன்! கோர்ட்டிற்குப் போகிறேன்" என்று குதித்தார். மோஹனா நிதானமாகக் கழுத்திலிருந்த மஞ்சள் கயிற்றைக் காண்பித்தாள். "ஏனப்பா! நேற்று மேடையில் ஊரார் முன்னிலையில் நீங்களே இந்தத் திருமணத்திற்கு அனுமதி அளித்தீர்கள் என்று சாட்சியம் சொல்ல ஆயிரம் பேர் வருவார்கள்" என்று சொல்லி அர்த்தபுஷ்டியுடன் ஜயசந்திரனைப் பார்த்துச் சிரித்தாள். அந்தச் சூழ்நிலையை ஏற்படுத்தத்தானே ஜயசந்திரன் அந்த நாடகத்தை நடித்தான்.

பரமானந்தம் பெட்டிப் பாம்பாக ஆனார். சீக்கிரமே பெரிய பண்ணையுடன் கல்யாணப் பேச்சுப் பேச ஆள் அனுப்பினார். முறைப்படி பெரிய அளவில் மீண்டும் திருமணம் நடத்த ஜயசந்திரன் ஒப்புக்கொண்டான். நாடக ரகசியம் ஒருவாறாக அமுங்கிவிட்டது.

இப்போ சொல்லுங்க! நடக்கப்போற கல்யாணம் இரண்டு பேருக்குமே இரண்டாம் கல்யாணம்தானே?" என்றான் வண்டிக்காரன்.

4

வண்டிக்காரன் மீசையைத் திருகிக்கொண்டே "ஹை! ஹை!" என்று மாடுகளை விரட்டினான்.

"ஆமாம் ஜயசந்திரா! இரண்டாம் கல்யாணம்தான்" என்றேன் நிதானமாக.

"ஜயசந்திரனா?" என்று திகைத்தவாறு கேட்டான் வண்டி ஓட்டி.

"ஆமாம் உன்னுடைய பரமானந்த வேஷம் பூர்த்தியானதாக இருக்கலாம். ஆனால் உன் வண்டிக்கார வேஷம் பூர்த்தியாகவில்லை. உன் வைர மோதிரத்தைக் கழட்ட மறந்துவிட்டாய். நிலவிலே அந்த 'ஜ' ஒளி வீசுகிறது. கதை சொல்லும்போது, உன்னுடைய வேஷத்திற்குத் தகுந்த பேச்சையும் மறந்து விட்டாய்" என்றேன்.

"அட பாவி! கண்டுபிடித்துவிட்டாயா? இரவு பத்து மணி இருட்டிலே இந்த வேஷம் போட்டுப் பார்ப்போமே என்று தான் நானே வண்டியை ஓட்டிக்கொண்டு வந்தேன். ரயில் தாமதமாக வரும் என்று மாலையிலேயே விசாரித்துக்கொண்டேன்" என்றான்.

"பரமானந்த நாடகமெல்லாம்....." என்று நீட்டினேன்.

"அத்தனையும் நிஜமாக நடந்தது. வெறும் கதையல்ல! என் நடிப்புத் திறனின் வெற்றி. என் [illegible] யின் வெற்றி. என் காதலின் வெற்றி" என்றான் பெருமிதத்துடன் ஜயசந்திரன்.

மலர்வனம் கிராமத்தின் பெரிய தெரு வழியே எங்கள் வண்டி ஓட ஆரம்பித்தது. ஜயசந்திரன் பொய் மீசையையும், தலைப்பாகையையும் எடுத்து வைத்துவிட்டிருந்தான்.

பம்பாய் நிகழ்ச்சிகள்

சென்ற மாதம் 25-ந் தேதி பம்பாய் பாரதி கலா மன்றத்தினர் மன்றத்தின் இரண்டாவது ஆண்டு விழாவைக் கொண்டாடினர். பம்பாய் கஸ்டம்ஸ் கலெக்டர் ஸ்ரீ ஏ. வி. வெங்கடேஸ்வரன் விழாவுக்குத் தலைமை வகித்தார். உடன் நடந்த சிறுவர், சிறுமியர் பாரதிப் பாட்டுப் போட்டியில் கலந்து வெற்றி பெற்றவர்கட்கு ஸ்ரீமதி செல்வா வெங்கடேஸ்வரன் பரிசுகள் வழங்கினார். பின்னர் ஸ்ரீ வி. சுவாமிநாதனுடைய ஜால வித்தைகளையும் கூடியிருந்தவர்கள் கண்டு ரஸித்தனர். கடந்த இரண்டு வருஷத்தில் மன்றம் ஆற்றிய பணிகள் பற்றி ஸ்ரீமான்கள் என். எச். ஆத்திரேயாவும், கே. சிவராமனும் சொற்பொழிவாற்றினார்கள். பிறகு, ஸ்ரீ விஸ்வநாதனின் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது.

உப ஜனாதிபதி ஸ்ரீ எஸ். ராதாகிருஷ்ணன் அவர்கள் வாழ்த்துரையுடன் கூடிய ஒரு மலரையும் விழாவையொட்டி மன்றத்தினர் வெளியிட்டுள்ளனர்.

ஃ ஃ ஃ

ஸ்ரீ ஷண்முகானந்தா சபை ஆதரவில் 7-ந் தேதி மாலையில் ஸ்ரீ கல்யாண கிருஷ்ண பாகவதர் தேவகோட்டை ஸ்ரீ நாராயண அய்யங்கார் ஆகியோரின் ஜோடி வீணைக் கச்சேரியும், 8-ந் தேதி ஸ்ரீ நரஸிம்மலு கோஷ்டியினரின் பாட்டுக் கச்சேரியும் நடைபெற்றன. கச்சேரிகளுக்குத் தமிழ் இசை அபிமானிகள் பலர் வந்திருந்தனர்.

ஃ ஃ ஃ

மாதுங்காவில் பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டவர்கட்குத் தினம் இரவில் உபன்யாஸம் கேட்கும் சந்தர்ப்பம் வாய்ந்திருக்கின்றது. ஆஸ்தீக சமாஜத்தின் நிர்வாகிகள், மஞ்சக்குடி ஸ்ரீ ராஜகோபால சாஸ்திரிகளின் ஸ்ரீமத் மஹாபாரத உபன்யாஸத்தை நடத்தி வைக்கின்றனர்.

ஃ ஃ ஃ

'பான் தாப்' பஜனை சமாஜத்தின் ஆதரவில் இம்மாதம் 19-ந் தேதி முதல் 23-ந் தேதி வரை ஸ்ரீராமநவமி உத்ஸவம் கொண்டாடப்படுகிறது. ஆக்ரா ரோடில் இருக்கும் சோபனா கட்டிடத்தில் உத்ஸவம் நடைபெறுகிறது. பான் தாப் வாசிகளைத் தவிர, பக்திமான்கள் பலரும் விழாவில் பங்கெடுத்துக்கொள்கின்றனர். உத்ஸவத்தைச் சிறப்புடன் நிறைவேற்ற தமிழ் மக்கள் பொருள் உதவி செய்தும், நிர்வாகிகளுடன் ஒத்துழைத்தும் ஊக்கம் அளிக்கக் கோரப்படுகின்றனர்.



மேற்கு ஜெர்மனியிலுள்ள பிரசித்தி பெற்ற ஹிடெல்பெர்க் தொழிற்சாலையின் இன்ஜினிரும், போதகருமான மிஸ்டர் வில்லியம் எல்ப்னர், இம்மாதம் 7-ந் தேதி விமான மூலம் சென்னையில் வந்திறங்கியபோது சென்னை, ஈஸ்ட் ஏஷியாடிக் கம்பெனியைச் சேர்ந்த மிஸ்டர் ஸி. ஜே. பின்டஸென், ஸ்ரீ ஸி. எஸ். பிள்ளை ஆகியோரால் வரவேற்கப்பட்டார்.

கௌதம புத்தர் உயிரோடிருந்த காலத்திலேயே அவருடைய சீடர்களுக்குள் சண்டை சச்சரவுகள் ஏற்பட்டு வந்தன. அவர், பிரிவினையின் காரணங்களையும் ஆபத்துக்களையும் எடுத்துக்கூறி, எச்சரிக்கை செய்து வந்தார். சில சமயம் அடிதடி சண்டைகளும் மூண்டன. பகைமையினால் துயரம் தவிர வேறு பயனொன்றும் ஏற்படாதென்றும், பகைமையைத் துறந்து அன்பை மேற்கொள்வதே வழியென்றும் விளக்க, ஒரு நாள் அவர் பிக்குகளைப் பார்த்து இளங்கோ தீர்காயுவின் கதையைக் கூறினார். (ஜாதகக் கதை 371.) வினய பீடகத்திலும் காணப்படும் இக்கதை வருமாறு:

முன்னொரு காலத்தில், வாராணசியில் பிரம்மதத்தன் எனப் பெயர் பெற்ற ஆற்றல் வாய்ந்த மன்னன் ஒருவன் இருந்தான். அவன் கோசல மன்னனை திர்க்கதியின் மீது போர் தொடுத்து கோசலத்தைத் தாக்கினான். 'கோசல ராச்சியம் மிகச் சிறிது; திர்க்கதி என் படைகளை எதிர்த்து நிற்க முடியாது' என்று அவன் கருதினான்.

பெரும்படையையுடைய காசிமன்னனை எதிர்ப்பதில் பயனில்லையெனக் கண்ட திர்க்கதி, தன் ராச்சியத்தை அவனிடமே விட்டு ஓட்டம் பிடித்தான். நாடு நாடாக அலைந்து அவன் இறுதியில் வாராணசிக்கே வந்தான். அங்கே நகருக்கு வெளியே குயவன் ஒருவனின் இல்லத்தில் தானும் தன் மனைவியுமாக வசிக்கலானான்.

ராணி அங்கே ஆண் மகவு ஒன்றை ஈன்றாள். அவனை அவர்கள் தீர்காயு என்றழைத்தனர்.

தீர்காயு நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து காளைப் பருவமெய்தியபோது, மன்னன் எண்ணியதாவது: 'மன்னன் பிரம்மதத்தன் நமக்குப் பெருந்தீங்கு இழைத்துள்ளான். நாம் பழி வாங்குவோமென அவன் அஞ்சுகிறான். அந்த நிலையில் அவன் நம் மூவரையும் கண்டுபிடித்துக் கொள்வது திண்ணம்.' ஆகவே, அவன் தன் மகனை வெளியே அனுப்பிவிட்டான். தீர்காயு தன் தகப்பனாரிடமிருந்து நற்கல்வி பெற்றவன். அவன் சர்வ கலைகளையும் ஊக்கமாகப் பயின்று மிகவும் தேர்ச்சியடைந்திருந்தான்.

அது சமயம், மன்னன் திர்க்கதியின் நாவிதன் வாராணசியில் வாழ்ந்து வந்தான். தன் பூர்விக எசமானனை மன்னனை அவன் பார்த்துவிட்டான். பேராசை பிடித்தவனாதலால், அவன் இதை பிரம்மதத்தனிடம் சொல்லிவிட்டான். பிரம்மதத்தன், கோசல மன்னன் தன் மனைவியுடன் குயவன் ஒருவன் வீட்டில் மாறுவேடம் பூண்டு எவருமறியாமல் இருந்து வந்ததை அறிய வந்து, அவனையும், அவன் ராணியையும் பிடித்து சிரச்சேதம் செய்ய உத்தரவிட்டான். உத்தரவு பெற்ற நாட்டாண்மைக்காரன் திர்க்கதியைப் பிடித்துக் கொலைக்களத்திற்கு இட்டுச்சென்றான்.

கைது செய்யப்பட்ட மன்னன் வாராணசியின் தெருக்கள் வழியாக அழைத்துச் செல்லப்பட்டபோது, தன்னைப் பார்க்க வந்த மகனைக் கண்டான். தன் மகன் அங்கிருந்ததை வெளிப்படுத்தாமல் உஷாராக இருக்க வேண்டியிருந்தது. ஆயினும், தன் கடைசி புத்திமதியைத் தெரியப்படுத்த, "ஓ தீர்காயு, என் மகனே! நீளமாகக் காணப்படாதே, குறுகலாகவும் காணப்படாதே; ஏனெனில், பகையைப் பகையினால் தணிக்க முடியாது; பகையைப் பகையின்மையினாலேயே வெல்ல முடியும்" என்று உரக்கச் சொன்னான்.

கோசல மன்னனும், அவன் மனைவியும் குரூரமாகச் சிரச்சேதம் செய்யப்பட்டனர். அவர்களுடைய மகன் தீர்காயு, காவலாளர்களுக்கு மதுபானம் பலமாகத் தந்து தன் பெற்றோர்களின் சடலங்களைப் பெற்று ஈமக்கட்டையில் ஏற்றிச் சகல மரியாதைகளுடனும், சமயச் சடங்குகளுடனும் தீ வைத்தான்.

இதனைக் கேள்வியுற்ற பிரம்மதத்தன், மன்னன் திர்க்கதியின் மகன் தீர்காயு தன் பெற்றோர்களின் கொலைக்காகப் பழி வாங்கச் சரியான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து, தன்னை எங்கே கொல்ல வந்துவிடுவானோவெனப் பயந்தான்.

இளங்கோ தீர்காயு கானகம் சென்று மனத் திருப்தி ஏற்படும் வரையில் கண்ணீர் விட்டு அழுது தீர்த்தான். பிறகு கண்களைத் துடைத்துக்கொண்டு வாராணசிக்குத் திரும்பிவந்தான். அரமனை யானைக்கூடத்தில் உதவியாளர் தேவையாயிருந்ததை அறிந்து அங்கே சென்று யானையதிகாரியாக வேலைக்கு அமர்ந்தான்.

இங்ஙனமாக இருந்து வருகையில், ஒரு நாள் மன்னன் இரவில் இனிய குரலொன்று காற்றில் மிதந்து வருவதைக் கேட்டான். யாழின் நாதத்திற்கு இசைய எழுந்த அக்கீதம் மன்னனுக்குப் பெருமகிழ்வு உண்டாக்கியது. பாடகன் யார் என மன்னன் தன் பணியாளரைக் கேட்டபோது, யானையதிகாரியின் கீழ் சர்வ கலைகளையும் கற்றவனும், தம் தோழர்களால் பெரிதும் விரும்பப்பட்டவனுமிருந்த ஓர் இளைஞனே அதைப் பாடியிருக்க வேண்டும் என்றனர்.

அவ்விளைஞனைத் தன் முன் கொண்டுவர ஆணையிட்டான் மன்னன். அவன் மீது மிகவும் பிரீதியுற்று அரமனையிலேயே அவனுக்கோர் உத்தியோகம் தந்தான். தீர்காயுவின் அறிவும் தன்னடக்கமும், வேலையில் காட்டிய அக்

சீக்கிரத்திலேயே மன்னன் அவனுக்குப் பொறுப்பு வாய்ந்ததொரு பதவியளித்தான்.

ஒரு நாள் மன்னன் வேட்டைக்குச் சென்றிருந்தபோது, கானகத்தில் பரிவாரங்களினின்று பிரிந்து தனித்திருக்க நேர்ந்தது. அப்போது தேரை ஓட்டி வந்த இளம் தீர்காயு மட்டுமே அவனுடன் இருந்தான். வேட்டையின் காரணமாக மிகவும் களைத்திருந்த மன்னன், தீர்காயுவின் மடியில் படுத்து உறங்கலானான்.

தீர்காயுவின் மனத்தில் ஒரு எண்ணம் தோன்றியது. 'மன்னன் பிரம்மதத்தன் எங்களுக்குப் பெருந்தீங்கு செய்தவன். எங்கள் ராச்சியத்தை அபகரித்து என் தாய் தந்தையரைக் கொன்றான். இப்போது அவன் என் பிடியில் இருக்கிறான்.' இங்ஙனமாக எண்ணித் தன் வாளை உறையினின்று எடுத்தான்.

பிறகு தீர்காயுவுக்குத் தன் தகப்பனாரின் இறுதி வாக்கியங்கள் நினைவுக்கு வந்தன: 'நீளமாகக் காணப்படாதே; குறுகலாகவும் காணப்படாதே; ஏனெனில், பகையைப் 'பகையினால் தணிக்க முடியாது; பகையைப் பகையின்மையினாலேயே வெல்ல முடியும்'. அவன் உடனே வாளைத் திரும்ப உறைக்குள் போட்டுவிட்டான்.

மன்னன் அமைதியாகத் தூங்க முடியவில்லை. அவன் விழித்துக்கொண்டான். இளைஞன் அவனை நோக்கி, 'மன்னா, உன் முகத்தில் பீதிக் குறிகள் தோன்றுவதேன்?' என்று கேட்டான். அதற்கு மன்னன் பதிலளித்ததாவது: 'என் தூக்கம் எப்போதுமே அமைதியற்றதாகவுள்ளது. தீர்காயு வாள் பிடித்து என்னை நோக்கி வருவதாக நான் அடிக்கடி கனவு காண்கிறேன். இங்கே நான் உன் மடியிற் படுத்து உறங்கினபோது அதே பயங்கரக் கனவு கண்டேன். திடுக்கிட்டும், அதீத அச்சங் கொண்டும் எழுந்தேன்.'

அதன் மேல் அவ்விளைஞன் பாதுகாப்பில்லாதிருந்த அம்மன்னனின் தலைமீது தன் இடது கரம் வைத்து வலது கரத்தால் வாளை உருவினான். 'நான்தான் தீர்காயு. திர்க்கதி மன்னனின் புதல்வன். அவரது ராச்சியத்தை அபகரித்ததுமன்றி, அவரையும் என் தாயாகிய அவர் மனைவியையும் நீ கொன்றாய். பழிவாங்குவதற்கான சமயம் இப்போது வாய்த்துள்ளது' என்றான்.

மன்னன் தான் முற்றிலும் இளம் தீர்காயுவின் பிடியிலிருந்தது கண்டு, தன் கரங்களைத் தூக்கி, 'என் அருமைத் தீர்காயுவே, எனக்கு உயிர்ப்பிச்சை அளி!' என்று வேண்டினான்.

தீர்காயு யாதொரு மனக்கசப்போ, வெறுப்போ இன்றி 'மன்னா, யான் உனக்கு உயிர்ப்பிச்சையளிப்பதெப்படி? என் உயிருக்கு அபாயம் விளைவிக்கக் கூடியவன் நீயன்றோ? நீதான் எனக்கு உயிர்ப் பிச்சையளிக்க வேண்டும்!' என்று கேட்டான்.

எனக்கு உயிர்ப்பிச்சை தா; நானும் உனக்கு உயிர் அளிக்கிறேன்' என்றான் மன்னன்.

இங்ஙனமாகக் காசி மன்னன் பிரம்மதத்தனும் இளம் தீர்காயுவும் ஒருவருக்கொருவர் உயிர்ப் பிச்சையளித்துக்கொண்டு, ஒருவர் கரங்களை ஒருவர் பிடித்து, இனி ஒருவருக்கொருவர் யாதொரு தீங்கும் செய்வதில்லையெனச் சபதம் செய்தனர். வேட்டையிலிருந்து திரும்பியதும் மன்னன் தன் சொற்படியே நடந்தான்.

பிரம்மதத்தன் தீர்காயுவைப் பார்த்து 'நீ எனக்கொரு விஷயத்தை விளக்க வேண்டும். உன் தந்தையார் இறக்கும் தருவாயில், 'நீளமாகக் காணப்படாதே, குறுகலாகவும் காணப்படாதே; ஏனெனில் பகையைப்பகையினால்தணிக்க முடியாது; பகையைப் பகையின்மையினாலேயே வெல்ல முடியும்' என்று சொன்னாரே, அதன் பொருளென்ன?' எனக் கேட்டான்.

இளைஞன் மறுமொழி பகர்ந்ததாவது: 'மன்னா, என் தகப்பனார் இறக்கும் தருவாயில், 'நீளமாகக் காணப்படாதே' என்று சொன்னபோது, என் பகைமை நீடித்திருக்கலாகாது என்று பொருள் கொண்டார். அவர் 'குறுகலாகவும் காணப்படாதே' என்றபோது, நண்பர்களுடன் அவசரப்பட்டு சண்டை போட்டுக்கொள்ளவும் கூடாது எனப் பொருள்கொண்டார். 'ஏனெனில், பகையைப் பகையினால் தணிக்க முடியாது; பகையைப் பகையின்மையினாலேயே வெல்ல முடியும்' என்று அவர் சொன்னபோது, அவர் கொண்ட பொருள் இதுவேயாம். மன்னா, நீ என் தந்தையைக் காகப் பழி வாங்க நான் உன் உயிரைப் போக்கினால், உன்னைச் சார்ந்தவர்கள் என்னுயிரைப் போக்குவர்; பின் என்னைச் சார்ந்தவர்கள் உன்னைச் சார்ந்தவரின் உயிரைப் போக்குவர். இவ்விதமாக, பகைமையினால் பகைமையைத் தணிக்க முடியாது. ஆனால் இப்போது நீயோ எனக்கு உயிரளித்தாய்; நானும் உனக்கு உயிரளித்தேன். இவ்விதமாக பகையின்மையினாலேயே பகைமை தணிக்கப்பட்டது!'

காசி மன்னன் இளம் தீர்காயுவின் அறிவைப் பெரிதும் மெச்சினான். மிகச் சுருக்கமாகத் தன் தந்தை சொன்னதன் முழுப்பொருளையும் அவன் உணர்ந்தது பாராட்டத்தக்கதேயாம். மன்னன் அவன் தந்தையின் ராச்சியத்தை மீண்டும் அவனுக்களித்து தன் மகளையும் கன்னிகாதானம் செய்துகொடுத்தான்.

பகவான் புத்தரே தம் பூர்வ ஜன்மம் ஒன்றில் இளங்கோ தீர்காயுவாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இக்கதையை முடித்ததும், அருளாளன் பிக்குகளை நோக்கிச் சொன்னதாவது:

'பிக்குகளே, செங்கோல் பிடித்து வாள் தாங்கும் மன்னர்களின் அடக்கமும், சாந்த குணமும் இவ்விதமாக இருக்கக்கூடுமானால் உங்களுக்குப் போதிக்கப்பட்ட தருமத்தின்படி சமய வாழ்க்கையைத் தழுவியுள்ள நீங்களும், அடக்கமும், பொறுமையுமுடையவராய் உலகில் தெய்வ ஒளி வீச வேண்டாமா? இனிப் பிணக்கும் போராட்டமும், ஒற்றுமையைச் சிதைக்கும் பிளவும் பூசலும் உங்களிடையே தலையெடுக்கவொட்டாமல் செய்யுங்கள்!'



செங்கற்பட்டு ஜில்லா காளியாம்பூண்டி கிராமத்தில், தேசிய விஸ்தரிப்பு திட்ட ஆதரவில், நல்ல குடிநீர் வசதிக்கான ஏற்பாட்டை ஸ்ரீ காமராஜ் துவக்கி வைத்தார்.

செங்கோட்டையில் நடந்த கோலாகலமான வைபவம் ஒன்றில், இந்தியாவின் தலைசிறந்த கலைஞர் எழுவருக்கு ராஷ்டிரபதி விருதுகள் வழங்கிக் கௌரவித்தார். கர்நாடக இசைக்கென ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலட்சுமியும், கர்நாடக வாத்திய இசைக்கெனப் பாலக்காடு மணி அய்யரும் விருதுகள் பெற்றனர்.

நாட்டின் உயர் விருது பெற்றுள்ள இரண்டு தென்னாட்டுக் கலைஞர்களை தில்லித் தமிழர்கள் வெகு சிறப்பாக வரவேற்று, பாராட்டுக் கூறினார்கள். கரோல் பாகில் தட்சிண பாரத் சமாஜம், அதன் வருஷப் பிறப்புக் கொண்டாட்டத்துடன், கலைஞர்களுக்கென மாபெரும் வரவேற்பு ஒன்றை வெகு விமரிசையாக நடத்திப் பெருமிதம் கொண்டது. பரந்த சதுக்கம் ஒன்றில் பெரிய அலங்காரப் பந்தலை நிறுவி, அதில் வரவேற்பு விழா நடத்திற்று. பெருந்திரளான தமிழ் மக்கள், தத்தம் குடும்பங்களுடன் கூடி நின்று, கலைஞர்களைக் கண்டு வாழ்த்தினார்கள். ஸ்ரீமதி எம். எஸ். எஸ்ஸிற்கும், பாலக்காடு மணி அய்யருக்கும் வாழ்த்துப் பத்திரம் வாசித்து அளித்தனர்; தவிர, சமாஜின் சார்பில், பாராட்டுச் சின்னமாக, அதிநேர்த்தியான வெள்ளித் தட்டுக்களை வழங்கினார்கள். தில்லி வாழ் சங்கீத வித்வான்கள் சார்பில் தில்லி இசைத் துறை முதியவர் ஸ்ரீ டி. கே. ஜயராமய்யர், இரண்டு கலைஞர்களையும் போற்றி மாலை அணிவித்தார்.

இதற்கு முன்னர்—சென்ற ஞாயிறன்று (8–4–56) மாலை முனிசிபல் பள்ளிச் சதுக்கத்தில் கர்நாடக சங்கீத சபாவின் ஆதரவில் ஸ்ரீமதி எம். எஸ். சுமார் நாலரை மணி நேரம் கான மழை பொழிந்து, தில்லி மக்களைப் பரவசப் படுத்தினார். இசை நிகழ்ச்சிக்கு முன், கலைஞரைப் பாராட்டுவதற்காகச் சிறு நிகழ்ச்சியொன்றும் நடந்தது. சங்கீத கலாநிதி ஸ்ரீ டி. எல். வேங்கடராமய்யர், ஸ்ரீமதி எம். எஸ்.ஸை 'கான ஸரஸ்வதி' என்று புகழ்ந்துரைத்து, வாழ்த்துக் கூறினார். பின்னர், பெரும் விஞ்ஞானியும்,

தலைநகர் பால்.....

சிறந்த ரஸிகருமான டாக்டர் கிருஷ்ணன் "கேட்கக் கேட்கத் தெவிட்டாத இசையமுதை அள்ளி அள்ளி வழங்கிப் பரவசமூட்டும் ஒப்பற்ற இந்த வள்ளல், பல்லாண்டு காலம் சிறப்புற்று வாழ்ந்து பணியாற்ற வேண்டு"மெனத் தில்லி மக்கள் சார்பில் வாழ்த்துக் கூறியபோது, எழுந்த கரகோஷம் வானை எட்டுவதாக இருந்தது.

எம். எஸ். கச்சேரி என்றால் கட்டணங்கள் சாதாரணமாக ரொம்ப அதிகமானதாக இருப்பது வழக்கம்; ஆனால், இந்த முறை மக்கள் எல்லோரும் கேட்டு அனுபவிப்பதற்கு வசதியாக—மாமூல் கட்டணங்கள்—குறைந்த கட்டணங்களை விதித்திருந்ததில், தில்லிவாசிகளுக்கு இரட்டிப்பு சந்தோஷம். எள் போட்டால், விழுவதற்கு இடமில்லை என்பது, அன்று முற்றிலும் உண்மையாக இருந்தது. அன்று 'ஆந்தி'ப் புழுதிக் காற்று வேறு கோரமாக வீசிற்று; அலங்காரப் பந்தலைப் பெயர்த்துச் செல்லும் வேகத்ததாய் இருந்தாலும், மக்கள் நாத வெள்ளத்தில் அப்படியே லயித்து மெய்மறந்திருந்தனர். கர்நாடக சங்கீத சபாவின் புதிய காரியதரிசியாகியுள்ள ஸ்ரீ கே. எஸ். சங்கரநாராயணன் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த முதல் இசை விருந்து, மகத்தான நிகழ்ச்சியாகும்; தவிர, உபதலைவர் ஸ்ரீ கே. ராமமூர்த்தி முயன்று, ஐந்து பிரமுகர்களை சபாவின் ஜீவிய அங்கத்தினர்களாகச் செய்துவிட்டார்.

ஃ ஃ ஃ

தில்லித் தமிழர் 'துன்முகி' புத்தாண்டிற்கு வெகு கோலாகலமாக விழா நடத்தி நல்வரவு கூறினார்கள். 'ஸௌத் இந்தியா கிளப்' கட்டிடத்தில், தில்லியின் மிகப் பழைய ஸ்தாபனமான

தக்ஷிண பாரத் சமாஜத்தினர் நடத்திய பாராட்டு விழாவில் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலட்சுமி, வாழ்த்துப் பத்திரத்தை ஏற்றுக்கொள்ளும் காட்சி.

வைதீக சங்கத்தார், வழக்கப்படி பஞ்சாங்கம் வாசித்து, பானக பூஜை நடத்தினார்கள். கரோல்பாகிலோ தட்சிண பாரத் சமாஜத்தினர், வாய்ப்பாட்டு இசைக்கும், வாத்திய கானத்துக்கும் ஏற்பாடு செய்தனர். பிரபல வித்வான் திருவாலங்காடு ஸ்ரீ சுந்தரேசய்யரின் தனி வயலின் இசைக் கச்சேரியைக் கேட்டு மகிழும் வாய்ப்பும் கிடைத்தது.

தமிழ்ச் சங்கத்தார் கான்ஸ்டிட்யூஷன் கிளப்பில் எடுப்பான அளவில், கதம்ப நிகழ்ச்சி நடத்தினார்கள். ஆண்களும், பெண்களும் திரளாக வந்து கலந்து கொண்ட இந்த விழாவை, டாக்டர் கிருஷ்ணன், புத்தாண்டு வாழ்த்துக்கள் கூறித் துவக்கிவைத்தார். மந்திரி அளகேசன் தலைமை வகித்தார். பல, வாத்திய இசைக் கச்சேரிகளும், மூன்று சிறு நாடகங்களும் நடந்தன.

தமிழ் வருஷ விழாவில் கலந்து கொண்ட மக்கள், 'பெரியசாமி' என்ற வேலைக்காரனை மறக்கவே முடியாது. முதலாளி வீட்டில் தனது அதிகாரத்தை நிலைநாட்டிவிட்ட வேலைக்காரனையும் அவனைச் சமாளிக்க முடியாமல் தவிக்கும் விசித்திர தம்பதிகள் இருவரையும் யாரும் மறக்கவே முடியாது. பிரபல ஹாஸ்ய நாடகாசிரியர் பூர்ணம் விஸ்வநாதன் இயற்றிய 'வேலையாள் சொற்படி' என்ற நடைச் சித்திரம், அப்படியே வயிறு குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைத்தது. 'வேலைக்காரன் பெரியசாமி' ஒரு குணசித்திர பாத்திரம்; அதைப் பூர்ணமே ஏற்று நடித்தார் என்றால், சொல்லவா வேண்டும், ஹாஸ்யத்திற்கு? ஸ்ரீ எஸ். என். கிருஷ்ணமூர்த்தியும், அவரது மனைவி ஸ்ரீ உமா கிருஷ்ணமூர்த்தியும் தத்தம் பாத்திரங்களை நன்கு உணர்ந்து, அபாரமாக நடித்து, சகலரின் பாராட்டையும் பெற்றார்கள். ஸ்ரீ ராஜு தயாரித்த 'கல்யாண தடபுடல்' நாடகத்தில் அநேகமாக எல்லா நடிகர்களும் புதியவர்கள் என்றாலும் அது சிறப்பாக அமைந்தது. குறிப்பாக, ஜானி, சீனுவாசன், நாராயணன், ரங்கநாதன் ஆகியோர் நன்றாக நடித்தனர். தலைநகரில் அநேகமாக எல்லா நிகழ்ச்சிகளிலும் இடம் பெற்று, மக்களைச் சிரிக்கவைக்கும் பணியில் ஈடுபட்டுவரும் அன்பர் 'சுந்தா', 'தில்லி சித்தனா'க வந்தார். வேதாந்த சித்தனல்ல; வேடிக்கைச் சித்தராக வந்து, ஹாஸ்யப் பாடல்கள் பலவற்றைப் பாடிக் காட்டினார்.

விழாவுக்குத் தலைமை தாங்கிய ரயில்வே உதவி மந்திரி ஸ்ரீ அளகேசன், "தமிழர்கள், எல்லோரிடமும் அன்பு காட்டி, கடின உழைப்பின் மூலம், நாட்டுக்கும், மொழிக்கும் பெரும் பணியாற்ற வேண்டும்" என்று கோரினார். கல்கத்தா ரஸிக ரஞ்சனி சபாவின் நிர்வாகி ஒருவர், தில்லி நடிகர்களின் திறனை வியந்து பாராட்டினார். கல்கத்தா சபாவின் சார்பில் பூர்ணம், உமா, சீனுவாசன் ஆகிய மூன்று நடிகர்களுக்குப் பரிசுகள் அளிக்கப்படும் என்று காரியதரிசி குப்புசாமி அறிவித்ததைக் கேட்டு, சபையினர் பெருமிதம் அடைந்தனர்.

துப்பறியும்
சுப்புடு
ஓஹோ! போலீஸ் அதிகாரிகள் மைதானத்தில் கிரிக்கட் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள் போலிருக்கிறது! அருகில் சென்று பார்ப்போம்..
ஹலோ! மிஸ்டர் சுப்புடு! வாங்கோ சார் வாங்கோ!
நீங்களும் கொஞ்சம் ஆடுங்கோ சார்.
வேண்டாம் பிரதர் வேண்டாம்! எனக்கு ஆடத்தெரியாது நீங்களே ஆடுங்கள் நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.
பரவாயில்லைசார்! தெரிந்த வரையில் ஆடுங்கள்... இந்தாருங்கள் பந்து... எங்கே பவுல் செய்யுங்கள் பார்க்கலாம்.
என்னப்பாது, சொன்னாலும் கேட்கமாட்டேன் என்கிறீர்களே!
ஹா! ஐயோ!
ஆஹா! பக்காத்திருடன் பழனியாண்டியல்லவா இவன்! இவனைப் பிடிக்க முடியாமல் நாம் எவ்வளவு கஷ்டப்பட்டோம்! வெகு எளிதில் பிடித்துவிட்டாரே சுப்புடு!
சபாஷ் மிஸ்டர் சுப்புடு! பந்து எறிவதிலும் உங்களுடைய துப்பறியும் சாமர்த்தியத்தைக் காண்பித்துவிட்டீர்களே!

தொடரும்

தொடர் கதை

திரிவேணி

ஹேமா ஆனந்ததீர்த்தன்

16

ராஜு எதிர்பார்த்தபடியே பத்மா அவனுக்காகக் காத்திருந்தாள். வழக்கமாக அவர்கள் சந்திக்கும் இடத்தில் சிமெண்ட் பெஞ்சியின்மீது உட்கார்ந்திருந்தாள்.

ராஜுவைக் கண்டதும் அவள் முகம் மலர்ந்தது.

ராஜு சிரித்துக்கொண்டே, "வந்து ரொம்ப நேரமாகிவிட்டதா, பத்மா?" என்று கேட்டான்.

"இல்லே, ஒரு பத்து நிமிஷம்தான் இருக்கும். உங்களை முதலில் இங்கே காணுமல் கொஞ்சம் ஏமாற்றமாகப் போய்விட்டது. ரூமுக்கே தேடிக் கொண்டு போய்விடுவோமா என்று யோசித்துக் கொண்டிருந்தேன். . . ஏன் இவ்வளவு லேட்?"

"பாீட்சை எழுதிவிட்டு வந்ததும், ரொம்பக் களைப்பாக இருந்தது பத்மா. அப்படியே படுத்துக்கொண்டுவிட்டேன். ஏதோ யோசனைகளில் முழுகிவிட்டதனுல், மணியையே மறந்துவிட்டேன்."

"பாீட்சை எல்லாம் நன்ருக எழுதியிருக்கிறீர்களோ இல்லையோ?"

"தேவலே."

"பாஸாய்விடும்?"

"கண்டிப்பாக."

"பின்னென்ன? அவ்வளவு தானே வேண்டியது?"

ராஜு அவளுக்கருகில் உட்கார்ந்து கொண்டான்.

பத்மா தான் வைத்திருந்த பையிலே கையைவிட்டுத் துழாவி எதையோ எடுத்தாள்.

"என்ன பத்மா அது?"

பத்மா சிரித்துக்கொண்டே, ஒரு சிறு காகிதப் பொட்டலத்தை அவன் கையில் வைத்தாள்.

ராஜு ஆவலுடன் அதைப் பிரித்துப் பார்த்தான். இரண்டு கட்டி கல்கண்டுகள்!

"என்ன இது பத்மா? நான் பாீட்சை எழுதி முடித்ததற்காகவா?"

"ஹுக்கும்! எப்பவும் உங்கள் ஞாபகமேதான் உங்களுக்கு. அதற்காக ஒன்றும் நான் கல்கண்டு கொண்டு வரவில்லே."

"பின்னே?"—ராஜு ஒரு கணம் யோசித்தான். அவன் கண்கள் பத்மாவின் கண்களை ஊடுருவிப் பார்த்தன. பத்மா முறுவலித்துக்கொண்டிருந்தாள். 'பளிச்'சென்று ராஜுவுக்கு விஷயம் விளங்கிவிட்டது. அவன் முகம் பிரகாசமாக மலர்ந்தது.

"லீலாவுக்குக் குழந்தை பிறந்துவிட்டதா, பத்மா?" என்று கேட்டான்.

"ஊம்."

"என்ன குழந்தை?"

"பையன்!"

ராஜுவால் சந்தோஷத்தைக் கட்டுப்படுத்த இயலவில்லே. பத்மாவின் இரு கரங்களையும் பற்றிக்கொண்டு, அவளை ஆவலுடன் பார்த்தான். அவள் உருவத்திலே லீலாவைக் கண்டான்.

"எனக்குச் சொல்லவே இல்லேயே? எப்போ பத்மா பிரசவம் ஆயிற்று?"

"மூன்று நாளாயிற்று?"

"லீலாவும், குழந்தையும் சௌக்கியமாக இருக்கிருர்களோ இல்லேயோ?"

"ஊம்."

"குழந்தை எப்படி இருக்கிறது, பத்மா?" என்று ஆவலுடன் கேட்டான் ராஜு.

"அசல் உங்களேயே உரித்து வைத்தாற்போல் இருக்கிறது" என்று பத்மா சொன்னதும், ராஜுவின் தலேயில் இடி விழுந்தாற்போல் இருந்தது. அவன் முகம் பயங்கரமாக மாறிவிட்டது. கலவரத்துடன் பத்மாவைக் கூர்ந்து பார்த்தான். பத்மா கலகலவென்று நகைத்துவிட்டாள்.

ராஜுவுக்கு உயிர் வந்தது. அவள் தன்னேக் கேலி செய்திருக்கிருள் என்பதை அறிந்துகொண்டான்.

"குழந்தை நல்ல கறுப்பு. அத்திம்பேரைவிடக் கறுப்பாகத்தான் இருக்கும்."

"நல்ல வேளே. எனக்குக் கவலே விட்டது. ஜாடையெல்லாம் யாரைப்போல இருக்கு?"

"அது போகப்போகத்தானே தொியும். இப்பவே ஒன்றும் தொியாது. இந்தச் சமயத்தில் எல்லாக் குழந்தைகளின் ஜாடையும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும்."

"எல்லாம் அதன் அப்பாவைப் போலத்தான் இருக்கும். வேறு எப்படி இருக்கப் போகிறது?" என்ருன்.

"யார் கண்டா?" என்று அவனேச் சீண்டிஞள் பத்மா.

"போக்கிரி. நீயே கேலி பண்ண ஆரம்பித்து விட்டாயா?"

"அத்திம்பேருக்கு வாயெல்லாம் பல்லாக இருக்கிறது போங்களேன், அந்தக் கறுப்பனேக் கண்டு. வீட்டுக்கு வரும் சிநேகிதர்களுக்கெல்லாம் குழந்தையைக் காட்டச் சொல்லிச் சந்தோஷப்பட்டுக்கொண்டிருக்கிருர்!"

"அப்பாடா! இந்தமட்டுக்கும் லீலாவின் மானம் பிழைத்தது" என்று ராஜு பெருமூச்சுவிட்டான்.

சிறிது நேரம் இருவரும் மௌனமாக இருந்தனர்.

பிறகு ராஜு சொன்ஞன்: "குழந்தையைப் பார்க்க வேண்டுமென்று ஆசையாக இருக்கிறது."

"வாங்களேன் நாளேக்கோ, நாளன்னிக்கோ. உங்களுக்கும் காலேஜ் கிடையாது."

"உன் அத்திம்பேர்?"

"அவர் ஆபீஸுக்குப் போயிருப் பார்."

"அப்படிக் கள்ளத்தனமாகவா வந்து பார்க்க வேண்டும் லீலாவின் குழந்தையை?" என்று சொல்லும்போது, ராஜுவின் தொண்டை அடைத்துக் கொண்டது.

"இனிமேல் நீங்கள் அங்கே வந்தால் கூட அத்திம்பேர் ஒன்றும் சொல்ல மாட்டாரென்று நினைக்கிறேன். அவர் சந்தேகமெல்லாம்தான் தீர்ந்துவிட்டதே" என்று பத்மா சொன்னாள்.

"நிஜமாகவா பத்மா?"

"அப்படித்தான் நினைக்கிறேன். இல்லாவிட்டால், வீட்டுக்கு வரும் நண்பர்களிடமெல்லாம் குழந்தையைப் பற்றி அப்படிப் பெருமையடித்துக்கொள் வாரா?"

"அப்படியானால் நான் இப்பொழுதே வந்து குழந்தையைப் பார்க்கிறேன் பத்மா" என்று ராஜு ஆத்திரப்பட் டான்.

"வேண்டாம். கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள். புண்ணியாகவாசனத் துக்கு அவரே உங்களைக் கூப்பிடுகிறாரா பார்ப்போம்" என்று சொன்னாள் பத்மா.

ராஜுவுக்கு அவள் சொன்னது சரி யென்றே பட்டது. ஆனாலும் அவனால் தன் ஆவலைக் கட்டுப்படுத்த முடியவில்லை. லீலாவையும், அவள் குழந்தையையும் பார்க்க வேண்டுமென்று அவன் உள்ளம் துடிதுடித்துக்கொண்டிருந்தது.

புண்ணியாகவாசனத்தை மிகவும் விமரிசையாகவே கொண்டாட ஏற்பாடு செய்தார் ராமசுவாமி. ஆனால், ராஜுவை நேரில் வந்து அழைக்க அவருக்கு சங் கோஜமாக இருந்தது. 'அவ்வளவு கேவல மான முறையில் அவனுடன் சண்டை போட்டு வீட்டைவிட்டு வெளியேற்றிய பிறகு, மறுபடியும் எப்படிப் போய் அவ னுடன் பேசுவது? அவன் ஏதாவது அவ மரியாதையாகப் பேசிவிட்டால்?'—என் றெல்லாம் எண்ணி பத்மாவிடமே சொல்லி அனுப்பினார் ராஜுவை அழைத்து வரும்படி.

பத்மா அவனிடம் வந்து சொன்ன போது, ராஜு முதலில் நம்பவே இல்லை. அவள் கேலி செய்கிறாளோ அல்லது ராமசுவாமி சொன்னதாகப் பொய் சொல்லி, தன்னை எப்படியாவது அழைத்துக்கொண்டு போக முயற்சிக் கிறாளோ என்றுதான் சந்தேகித்தான். பத்மா பல முறை உறுதியாகச் சொன்ன பிறகுதான், அவனுக்கு நம்பிக்கை ஏற் பட்டது. பரபரக்கும் மனத்துடன் புரச வாக்கத்திற்குக் கிளம்பினான்.

"வாருங்கள் ராஜகோபால்" என்று, புன்னகையுடன் ராமசுவாமி அவனை வர வேற்றார். ராஜுவின் மனம் அவரது அந்தக் களங்கமற்ற வரவேற்பால் மகிழ்ச்சி அடைந்தது. அம்மகிழ்ச்சி சுந்தரப் புன்னகையாகப் பரிணமித்தது அவன் உதடுகளில்.

"வா ராஜு! சௌக்கியமா?" என்று வரவேற்றாள் லீலா.

ராஜு அவளைப் பார்த்தான். தாய்மை யால் பொலிவுபெற்றிருந்த அவள் முகத் தில் அழகு துள்ளிக்கொண்டிருந்தது. குளித்துப் பட்டுப் புடவை உடுத்து, தலையை இழைய இழையப் பின்னி விட்டுக்கொண்டிருந்தாள். வாய் நிறைய வெற்றிலைப் பாக்கு. மடியிலே படுத்திருந் தான் அவள் குழந்தை—ராமசுவாமியின் செல்வப் புதல்வன்!

தன் ஆவலையெல்லாம் கண்களிலே ஒருமிக்கத் தேக்கிக்கொண்டு, குழந்தை யைப் பார்த்தான். கண்ணை மூடிக் கொண்டு கவலையில்லாமல் தூங்கிக் கொண்டிருந்தது அப்பசுங் கொடி. குழந்தையின் பேரில் பதித்த கண்களை எடுத்து, லீலாவின்மீது பார்வையை ஓட்டினான். லீலா முறுவலித்தாள்.

ராஜு ஆனந்தத்தால் உடல் புளகித் தான்.

அன்றைய விசேஷத்தில் ராஜுதான் எல்லாரையும்விட அதிகமாக ஓடி ஓடி வேலை செய்தான். அவன் உற்சாகத்திற்கு எல்லையே இல்லை. புண்ணியாகவாசனத் திற்கு நிறைய பேர் வந்திருந்தார்கள். சேகரனும், அவன் பெற்றோர்களும், லீலாவின் நாத்திமார்கள் முதலியவர் களும், முக்கியமாக வந்திருந்தார்கள். ராஜு சேகரனுடன் பேசும்போதெல்லாம் லீலாவாவது பத்மாவாவது தன்னைப் பார்த்துவிடாமல் பார்த்துக் கொண் டான்.

புண்ணியாகவாசனத்தன்று இரவு ராஜு சாப்பாட்டுக்கு அங்கேயே தங்கி னான். பத்மா, ராஜு, ராமசுவாமி மூன்று பேரும் உட்கார்ந்து சாப்பிட்டுக்கொண் டிருந்தார்கள். பரிசாரக மாமி பரிமாறிக் கொண்டிருந்தாள். லீலாவுக்கு ஏழாவது

மாசம் நடந்துகொண்டிருந்தபோது சுத்தமாக அவளால் வீட்டு வேலைகளை செய்ய முடியாமல் போய்விட்டது. பத்மாவாலும் பூராக் காரியங்களையும் ஒருவளே நிபாய்க்க முடியாமலிருந்த தால், கிருஷ்ணம்மா என்ற அந்தப் பரி சாரகியை ராமசுவாமி அமர்த்தியிருந் தார்.

அவர்கள் மூன்று பேருக்கும் எதிரே லீலா பாயின்மீது உட்கார்ந்துகொண்டு வெற்றிலை போட்டவண்ணம் அவர் களோடு பேச்சுக் கொடுத்துக்கொண் டிருந்தாள். குழந்தை உள்ளே தூங்கிக் கொண்டிருந்தது.

எல்லோரும் சிரித்தபடியே பேசிக் கொண்டிருந்தார்கள். அனைவரது மனத் திலும் மகிழ்ச்சி நிரம்பியிருந்தது. ராமசுவாமி ராஜுவின் பாட்சையைப் பற்றி ரொம்பவும் அக்கறையுடன் விசா ரித்தார்.

லீலா அவன் குடியிருக்கும் அறை யைப்பற்றிக் கேட்டாள்—சௌகரியமாக இருக்கிறதா, வாடகை என்ன?— இத் யாதி.

ராமசுவாமி அப்போது சொன்னார்: "ஏன், நீ மறுபடியும் இங்கேயே வந்து விடேன். தனியாக இருந்துகொண்டு ஏன் கஷ்டப்படுகிறாய்?"

லீலா, பத்மா, ராஜு மூவரின் செவி களிலும் ராமசுவாமியின் இந்த வார்த்தைகள் அமிர்த தாரையாகப் பொழிந்தது. ராமசுவாமியின் முகத்தில் மாத்திரம் அசடு வழிந்தது.

"வேண்டாம் வேண்டாம். ரூமே எனக் குச் சௌகர்யமாக இருக்கிறது" என்று ராஜு ராமசுவாமியின் யோசனைக்கு இணங்க மறுத்தான்.

"அவரே சொல்லுகிறாரே. அதன்படி சரி என்று சொல்லாமல், பிகு பண்ணிக் கொள்ளாதே" என்று லீலா சொல்ல நினைத்தாள். ஆனால், தான் அதில் தலை யிடாமல் இருப்பதே நல்லதென்று அவ ளுக்குத் தோன்றியது. ஆகவே, பேசாம லிருந்துவிட்டாள்.

ராமசுவாமி மறுபடியும் வற் புறுத்தினார்: "இல்லை ராஜ கோபால், நிச்சய மாகத்தான் சொல்லுகிறேன். நாளைக்கே ரூமைக் காலி செய்துவிட்டு, இங்கேயே

மறந்துவிடுவோம்" என்றார். அப்படிக் கூறும்போது, அவர் தொண்டை தழ தழத்ததை எல்லோரும் கவனித்தனர்.

ராஜு அவர் சொல்வதற்கு ஒப்புக் கொண்டே ஆகவேண்டியதாயிற்று.

மறு நாளே ராஜு ரூமைக் காலி செய்துவிட்டு, லீலாவின் வீட்டுக்கே வந்துவிட்டான். பழையபடியே அவர்கள் வாழ்க்கை மறுபடியும் சந்தோஷப்பாதை யில் இயங்க ஆரம்பித்தது. ராஜுவுக்குக் காலேஜும் லீவ் ஆனபடியால் எப் பொழுதும் வீட்டிலேயே இருந்தான். அதில் பெரும்பகுதி குழந்தை முரளி யுடனேயே கழித்தான். அதை வாரி எடுத்துத் தன் மடிமீது படுக்கவிட்டுக் கொண்டு, வெகு நேரம் உட்கார்ந்திருப் பான். தூக்கத்தில் அது சிரிக்கும்போது, ராஜுவின் மனம் ஆனந்தமடையும்.

"லீலா, உன் குழந்தை சிரிக்கும்போது அதன் அப்பாவைப்போலவே உதடுகோண லாகப் போகிறது பார்த்தாயோ?" என்று கூறிச் சிரித்தான்.

"நீங்கள் குழந்தையிடம் ரொம்ப அன்பாகவும், அபிமானமாகவும் இருந்து யும் ஏதாவது சந்தேகம் வந்துவிடப் போகிறது!" என்று கேலியாகச் சொன் னாள் பத்மா.

லீலா, ராஜு இருவரும் அதைக் கேட் டுச் சிரித்தனர்.

இப்படி இவர்களின் வாழ்க்கை சந் தோஷமாகக் கழிந்து வந்தபோதிலும் பத்மாவின் உடம்பு மாத்திரம் அப்படியே தான் இருந்தது. கொஞ்சங்கூடத் தேற வில்லை. எலும்புக்கூடாகவே காட்சி யளித்தாள் அவள். இதுதான் லீலா, ராஜு இருவரின் மனத்திற்கும் வேதனை அளிப்பதாக இருந்தது. எவ்வளவோ டானிக்கும், மருந்தும் கொடுத்தாயிற்று. ஒன்றினாலும் பயனில்லை.

'என்ன வேணுமானாலும் ஆகட்டும். சாந்தி முகூர்த்தம் நடந்துவிடட்டும். அப்பவாவது உடம்பு தேறுகிறதா, பார்ப் போம். ஒரு சமயம் அது நடக்காமலிருப் பதனாலேயேதான் அந்த ஏக்கத்தால் இப்படி இருக்கிறாளோ என்னவோ' என்று யோசிக்கலானாள் லீலா. ராஜு வின் தாயாரின் வருஷாப்தீகம் இன்னும் இரண்டு மாசத்தில் வர இருந்தது. அது

நிறைவேற்றி விடுவதென்று தீர்மானித் துக் கொண்டாள். பத்மாவிடமும், ராஜு விடமும் அதைப்பற்றிச் சொல்லவும் சொன்னாள். அவர்களும் மகிழ்ச்சியுடன் அதை வரவேற்றனர். ஆனாலும் சென்ற வருஷம் முகூர்த்தம் நிச்சயித்தபொழுது நடந்த துர்ச்சம்பவத்தை நினைத்த போது, அவர்களுக்கு நெஞ்சிலே அச்சம் தோன்றத்தான் செய்தது. அந்த மாதிரி மறுபடியும் ஏதேனும் ஆபத்து சம்பவிக் காமலிருக்க வேண்டுமே என்று அவர்கள் பயந்தார்கள்.

அப்படி அவர்கள் பயப்பட்டதற்கு வெறும் மூட நம்பிக்கை காரணம் என்று சொல்ல முடியாது. ஏனென்றால், கொஞ்ச நாட்களாகவே ராமசுவாமிக்கு உடம்பு சரியில்லாமலிருந்தது. இரண்டு மூன்று முறை நெஞ்சு வலி வந்து ரொம்பவும் கஷ்டப்பட்டு விட்டார். இரண்டாவது முறை வலி வந்தபோது, அவர் பிழைப் பாரோ மாட்டாரோ என்ற அளவுக்கு எல்லோரையும் பயமுறுத்திவிட்டார்.

'ப்ளட் ப்ரெஷர்' வியாதி அவருக்கு. அதிகம் வேலை செய்யாமலும் கோபம், கவலை இவைகளுக்கெல்லாம் இடம் கொடாமலுமிருக்கும்படி டாக்டர் எச் சரித்திருந்தார்.

எனவே, எந்த நிமிஷத்தில் அவர் உடம்பு எப்படியாகுமோ என்ற அச்சம் உள்ளூர எல்லோருக்கும் இருந்து வந் தது. ஆனாலும், யாரும் வெளியில் வாய் விட்டு அதைச் சொல்லவில்லை.

முகூர்த்தத்துக்கு தேதியும் நிச்சயம் ஆகிவிட்டது. எந்த விதமான ஆடம் பரமுமில்லாமல் வீட்டோடு வீடாக மூன்றாம் பேருக்குத் தெரியாமல் நடத்தி விடுவதென்று லீலா நிச்சயித்தாள். ராஜுவும் அதைத்தான் விரும்பினான்.

ஆனால் லீலா, செய்ய வேண்டிய முறை களில் எதுவும் குறை வைக்காமல் செய்து முடித்தாள். ராமசுவாமியிடம் நல்லதன மாகச் சொல்லி, மன்றாடிக் கட்டில்கள் வாங்கினாள். வெல்வெட் மெத்தைகள் தைக்கச் செய்தாள். படுக்கை, கொசுவலை முதலியவைகளும் வாங்கினாள்.

அன்று முகூர்த்த நாள். காலையில் சாஸ்திரோக்தமாக நடக்க வேண்டிய சடங்குகளெல்லாம் புரோகிதர் உதவி யால் சாங்கோபாங்கமாக நடந்தேறின. படுக்கையறையை அலங்காிக்கும் பொறுப்பை லீலா ஏற்றுக்கொண்டாள். அதில் அவளுக்கு ஏற்பட்ட ஆனந்தம் சொல்லி மாளாது.

மெத்தையின்மீது அழகான விரிப்பு களை விரித்துப்போட்டு, அதன்மீது ரோஜா இதழ்களைத் தூவினாள். பாரிஸ் சென்டை படுக்கை முழுவதும் லேசாகத் தடவினாள். கட்டிலின் மேல் சட்டங்களை யெல்லாம் மல்லிகை, முல்லை, ரோஜா மலர் மாலைகளால் அலங்காித்தாள்.

கட்டிலுக்கருகில் முக்காலி போட்டு, அதிலே வகைவகையான பட்சணங்களை யும், பால், வெற்றிலைபாக்கு, சந்தனம், பன்னீர் முதலியவைகளையெல்லாம் அடுக் கடுக்காக வைத்தாள், லீலா.

இரவு ஒன்பது மணிக்கு முகூர்த்தம். எட்டரை மணிக்கெல்லாம் தம்பதியைப் படுக்கை அறையில் கட்டிலின்மீது உட்கார வைத்தனர். ராமசுவாமியும், லீலாவும் அவர்களை ஆசீர்வாதம் செய்து 'பல தாம்பூலம்' கொடுத்துவிட்டு வெளியேறினர். லீலா வாசற்படியண்டை நின்று திரும்பி அவர்கள் இருவரையும் ஒரு முறை கண்குளிரப் பார்த்தாள். அவள் முகம் மந்தகாசத்தால் மலர்ந்தது. பத்மா வெட்கப் புன்னகை புரிந்தாள். ராஜு நன்றி கலந்த இளநகை புரிந்தான்.

லீலா கதவைச் சாத்திக்கொண்டே, "உள்ளே தாழ்ப்பாள் போட்டுக்கோ" என்றாள். ஏனோ அவள் தொண்டை அவ்வார்த்தைகளைச் சொல்லும்போது கரகரத்தது.

"பத்மா!" என்று ஆர்வமுடன் அவள் கைகளைப் பற்றினான் ராஜு. பத்மா அவனை ஏறிட்டு நோக்கி, குறுநகை புரிந்தாள்.

சிறிது நேரத்திற்கெல்லாம், "ராஜு! ராஜு! பத்மா! பத்மா!"—லீலா கதவை இடித்தாள் பரபரப்புடன்.

"என்ன லீலா?"—படுக்கையிலிருந்தபடியே ராஜு கேட்டான்.

"கொஞ்சம் சீக்கிரம் எழுந்து வா, ராஜு" என்றாள் லீலா. அவள் குரலில் கண்ட பதட்டம், அவன் உடலை நடுக்கியது. 'பட் பட்'டென்று இதயம் அடித்துக்கொள்ள எழுந்து சென்று, கதவைத் திறந்தான். பத்மா மருண்டு போய் நிலைகுலைய ஓடிவந்தாள்.

"என்ன லீலா?"—ராஜு.

"என்ன அக்கா?"—பத்மா.

"ராஜு, சீக்கிரம் போய் டாக்டரை அழைத்துக்கொண்டு வாயேன். அவருக்கு மறுபடியும் மார்வலி வந்துவிட்டது. அப்பவே பிடித்துக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்" என்று கைகளை உதறினாள் லீலா.

ராஜு ராமசுவாமியின் அறைக்குச் சென்று பார்த்தான். அவர் படுக்கையில் புரண்டுகொண்டு "ஹா, அம்மா! அப்பா! ஐயையோ!" என்று திணறிக்கொண்டிருந்தார்.

ராஜு இரண்டே நிமிஷத்தில் சைக்கிளை எடுத்துக்கொண்டு டாக்டர் வீட்டுக்கு விரைந்தான்.

டாக்டரும், ராஜுவும் வருவதற்குள்ளாகவே ராமசுவாமியின் மூச்சு நின்றுவிட்டிருந்தது. லீலாவும், பத்மாவும் 'ஹோ'வென்று அழுதுகொண்டிருந்தனர். ராஜுவைக் கண்டதும் லீலா, "ராஜு!" என்று வீறிட்டலறினாள்.

டாக்டர் ராமசுவாமியைச் சோதனை செய்து பார்த்துவிட்டு, "உயிர்போய்விட்டது. ஹார்ட் ஃபெய்லியர்" என்று உறுதிப்படுத்திவிட்டுப் போனார்.

"லீலா!" என்று கதறினான் ராஜு.

மூவரது அழுகைக் குரலும் இரவின் நிசப்தத்தைக் கலைத்துக்கொண்டு, தெருவெல்லாம் எதிரொலித்தது.

அக்குரலோடு குழந்தை முரளியின் குரலும் சேர்ந்து, பரிதாபமாக ஒலித்தது!

(தொடரும்)

எழுத்துலகம்

எஸ். ராஜா

சாதாரணமாக ஒவ்வொரு வருஷமும் அக்டோபர் மாத இறுதியில் அல்லது நவம்பர் மாத ஆரம்பத்தில் அந்த வருஷத்திய நோபல் இலக்கியப் பரிசு யாருக்குத் தரப்படப் போகிறது என்று அறிவிக்கப்பட்டுவிடும். எனக்குத் தெரிந்து 1932 முதல் 1939 வரையில் ஏழு வருஷங்கள், ஒரு வருஷம்கூட விடாமல் வட இந்தியப் பத்திரிகைகளில் சற்றேறக்குறைய இந்தச் சமயத்தில்—அதாவது அக்டோபர் மத்தியில்—ஒரு விளம்பரம் வெளிவரும். ஒரு ஆசிரியரின் பெயரைக் குறிப்பிட்டு—அவர் வட இந்தியர்தான்; வங்காளி என்று எண்ணுகிறேன்; அவர் பெயரை இங்குக் குறிப்பிட வேண்டியது அவசியமில்லை. அவருக்கு இவ்வருஷத்திய நோபல் இலக்கியப் பரிசு அளிக்கப்பட்டிருப்பதாகப் பிரத்தியேகமாகச் செய்தி வந்திருப்பதாக ஒரு விளம்பரம் செய்யப்படும். அந்த விளம்பரத்தில் அவர் எழுதிய நூல்களின் பட்டியல் ஒன்றும் காணப்படும். இப்படி இரண்டு வருஷங்கள் அந்த ஆசிரியரின் நூல்கள் தென்னிந்தியப் பத்திரிகைகளிலும் விளம்பரப்படுத்தப்பட்டது எனக்கு ஞாபகம் இருக்கிறது.

ஆனால், இன்று வரையில் அந்த ஆசிரியருக்கு நோபல் இலக்கியப் பரிசு கிடைக்கவில்லை, பாவம்!

ஃ ஃ ஃ

சமீபத்தில் இறந்துபோன தாமஸ் மான் என்கிற ஜெர்மன் நாவலாசிரியரை "இந்தத் தலைமுறையின் மிகச் சிறந்த வசனகர்த்தா" என்றும், "இருபதாம் நூற்றாண்டின் கெதே" என்றும் சொல்வது வழக்கம். 1875—ல் பிறந்த தாமஸ் மான் எழுதிய பட்டன் ப்ரூக்ஸ் என்ற நாவல் 1901—ல் பிரசுரமாயிற்று. அன்று முதல் சாகிற நாள் வரையில் ஐரோப்பாவின் சிறந்த ஆசிரியர் என்கிற ஸ்தானத்தை விடாது காப்பாற்றி வந்தவர் அவர். அவருடைய முதல் நாவலை, பாதியாகக் குறைத்தால் ஒழியப் பிரசுரிக்க மாட்டேன் என்று சொன்ன பிரசுரகர்த்தாவை, வெகு பாடுபட்டுத் தான் எழுதியபடியே பிரசுரிக்க வைத்தார். கோபத்தில் ஆயிரம் பிரதிகளுக்கு மேல் பிரசுரிக்க மறுத்துவிட்

வருஷத்திற்குள்ளாகவே அதைப் பல தடவைகள் திரும்பத் திரும்பப் பிரசுரித்து விற்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது!

முதல் நாவலுக்குப் பிறகு சற்றேறக் குறைய இருபது வருஷங்கள் அதிகமாக எதுவும் எழுதவில்லை தாமஸ் மான். ஆனால், 1924—ல் மந்திர மலை என்னும் நாவலை வெளியிட்டார். ஐரோப்பாவின் ஆத்மாவை அப்படியே படம் பிடித்துக் காட்டினார் தாமஸ் மான். 1929—ல் அவருக்கு நோபல் இலக்கியப் பரிசு தரப்பட்டது.

ஹிட்லர் ஆட்சியில் அவர் ஜெர்மனியைவிட்டு வெளியேறினார். ஆனால், முதலில் ஹிட்லருக்கு எதிரான இயக்கங்கள் எதிலும் அவர் ஈடுபடவில்லை. ஆனால், 1936—க்குப் பிறகு அவர் ஹிட்லரை எதிர்த்து, முக்கியமாக ஹிட்லருடைய யூத எதிர்ப்புத் திட்டத்தை எதிர்த்துப் பல தடவைகள் எழுதினார். அவர் புஸ்தகங்களை எரித்து நாஜிகள் அவரைக் "கௌரவித்தார்கள்."

1938—ல் தாமஸ் மான் அமெரிக்காவில் குடியேறினார். நோபல் இலக்கியப் பரிசு பெற்ற பின், அவர் பைபிள் கதையான ஜோஸப் நாவல்களை எழுதினார். வேதாளம் சொன்ன கதைகளில் ஒன்றை எடுத்து, ஒரு நாவலாக எழுதியிருக்கிறார். மற்றும் பல நாவல்களும், சிறு கதைகளும், கட்டுரைகளும் எழுதியிருக்கிறார் அவர். 1952 வரையில் அமெரிக்காவில் இருந்தார் அவர். ஆனால், அவரைக் கம்யூனிஸ்ட் என்று சில அமெரிக்கர்கள் குற்றம் சாட்ட ஆரம்பிக்கவே, அவர் 1952—ல் ஸ்விட்ஸர்லாந்தில் குடியேறினார். டாக்டர் பாஸ்டஸ், புனிதமான பாபி முதலியன சமீப காலத்திய அவர் நாவல்கள். கடைசியாக எழுதிய பெலிக்ஸ் க்ரல் நாவலை முடிக்காமலேயே அவர் ஸ்விட்ஸர்லாந்தில் சென்ற வருஷம் இறந்துவிட்டார்.

ஃ ஃ ஃ

ஆங்கிலத்தில் இன்று எழுதுகிற நாவலாசிரியைகளில் ஸர்வஜன ரஞ்சகமாக எழுதுகிறவர் என்று அகாதா கிறிஸ்டியைச் சொல்லலாம். அவருடைய துப்பறியும் நாவல்களில் ஒன்றிரண்டையாவது படிக்காத ஆங்கிலம் தெரிந்தவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள் என்று சொல்லலாம். அவர் தன் காலத்தில் பெரும் பகுதியை பாக்தாதில் கழிக்கிறார். பாக்தாதில் அவர் புருஷன் பழைய புதைபொருள் இலாகா ஆராய்ச்சியாளராக் வேலை பார்க்கிறாராம். பாக்தாத் நகரை வைத்து அகாதா கிறிஸ்டி பல நாவல்கள் எழுதியிருக்கிறார்.

"புதை பொருள் இலாகாவில் பழம் பொருள் ஆராய்ச்சியாளராக இருக்கிற புருஷனை அடைந்தது என் பாக்கியம். எனக்கு வயசு ஆக ஆக என்னிடம் அவருக்குள்ள ஈடுபாடு அதிகரிக்கிறது" என்று அவர் சொன்னார் ஒரு சமயம்.

★

ஹிந்து சட்டம்

தலைமுறை தலைமுறையாக நடந்து வந்த பழக்க வழக்கங்களே முன்பு ஹிந்து சட்டமாக இருந்தது. சுருதி, ஸ்மிருதி, தொன்றுதொட்டு வரும் பழக்க வழக்கங்கள், பிரிவி கௌன்சில், ஹைகோர்ட்டுகளின் தீர்ப்புகள், அரசாங்கத்தாரால் காலப்போக்கை அனுசரித்துப் பிறப்பிக்கப்பட்ட சட்டங்கள் இவையே ஹிந்து சட்டமாவன.

சுருதி என்பது கேட்கப்பட்டது என்று பொருள்படும். அதாவது—கடவுள் வாக்கு, வேத வாக்கு, நான்கு வேதங்கள்.

விவாகம்

சௌ. கமலா — ஸ்ரீ ஜி. ஆர். மூர்த்தி

கல்லிடைக்குறிச்சி பாங்கர் ஸ்ரீ N. C. குளத்து ஐயர் புத்திரி சௌபாக்யவதி கமலாவுக்கும், ரிடையர்டு எக்ஸிகூடிவ் என்ஜினியர் லேட் ஸ்ரீ S. குருஸ்வாமி அய்யர் குமாரர் (கல்கத்தா, இந்தியா ஸ்டீம்ஷிப் கம்பெனியைச் சேர்ந்த) சிரஞ்சீவி G. R. மூர்த்தி. M. A. B.Com., LL.B., C. A.. அவர்களுக்கும் கல்லிடைக்குறிச்சியில் 1956 மார்ச் 29உ விவாகம் விமரிசையாக நடைபெற்றது.

சுதேசமித்திரன், சென்னை-2.

அறிவிப்பு

அடியிற்கண்டுள்ள இடத்திற்குப் புதிதாக நியமித்துள்ள ஏஜண்டின் விலாசத்தைக் கொடுத்துள்ளோம். அன்னாரிடம் மித்திரன் சந்தாதாரர்கள் தங்கள் சந்தாக்களைச் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

கள்ளிக்கோட்டை

ஸ்ரீ ஆர். ஸ்ரீனிவாஸன்,
C/o ஸ்ரீ டி. என். ராமசாமி
ஹிந்து நிருபர்.
கள்ளிக்கோட்டை,

சர்க்குலேஷன் மானேஜர்.

ஸ்மிருதி என்பது ஞாபகத்திலிருந்து வந்தது—ரிஷிகளால் எழுதப்பட்ட நூல்கள். இவைகளில் முக்கியமானவை (ஏ) மனுவால் தொகுக்கப்பட்ட நூல். இது கி. மு. 200 முதல் கி. பி. 200—க்குள் தொகுக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றது. (பி) யாக்ய வல்கியரின் தொகுப்பு—நாலாம் நூற்றுண்டில் தொகுக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றது. (ஸி) நாரதரின் தொகுப்பு—ஐந்து அல்லது ஆறும் நூற்றுண்டு.

ஹிந்து சட்டத்தில் முக்கியமாக இரண்டு பிரிவினைகள் உண்டு.

1. மிதாட்சரா—இது வங்கத்தைத் தவிர, மற்ற பாகங்களில் நடைமுறையில் இருக்கிறது.

2. தாயபாக—இது வங்கத்தில் நடைமுறையில் இருக்கிறது.

தாயபாகத்திற்கும் மிதாட்சராவிற்கும் உள்ள முக்கியமான வேற்றுமை என்னவெனில், தாயபாகத்தில் பிதுரார்ஜித சொத்து என்பதில்லை. தகப்பனாரிடமிருந்து ஒருவருக்குக் கிடைத்த சொத்தில், அவர் மகனுக்குப் பங்கு பெற உரிமை இல்லை.

மிதாட்சராவில் நான்கு பிரிவினைகள் உண்டு. (ஏ) காசி, (பி) மிதிலை, (ஸி) பம்பாய், (டி) மதராஸ் அல்லது சென்னை.

தமிழ் நாட்டில் நடைமுறையில் இருப்பது மதராஸ் பிரிவினைதான் என்று கூறத் தேவையில்லை.

ஹிந்து குடும்பங்கள் சாதாரணமாக அவிபக்த குடும்பமாகவே வாழ்வது வழக்கம். அவிபக்த குடும்பம் என்று கூறுவதற்கு அவர்களுக்குக் கூட்டு சொத்து வேண்டுமென்பதில்லை. சொத்து இருப்பின், அந்தக் குடும்பத்தில் பிறக்கும் ஒவ்வொரு ஆண் பிள்ளைக்கும் அந்தக் குடும்பத்தின் சொத்தில் பங்கிற்கு உரிமை உண்டு. குடும்ப சொத்தானது குடும்பத்திற்குப் பொதுவானது.

குடும்ப சொத்தில் குடும்பத்திலுள்ள ஆண் மக்களுக்குப் பங்கும், அதைப் பாகப் பிரிவினை செய்து கேட்க உரிமையும் உண்டு. பெண்களைக் கல்யாணம் செய்துகொடுக்கும் செலவு, குடும்ப சொத்திலிருந்து வரவேண்டியது. குடும்பத்தால் போஷிக்கப்படவேண்டியவர்கள் செலவிற்கும் சொத்து பாத்தியமாகும்.

ஒருவருக்குக் குடும்ப பாகப் பிரிவினையில் கிடைக்கும் சொத்தை பிதுரார்ஜித சொத்து என்பர். அதாவது, தான் சம்பாதிக்காமல் தன் தகப்பனாரோ, பாட்டனாரோ சம்பாதித்து, அதில் பங்கு கிடைக்கும் சொத்து. பிதுரார்ஜித சொத்துஎன்றால், தகப்பனாரிடமிருந்தோ, பாட்டனாரிடமிருந்தோ பாகப் பிரிவினை மூலம் கிடைத்த சொத்தாகத்தான் இருக்க வேண்டுமென்பதில்லை. இரண்டு, மூன்று சகோதரர்கள் ஒன்றுசேர்ந்து வியாபாரம் முதலியன செய்து, கூட்டாக சம்பாதித்த சொத்து, சில சந்தர்ப்பங்களில் பிதுரார்ஜித சொத்தாகக் கருதப்படும்.

ஹிந்து சட்டப்படி குடும்ப சொத்தில் பங்கு பெற பெண்களுக்கு உரிமையில்லை. ஆனால், ஹிந்துப் பெண்கள் சொத்து உரிமைச் சட்டப்படி இப்பொழுது ஒரு ஹிந்து விதவைக்குத் தன் கணவனின் சொத்தில் பங்கு பெற உரிமை உண்டு. ஒருவருடைய மகனின் விதவை, பேரனின் விதவை இவர்களுக்கும், மகனுக்கோ, பேரனுக்கோ சேரவேண்டிய பாகத்தைக் கேட்க இந்தச் சட்டம் அனுமதி தருகிறது. இப்படிக் கிடைக்கும் சொத்தை அந்த விதவை ஆண்டு அனுபவிக்கலாம். சில சந்தர்ப்பங்களில்தான் விக்ரயமோ, அடமானமோ செய்யலாம். சட்டப்படி அல்லாமல் விக்ரயமோ, அடமானமோ செய்தால் அவை செல்லா.

ஹிந்து ஒருவர் இறந்தால் அவருடைய சொத்தை அடைபவர் அவர் மகன்தான். மகன் என்பது, மகன், மகனின் மகன், மகனுக்கு மகனின் மகன் என்று மூன்று தலைமுறையைக் குறிக்கும். அதாவது, மகன் இல்லையெனில் மகனின் மகனைச் சாரும்.

தகப்பனுருக்கும் பிள்ளைகளுக்கும் பாகப் பிரிவினை ஏற்பட்டபின், தகப்பனுருக்கு மகன் பிறந்தால், அவர் காலத்துக்குப் பின், அவர் சொத்தை அந்த மகனே அடைவான். மேற்படி சொத்தில் பிரிந்துசென்ற மகன்கள் பங்கு கேட்க முடியாது.

ஒருவர், நான்காவது வர்ணத்தவரின் தாசி புத்திரனுக இருந்தால்—அதாவது, கல்யாணம் செய்துகொள்ளாமல் ஒருவர் ஒருத்தியுடன் வாழ்ந்து, அதில் பிறக்கும் மகன்—திருமணத்தின் மூலம் பிறந்த பிள்ளைக்குக் கிடைக்கும் பாகத்தில் பாதி பாகத்திற்குத்தான் அவருக்கு உரிமையுண்டு. முதல் மூன்று வர்ணத்தைச் சேர்ந்தவரின் தாசி புத்திரனுக்குச் சொத்தில் பங்குபெற உரிமையில்லை.

பூர்வ ஹிந்து சட்டப்படி, பிறவிக் குருடன், செவிடன், ஊமை, ஏதாவது ஒரு அவயவம் இல்லாதவன், புத்தி சுவாதீனமில்லாதவன், குஷ்டம் முதலிய பெரு வியாதியால் பீடிக்கப்பட்டவன் போன்றோருக்குச் சொத்தில் உரிமையில்லை. ஆனால், 1928—ம் ஆண்டில் பிறப்பிக்கப்பட்ட ஹிந்து வார்சுகள் தடங்கல் நீக்கல் சட்டப்படி, பிறவிப் பைத்தியம், மண்டு இவர்களைத் தவிர மற்றவர்களுக்கு உள்ள தடங்கல்கள் எல்லாம் ரத்து செய்யப்பட்டன. அந்தச் சட்டத்தின் பிறகு, பிறவியிலிருந்தே பைத்தியமாகவோ, மண்டுவாகவோ (இடியட்) இருந்தாலொழிய சொத்தில் உரிமை உண்டு.

இப்பொழுது ஹிந்து சட்டத்தின் கீழ் பல புரட்சிகரமான சட்டங்கள் வருகின்றன. ஹிந்து கல்யாணச் சட்டம் வந்துவிட்டது. பெண்களுக்கு சொத்தில் பங்கு கொடுக்கும் சட்டம் வருகின்றது.

—வழக்கறிஞர்

புனருத்தாரணம்

'புஷ்யன்'

சந்திரபுரம் ஸ்டேஷனை வண்டி அடையும்போது, விடிந்துகொண்டிருந்தது. தூரத்திலிருந்து கோயிலின் கோபுரம் மசமசவென்று தெரிந்தது. உற்சாகத்துடன், "அதோ, ராமர் கோயில்" என்று அம்மாவுக்குக் காட்டினேன். பரவசத்துடன் அவள் அதைப் பார்த்துக் கை கூப்பினாள்.

ஸ்டேஷனிலிருந்து ஊர் அரை மைல் தூரம் இருந்தது. ஒரு வண்டி வைத்துக்கொண்டு போனோம். ஊரை நெருங்குவதற்குள், நன்றாக விடிந்து, இளஞ் சூரியனின் பொற் கிரணங்கள் தோன்றிக்கொண்டிருந்தன. வண்டி வேதாந்தத்தின் வீட்டை அடைந்தது. அவன் வீட்டில் கொஞ்சம் மாறுதல் செய்யப்பட்டிருந்தாலும், அடையாளம் தெரிந்தது. அதற்குள், வீட்டு வாசலில் இருந்த பையன் உள்ளே ஓடி, "அப்பா, யாரோ வந்திருக்கா" என்று கூவினான்.

வேதாந்தம் வெளியில் வந்தான். அவன் உருவம் வயதால் மாறுபட்டிருந்தாலும், முகம் மாறவில்லை. "என்ன வேதாந்தம், அடையாளம் தெரியவில்லையா?" என்று கேட்டேன்.

வேதாந்தம் சிறிது என்னை உற்றுப் பார்த்தான். பிறகு வண்டியிலிருந்து இறங்கிக்கொண்டிருந்த என் தாயாரைப் பார்த்தான். உடனே, "அட, சக்கரபாணியா? பட்டணத்து ஆசாமி, ரொம்பவும் மாறிவிட்டாயே" என்றான். "வா, வா..." என்று வரவேற்றான்.

வண்டிக்காரன் சாமான்களை எடுத்து உள்ளே வைத்துக்கொண்டிருந்தான். நான் கோயில் இருந்த திசையில் திரும்பிப் பார்த்தேன். என் கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன. ராமர் கோயிலின் கோபுரம், சூரியனின் இளம் வெய்யிலால் பளபளவென்று மின்னியது. புத்தம்புதுக் கோபுரமாகத் திகழ்ந்தது.

"கோயில் கோபுரம் மிகவும் பிரமாதமாக இருக்கிறதே! எப்போது செப்பனிடப்பட்டது? யார் இந்தக் கைங்கர்யத்தை ஏற்றுக்கொண்டது?" என்று கேட்டேன் வேதாந்தத்தை.

"கோபுரத்தை மட்டும் பார்த்துப் பிரமித்துவிட்டாயே...முழுக் கோயிலையும் பார். அப்போதல்லவா தெரியும்! ரொம்பப் பிரமாதமாகப் போய்விட்டது. இப்போது இவ்வூர் கோயில் மிகவும் பிரபலமாகிவிட்டது" என்றான் வேதாந்தம்.

"அப்படியா..! சந்தோஷம்.. நான் ராமர் கோயில் இருக்கிறதோ இல்லையோ? அது கவனிப்பாரற்றுக் கிடக்கும் என்று பயந்துகொண்டிருந்தேன். அப்போதே இது ரொம்பக் கிலமாகக் கிடந்ததே" என்றேன்.

"ஆமாம், நீ நினைத்ததும் உண்மைதான். இரண்டு வருடங்களுக்கு முன்பு இந்தக் கோவில் கவனிப்பாரற்றுத்தான் கிடந்தது. எல்லாம் இடிந்து போய் கர்ப்பக்கிருகம் மட்டும்தான் விழாமல் இருந்தது. அப்பா மட்டும் தினம் தவறாமல் காலையிலும், மாலையிலும் ஆராதனம் செய்துவிட்டு வருவார்" என்றான் வேதாந்தம்.

"அப்படியிருக்க, எப்படி இம்மாதிரி புனருத்தாரணம் செய்தார்கள்? யாராவது கோடீசுவரன் பணம் கொடுத்தானா?" என்று கேட்டேன்.

"ராமரேதான் கொடுத்தார். . . தனக்குக் கோயில் கட்டும்படி அவரே பணம் தந்தார்" என்றான் வேதாந்தம்.

"என்னப்பா, ஆச்சரியமாயிருக்கிறதே, நீ சொல்வது புரியவில்லையே. . ." என்று கேட்டேன்.

"இப்போதுதான் ஊரிலிருந்து வந்திருக்கிறாய். முதலில் பல் தேய்த்துக் குளித்து விட்டுக் காபி, டிபன் எல்லாம் முடித்துக்கொள். அப்புறம் சொல்கிறேன்" என்றான் வேதாந்தம்.

* * *

சந்திரபுரத்து மண்ணில் பிறந்து, வளர்ந்து, படித்துப் பெரியவனானவன் நான். அது ஒரு சிறிய கிராமம். ஆனாலும் மிகவும் அழகானது. என் தகப்பனார் அவ்வூர் முன்சீபு. அதனால் எனக்குச் செல்வாக்கு அதிகம். கிராமத்துக்குச் செல்லப்பிள்ளையாக இருந்தேன்.

கிராமத்தில் சிறிய ராமர் கோவில் ஒன்று இருந்தது. அது பழம் பெருமை

வாய்ந்த கோயில். கோயிலில் குடிகொண்டிருந்த கோதண்டராமனின் திருவுருவம் கம்பீரமானது, என் நினைவு தெரிந்த நாள் முதலாக அந்தக் கோயிலின் பெரும்பாகம் கில்மாகக் கிடந்தது. ஆனாலும் அந்தக் கோயிலில் வேளை தவறாமல் பூஜைமட்டும் நடைபெற்று வந்தது. அந்தக் கோயிலுக்குக் கொஞ்சம் நிலம் இருந்ததால், பூஜை, விளக்கேற்றவும் நைவேத்தியத்துக்கும் குந்தகமின்றி வருவாய் கிடைத்துக் கொண்டிருந்தது. கோயிலுக்கு தர்மகர்த்தாவாக சிவசங்கர முதலியார் இருந்தார்.

நானும், வேதாந்தமும், குருசாமியும் இணைபிரியாத் தோழர்களாய் இருந்தோம். பள்ளிக்கூட நேரம் தவிர எங்களுக்குக் கோயிலிலேயே பொழுது போய்க் கொண்டிருந்தது. கோயிலைச் சுற்றி நிறைய இடம் இருந்ததால், அங்குதான் கண்ணுமூச்சி விளையாடுவோம்; கோலி விளையாடுவோம்; பாண்டி விளையாடுவோம், கோயிலில் இருக்கும் மகிழமரத்தின்மேல் ஏறிக் கொம்மாளம் அடிப்போம். வேதாந்தம் கோவிந்த பட்டாச்சாரியாரின் பிள்ளை. குருசாமி தர்மகர்த்தாவின் பிள்ளை. எங்கள் மூவர் வீட்டுக்கும் பிரசாதங்கள் வருமாயினும், கோயிலில் மற்றக் கும்பலோடு வாங்கிக் கொள்வதில் தனி ஆனந்தம், பயபக்தியும்கூட இருந்தது. அந்தக் காலத்தில் கிராமப் பண்பில் பக்தி வழியில் பழக்கப்பட்டவர்களாதலால், கோயிலில் ராமபிரானை சேவித்துவிட்டு, அவன் அருளிய பிரசாதத்தைக் கோயிலிலேயே பெற்று உண்பதால், அவன் நேரே கை நீட்டிக் கொடுத்த பிரசாதமாக எண்ணும் மனப்பான்மை இருந்தது.

வேதாந்தம் அர்ச்சகரின் பிள்ளையானதால், அவன் அவ்வப்போது தகப்பனாருக்குக் கோயில் காரியங்களில் உதவியாயிருப்பான். அவனை எல்லாவற்றிலும் பழக்கியிருந்தார். அவனுடைய தகப்பனார் ஏதாவது காரியமாக வெளியூர் போனால், அவன்தான் பூஜை செய்வான். நானும் குருசாமியும் அவன் செய்யும் காரியங்களைக் கூர்மையாக, அருகில், கர்ப்பக் கிருகத்தின் வெளியில் நின்றுகொண்டு கவனித்துக் கொண்டிருப்போம். அப்போது வோதாந்தத்தின்மேல் பொறாமையாகக்கூட இருக்கும், 'கடவுளுக்கு அருகில் இருந்து சேவை செய்யும் பாக்கியம் இவனுக்குக் கிடைத்திருக்கிறதே' என்று. எனக்கும் அவன் செய்வதைப் போல் செய்ய வேண்டுமென்று ஆசை உண்டாகும். இப்படி எங்கள் வாழ்க்கை கோயிலைச் சுற்றியே கழிந்து வந்தது.

குருசாமி படிப்பில் கொஞ்சம் மந்தம், மூன்றாம் பாரத்தில் அவன் மூன்று ஆண்டுகள் படித்தான். அப்படியும் தேறவில்லை. அதற்குமேல் அவனுக்குப் படிப்பில் அக்கறை செல்லவில்லை. அவனுடைய தகப்பனாரும் அவனைப் படிக்கும்படி வற்புறுத்தவில்லை. தன் தகப்பனாருக்கு விவசாயத்தில் உதவியாகவும், ஊரைச் சுற்றிக்கொண்டும் இருந்தான்.

நானும் வேதாந்தமும் மேலே படித்தோம். சந்திரபுரத்துக்கு அருகில் இருந்த சம்பங்கிபுரத்தில் ஹைஸ்கூலில் படித்தோம். நாங்கள் இருவரும் ஒரு வகுப்பிலும் தவறாமல் எஸ். எஸ். எல். ஸி., பாஸ் செய்தோம்.

வேதாந்தம் அதற்குமேல் படிக்கவில்லை. என் மாமா சென்னையில் இருந்தார். அவருக்குப் பிள்ளையில்லை. ஒரே பெண். அவர் பெண்ணை எனக்குக் கொடுக்க வேண்டுமென்று அவருக்கு ஆசை இருந்ததால், அவர் என்னைக் காலேஜில் படிக்க வேண்டுமென்று வற்புறுத்தி, என்னை சென்னைக்கு அழைத்துக்கொண்டு போய்க் காலேஜில் சேர்த்தார். அவருடைய ஆதரவில் நான் காலேஜிலும் நன்றாகப் படித்தேன். கோடை விடுமுறைக்குத்தான் சந்திரபுரம் போவேன். அப்போது என் நண்பர்கள் வேதாந்தம், குருசாமியுடன் இன்பமாகப் பேசிக்கொண்டிருப்பேன். வேதாந்தம், சம்பங்கிபுரம் தாலூகா பீஸில் குமாஸ்தாவாக இருந்தான். தினமும் சைகிளில் சந்திரபுரத்திலிருந்தே போய் வந்துகொண்டிருந்தான். விடுமுறையின்போது சந்திரபுரம் போகும்போதெல்லாம் கோயிலில்தான் நாங்கள் உட்கார்ந்து சிறு பிராயத்து நாட்களையெல்லாம் நினைவுக்குக் கொண்டு வந்து மகிழ்ந்திருப்போம்.

காலேஜில் படித்ததும் எனக்குப் பம்பாயில் வேலையாகியது. நான் கொஞ்ச நாட்கள் அங்கு தனியாக ஹோட்டலில் சாப்பிட்டுக்கொண்டு காலம் கழித்தேன். விரைவில் என் மாமா என் விவாக ஏற்பாடுகளைச் செய்யவே, ரங்கநாயகியை ஒரு சுபமுகூர்த்தத்தில் மணந்தேன்.

பம்பாயில் புறாக்கூண்டு போன்ற சிறு உறைவிடத்தில் நானும் ரங்கநாயகியும் தனிக்குடித்தனம் நடத்தினோம். சில வருடங்களில் என் தகப்பனார் காலமாகியதால், என் தகப்பனாரின் ஈமக்கிரியைகளை முடித்து, என் தாயையும் உடன் அழைத்துக்கொண்டு பம்பாய்க்கு வந்து சேர்ந்தேன். அன்றுடன் சந்திரபுரத்துடன் நான் வைத்திருந்த தொடர்பு அறுந்துவிட்டதென்றே சொல்ல வேண்டும். தபால் இலாகா இல்லாமற் போகவில்லை. எங்களைச் சேர்த்துவைக்க; எங்கள் நட்பைத் தொடர்ந்து உறவாடிக்கொள்ள. ஆனாலும் அதன் துணையை அதிகம் நாடவில்லை. எப்போதாவது

நான் சின்னவனாயிருக்கும்போதே இந்தக் கல்யாணம் எனக்கு நிச்சயம் பண்ணிவிட்டார்கள்...

உன்னோட ஜானவாஸ 'டிரஸ்'ஸைப் பார்த்தாலே தெரியறதே!

நீதான் முதல்லே பேசணும் தெரியுமா?...நான் பேசுவேன்னு நினைக்காதே......

எனக்கு வெக்கமாயிருக்கு... நான் மட்டும் முதல்லே பே[illegible]டு வேணா......நீங்கதான் முதல்லே பேசணும்......!

எங்க 'லேடீஸ் கிளப்' காரியதரிசிக்குக் கல்யாணம். 'சமையல் செய்வது எப்படி'ங்கற புஸ்தகம் பரிசளிக்கப் போறேன்...

யாருக்கு?...பிள்ளைக்கா பெண்ணுக்கா ?

நினைத்துக் கொள்வேன், வேதாந்தத்துக்குக் கடிதம் எழுத வேண்டுமென்று. திடீரென்று உட்கார்ந்து கொண்டு எழுதுவேன், பக்கம் பக்கமாக. அவனிடமிருந்தும் இதேபோல்தான் வரும். எப்போதாவது அத்திப் பூத்தாற்போல் வேதாந்தம் ஒரு கடிதம்எழுதுவான். அதற்கு மூன்று நான்கு மாதங்கள் கழித்து நான் பதில் எழுதுவேன். இப்படியே இந்த இடைவெளி மெதுவாக அகன்று, நாளடைவில் கடிதப்போக்கு வரத்தே நின்றுவிட்டது. ஆனால், மனத்தில் மட்டும் வேதாந்தம், குருசாமியைப்பற்றியும், சந்திரபுரத்தைப்பற்றியும், ராமர் கோயிலைப் பற்றியும் அடிக்கடி நினைத்துக் கொள்வேன்.

என் மனத்துக்குள்ளேயே கிளர்ந்தெழுந்து, கொண்டிருந்த ஆவலும், சந்திரபுரத்தைப்பற்றி அடிக்கடி நினைக்கும்போது உண்டாகும் ஒரு உத்வேகமும், அடுத்த தடவை சென்னைக்குப் போகும்போது எப்படியாவது சந்திரபுரத்துக்குப் போய்விட்டு வருவது என்று சங்கல்பித்துக்கொள்ளச் செய்தன.

அதற்குத் தகுந்தவாறு எனக்கு உடம்பு சரியில்லாமல் ஒரு மாதத்திற்கு மேல் படுத்துவிட்டேன். ஒரு நாள் நான் பிரக்ஞை இன்றி வெகு நேரம் இருந்துவிடவே, என் தாயாரும், ரங்கநாயகியும் பதறிவிட்டார்கள். என் தாயாருக்கு சந்திரபுரத்து ராமரிடம் விசேஷ பக்தி. அவர் வரப்பிரசாதி என்ற திடமான எண்ணம். நான் பிரக்ஞையற்றுப் போகவே, என் தாயார் உடனே ராமரை வேண்டிக்கொண்டாள். நான் நல்லபடியாய் உடம்பு சரியாகி எழுந்தால், வெள்ளி விளக்கு செய்து போடுவதாய்ப் பிரார்த்தித்துக் கொண்டாள். நான் உடம்பு சொஸ்தமாகி ஒரு வாரத்திற்கெல்லாம் எழுந்ததும் என்தாயார்என்னிடம், "எல்லாம் நம் ஊர் ராமரின் கருணை தான். அவருக்கு வெள்ளி விளக்குப் போடுவதாக வேண்டிக்கொண்டவுடன் உன் உடம்பு சொஸ்தமாகி விட்டது" என்றாள்.

எனக்கு மிகவும் ஆனந்தமாயிருந்தது. சந்திரபுரத்துக்குக் கூடிய சீக்கிரம் போகக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்துவிட்டதல்லவா? என் வெகு நாளைய மனோபீஷ்டம் பதினைந்து வருடங்களுக்குப் பிறகு நிறைவேறப்போகிறதல்லவா?

ஃ ஃ ஃ

காபியைக் குடித்ததும், "வா, கோயிலுக்குப் போகலாம்" என்று என்னை அழைத்துக்கொண்டு கிளம்பினான் வேதாந்தம். கோயிலை முழுதும் சுற்றிப் பார்த்ததும், என் மனம் மிகவும் வியப்பும், சந்தோஷமுமடைந்தது. புத்தம் புதிதாகக் கோயில் அழகுடன் திகழ்ந்தது. கருங்கற் பலகைகள் போடப்பட்டுப் பாதை சுத்தமாக இருந்தது. கோயிலின் உள்ளே வர்ணச் சித்திரங்கள் ராம கதையை விளக்கின. தூண்களிலெல்லாம் அழகிய சிற்பங்கள் செதுக்கப்பட்டிருந்தன.

மண்டபத்தில் உட்கார்ந்துகொண்டோம். மகிழ மரம் நன்றாகத் தழைத்து வளர்ந்திருந்தது. மகிழம் பூக்களின் நறுமணம் மூக்கில் இலேசாக ஏறிக்கொண்டிருந்தது.

"இந்தக் கோயிலைப் புனருத்தாரணம் செய்ததற்கு லட்சக்கணக்கில் பணம் செலவாகியிருக்குமே? அவ்வளவு பணம் எங்கிருந்து கிடைத்தது? நீ இன்னும் அதைச் சொல்லவில்லையே" என்று வேதாந்தத்துக்கு ஞாபகமூட்டினேன்.

"இதோ சொல்கிறேன்" என்று கூறிவிட்டு ஆரம்பித்தான்:

"நீ இங்கிருக்கும்போதே, இந்தக் கோயிலில் அங்கங்கு இடிந்துபோய் சுற்றிலும் புதர் மண்டிக் கிடந்தது. ஏதோ 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற பழமொழியைக் காப்பாற்றுவதற்காக இந்த ராமர் கோயில் இருந்ததே தவிர, தினமும் கோயிலுக்கு வந்து, கடவுளைத் தொழுது போகும் ஜனங்கள் மிகவும் சொற்பமாகிக் கொண்டு வந்தார்கள். நாளடைவில், என் தகப்பனரோ, நானோ கோயிலுக்கு வந்து ஆராதனம் செய்துவிட்டு வருவது மட்டும் நிற்காமல் நடந்து வந்தது. ஏதாவது பண்டிகைகளின்போது கடவுள் பக்தி குன்றாத சிலர் வருவார்கள். எப்போதாவது, யாராவது, ஏதாவது வேண்டிக்கொண்டிருந்தால், அதை நிறைவேற்றத் திருமஞ்சனம், தளிகைவிடுவார்கள். அவ்வளவுதான். மற்ற நாட்களில் கோயில் என்று ஒன்று இருப்பதையே மறந்திருந்தார்கள். இப்படியிருக்கும்போது ராமருக்கு உற்சவம் எங்கிருந்து நடக்கப் போகிறது? கோயிலுக்கு வரும் படியும்—கொஞ்ச நஞ்சம் கிடைத்துக் கொண்டிருந்ததும்—ஒன்றுமில்லாமல் போய்க்கொண்டிருந்தது.

காலத்துடன் ஜனங்களின் மனோபாவமும் மாறிக்கொண்டு வந்தது. 'சாமியாவது மண்ணாங்கட்டியாவது? அதற்குப் போய் ஏன் சூடத்தைக் கொளுத்தவேண்டும்? தேங்காயை ஏன்உடைக்கவேண்டும்? பணத்தைப் பாழ்படுத்த வேண்டுவதேன்? சாமிபழம், தேங்காய்வேண்டுமென்றுகேட்குதா? சாமிக்கு வேண்டிக்கொண்டால் எல்லாம் ஆகிவிடுமா? எல்லாம் மனித யத்தனத்திலிருக்கும்போது, கண்ணால் காணமுடியாத கடவுளைப்பற்றி நினைந்து ஏன் நேரத்தை வீணாக்கவேண்டும்?' என்ற எண்ணம் தீவிரமாகப் பரவிக்கொண்டிருந்தது. இந்த மனோபாவம் வளர்

பத்திரிகை ஆசிரியர் பிள்ளைக்கு நம்ப பெண் ஜாதகம் அனுப்பிச்சேளே...என்ன ஆச்சு ?

கதாசிரியர்:—நானும் ஞாபக மறதியாக இரண்டணா 'ஸ்டாம்பு' வெச்சு அனுப்பித்துவிட்டேன்.

தேவலையே நீங்க அப்படி இப்படின்னு உம்மோட பெண்ணுக்கு ஒசந்த வரனா பிடிச்சுட்டேளே...

அதெல்லாம் ஒண்ணும் இல்லை பெண்ணுக்கு பையன் ரொம்ப

அவாத்து கலியாணத்திலே சீர் செனத்தியெல்லாம் ரொம்ப அமக்களமா இருந்தது...பாத்திரமெல்லாம் ஒரே எவர் ஸில்வர் மயம்தான்......

ஆமாம்......வெண்கலப் பானை கூட எவர் ஸில்வர்லியே தான்

ஜைதக கணடு, வயதான பெரியவர்கள்—கடவுள் பக்தி குன்றாதவர்கள்—வருந்தினர். 'காலத்தின் கோலம், கடவுள்தான் அவர்களுக்கு நற்புத்தி புகட்ட வேண்டும்' என்று மனத்தில் கூறிக்கொண்டு, மௌனமாக இருந்தார்கள். அவர்களால் புதிதாக ஊரில் காட்டுத் தீபோல் பரவிக்கொண்டிருந்த நாஸ்திகத்தைத் தடுக்க முடியவில்லை.

அந்த நாஸ்திகக் கூட்டத்தில் நம் குருசாமி சேர்ந்தான் என்றால், உனக்கு ஆச்சரியமாயிருக்கும். அவனுடைய தகப்பனார் இறந்ததும் அவனுடைய போக்கே மாறிவிட்டது. கொஞ்ச நாட்கள் ஊரெல்லாம் அட்டகாசம் செய்தான். அடிக்கடிச் சம்பங்கிபுரம் போய் வருவான். அங்கு நடக்கும் கூட்டங்களில் பேசுவதைக் கேட்டுவிட்டு, அவைகளைத் தன் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து, தன்னையொத்த கூட்டாளிகளுடன் விவாதிப்பான். . . ."

"ஆமாம், இப்போது குருசாமி எங்கே இருக்கிறான்?" என்று கேட்டேன் நான்.

"இரு; அவசரப்படாதே! எல்லாம் சொல்கிறேன்," என்றான் வேதாந்தம்.

அவன் மேலே சொன்னான்:

"ஒரு நாள் என் தகப்பனார் கோயிலுக்குப் போகும்போது, "'சாமி சாமி'ன்னு கோயிலில் போய் கல்லுக்குச் சோற்றைக் காட்டிவிட்டு வந்தால், என்ன கிடைக்கப் போகிறது? அந்தக் கோயில் சாமி இருக்கும் இடமாகவா இருக்கிறது? முதலில் ராமன் ஒரு சாமியா?" என்று கேலியாகக் கூறிக்கொண்டிருந்தான், குருசாமி.

"அதைக் கேட்டு என் தகப்பனாருக்கு வருத்தம் உண்டாயிற்று. இவனால்தான் இந்த ஊரார் புத்தியும் கெட்டுப்போய் விட்டது என்று அவன்மேல் கோபமும் இருந்தது. அதனால் அவர், "குருசாமி, ராமரின் சக்தி உனக்குத் தெரியாது. என்றைக்குமே இந்தக் கோயில் இப்படி இருக்காது. ஒருநாள் பிரமாதமாய்த் திகழப் போகிறது. அவ்வப்போது ஸ்ரீ ராமரின் சக்தியை உணர்வாய்," என்று கூறினார்.

"ஆமாம், அவர் சக்தியைத்தான் பார்த்துக்கொண்டிருக்கிறோமே இத்தனை காலமாய். இன்னும் ஒண்ணுதான் பாக்கி.. அவர் தலைமேலே இருக்கிற கூரையும் அவர்மேல் இடிந்து விழவேண்டியது ஒன்றுதான்...அப்போது கடவுளின் சக்தி நன்றாகத் தெரிந்து போய்விடும்" என்று கேலியுடன் கூறினான். கூட இருந்தவர்களும் அவனுடன் சேர்ந்து சிரித்தார்கள். என் தகப்பனார் அதற்குமேல் ஒன்றும் பேசாமல் போய்விட்டார்.

"ஒரு நாள் என் தகப்பனார் பாதி ராத்திரியில் ஏதோ கனவு கண்டு, அலறிப் புடைத்துக்கொண்டு எழுந்தார். என்னை எழுப்பினார். 'வேதாந்தம், ராமருக்கு ஏதோ ஆபத்து உண்டாவதாகக் கனவு கண்டேன்...என்னைக் கோயிலுக்கு வரும்படி அழைப்பதுபோல் தெரிந்தது; வா, போகலாம்' என்று கூப்பிட்டுக்கொண்டு போனார்.

"அவசரம் அவசரமாகப் போனோம். அங்கு ஒன்றுமில்லை. இடிந்த, புதர் மண்டிக் கிடந்த அந்தக் கோயிலின் சூழ்நிலை அப்போது உண்மையிலேயே பயங்கரமாக இருந்தது, அந்த நடுநிசி வேளையில்.

"ஒன்றுமில்லையே அப்பா..வாருங்கள் போகலாம்" என்றேன் நான்.

"இல்லை வேதாந்தம்..காலைவரை இங்கேயே இருந்துவிட்டுத்தான் போக வேண்டும்..ராமர் கட்டளையை மீறக் கூடாது.." என்றார்.

"அப்பா ராமருக்கெதிரே உட்கார்ந்து கொண்டு, ராம ஜபத்தில் மூழ்கியிருந்தார். ராமரின் சந்நிதியில் ராத்திரி ஏற்றி வைத்திருந்த விளக்கு, மினுக் மினுக்கென்று எரிந்துகொண்டிருந்தது. அந்தச் சிறு வெளிச்சத்திலும் ராமரின் மோகன பிம்பம் கம்பீரமாய்த் திகழ்ந்தது. நானும் ராம தியானத்தில் மூழ்கியிருந்தேன்.

"அதிகாலை நான்கு மணி இருக்கும். பதினைந்து, இருபது பேர் கடப்பாரை, மண்வெட்டிகளுடன் கோயிலை நோக்கி வந்துகொண்டிருந்தனர். எல்லோருக்கும் முன்னால் குருசாமி வந்துகொண்டிருந்தான்.

"நான் எழுந்து வெளியே வந்து, 'என்ன குருசாமி, இதெல்லாம்?' என்று கேட்டேன்.

"முதலில் அவன் திகைத்தான். நாங்கள் எப்படி அவ்வளவு அதிகாலையில், அவனுக்கு முன் அங்கு வந்துவிட்டோம் என்று ஆச்சரியப்பட்டிருக்க வேண்டும். 'நாங்கள் எப்படி உங்களுக்கு முன்னால் வந்தோம் என்று அதிசயப்படுகிறாயா? என் தகப்பனாருடைய கனவில் ராமர் வந்து, தனக்கு ஏதோ ஆபத்து நேரப் போவதாகக் கூறவே, நாங்கள் வந்து பார்த்தோம். . .' என்று அவன் சந்தேகத்தைப் போக்கினேன். கூட்டத்திலிருந்த ஒருசிலர் 'ஹா..' என்று அதிசயித்தனர்.

"குருசாமியும் பிரமித்தான். உடனே, "தோழர்களே, இது புரட்டு. நம்பாதீர்கள்...சாமியாவது, கனவில் வருவதாவது. நம் ரகசியத் திட்டம் எப்படியோ இவர்களுக்குத் தெரிந்துவிட்டது . . . நமக்கு ஜாலங் காட்டுகிறார்கள். அதற்கெல்லாம் நாம் பயப்படமாட்டோம் . . . ராமன் அயோக்கியன், தெய்வமே அல்ல . . . வாருங்கள், நாம் மேற்கொண்ட பணியைச் செய்வோம் . . . கோயிலை இடித்துத் தரை மட்டமாக்குவோம்' என்றான்.

"இதற்குள் என் தகப்பனார் எழுந்து வந்தார். குருசாமியைப் பார்த்து, 'குருசாமி, வேண்டாம் இந்தக் காரியம் . . . கடவுள் உன்னை வாழவைக்க மாட்டார் . . . அநியாயமாய்க் கெட்டுப் போகாதே . . .' என்றார்".

"சரித்தான். . அந்தக் கடவுள் என்னை என்ன செய்யுதோ பார்க்கிறேனே", என்று கூறிவிட்டுத் தன் கூட்டாளிகளைப் பார்த்து, "வாருங்கள்" என்று கூப்பிட்டான்.

"எல்லோரும் அவனைப் பின் தொடர்ந்து சென்றனர். . . நான், 'அப்பா, ஊரில் பெரியவர்களிடம் போய், அவர்களை வரவழைத்து, இதைத் தடுக்க வேண்டும்' என்று ஆத்திரம் கொண்டேன்.

"வேதாந்தம், ஆத்திரப்படாதே . . . ராமர் தன்னைக் காத்துக் கொள்வார் . . . அவரை மனிதர்களாகிய நாம் காப்பாற்ற வேண்டியதில்லை . . ." என்று அமைதியாகக் கூறி, முன்போலவே தியானத்தில் உட்கார்ந்துகொண்டார்.

"அப்பா, வெளியே வந்துவிடுங்கள்... உங்களுக்கு அபாயம் உண்டாகும்" என்று கூவினேன்.

"நான் அவரைப் பக்தியுடன் பூஜித்து வந்தது உண்மையானால், அவர் தன் பக்தனைக் காப்பாற்றித் தீருவார் . . அல்லது என்னைத் தன்னருகில் அழைத்துக் கொள்ள ஆசைப்பட்டால், கிருதார்த்தனாய் விடுவேன் . . ." என்றார்.

"நான் திகிலுடன், அவரருகேயே நின்று, அவரையே பார்த்துக்கொண்டிருந்தேன். சாந்தமாய், கண்களை மூடி, தியானத்தில் மூழ்கியிருந்தார் அவர்.

"தோழர்களே . . . ஆரம்பியுங்கள். . ." என்று கூவினான் குருசாமி. தொடர்ந்து கடப்பாரைகள் கோயிலை இடிக்கும் சப்தம் கேட்டது. சில விநாடிகளில், "ஐயையோ" என்ற அலறல் ஒன்று கேட்டது.

"என்ன குருசாமி. . . கால்மேல் போட்டுக்கிட்டியா என்ன?" என்று பதறிக் கேட்டனர், எல்லோரும். நான் ஓடிப்போய்ப் பார்த்தேன்.

"என்னமோ கடிச்சுட்டதுபோல். . . . இருக்கு . . ." என்று காலைப் பிடித்துக் கொண்டான் குருசாமி . . . அவர்கள் எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்கும் போதே அங்கிருந்த புதரிலிருந்து ஒரு நாகப்பாம்பு வெளிப்பட்டது. எல்லோரும் ஆடாமல் அசையாமல், பிரமையுடன் அதையே பார்த்துக்கொண்டிருந்



சில்லறை விற்பனைக்கான
கிளை ஆபீஸ்கள்:
285, சைனபஜார் ரோடு,
மதராஸ்
&
71, பாண்டி பஜார்,
தியாகராய நகர்

தார்கள். அது தன் படத்தை விரித்துத் தூக்கி, எல்லோரையும் எட்டிப்பார்ப்பதுபோல் வளைந்து, அப்படியும், இப்படியும் ஆட்டிவிட்டுப் பிறகு படத்தைச் சுருக்கிக்கொண்டு, வளைந்து வளைந்து ஓடிற்று. எதிரே இருந்த மற்றொரு புதரில் மறைந்துவிட்டது.

"அது மறைந்ததும்தான் எல்லோரும் உணர்வை அடைந்தனர். உடனே அலறிப் புடைத்துக்கொண்டு ஓடினார்கள், பலர். தைரியசாலியான ஐந்தாறு பேர் மட்டும் புதர் பக்கம் போய், கழிகளால் தட்டிப் பார்த்தார்கள். ஆனால், நாகம் இருக்கும் அடையாளமே தெரியவில்லை.

"பிறகு குருசாமியைப் பாழடைந்த மண்டபத்துக்குத் தூக்கிக்கொண்டு வந்தார்கள். அவன் வாய் நுரை கக்கிற்று. என் தகப்பனார் ஓடி வந்தார், அரவம் கேட்டு. என் தகப்பனாருக்குத்தான் பாம்பு மந்திரம் தெரியுமே. குருசாமியின் நண்பர்களில் ஒருவன், 'ஐயா, குருசாமியை நாகம் தீண்டிவிட்டது. . தயவு செய்து மந்திரம் போட்டு, அவனைப் பிழைக்க வைக்க வேண்டும்' என்று வேண்டிக்கொண்டான்.

"என் தகப்பனார் பதில் சொல்லுமுன் நான், 'உங்களுக்குத்தான் கடவுள் பேரிலும், மந்திரங்களிலும் நம்பிக்கையில்லையே . . . அது ஒன்றும் அவனைப் பிழைக்கவைக்காது . . . போங்கள் . . . உங்கள் அறிவைக் கொண்டு பிழைக்க வைத்துக்கொள்ளுங்கள்' என்றேன்.

"என் தகப்பனார் குறுக்கிட்டு, 'வேதாந்தம் . . . அப்படியெல்லாம் சொல்லாதே.. ஆபத்துக் காலத்தில் நம் வர்மமெல்லாம் கூடாது. . .' என்று வீட்டுக்கு ஓடிப்போய் ஸ்நானம் செய்து வந்து, மந்திரம் போட்டார். குருசாமி உயிர் பிழைத்தான்.

"குருசாமி என் தகப்பனாரை வணங்கி, 'என்னை மன்னித்துவிடுங்கள் . . . அறியாமல் உங்களையும், ஆண்டவனையும் தூற்றினேன்' என்றான்.

"குருசாமி, ராமர் என் கனவில் வந்து, 'ஆபத்து வரப்போகிறது' என்று எச்சரித்துக் கோயிலுக்கு வரும்படி என்னை ஆக்ஞாபித்த போது, அவரைக் காப்பாற்றத்தான் கூப்பிடுகிறார் என்றே நானும் எண்ணி ஏமாந்தேன் . . . ஆனால், இப்போது தெரிகிறது குருசாமி . . . அவரைக் காப்பாற்ற என்னை அழைக்கவில்லை . . . அவரை அழிக்கப்போவதாக எண்ணிய உன்னை—தனக்குத் தானே அழிவு தேடிக்கொள்ள நினைத்த உன்னை—காப்பாற்றத்தான் கூப்பிட்டார் என்று இப்போதுதான் உணர்கிறேன். அவரைக் காப்பாற்ற நாம் யார். . ." என்றார் என் தகப்பனார்.

"அதைக் கேட்டதும் குருசாமி, பிரமித்துவிட்டான். . . என்ன சொல்வதென்றே புரியவில்லை . . . அதை மறுக்க, அவனால் எப்படி முடியும்?" என்றான் வேதாந்தம்.

"அப்புறம், குருசாமியே முன்னின்று நிதி திரட்டி, புனருத்தாரணம் செய்தானாக்கும் கோவிலை. . ." என்று கேட்டேன் நான்.

"அதுதானே இல்லை . . . அங்கும் ஒரு அதிசயமல்லவா நடந்தது . . . குரு வந்து 'இந்தக் கோவிலை நன்றாகக் கட்டி, புனித ஸ்தலமாகச் செய்யவேண்டும் . . . தினமும் பஜனைகள், சிறுவர்களுக்கு நீதி புகட்டும் கதைகள் சொல்வது எல்லாம் நடக்கவேண்டும் . . . பழமையும் புதுமையும் கலந்து, இந்தக் கோவில் நிலைபெற வேண்டும்' என்றான்.

"என் தகப்பனாரும், 'அப்படியே செய்யலாம் . . . நாளைக்கு ஊரிலிருக்கும் பெரியவர்களைக் கூட்டி, அதற்கு வேண்டியவைகளைச் செய்ய ஆலோசனை செய்யலாம்" என்றார்.

"ஆனால், அடுத்த நாள் காலையில் நடைபெற்ற கூட்டத்தில், திடீரென்று குருசாமி எழுந்து, 'மகாஜனங்களே, என் ஐயன் ராமனுக்கு, நீங்கள் எல்லாம் நிதி திரட்ட வேண்டியதில்லை . . . ஐயன் ராமன் தனக்குத்தானே சகாயம் செய்துகொண்டு, பிறருக்கும் சகாயம் செய்யும் தனதயாளன்... நான் அவருடைய தாஸானுதாஸன் ஆஞ்சநேயன்.. என் மூலமாக அவர், உங்களுக்குச் சொல்லும் சேதி இதுதான்... கோயிலின் கிழக்கு மூலையில் புதர் மண்டிக் கிடக்கும் இடத்தில் நான்கு அடி ஆழம் தோண்டினால், பொற்காசுகளும், நகைகளும் கிடைக்கும். அவைகளைக்கொண்டு ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்யுங்கள்' என்று கூறிவிட்டு, மறு கணம் பொத்தென்றுவிழுந்துவிட்டான். சிறிது நேரம் கழித்துப் பிரக்ஞை பெற்றான். அவன் சொன்னவைகளை அவனிடம் கூறியபோது, அவன் அதிசயப்பட்டான்.

"குருசாமி மூலமாய் ஆஞ்சநேயர் கூறியபடி, கோயிலில் அந்த இடத்தைத் தோண்டிப் பார்த்தபோது, தங்கக் காசுகளும், வைரம் முதலிய கற்கள் இழைத்த நகைகளும் கிடைத்தன, இரு செப்புக் குடங்களில். ராமர் தம் செல்வத்திலேயே தம் கோவிலைப் புதுப்பித்துக்கொண்டார்!" என்றான் வேதாந்தம்.

"இந்த அதிசய சம்பவங்களையெல்லாம் கேள்விப்பட்டு, இந்த ராமரின் மகிமை ஓங்கிவிட்டது. இப்போது ராமருக்கு ஆராதனையும், உற்சவங்களும் அமோகமாய் நடக்கிறது. ராமநவமி ஒன்பது நாளும் ஒரே கோலாகலம்தான். பக்தர்களின் கூட்டம்தான், ஊரெல்லாம்" என்று மேலும் கூறினான், வேதாந்தம்.

நான் ஆச்சர்யத்தால் ஸ்தம்பித்துப் போனேன்.

அப்போது குருசாமியும் அங்கு வந்து சேர்ந்தான்.

"என்ன குருசாமி, சௌக்கியமா?" என்று கேட்டேன்.

"ராமன் அருளால் சௌக்யம்தான்" என்றான்.

பிறகு மூவரும் சம்பாஷித்துக்கொண்டிருந்தோம்.

வேதாந்தத்தின் தகப்பனாரும், என் தாயார், மனைவி எல்லோரும் வந்தார்கள். நாங்கள் வந்த காரியத்தை முடித்துக்கொண்டோம். வெள்ளி விளக்கின் ஒளியில் ராமரின் உருவம் மேலும் கம்பீரமாகத் திகழ்வதுபோல் உணர்ந்தேன்.

★

வெட்டுக்காயம், சொரி சிறங்கு, வேனில்கட்டி, தீப்பட்ட புண், கரப்பான், முகப்பரு, சேத்துப்புண், கொப்புளம், பத்து முதலிய சகல சரும வியாதிகளையும் போக்கும் **களிம்பு.**

சைபால் CIBOL

ரமணீஸ்

பேபி கிரைப்

குழந்தைகளுக்கு ஏற்படும் மாந்தம், வயிற்றுவலி, வயிற்றுப் பொருமல், பல் முளைக்கும்போது ஏற்படும் வயிற்றுப் போக்கு முதலிய **சகல அஜீரணக் கோளாறுகளையும் போக்கி, புஷ்டி அளிப்பது.**

நவீன யந்திர சாதனங்களால் தயாராகிறது

"எல்லிஸ் பாம்" (ELLIS BALM)

ஜலதோஷம், நரம்புவலி, தலைவலி, பல்வலி, மார்சளி, முதலியவைகளைப் போக்கவல்லது.

எமது பாக்டரியில் எல்லா மருந்துகளும் நவீன யந்திர சாதனங்களாலேயே தயாராகின்றன.

தயாரிப்பவர்கள்:

ஸ்ரீ சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி,

மதுரை.

புது உலகம்

வெ.ராதாகிருஷ்ணன்

மேகக் கூட்டத்தைத் துளைத்துக் கொண்டு செல்லும் சந்திரனைப் போல பற்பல ஊர்களினூடே விரைந்து சென்ற எக்ஸ்பிரஸ் வண்டி, தனது வேகத்திற்குத் தகுந்தவாறு ஜதி போட்டுக் கொண்டு முன்னேறியது. புவனமெங்கும் வியாபித்து இருக்கும் காரிருளுக்கும் அப்பால் எங்கோ நிலைத்து நின்ற சிதம்பரத்தின் கண்கள் ஒளி மங்கிய நட்சத்திரங்களைப் போல் தோன்றின. காதலில் மூழ்கி, கடமைக்காக அதனை திரஸ்காரித்து, இறுதியில் காதலிடமே அடைக்கலம் புகச்செல்லும் இதயத்தின் பிரதிபிம்பம் அல்லவா அதில் இழையோடுகிறது?

ஃ ஃ ஃ

காலேஜ் பரீட்சை முடிந்ததும் 'ஹாஸ்டல்' வாழ்விலிருந்து கிடைக்கும் விடுதலையைக் குறித்தும். கிராமத்தில் இருக்கும் அருணாவைச் சந்திக்கப் போவதை நினைத்தும் அவன் உள்ளம் எம்பிக் குதித்தது. தன் வரவை ஆவலுடன் எதிர்பார்க்கும் ஆசை விழிகளையும், ஏங்கும் முகத்தையும் நெஞ்சு ஓவியமாக்கியது. பெரிய காஞ்சீபுரத்திலிருக்கும் தன் மாமாவைப் பார்த்துவிட்டு, அங்கிருந்து மறு நாளே ஊருக்கு ரயிலேறிவிடலாம் என்ற தீர்மானத்திற்கு வந்தவன், பரீட்சை முடிந்த அன்று மாலை ஏழு மணிக்கு பஸ்ஸில் ஏறி அமர்ந்துவிட்டான். சாலையின் திருப்பங்களில் வளைந்து செல்லும் பஸ், தன் வாழ்விலும் பெரும் திருப்பத்தை உண்டாக்கிவிடும் என்று அவன் நினைக்கவில்லை.

ஃ ஃ ஃ

நிர்மலமாயிருந்த வானத்தில் திடீரென்று கருமேகக்கூட்டம் கூடியது. கறுத்து இருண்ட ஆகாயம் நெற்றியில் சுருக்கம் விழுந்த கிழவனைப்போல பயமுறுத்தியது. கண்ணைப் பறித்து வெட்டிப் பாய்ந்த மின்னலை அடுத்து அண்டம் அதிர இடி இடித்தது. சிறிது நேரத்திற்கெல்லாம் நிற்காமல் கொட்டிய மழை ரஸ்தாவைத் தெப்பக்குளமாக்கியது. பஸ்ஸின் வேகம் சிறிது சிறிதாகக் குறைந்து கடைசியில் நடுச்சாலையில் நின்றுவிட்டது அநாதைக் குழந்தைபோல. "வண்டி மேலே போகாது" என்ற டிரைவரின் குரல் பிரயாணிகளிடையே சலசலப்பை உண்டு பண்ணியது.

பஸ்ஸின் முன் வெளிச்சத்தில், பாதையின் ஓரமாக மழையின் உக்ரத்தைத் தாங்க முடியாமல் சாய்ந்து நின்ற கைகாட்டி மரம், இரண்டு பர்லாங்கு தூரத்தில் ஒரு கிராமம் இருப்பதைத் தெரிவித்தது. பிரயாணிகளில் பலர் கீழே இறங்கி கிராமத்தை நோக்கி வேறு வழியின்றி நடந்தனர். தெப்பமாக நனைந்த உடலுடன், கையில் ஸூட்கேஸுடன், பாதையைக் கண்டுபிடித்து குறிப்பிட்ட கிராமத்தை அடைவதற்குள் போதுமென்றாகிவிட்டது, சிதம்பரத்திற்கு.

திண்ணையுள்ள வீட்டில் ஒதுங்கி ஸூட்கேஸை வைத்துவிட்டு, உடைகளைப் பிழியும்போது அந்த வீட்டின் கதவு திறந்தது. "யாரது?" என்ற கேள்வியுடன் ஒரு பெரியவர் அவன் முன் நின்றார். பெரியவரிடம் விஷயத்தை விளக்கியதும், உபசாரத்துடன் உள்ளே அழைக்கப்பட்டான் சிதம்பரம்.

"நான் சாப்பிட உட்காரும்போது திண்ணையில் அரவம் கேட்டு கதவைத் திறந்தேன். நீங்கள் இன்று என்னுடன் சாப்பிட வேண்டும்!" என்று அன்புக் கட்டளை விடுத்தார் பெரியவர். சிதம்பரம் கீழ்ப்பணிந்தான். அடுக்களையில் இரண்டு இலைகள் தயாராய்ப் போடப்பட்டிருந்தன.

உணவு பரிமாறிய மலர்க் கரம் அவருடைய மகளுடையது என்பதை அறிந்து கொண்டான். அப்பெண்ணை எங்கேயோ எப்பொழுதோ பார்த்த நினைவு கூட எழுந்தது! குனிந்த தலையும், அடக்கமான பண்பும் வாய்ந்த பார்வதி என்ற அப்பெண்ணிடம் சிலையின் லாவண்யம் இருந்தாலும், இடைக்குக் கீழ் நொண்டி நடக்கும்போது "ஐயோ!" என்றே சொல்லத் தோன்றியது.

சிரித்துப் பேசினார் பெரியவர். ஆனால் அந்த சிரிப்பிற்குப் பின்னால் ஏக்கத்தின் சாயை ஒளிந்துகொண்டிருந்தது தெரிந்தது. அவர் காட்டிய மகிழ்ச்சிக்குப் பின்னால் தீராத துன்பம் ஒன்று அவரை வாட்டுவதைப் புரிந்துகொண்டான் சிதம்பரம்.

சாப்பாடானதும் கூடத்துச் சுவரில் மாட்டியிருந்த போட்டோ படங்களை பார்வையிட்டுக்கொண்டே வந்தவன், நடுவில் மாட்டியிருந்த மிகப் பெரிய படத்தின் முன் நின்று அதையே பார்த்துக் கொண்டிருந்தான். அன்பும், அமைதியும் தவழும் முகத்துடன், நெற்றியில் லக்ஷ்மிகரமான திலகத்துடன் காட்சியளித்தாள் ஒரு ஸ்திரீ அப்படத்தில்!

"என்ன அப்படிப் பார்க்கிறீர்கள் படத்தில்?" என்ற குரல் கேட்டுத் திரும்பினான் சிதம்பரம்.

"இந்த போட்டோவில் இருப்பவர் யார்?"

"இவள்தான் பார்வதியின் தாயார்!" என்றார் பெரியவர்.

"இப்பொழுது இவர்..."

"உயிரோடு இல்லை!" வெப்பமான பெருமூச்சொன்று விட்டார் பெரியவர். "என் மீது பார்வதியின் பொறுப்பைச் சுமத்திவிட்டுப்போய்விட்டாள். வருஷம் ஒன்றாகிவிட்டது!" என்னும்போது அவர் கண்களில் தண்ணீர் முட்டியது. முன்பின் தெரியாத வாலிபனிடம் அவர் துக்கத்தின் சுமையை சிறிது இறக்கிவிட்டார்.

"பார்வதிக்குக் கல்யாணமாகாத குறையே அவளைக் கீழே தள்ளிவிட்டது. எத்தனையோ பேர்கள் பெண் பார்க்க வந்தார்கள். கால் ஊனத்தைக் கண்டதும் கண்ணை மூடிக்கொண்டு போனார்கள். இரண்டு வருஷத்திற்கு முன்பு வரை அவளை ஒரு ராஜகுமாரன் கொத்திக்கொண்டு போய் விடுவான் என்றுதான் நினைத்தேன், அவளுடைய அழகிற்கு! ஆனால்..."

"ஆனால் என்ன?"

"அப்பொழுது நான் சென்னையில் உத்தியோகம் பார்த்து வந்தேன். பார்வதி ஒரு நாள் பள்ளிக்கூடத்திற்கு சென்றுவிட்டு வரும்போது ஒரு திருப்பத்தில் யாரோ ஒருவன் அவள் மீது சைக்கிளை ஏற்றி விட்டான். ஒரு மாத ஆஸ்பத்திரி வாசம். வெளியில் வரும்போது அவள்

பாத்ருடுவின் "பாலசஞ்சீவினி" REGD

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் அசல் விஜயநகரம் மருந்து. எல்லா மருந்து கடைகளிலும் கிடைக்கும். போலிகளைக் கண்டு ஏமாறாதீர்

Dr பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

19. தெற்குமாட வீதி, மயிலாப்பூர், மதராஸ்-4. போன்: 71354

கும்பகோணம் கிளை: 7, சாரங்கபாணி கோவில் கீழ வீதி

நொண்டிக் கிளியாகி விட்டாள். பார்வதி அழாத நாளில்லை. கவலை அவளை உருக் குலைத்து விட்டது. நான் ஆண்டவன் மீது பாரத்தைப் போட்டு விட்டேன்!" –பெரியவரின் கன்னங்களில் உருண்டோடிய கண்ணீர் முத்துக்கள் அவரது துயரத்தின் ஆழத்தைப் பறைசாற்றின.

படுக்கையில் படுத்த பிறகும் அவனுக்கு அன்றிரவு முழுவதும் உறக்கம் வரவில்லை. வெளியோ 'சோ'வென்று அடித்துப் பெய்தது மழை. உள்ளே விசித்திரப் புயலொன்று சிதம்பரத்தின் மனத்தில் வீசியது.

பார்வதிக்கு திருமணமாகாததற்கு பொறுப்பாளி யார்? கன்னியாகவே காலங் கழிக்கும்படி அவளது வாழ்க்கையின் போக்கை நிர்ணயித்தது யார்? யார்?...அவன் தான்!...பனிப் படலத்திற்கு அப்பால் தெரியும் கட்டிடங்களைப்போல இரண்டு வருடங்களுக்கு முன் சென்னையில் லஸ் முனையில் ஒரு பெண்ணின் மீது சைக்கிளை மோதவிட்ட காட்சி அவன் கண் முன் தோன்றியது.

அடைக்கலம் புகுந்த தனக்கு உண்டி கொடுத்து உபசரித்தவர்களை மோசம் செய்வதா? அதுவும் அவர்களுடைய கதையைக் கேட்ட பிறகு. பார்வதியை இந்நிலைக்கு ஆளாக்கியதற்கு பிராயச்சித்தம் அவன் அவளை மணந்துகொள்வதுதான்! அப்படியானால்...அருணா?... அவள் மீது கொண்ட காதல் கருக வேண்டியதுதானா?...

கள்ளங் கபடற்ற பார்வதியின் வாழ்வைப் பாழாக்குவதா? ... முடியாது, முடியாது!...அப்படியானால் அருணா?...

மனப் போராட்டத்தின் இறுதியில் படித்து பண்பட்ட உள்ளம் பிராயச்சித்தத்தையே விழைந்தது. ஆதவன் ஒளியைப் பரப்பிக்கொண்டு வரும்போது குழம்பிய அவன் உள்ளமும் ஒளி கண்டது!

ஃ ஃ ஃ

பூபாள ராகத்துடன் இழைந்து வந்த மெல்லிய வாடைக் காற்று அந்தத் தெருவின் துயிலைக் கலைத்தது. அந்தத் தெருவில் ஒரு கல்யாணம்! வீதியின் நடுவிலிருக்கும் வீட்டு வாசலில் போட்டிருந்த பந்தலில் மா இலைத் தோரணங்கள், வாழைத்தார்கள் எல்லாம் கம்பத்திற்குக் கம்பம் கட்டி அழகு செய்திருந்தார்கள்.

வருங்கால இன்ப நாட்களை நினைத்ததும் உடலெங்கும் தவழ்ந்து ஓடும் இன்ப உணர்ச்சியை அஸ்திவாரமாகக்கொண்டு மனக்கோட்டைகள் பல கட்ட விழையும் மணப்பையனின் உள்ளமோ, துக்கத்தில் சாம்பிக் குமைந்தது. அருகே ஒலிக்கும் வைதீகக் குரலும், சுற்றிக் குழுமியிருந்த ஆடவர் பெண்களின் கூட்டமும், பல பைத்தியங்களுக்கு நடுவில் இருக்கும் ஒரு பிரமையையே உண்டாக்கியது சிதம்பரத்திற்கு. எதிரே மூண்டெழும் ஹோமத் தீயின் செந்நாக்குகளுக்கு நடுவில் சோகம் ததும்பும் முகம் ஒன்று மின்னி மின்னி மறைந்தது. நெய் மணம் வீசும் புகையின் கரிப்பிலிருந்து கண்களை மூடும்போது, இமையின் மெல்லிய ஜவ்வுகளையும் துளைத்துக்கொண்டு ஓர் இள மங்கையின் வடிவம் கண்களில் நீர் அலமர, முகமெல்லாம் சோகமும், ஏமாற்றமும் குமுறிச் சிந்த, கைகளை விரித்து, "என்னை ஏமாற்றி விட்டீர்களே! என் இதயத்தில் கடைசியில் நெருப்பைக் கொட்டிவிட்டீர்களே!" என்று இறைஞ்சும் காட்சி விஸ்வ ரூபம் எடுத்து நின்றது.

புறத்தே உல்லாசச் சிரிப்பு; அகத்தே குமுறும் எரிமலையின் எக்களிப்பு; அருணாவின்மீது இரவு பகலாக நெஞ்சில் வளர்த்து வந்த காதல் இப்படித்தான் அழிந்து போக வேண்டுமா? காதல் அமரத்துவம் உள்ளது என்று கவிதைகளும் புத்தகங்களும் கதறுகின்றனவே! துன்பம், கண்ணீர்–இந்தக் கலவையின் பூச்சில்தான் அந்த அமரத்துவம் ஒளிரவேண்டுமா? வெகு தொலைவிலிருந்து தண்ணீர் கொண்டுவந்து ஒரு மாஞ்செடிக்கு வார்த்து, அது மரமாகி நிறையப் பூத்து. அதன் மணம் எங்கும் பரவி, மரத்தில் பச்சையான மாம் பிஞ்சுகள் தென்படும்போது, திடீரென்று ஒரு நாள் மேகமில்லாத ஆகாயத்திலிருந்து அந்த மரத்தின்மீது இடி விழுந்தால் எப்படி இருக்கும்? அப்படியல்லவா ஆகி விட்டது அவன் காதல்! திருமணச் செய்தி கேட்டதும் எப்படி துடித்துப் போவாள் அருணா?

"பெண்ணை அழைத்து வாருங்கள்" என்ற வைதீகக்குரல் செவியைப் பிளக்க, சிதம்பரம் தன் நினைவிற்கு வந்தான். தோழிகள் உந்தித்தள்ள பந்தலுக்கு வந்தாள் மணப்பெண். இடைக்குக்கீழ் உடல் சாய, விந்தி விந்தி நடந்துவரும் பெண்ணின் ஊனத்தைக் கண்டதும் அருவருப்பினால் சுருங்கிக் களை இழந்தது அவன் முகம். ஆனால் அறிவென்னும் கூர்மையான சக்தி அவன் இதயத்தின் மென்மையான அடித்தளத்தைக் கிளறி, கடமையை உணர்த்தி, மலர்ச்சியைப் பரவச் செய்தது, அவன் முகத்தில்.

நாதஸ்வரத்தின் ஸுநாதம் உடலெங்கும் ஒரு புத்துணர்ச்சியை உண்டாக்கியது. கூடியிருந்தோரின் மங்கல வாழ்த்திலும், உள்ளத்தை நிரப்பிய கடமை உணர்ச்சியிலும் அவனது உள்ளக் குமுறல் அடங்கிவிட்டது.

கெட்டி மேளம் முழங்க சிதம்பரம் பார்வதியின் கழுத்தில் மூன்று முடிச்சுப் போட்டான்!

ஃ ஃ ஃ

எக்ஸ்பிரஸ் மதுரை ஸ்டேஷனில் ஜிகு ஜிகு வென்று நுழைந்து நின்றது. காலை மணி ஏழு. இன்னும் மூன்று மணி நேரப் பிரயாணம்!

ஆறு மாதங்கள் கழித்து இப்போது அருணாவைப் பார்க்கப் போகிறான். இத்தனை நாட்கள் அஞ்ஞாத வாசம் புரிந்த அவனுக்கு அருணாவை எந்த முகத்தோடு போய்ப் பார்ப்பது என்றே தெரியவில்லை. பார்வதிக்குக் கொடுத்த வாக்குறுதிதான் அவனை உந்தித்தள்ளி ரயிலேறச் செய்தது.

பார்வதி! செயற்கரிய தியாகம் செய்து அவனது இதயத்தில் அழியா இடம் பெற்றுவிட்டாளே அவள்!

திருமணம் நடந்தது என்னவோ உண்மைதான். ஆனால் அப்படி ஒன்று தன் வாழ்வில் நடந்ததா என்று தன்னையே கேட்கும்படியான நிலைமை ஏற்பட்டது சிதம்பரத்திற்கு, பார்வதியின் நடவடிக்கைகளைப் பார்த்தபோது.

அக்னி சாட்சியாகக் கரம் பிடித்த அவனை அவள் கணவனாக மதிக்கவில்லை. உடன் பிறந்த சகோதரனிடம் பழகுவது போல் நடந்துகொண்டாள். இல்லற இன்பத்தை நுகரத் துடித்த அவனை "அண்ணா!" என்று அவள் அழைத்து நிறுத்தினாள். குன்றுதோறாடும் முருகப் பெருமானின் படத்தின் முன்பு கைகூப்பி கண்ணீர் மல்கி நிற்கும் பார்வதியை தினமும் பார்த்தான் அவன். சிதம்பரத்திற்கு அவள் ஒரு புதிராகவே இருந்தாள்!

திடீரென்று ஒரு நாள் பார்வதி படுத்த படுக்கையானாள். அந்த நாட்களில்தான் அவள் தன் வாழ்விலே அதிக நிம்மதி அடைந்தவள் போல் காணப்பட்டாள். இறப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன் சிதம்பரத்தைத் தன் பக்கத்தில் அழைத்தாள்.

"இதோ பாருங்கள், நான் அதிக நாள் இருக்கமாட்டேன்!" என்றாள் சிரித்துக் கொண்டே. ஐயோ! புவனத்திற்கு ஈடாகாத இந்தச் சிரிப்பையா காண முடியாது என்று சொல்கிறாள்?

"பைத்தியமே, ஏதாவது உளறாதே. நீ கட்டாயம் பிழைத்துக்கொள்வாய், பார்!" என்றான் செல்லமாக சிதம்பரம்.

"நான் இறந்துவிட்டால், நீங்கள் என்ன செய்வீர்கள், சொல்லுங்கள்?"

"நீ ஏன் இப்படி எல்லாம் பேசுகிறாய், பார்வதி. நீ இறக்க மாட்டாய் என்று நானல்லவா சொல்லுகிறேன்?"

"அப்படி நான் இறந்துவிட்டால் நீங்கள் ஊருக்குப் போய் அருணாவை மணந்து கொள்ளவேண்டும்!"

தூக்கி வாரிப் போட்டது சிதம்பரத்திற்கு. அருணாவை இவளுக்கு எப்படித் தெரியும்?

"என்ன விழிக்கிறீர்கள்? எனக்கிழைத்த தீங்கிற்காக பிராயச்சித்தம் செய்ய உங்கள் காதலை அழித்துவிட்டீர்கள், இல்லையா?"

"ஆமாம், உனக்கு இதெல்லாம் யார் சொன்னது?"

"நீங்களேதான் சொன்னீர்கள்!"

"என்ன, என்ன, நான் சொன்னேனா?"

"கல்யாணமான மறு நாள் நீங்கள் தூக்கத்தில் "அருணா அருணா" என்று என்னவெல்லாமோ சொல்லிப் புலம்பினீர்கள். நான் விஷயத்தை ஊகித்துக்கொண்டேன். எனக்கு என் மேலேயே வெறுப்பு ஏற்பட்டது. வேறொரு பெண்ணுக்குச் சொந்தமான உங்களை என்னுடன் இணைத்துக்கொள்ள என் மனம் இடம் கொடுக்கவில்லை. வழி காட்டும்படி இறைவனை வேண்டினேன். வழியும் காட்டிவிட்டார். இப்பொழுதுசொல்லுங்கள்,நீங்கள்ஊருக்குப் போய் அருணாவை மணந்துகொள்வீர்களா என்று. 'ஆம்' என்றால்தான் மனம் நிம்மதியடையும்.சொல்லுங்கள்..."
என்றதும் அவன் கரங்களை இறுகப்பற்றி குலுங்கக் குலுங்க அழுதாள்.

கண்ணெல்லாம் வெள்ளமாக, உள்ளமெல்லாம் உணர்ச்சிக் கடலாக, சிதம்பரம் அவள் தோளில் சாய்ந்துகொண்டு, "பார்வதி, நீ என் தங்கம்!" என்று சொல்லும் போது தொண்டை அடைத்தது.

இதுகாறும் சுடர் விட்டு ஒளிர்ந்த ஜோதி இரண்டு நாட்களுக்குப் பிறகு அமைதியாக அணைந்தது!

ஃ ஃ ஃ

ஜனங்களின் சலசலப்பைக் கீறிக் கொண்டு 'ஸ்' என்ற பெருமூச்சுடன் திருநெல்வேலி ஜங்ஷனில் வந்து நின்றது எக்ஸ்பிரஸ். சிதம்பரம் கீழே இறங்கினான்.

அருணாவைக் கண்டு பேசத் துடித்த சிதம்பரத்தை இனந்தெரியாத கலக்கமும் கூச்சமும் தடுத்து நிறுத்தின. சிதம்பரத்திற்கு அதிக சங்கடம் வைக்காமல், அவனது மனப் போராட்டத்திலிருந்து விடுதலை கொடுக்க அருணாவே சிதம்பரம் வந்திருக்கும் செய்தி கேட்டு அடங்கா ஆவலுடன் அவனைக் காண வந்துவிட்டாள்.

கதவைத் திறந்த சிதம்பரம் அருணா நிற்பதைக் கண்டதும் இரண்டெட்டு பின்வாங்கி, "யார் அருணாவா?" என்றான்.

ஆறு மாத காலத்திற்குள் எப்படி இளைத்துவிட்டாள்? முன்பு கண்ணைப் பறித்த இளமை இப்போது எங்கே? முத்துப்போல் ஒளி வீசிய கண்கள் இப்போது ஏன் உஷத் கால தாரகையாக மாறி விட்டன? அழகிய புன்சிரிப்பு சோகத்தின் பயங்கரக் கீறலாக காட்சியளிக்கிறதே? பழைய புடவையும், எண்ணெய் படாத கேசமும்! வெயிலில் காய்ந்துபோன தளிர்போல இருக்கும் அருணாவைக் காண்பது கனவல்ல என்பதை அவள் குரல் ஊர்ஜிதம் செய்தது.

"என்னை...மறந்து விட்டீர்களா, அ–த்–தா–ன்?" அப்படித்தான் அவனை அழைப்பாள் அருணா.

"உன்னை மறக்காததனால்தான் இவ்வளவு தூரம் வந்தேன். உள்ளே வாயேன், எல்லாம் சொல்கிறேன்!" என்றதும் சிதம்பரத்தைத் தொடர்ந்து உள்ளே வந்தாள் அருணா.

"நீங்கள் என்னை இப்படி நிர்க்கதியாய் விட்டுவிடுவீர்கள் என்று நினைக்கவில்லை, அத்தான்!" என்றாள்.

நடந்த கதையைச் சொல்லி ஆறுதல் கூறினான் சிதம்பரம். முதலில் பெண்ணிற்கே உண்டான பின்புத்தியில் உள்ளூற ஆத்திரமடைந்தாலும், பேதையின் நெஞ்சு தனக்காக உயிரைவிட்ட பார்வதியின் கதையைக் கேட்டதும் நன்றி உணர்வில் உருகியது.

"இன்று மத்தியானம்தான் வந்தேன். உன்னைக் காண வேண்டுமென்ற துடிப்பு. ஆனால்...எந்த முகத்தோடு உன்னைப் பார்க்கிறது நான்? என்னை நீ வெறுத்துப் பேசினாலும் பேசலாம்...!"

"ஐயோ, நீங்கள் இப்படியெல்லாம் பேசாதீர்கள். என்னிடம் நீங்கள் வந்து சேர்ந்தீர்களே அதுவே போதும் எனக்கு. நான் ஒன்றும் குறை காண்பவள் அன்று!" என்று மனத்தை விட்டு வார்த்தைகளை உதிர்த்தாள் அருணா.

அவள் தலை நிமிரும்போது இரு சொட்டு கண்ணீர் முத்துக்கள் கன்னங்களில் வழிந்து தரையில் விழுந்து சிதறின. இது துன்பக் கண்ணீர் அல்ல. உள்ளத்தைத் தூய்மைப்படுத்திய இன்பக் கண்ணீர்!

புது உலகத்தின் இனிமை மிகுந்த நாட்கள் நெடும் பாதையாக அவர்கள் கண் முன் விரிந்துகொண்டே சென்றது.



காலடியில் கிடந்த பெண்

குளிர் தாங்க முடியாதபடி இருந்தது. அடர்த்தியான பனியை அள்ளி வந்த காற்று, காரைக் கீழே தள்ள முயன்று முடியாததாலோ என்னவோ, எங்கள் மீது முழு வேகத்துடன் பாய்ந்தது. என் கைகால்கள், ஏன்—உடம்பு முழுவதுமே விறைத்துக்கொண்டிருந்தது. நரம்புகள் தெறிக்க விரும்புகிறவை போல் புடைத்துக்கொண்டன; எலும்புகள்கூட மரத்தன. அந்தக் குளிர், நெருப்புப் போல் சுட்டது.

சென்னையிலிருந்து கும்பகோணத்துக்குத் திரும்பிக்கொண்டிருந்தது அந்த டாக்ஸி. டாக்ஸி என்றால் தென் இந்தியாவுக்கே முதன் முதலாக வந்ததாக அது இருக்க வேண்டும். ஷட்டர்கள் கூடக் கிடையாது. கதவுகள் சத்தியத்துக்குக் கட்டுப்பட்டுத் திறந்துகொள்ளாமல் இருந்தன. எங்களுடைய புண்ணியவசத்தினால்தான் அது ஓடிக்கொண்டிருந்தது என்றே சொல்லலாம். பனி தடையில்லாமல் எங்கள் மீது கொட்டியது. எப்படியோ நூறு மைல்கள் கடந்துவிட்டோம். ஏறக்குறைய இன்னும் நூறு மைல்கள் பிரயாணம் செய்ய வேண்டும். ஊரை அடைவதற்குள் நானும் ஒரு கட்டையாகிவிடுவேனே என்னும் அச்சம் என்னைப் பிடித்தது.

காரின் பின் ஆசனத்தில் நான் உட்கார்ந்திருந்தேன். நீட்டிய கால்களை மடக்கி உதறிக்கொண்டால் கொஞ்சம் ஆறுதலாக இருக்கும். அதற்கும் வழி இல்லை. நீட்டிய காலை அதே நிலையில் எவ்வளவு நேரம் வைத்திருக்க முடியும்? என் காலடியில் ஒரு பெண் கிடந்தாள். காலை அசைத்தால் அவள் தலை மீதோ மார் மீதோதான் கால் வைக்க வேண்டும். அதற்கு என் மனம் துணியவில்லை.

அந்தப் பெண்ணை நான் வெளிச்சத்தில் பார்த்திருக்கிறேன். இருபத்திரண்டு வயதிருக்கும். உடல் வளம் படைத்தவள். அவளுடைய உருவத்தைச் சித்திரமாக வரைந்தால், கோடுகள் கோலம் பெறும். சஞ்சல புத்தியுள்ள எந்த இளைஞனும், காலடியில் அவள் கிடக்கிற நிர்ப்பந்தத்தைக் காரணமாகக் கொண்டே, 'காலால் அவளைத் தீண்டி இன்பம் பெறலாமே' என்று நினைக்கத் தூண்டும்படியான அழகி அவள்.

எனக்கு சஞ்சல புத்தி இல்லை என்பதுடன், தீண்டுவதற்கும், ரஸிப்பதற்கும் முடியாத ஓர் அழகாக அவள் ஆகிவிட்டாள். அவளுக்கு உயிர் இல்லை. ஆம், என் காலடியில் கிடந்தது ஒரு பெண்ணின் பிரேதம்.

பிணத்தைக் காலடியில் வைத்துக்கொண்டு, அமாவாசை இருட்டு ஆட்சி புரியும் நள்ளிரவில், குளிரின கும்மாளத்தில், திறந்து கிடப்பது போன்ற ஒரு காரில் பிரயாணம் செய்ய நேர்ந்த என் துர்ப்பாக்கியத்தை என்ன என்பது!

அந்தத் துர்ப்பாக்கியத்துக்குக் காரணமான டாக்டர் அம்பலவாணர் என் பக்கத்தில், அதாவது பிரேதத்தின் கால் பக்கம், உட்கார்ந்திருந்தார். அப்பெண்ணின் கால்கள் காருக்கு வெளியே துருத்திக்கொண்டிருந்தன. பிணத்தின் கால்களை எப்படி மடக்குவது? அந்தக் கால்களின் மேல் தம் கால்களை நீட்டிக்கொண்டு ஆசனத்தில் சாய்ந்திருந்த டாக்டர், சவத்தையோ, குளிரையோ, இருட்டையோ சிறிதும் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. வீட்டில் பெண்டாட்டி பிள்ளைகளுடன் இருப்பதைப் போன்ற சகஜ பாவத்துடன், அடித்தொண்டையில் முனகுவதுபோல் அவர் பாடியபடி இருந்ததைக் காண எனக்கு ஒரு பக்கம் வியப்பாக இருந்தது. இப்படி உணர்ச்சியில்லாமல் பாடுகிறாரே என்று அருவருப்பாகவும் இருந்தது. ஆனால் சவத்தின் மீதே செல்லும் கவனத்தை வேறு பக்கம் திருப்புவதால் மனச்சுமை சற்று குறையலாம் என்று அவர் பாட்டைக் கவனித்தேன்.

டாக்டர் பாடிக்கொண்டிருந்தார்:—

"அருளா ரமுதே சரணம் சரணம்;
அழகா அமலா சரணம் சரணம்;
பொருளா எனையாள் புனிதா சரணம்;
பொன்னே மணியே சரணம் சரணம்;
மருள்வார்க் கரியாய் சரணம் சரணம்;
மயில் வாகனனே சரணம் சரணம்;
கருணாலயனே சரணம் சரணம்;
கந்தா சரணம், சரணம் சரணம்..."

அவர் பாட்டை முடிக்கும்போது, டிரைவர் காரை நிறுத்தினான்.

"என்ன அது?" என்று டாக்டர்தான் முதலில் கேட்டார்.

"லைட் போய்விட்டது. உங்களிடம் டார்ச் லைட் ஏதாவது இருக்கிறதா?" என்றான் டிரைவர்.

"இருக்கிறது" என்று தம்மிடம் இருந்த லைட்டைக் கொடுத்த டாக்டர் மெதுவாகச் சிரித்ததைக் கேட்டேன்.

"பிரயாணம் எவ்வளவு சுகமாக இருக்கிறது? குளிரோடு இப்போது இருட்டும் கூடிவிட்டது. நிம்மதியாகத் தூங்கலாம்" என்றார் அவர், எனக்கு மட்டும் கேட்கும்படி.

வீண் வம்பில் சிக்கிவிட்டதாக நொந்து கொண்டிருந்த எனக்கு, அவருடைய இந்த சகஜபாவம் பிடிக்கவில்லை. ஆனால், இந்நிலையில் அப்படி இல்லாது இருப்பதும் கஷ்டமாகத்தானே இருக்கிறது?

"தூங்குவதா? தூங்கிவிடுவீர்களா?" என்றேன்.

"எவ்வளவு நேரம் இப்படி விழித் திருக்க முடியும்? ஊர் போய்ச் சே வதற்குள் ஒரு தூக்கம் போட்டால்தான் நல்லது. நீயும் அப்படியே சாய்ந் கொள்ளேன்!"

"சாய்ந்தால், ஒரேயடியாகச் சா வேண்டியதுதான். காலடியில் இ வைத்துக்கொண்டு எப்படித் தூங் வது?"

"ஏன், உயிரோடு இருந்தால், பெண் என்று வெட்கப்பட வேண்டும். இ போது அது பிரேதம். தலையணை கட்டைபோல் ஒரு சாமான் காலடியி கிடப்பதால் தூக்கத்தை ஏன் கெடுத்து கொள்ள வேண்டும்?"

"சீ!" என்றேன். "டாக்டர், உங்களுக்குக் கல் நெஞ்சு என்று நான் சொல்லுவது சரி. அவள் இறந்ததற்காக வருத்தப்பட வேண்டும். இரக்கப்பட வேண்டும். காலடியில் கிடப்பதால் கொஞ்சமாவது பயப்பட வேண்டும். இல்லாவிட்டால் குறைந்தபட்சம் அருவருப்பாவது அடைய வேண்டும். இவ்வளவு அழகான மனைவியை அடைந்து, பறிகொடுத்தவனிடம் உங்களுக்கு அனுதாபம்கூட இல்லையா? உங்களுக்கு அலட்சியமாக இருக்கும் இந்தப் பிரேதம் சூத்தரசுக்கு என்ன வேதனை உண்டாக்குகிறதோ!" என்று டிரைவரின் பக்கத்தில் உட்கார்ந்திருந்தவனைச் சுட்டிக்காண்பித்தேன். அவன்தான் இறந்தபெண்ணின் கணவன். தலையில் ஒரு கம்பளியை இறுகக் கட்டிக்கொண்டு காரில் ஏறி உட்கார்ந்தவன், இதுவரை வாய் திறந்து ஒரு வார்த்தை பேசவில்லை.

"சூத்தரசின் மனம் என்ன பாடுபடுகிறது என் பதை நான் ஊகிக்க முடியும்" என்றார் டாக்டர். "ஆனால் இந்த யாத்திரைக்குக் குளிரும், இருட்டும் போதும்; அழுகையை வேறு சேர்த்துக்கொள்ள வேண்டுமா?"

"வேண்டாம். அதற்காகப் பாட வேண்டுமா?"

"பாட வேண்டிய நேரம் இது, ராமு. உடலைவிட்டுப் பிரிந்த உயிர் நல்ல கதி அடைவதற்கும், சவத்துடன் பிரயாணம் செய்யும் நமக்கு மனத்தெம்பு குறையாமல் இருப்பதற்கும் தெய்வ ஞாபகம்—பிரார்த்தனை—அவசியம் என்று உனக்குத் தோன்றவில்லையா?" என்றவர், மறுபடி பாடத் தொடங்கினார்:—

"முடியா முதலே சரணம் சரணம்;
முருகா குமரா சரணம் சரணம்;
வடிவே லரசே சரணம் சரணம்;
மயிலூர் மணியே சரணம் சரணம்;
அடியார்க் கெளியாய் சரணம் சரணம்;
அரியாய் பொரியாய் சரணம் சரணம்;
அடியார்க் கதியே சரணம் சரணம்;
கந்தா சரணம், சரணம் சரணம். . ."

குளிரால் நடுங்கிக்கொண்டே, இருட்டில் ஓடுகின்ற அந்தப்பிரேத யாத்திரையின் பயங்கரத்தைக் குறைக்கப் பிரார்த்தனையால்தான் முடியும் என்பதை உணர்ந்த நானும், அவர் பாடும்போது, கூடவே மனத்தில் பாடிக்கொண்டேன்.

ஓடுவதுபோல் பாசாங்கு செய்துகொண்டிருந்த டாக்ஸி திடீரென்று கடோரமாக உறுமியது. முக்கி முனகிக்கொண்டே எங்களை வெளியே எறிய முயலுவதுபோல் ஓர் ஆட்டம் ஆடி நின்றுவிட்டது அது.

"டிரைவர் என்ன விஷயம்? இந்தக் காட்டில் எங்களை என்ன செய்யப் போகிறாய்?" என்றார் டாக்டர்.

"என்ஜின் படுத்துவிட்டது, சார். பார்க்கிறேன்" என்று அவன் டார்ச் லைட்டுடன் கீழே இறங்கி என்ஜினைத் திறந்து பார்த்தான். கொஞ்ச நேரம் ஏதேதோ குடைந்துவிட்டு, "உங்களால் ரொம்பத் தொந்தரவாகி விட்டது, சார். இரண்டு மணி நேரமாவது ஆகும் காரைக் கிளப்ப. பக்கத்தில் ஊரும் இல்லை. சிவனே என்று வீட்டோடு இருப்பதைவிட்டுப் பிணத்தை எடுத்துக் கொண்டு கிளம்பினேனே, என் புத்தியைச் சொல்லுங்கள்! ஆயிரம் ரூபாய் கொடுத்தாலும் எவனாவது இந்த நேரத்தில் டாக்ஸி எடுப்பானா சார்? . . ."

சூத்தரசு காரில் ஏறிய பின் முதல் முறையாக வாய் திறந்தான்: "இரண்டு மணி நேரம் ஆகுமா? சீக்கிரம் முடிக்க முடியாதா?"

"இரண்டு மணி நேரம் இந்தப் பனியில் முழுக வேண்டும் என்று ரொம்ப ஆசை எனக்கு! இல்லை? சீக்கிரம் முடிந்தால் சீக்கிரம் புறப்படுகிறோம். நேரம் ஆனால் நேரம் கழித்துப் புறப்படுகிறோம். அதைப்பற்றி உங்களுக்கு என்ன கவலை? பேசாமல் தூங்குங்கள்."

டிரைவருக்கு டாக்ஸி மனைவி. அதற்கு ஒபாயம் வந்துவிடக்கூடாதே என்கிற வலை அவனுக்கு. கூத்தரசு மனைவியை ழந்தது பற்றி அவனுக்கு என்ன அக் றை? பணத்துக்கு ஆசைப்பட்டு வத்தை எடுத்துக்கொண்டு கிளம்பிய ால் தன் காருக்கே மோசம் வந்துவிட்ட ாக முணுமுணுத்தவாறு அவன் என் ினைத் திறந்து போட்டுக்கொண்டு தன் வலையைக் கவனிக்க ஆரம்பித்தான்.

காரின் இரைச்சலும் ஓய்ந்துவிட்ட ந்த நிசப்தத்தில் அவனுடைய முணு ணுப்பைக் கொஞ்ச நேரம் கவனித் ன். தூங்குவதற்கு மனம் இடம் தர லை. கீழே இறங்கிச் சிறிது தூரம் ந்தால், கைகால்களின் விறைப்பு ட்டுப்பட்டுச் சற்றுத் தளரலாம் என்று ினைத்து டாக்டரிடம் சொன்னேன்.

"சரி, செய்யலாம். கூத்தரசு, நீயும் இறங்கு. நடந்தால் குளிர் குறையும். இரண்டு மணி நேரம் கழிய வேண் டுமே?"

மூவரும் கீழே இறங்கினோம்.

என்ன பனி அது, இரண்டு அடியில் நிற்கிற ஆள்கூடக் கண்ணுக்குத் தெரி யாதபடி! ஆகாசத்துக்கும், பூமிக்கும் சேர்த்துத் திரையிட்டதுபோல் கொட்டி யது. விண் மீன்களும் களையிழந்து நடுங்கிக்கொண்டிருந்தன. டாக்டர், கூத் தரசின் கையைப் பிடித்துக்கொண்டார்.

நாலு அடி நடந்திருக்க மாட்டோம்; கூத்தரசு சொன்னான்: "டாக்டர், இந்த இருட்டு எனக்குப் பிடிக்கவில்லை. . ."

எனக்கும்தான் பிடிக்கவில்லை. ஆனால் இருட்டு இருக்கிறதே!

"வேறே என்ன செய்வது? நாங்கள் இரண்டு பேர்கூட இருக்கிறோம். கொஞ்ச தூரம் நடப்போமே. அதிக தூரம் வேண்டாம்" என்றார் டாக்டர்.

"வேண்டாம். எனக்கு எப்படியோ இருக்கிறது. ஒரு வேலை செய்யலாம். நெருப்பு பற்ற வைத்துக்கொண்டால், குளிரும் காயலாம், வெளிச்சமாகவும் இருக்கும்" என்றான் கூத்தரசு.

சிறு குழந்தைபோல் அவன் இருட் டுக்கு அஞ்சுவதைக் காண எனக்கு வியப்பாக இருந்தது.

"நல்ல யோசனைதான். ஆனால், நெருப்புப் பற்றவைக்கச் சுள்ளிகள் வேண்டாமா?"

கூத்தரசு பதில் பேசாமல், தான் அமர்ந்திருந்த ஆசனத்தின் அடியி லிருந்து ஒரு 'கோட்' எடுத்தான். பெட் ரோல் டின்னைத் தூக்கிக்கொண்டு பக்



கத்து மரத்தடியில் 'கோட்'டைப் போட்டு பெட்ரோல் ஊற்றி நெருப்பு வைத்தான். குபீரென்று எரிந்த அந்த நெருப்பு, அந்த வட்டாரம் முழுவதையும் ஒளி மயமாக்கியது. அந்த வெளிச்சத்தில் தெருவில் கிடந்த குச்சிகளையும், சுள்ளிகளையும் பொறுக்கித் தீயில் போட்டோம். முதலில் புகைந்த நெருப்பு, பிறகு நன்றாகக் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. நெருப்பு மங்கும் போது, தயங்காமல் பெட்ரோலை ஊற்றியபடி இருந்தான் கூத்தரசு.

கொடுமையான பனியின் குளிரையும், கண்ணை மூடிய இருட்டின் கொடுமையையும் அந்த நெருப்பு ஓரளவு தணித்தது...

2

யாத்திரையின் வரலாறு

மனத்துக்கு மகிழ்ச்சி தராத இந்தப் பிரேத யாத்திரை, என்னைப் பொறுத்தவரை, சனியனை விலைக்கு வாங்கிய கதைதான்.

டாக்டர் அம்பலவாணர் என் நண்பர். பொழுதை அழகுபடுத்த விரும்பும் போது அவரை நாடிச்செல்லுவது என் வழக்கம். அவ்வளவு கவர்ச்சிகரமான சுபாவம் அவருக்கு. மிகுதியான தெய்வ பக்தியுடைய அவர் இங்கிதமாகப் பழகுவார். இனிமையாகப் பேசுவார். டாக்டரான அவர் வீட்டுக்குப் பலவகை மனிதர்கள் பலவகை வியாதிகளோடு வருவார்கள். உயிரைக் காத்துக்கொள்ளும் பரபரப்புக்கும், வலியால் கதறுகிற துடிப்புக்கும், இன்பத்தை அமிதமாக நுகர்ந்ததால் விளைந்த துன்புக்கும், துன்பத்தாலேயே விளைந்த நோய்களுக்கும் இடையில், அமைதியாகவும், அழகாகவும் நடமாடுகிற டாக்டர் அம்பலவாணர், உடலுக்கு மட்டும் அல்ல, மனத்துக்கும் சிகித்சை செய்யும் விதம்தான் என்னை அவர்பால் அவ்வளவு ஈடுபாடு கொள்ளச் செய்தது.

'தம்பி, ஐந்து ரூபாய்க்கு வாங்கிய சுகம்—உயிருக்கே உலை வைக்கப் பார்க்கிறது. அதனால்தான் பஞ்சமாபாதகங்களில் காமத்தையும் ஒன்றாக நம் பெரியவர்கள் சொன்னார்கள்' என்பார் ஒருவனிடம்.

'ஐயா, உங்களுக்குக் கெட்டியான ஆகாரம் ஜெரிக்காது. பழ ரசம், ஹார்லிக்ஸ், சேமியா பாயசம் சாப்பிடுங்கள். அத்தோடு நீங்கள் இன்னொரு வேலையும் செய்ய வேண்டும். நன்றாகச் சாப்பிடக் கூடியவர்களையும், பசியால் துடிக்கிறவர்களையும் அழைத்து, அவர்கள் 'போதும் போதும்' என்று சொல்லும்வரை விருந்து போட வேண்டும்' என்பார் மற்றொருவரிடம்.

'ஓய், உமக்கு வியாதியே இல்லை. மனக்கவலைதான் இப்படிப் படுத்துகிறது. தெய்வத்தின் பேரில் பாரத்தைப் போட்டுவிட்டு, நடப்பது நடக்கட்டும் என்று தைரியமாக இருந்து வேளா வேளையில் சாப்பிட்டுத் தூங்கும். வீணாக மருந்துக்கும் எனக்கும் செலவு செய்ய வேண்டாம்' என்று சிலருக்குப் புது முறை வைத்தியம் செய்வார்.

இந்த ரீதியில் பேசிக்கொண்டே நோயாளிகளைக் கவனிக்கிற அவர், கொட்டுகிற ரத்தத்தையும், குமட்டுகிற வாந்தியையும், பிரிகிற உயிரையும், புதிதாக வருகிற உயிரையும் எவ்வித பேதமும் இல்லாமல், நிதானம் இழவாத புன்சிரிப்புடன் கையாளுவதைக் காணும் போது, சில சமயம், 'டாக்டர் உங்களுக்குக் கல்நெஞ்சு. இவ்வளவு அழுத்தம் கூடாது' என்று நான் கூறுவதுண்டு. பிறக்கிறவர்களோடு பிறந்து, அல்லல்படுவோருடன் அல்லல்பட்டு, சிரிக்கிறவர்களோடு சிரித்து, சாவோருடன் சாகின்ற எனக்கு அப்படித்தான் சொல்லத் தோன்றியது. டாக்டர்—எனக்கு ஒரு வியப்புப் பொருள்.

ஒரு நாள் மாலை அவர் வீட்டுக்குப் போயிருந்தேன்.

"ராமு, இரண்டு நாள் என்னோடு மதராஸ் வருகிறாயா?" என்றார். "அவசர ஜோலி இங்கே இருந்தால்—வர வேண்டாம்."

"போய் வருவோமே" என்று நான் ஒப்புக்கொண்டபோதுதான், என்னையும் அறியாமல் இந்தப் பிரேத யாத்திரையின் தொந்தரவை விலைக்கு வாங்கினேன்.

"மதராஸில் என்ன விசேஷம்?" என்றேன்.

"கூத்தரசைத் தெரியுமா உனக்கு?"

"மெய்ப்பொருள் கண்டோர் கழகத்தின் தலைவர் கூத்தரசைச் சொல்கிறீர்களா?"

"அவனேதான். அவன் மனைவிக்கு இன்று காலை மதராஸ் ஜெனரல் ஆஸ்பத்திரியில் ஆபரேஷன் நடந்திருக்கும். ."

"அந்தக் கழகத்தின் செயலர் திருமதி வெண்ணிலாதானே அவர் மனைவி?"

"ஆம். கூத்தரசு என் நண்பன். இங்கே அதிகமாய் வருவதில்லை. ஆகையால் உனக்குத் தெரியாது. அவனுடைய மனைவி என்னிடம் சிகிச்சை செய்து கொண்டாள். மூளையில் 'டியூமர்' (சிறு வீக்கம்—கட்டி) இருப்பதாகச் சொல்லி ஜெனரல் ஹாஸ்பிடல் ஸர்ஜன் எஸ். ஆர். கே. ராவ் ஆபரேஷன் செய்திருக்கிறார். நானும் அவளுடைய தலைப்பாகம் முழுவதையும் எக்ஸ்ரே எடுத்துப்பார்த்தேன். அவளுக்கு டியூமர் இல்லை. ராவ் என்னைவிட வயதில் சிறியவரானாலும் இந்தியாவிலுள்ள சிறந்த சர்ஜன்களில் ஒருவர். இந்தக் கேஸில் எனக்குப் பிரத்தியேகமான ஒரு அக்கறை. ராவ் சொல்லுவது சரியா, நான் சொன்னது சரியா என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். நேற்றே கூத்தரசு போனில் கூப்பிட்டானும். நான் ஊரில் இல்லாததால் விஷயம் தெரியவில்லை. இரவு வண்டிக்குப் புறப்படலாமா?"

"சரி" என்றேன். இரவே புறப்பட்டோம்.

'கடவுள் என்னும் புரட்டை, இல்லை என்றாக்குவதுதான்' மெய்ப்பொருள் கண்டோர் கழகத்தின் கொள்கை. அதன் தலைவன் கூத்தரசு, செயலார் வெண்ணிலா—இருவரையும் பொதுக்கூட்டங்களில் பேசும்போது எட்டி நின்று பார்த்திருக்கிறேனே தவிர நெருங்கிக் கண்டதில்லை. சென்னையில்தான் அவனை அருகாமையில் பார்த்தேன். முப்பது வயது தாண்டாத அவனுக்கு, தையற்காரன் கத்தரித்த துணி போல், உருவான உடல் அமைந்திருந்தது. சந்தர்ப்பக் கோளாறால் அப்போது அவன் முகம் வெளிறி இருந்தாலும், அறிவின் களை துலங்குவதை மறுக்க முடியாது. அவனோடு வெண்ணிலாவின் தந்தையும் அங்கு இருந்தார். என்னை அவர்களுக்குச் சுருக்கமாக அறிமுகம் செய்து வைத்த டாக்டர், "கூத்தரசு, ஆபரேஷன் முடிந்துவிட்டதா?" என்று விசாரித்தார்.

"ஆபரேஷன் சௌகர்யமாய் முடிந்தது. பிரக்ஞை வர மூன்று நாளாவது ஆகும் என்று ஸர்ஜன் சொல்லுகிறார். பயமில்லை என்று அவர் தைரியம் கொடுக்கிறார். எனக்கு என்னவோ நம்பிக்கை இல்லை, டாக்டர். உங்களுக்குப் போன் செய்து நீங்கள் ஊரில் இல்லை என்று தெரிந்ததும் எனக்கு நம்பிக்கை போய்விட்டது. சர்ஜன் உடனே ஆபரேஷன் செய்தால்தான் குணமாகும் என்கிறார். இல்லாவிட்டால் பைத்தியம் பிடித்துவிடும் என்று பயமுறுத்துகிறார். வெண்ணிலாவோ ஆபரேஷன் செய்து கொள்ள வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கிறாள். மாமனாரும் அவளோடு சேர்ந்துவிட்டார். உங்களைப் போனில் அழைக்கிறவரை ஆபரேஷனைத்

"என்ன அண்ணே உங்க மில்லிலே நடந்த ஸ்ட்ரைக்கிலே நீங்க கலந்துகிட்டதாகக் கேள்விப்பட்டேனே!"

"ஆமாம் !"

"எதுக்காக அண்ணே ஸ்ட்ரைக் ?"

"வேலை நேரத்தைக் குறைக்கணும் என்கிறதுக்காகத்தான் !"

"குறைச்சுட்டாங்களா ?"

"ஒரேயடியா குறைச்சுட்டாங்க !"

"அப்படின்னா ?"

"வேலையிலிருந்தே நீக்கிப்புட்டாங்க !"

தவிர்த்து அவளைக் காப்பாற்றிவிடலாம் என்று நம்பிக்கை இருந்தது. நீங்கள் ஊரில் இல்லை என்று பதில் கிடைத்ததும் நான் நம்பிக்கை இழந்துவிட்டேன். தெய்வச் சித்தப்படி நடப்பதை நாம் எப்படித் தடுக்க முடியும் என்று அந்த மகா சக்தியின் முன் குனிந்துவிட்டேன்" என்று கூத்தரசு முடித்தபோது—எனக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. 'கடவுள்—கயவர்களின் கற்பனை, பொய்யர்களின் புரட்டு' என்றெல்லாம் அடுக்குச் சொற்களால் தெய்வ நிந்தனை செய்தவன், தெய்வ சித்தம் பற்றிப் பேசுகிறான் என்றால்!

பிறகு நாங்கள் எல்லோரும் வெண்ணிலா கிடந்த அறைக்குப் போனோம். மொட்டை யடித்த தலையோடு மோவாயைச் சேர்த்துத் துணியால் கட்டப்பட்ட வெள்ளைக் கட்டுடன் பொம்மைபோல் நீட்டிப் படுத்திருந்த அவளைப் பார்க்கவே கண்றாவியாக இருந்தது. துடைக்கப்பட்ட ரத்தத்தின் கறை இன்னும் அவள் கன்னங்களில் தெரிந்தது. லேசாக மார்பு சலிப்பதைக் கொண்டுதான் அவள் உயிரோடு இருப்பதை அறிய முடிந்தது. ஆஸ்பத்திரி வாசனையில் அப்போதே பிண வாடை வீசியது.

அங்கே அதிக நேரம் தாமதிப்பதற்கு நர்ஸ் அனுமதியாததால், நாங்கள் சீக்கிரம் வெளியே வந்தோம். அம்பலவாணர் மட்டும் சர்ஜனைக் கண்டு வருவதாய்க் கூறிவிட்டுச் சென்றவர், வெகு நேரம் கழித்துத் திரும்பினார். 'ஆபரேஷன் வெற்றிதான். பயப்படும்படி ஒன்றும் இல்லை' என்று அவர் மிகவும் சாதாரணமாகக் கூறினாலும், எனக்கு அவர் சொல்லில் நம்பிக்கை உண்டாகவில்லை.

என்னுடன் தனித்துப் பேசுவதற்குத் தருணம் வாய்த்ததும் அவர் சொன்னார்: "ராமு, நான் நினைத்தது நிஜமாகிவிட்டது. அவளுக்கு உண்மையாக 'டியூமர்' இல்லை."

"உயிரையே பணயம் வைக்கிற பெரிய ஆபரேஷன் ஆயிற்றே இது? சர்ஜன் எப்படிச் செய்தார் இவ்வளவு பெரிய தவறை?" என்றேன், கொஞ்சம் திடுக்கிட்டு.

"அவர் மீதும் தவறு சொல்லுவதற்கில்லை—அது ஒரு சுவாரஸ்யமான கதை. பிறகு சொல்லுகிறேன்" என்று டாக்டர் விஷயத்தை மர்மமாக்கினார்.

"உயிருக்கு—" என்று ஆரம்பித்தேன்.

"சொல்ல முடியாது. மாலை நாம் பார்க்கப்போவது பெரும்பாலும் அவள் பிணத்தைத்தான். . ."

"சர்ஜன் சொன்னாரா?"

"இல்லை. அவர் நம்பிக்கையாகத்தான் சொல்லுகிறார். ஆனால், தேவையில்லாத ஒரு பெரிய ஆபரேஷன் நிர்ப்பந்தமாக நடந்தால்—ஆள் எப்படிப் பிழைக்க முடியும்?"

அவர் சொன்னபடியே நடந்தது. மாலை நான்கு மணிக்கு வெண்ணிலாவைப் பார்க்கப் போனோம். வழியிலேயே ஒரு உதவி டாக்டர் எங்களை மறித்து நிறுத்தினார்.

"மிகவும் கெட்ட செய்தி. நாங்கள் எதிர்பார்க்கவே இல்லை, மிகவும் வருந்துகிறோம்" என்று அவர் கூறும்போதே எங்களுக்கு விளங்கிவிட்டது.

வெண்ணிலாவின் தந்தை கதறினார்.

கூத்தரசு அந்தத் துயரத்தைக் கம்பீரமாக ஏற்க முயன்றான் என்றாலும், அவனால் முடியவில்லை என்பது தெளிவாகிவிட்டது.

அழுகையும், ஆரவாரமும் அடங்கிய பிறகு, பிரேதத்தை என்ன செய்வது என்கிற தொல்லைப் பிரச்னை எழுந்தது.

அதிகாரிகளின் அனுமதி இல்லாமல் சென்னையிலிருந்து அதை வெளியே எடுத்துச்செல்ல முடியாது. சென்னையில் தகனம் செய்யலாம் என்றால் வெண்ணிலாவின் தந்தை சம்மதிக்கவில்லை. உறவினர்களை வரவழைக்கலாம் என்றாலும் ஒரு நாளோ இரண்டு நாளோ பிணத்தைக் கட்டிக் காக்க வேண்டும்.

டாக்டர் மாற்று யோசனை கூறினார்: "அதிகாரிகளின் உத்தரவுக்காகவோ, உறவினர்கள் வருவதற்காகவோ காத்திருப்பது கஷ்டம். எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. டாக்ஸி ஒன்று அமர்த்திக்கொண்டு இரவோடு இரவாகக் கும்பகோணத்துக்குப் போய்விடலாம்."

எங்களுக்கு அது நல்ல யோசனையாகப் பட்டது. டாக்ஸியை அமர்த்துவதும் சிரமமான வேலையாக இருந்தது. பிணம் எடுத்துப்போவதை ஓர் அமங்கலமான காரியம் என்று கருதி, எந்த டிரைவரும் இணங்கவில்லை. கடைசியில் ஒருவன் ஐநூறு ரூபாய் கேட்டு முன்னூற்

HVM. 263-50 TM

றைம்பதுக்குச் சம்மதித்து, டாக்ஸியை எடுத்து வந்தான்.

வெண்ணிலாவின் தந்தை வயோதிகர் ஆனதால், அவரை மட்டும் ரயிலேற்றி அனுப்பிவிட்டு நாங்கள் பிரேதத்துக்குக் காவலாய் டாக்ஸியில் கும்பகோணத்துக்குக் கிளம்பினோம்.

உயிரற்ற சடலத்துடன், இரவில், நடுக்கும் குளிரில், நான் பிரயாணம் செய்ய நேர்ந்த வரலாறு இதுதான்.

3

கூத்தரசு கண்ட காட்சி

திகுதிகுவென்று எரியும் அந்தக் கணப்பினால் பனியின் வேகம் சற்றே மட்டுப்பட்டது. என் உடலின் விறைப்பு தளர்வுற்றது. உடலை ஆட்டவும் மனத்தால் நினைக்கவும் தெம்பு உண்டாயிற்று.

தாவித்தாவி பனியையும், இருளையும் உண்ணமுயலும் தீயின் ஆட்டத்தைக் கொஞ்ச நேரம் பார்த்துக்கொண்டிருந்தேன். எங்கள் நிழல்களும், பக்கத்து மரங்களின் நிழல்களும் வெளிச்சத்தில் ஆடும்போது—தலை விரித்தாடும் பேய்களின் கதைகளை நினைவூட்டின. கணப்பின் சிறு ஒளியையும், அதைச் சுற்றி அமர்ந்துள்ள எங்களையும், மரங்களையும், தெருவில் கிடக்கும் காரையும், அதைச் செப்பனிடும் டிரைவரையும் அந்த இருளே ஈன்றெடுத்ததுபோலவும் இவையனைத்தையும் ஈன்றெடுத்த இருட்டின் அடிவயிற்றின் அடியிலேயே நாங்கள் எல்லாரும் கிடப்பது போலவும் ஒரு பிரமை எனக்குள் எழுந்தது; நட்சத்திரங்களாலும், கணப்பாலும் மின்விளக்காலும் கொஞ்சம் ஒளி பூசப்பெற்ற இருட்டின் தோற்றம் அப்படி இருந்தது.

அங்கு நிலவிய நிசப்தமும் பிளக்க முடியாததுபோல் தோற்றியது; ஆந்தை கோட்டான் முதலிய இராப்பறவைகளும் குளிருக்கு அஞ்சிப் பதுங்கிவிட்டன. நெருப்பு சிடுசிடுக்கும் சப்தமும், டிரைவர் என்ஜினைப் பழுதுபார்க்கும் சப்தமும் நிசப்தத்தின் அழுத்தத்தை எடுத்துக் காட்டத்தான் உதவின.

அந்த நிசப்தம் எனக்குப் பிடிக்கவில்லை. குளிரிலிருந்து விடுபட்ட மனம் தூக்கத்திலிருந்தும் விடுபட்டது. வெண்ணிலாவின் மரணம் பற்றிய மர்மம் என் மனத்தை முற்றுகை இட்டது.

டாக்டருடன் சென்னைக்குக் கிளம்பிய போது, அதை ஒரு பொழுதுபோக்கான பிரயாணம் என்றே எண்ணினேன். சென்னைக்கு வந்து கூத்தரசைக் கண்டதும், வியப்புகள் தொடங்கிவிட்டன. தெய்வத்தைக் கட்சி கட்டி ஏசியவன் தெய்வத்தின் மீது பாரம் போடுவதும், இந்தியாவிலேயே பிரசித்தமான ஒரு சர்ஜன் இல்லாத ஒரு மூளைக் கட்டியை இருப்பதாகச் சொல்லி ஆபரேஷன் செய்வதும், அவர் அவ்வாறு செய்தது தவறு அல்ல என்று அம்பலவாணர் சொல்லுவதும்—இவைகளின் பொருள் என்ன?

இந்த மர்மங்களை உடைத்து உண்மை அறியாவிட்டால் என் மனம் நிம்மதி பெறாது என்று தோன்றியது. ஆகையால் நானே பேச்சைத் தொடங்கினேன்.

"டாக்டர், இன்னும் இரண்டு மணி நேரமாவது இந்த அத்துவானத்தில் கிடக்க வேண்டும் போல் இருக்கிறது. ஏதாவது பேசிக்கொண்டிருக்கலாமே? கூத்தரசு ஆட்சேபிக்காவிட்டால், நான் சில சந்தேகங்களைக் கேட்கிறேன்."

"என்ன வேண்டுமானாலும் கேளுங்கள். பேசினால்தான் எனக்கும் ஆறுதலாக இருக்கும்" என்றான் கூத்தரசு.

நான் டாக்டர் அம்பலவாணரிடம் கேட்டேன்: "ஜெனரல் ஆஸ்பத்திரி சர்ஜன் எஸ். ஆர். கே. ராவ் ரணசிகித்சையில் மகா நிபுணர்; வியன்னாவிலும் அமெரிக்காவிலும் பயிற்சி பெற்றவர். இவ்வளவு பெரிய நிபுணர், இல்லாத மூளைக் கட்டியை இருப்பதாகச் சொல்லி, ஒரு பெண்ணின் மண்டையைப் பிளந்து, உயிரையே வாங்கி விட்டார்; ஆனால்..."

நான் மேலே சொல்வதற்குள் கூத்தரசு குறுக்கிட்டான்: "டாக்டர், இந்த விஷயத்தை நீங்கள் என்னிடம் சொல்லவில்லையே? வெண்ணிலாவுக்கு உண்மையாக டியூமர் இல்லையா? பின் ஏன் அந்த சர்ஜன் ஆபரேஷன் செய்தார்?"

"அரசு, பதைத்துப் பிரயோசனம் இல்லை. சர்ஜன் மீது தவறு கிடையாது. அவர் எடுத்த எக்ஸ்ரேயை நானும் பார்த்தேன்; அதன்படி வெண்ணிலாவின் மூளையில் டியூமர் இருக்கிறது. அதனால்தான் அவர் ஆபரேஷன் செய்தார். மண்டையைப் பிரித்துப் பார்த்த பிறகுதான் உண்மையாக டியூமர் இல்லை என்று தெரிந்தது. பிளந்த மண்டையை ஒட்டி விட்டார். அவருக்கும் ஒரே ஆச்சரியமாக இருக்கிறது. அவரைக் குறை கூறுவது எப்படி?" என்றார் டாக்டர்.

கூத்தரசு ஒன்றும் பேசவில்லை. நான் கேட்டேன்: "நீங்கள் எக்ஸ்ரே எடுத்ததாகவும், அது டியூமர் இருப்பதாகக் காட்டவில்லை என்றும் சொன்னீர்களே; அந்தப் படத்தை சர்ஜனிடம் காட்டினீர்களா?"

"காட்டினேன். அதைப் பார்த்து அவர் திடுக்கிட்டுப் போனார். மருத்துவ சரித்திரத்திலேயே இவ்வளவு விபரீதமான மரணம் பற்றித் தான் கேள்விப்படவில்லை என்று சொன்னார். மிகவும் வருத்தப்பட்டார். அவரும் என்னைப் போல் தெய்வப் பித்துப் பிடித்தவர். வெண்ணிலாவைத் துரத்திக் கொன்ற விதி, தன்னை ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொண்டதே என்று மிகவும் நொந்து கொண்டார். அவர் சொன்ன இன்னொரு விஷயம் எனக்குக் கொஞ்சம் ஆச்சரியமாக இருந்தது."

"என்ன அது?" என்றான் கூத்தரசு.

"மண்டையைப் பிரித்தபோது, அவர் எதிர்பார்த்த அளவு ரத்தம் வரவில்லையாம். அவளை ரத்தம் குறைந்தவளாகச் சொல்ல முடியாது. மிகவும் குறைவாக ரத்தம் கொட்டியதைப் பார்த்தபோதே அவருக்கு ஆச்சரியமாக இருந்ததாம்."

கூத்தரசு அடி வயிற்றிலிருந்து எழுந்த ஓர் அழுத்தமான பெருமூச்சுவிட்டான்: "டாக்டர், கடவுள் எனக்கு விதித்த இந்த தண்டனையை ஏற்கிறேன்...ஆனால், தெய்வம் எப்படியாவது அவளையும் காப்பாற்றி இருக்கக்கூடாதா?"

அவன் மீண்டும் தெய்வத்தைக் குறிப்பிட்டுப் பேசியதால், என்னைச் சூழ்ந்திருந்த மர்மம் மேலும் மண்டியது. அதற்கு மேலும் என்னால் பொறுக்க முடியவில்லை.

"நீங்கள் பேசுவது என்ன என்றே எனக்குப் புரியவில்லை. ஆபரேஷனுக்குப் பின்னால் ஒரு கதை இருப்பதாகச் சொன்னீர்களே, டாக்டர், அதை இப்போது சொல்லுங்களேன்."

அம்பலவாணர், "அரசு, நீ அனுமதித்தால் சொல்லுகிறேன்; சொல்லட்டுமா?" என்று அவனைக் கேட்டார்.

"வேண்டாம்; நானே சொல்லுகிறேன். யாரிடமாவது சொல்லித் தீர்த்தாலொழிய என் மனச்சுமையும் குறையாது. குந்தியபடி சிந்தனையைச் சுற்றி வட்டமிட்டால் துன்பம்தான் அதிகம் ஆகிறது. கதை முடிந்து விட்டது. இனி அதை வெளியில் சொன்னால் என்ன?"

சிறிது நேரம் மௌனமாக இருந்த பின், அவன் என்னைக் கேட்டான்: "என்னைப்பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? தெரிந்ததைச் சொல்லுங்கள்."

"அதிகமாய்த் தெரியாது. நீங்கள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்; மெய்ப்பொருள் கண்டோர் கழகத்தின் தலைவர் என்பது தெரியும். கடவுள் என்கிற பொய்யால் தொல்லைப்படுகிற மக்களுக்கு மெய்ப்பொருளை உணர்த்துவது உங்கள் கழகத்தின் நோக்கம் என்று சொல்லிக் கொண்டிருந்தீர்கள். இப்போது வேறு

பாலஸாதி

குழந்தைகளின் சகல நோயகளுக்கும் சிறந்தது.

★

எல்லா கெமிஸ்டுகளிடமும் கிடைக்கும்.

அல்லது கீழ்க்கண்டவருக்கு எழுதுக:

Vaidya J. G. VARADH Office, NADIAD

ஸ்டாகிஸ்டுகள்: தாமோதர் & கம்பெனி,

113, நைனியப்ப நாயகன் தெரு, சென்னை 3.

விதமாகப் பேசுகிறீர்கள். உங்கள் கழகத்தின் தொடக்கவிழாவன்று நானும் அக்கூட்டத்துக்கு வந்தேன். நீங்களும், உங்கள் மனைவியும் பேசிய பேச்சைக் கேட்டு மலைத்தேன். தெய்வத்துக்குப் பயன்பட வேண்டிய பேச்சு, அதற்கு விரோதமாகப் பயன்படுகிறதே என்று வருந்திக்கொண்டே வீடு திரும்பினேன். பிறகு உங்களைப்பற்றி நான் கவனிக்கவேயில்லை. கவனிக்கிற தேவையும் ஏற்படவில்லை."

"எங்களைக் கவனிப்பதே பாவம் என்று நினைத்தீர்கள், இல்லையா?" என்முன் கூத்தரசு.

நான் பொய் கூற விரும்பவில்லை. "ஆம்; அது என் பலஹீனம்" என்றேன்.

"அது உங்களுடைய பலம். எனக்காக அதைப் பலஹீனம் என்று ஏன் சொல்லுகிறீர்கள்? . . . அது போகட்டும். நானும் வெண்ணிலாவும் வாழ்க்கை ஒப்பந்தம் செய்துகொண்டதுபற்றி உ ங் க ளு க் கு ஏதாவது தெரியுமா? டாக்டர் ஒன்றும் சொல்லவில்லையா?"

"நான் ஒன்றும் சொல்லவில்லை. ஆரம்பத்திலிருந்தே, என்னிடம் சொன்னது போலவே, கதை முழுவதையும் சொல்லிவிடு. நேரம் இருக்கிறது. தூங்காமலும் இருக்க வேண்டுமல்லவா?" என்றார் அம்பலவாணர்.

"டாக்டர், நீங்கள் ஒரு அற்புதமான மனிதர். எனக்கு நேர்ந்த அனுபவம் விசித்திரமானது. அதை அறிந்தவர்களால் வெளியில் சொல்லாமல் இருக்க முடியாது. ஆனல், நீங்கள் அதைச் சாதாரண சம்பவம் ஆக்கிவிட்டீர்களே!"

"நான் தெய்வ சக்தியை அறிந்தவன். தெய்வத்துக்கு விந்தையும், விசித்திரமும் ஏது? . . . உன் கதையைச் சொல்லு. ராமுவுக்கு ஒரு 'மர்மக் கதை' கேட்கிற பரபரப்பு உண்டாகும்."

கூத்தரசு தன் கதையைத் தொடங்கினான்:—

நடந்ததை நடந்தபடி சொல்லுகிறேன். அவ்வப்போது எனக்கு இருந்த மனோ நிலையை விவரமாகக் குறிப்பிடுகிறேன். கேட்பதற்கு உங்களுக்குப் பொறுமை இருக்கிறதோ இல்லையோ, சொல்லிவிட வேண்டும் என்கிற வேகம் எனக்கு இருக்கிறது. ஆகையால் சொல்லுகிறேன். . .

கல்லூரியில் பட்டம் பெற்று வெளியே வந்தபோது, சுயேச்சையாகச் சுகம் அனுபவிக்கத்தான் உலகம் எனக்கு இருந்தது. பரம்பரைப் பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்த எனக்கு வேலை தேடிச் சம்பாதித்துப் பிழைக்க வேண்டுமென்கிற கட்டாயம் இல்லை. அந்த நோக்கமும் எனக்குக் கிடையாது. பெரியவர்களின் கட்டுப்பாடும் இல்லை. நான் கல்லூரியில் வாசித்த கடைசி வருஷம் என் தகப்பனர் இறந்துவிட்டார். கல்லூரியைவிட்டு வெளிவந்தபோது, என் மனத்தில் பேராசை ஒன்று முளைத்தது. படிக்கும்போதே சிறந்த பேச்சாளி என்று பெயர் வாங்கிய எனக்கு, அரசியல் அல்லது சமூகக் கட்சிகளில் பங்கெடுத்துக்கொண்டு தலைவனாகிவிட வேண்டும் என்கிற பேராசைதான் அது. பேச்சு வன்மையுடன் பொருள் துணையும் இருந்ததால், சுலுவாகத் தலைவன் ஆகிவிடலாம் என்பதை நான் அறிவேன். ஆகையால், அரசியல், சமூகக் கட்சிகளில் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொள்ளத் தொடங்கினேன். எல்லாக் கட்சிகளும் என்னை அன்புடன் வரவேற்றன. ஆனல் எந்தக் கட்சியிலும் எனக்குப் பிடிப்பு ஏற்படவில்லை. எந்தக் கட்சியில் இருந்தாலும், எந்தக் கொள்கைக்காகப் பேசினாலும், எத்தனை முறை கட்சியும், கொள்கையும் மாறினாலும், என் சொற்பொழிவைக் கேட்பதற்காக ஆயிரக்கணக்கான மக்கள் கூடுவதைக் காணக்காண என் அதிகார ஆசையும் வ லு த் து க் கொண்டே போயிற்று.

சென்ற ஆண்டுத் தொடக்கம் என்று ஞாபகம். எனக்கென ஒரு கொள்கையை வகுத்துக்கொண்டு, அக்கொள்கையின் அடிப்படையில் புதிய கட்சி கண்டு, அதற்கு நானே தலைமை பூண்டு நடத்துவது என்று தீர்மானித்தேன். அரசியல் துறையில் கட்சி கட்டி வெற்றி காண முடியாது என்பதை அறிந்த நான், சமூகத் துறையில் புரட்சிகரமான சீர்திருத்தங்களைப் பிரசாரம் செய்ய வேண்டும் என்று முடிவு கட்டினேன்.

அறிவு என்று நான் நினைத்த அறிவைக்கொண்டு தீவிரமாகச் சிந்தித்தேன். இந்நாட்டில், இன்றைய சமூகத்தில் உள்ள பெரிய பிரச்னை ஜாதி, மத பேதங்கள்தான் என்று எனக்குத் தோன்றியது. படிக்கும் போதே கடவுளும் கோயில்களும் எனக்குப் பிடிக்காத விஷயங்கள். எந்தக் கட்சியில் இருந்தாலும் கடவுளை நம்புகிற மூட நம்பிக்கையை நான் இகழத் தவறுவதில்லை. நமக்குத் தெரியாத விதத்திலும் புரியாத வகையிலும் சில சம்பவங்கள் நடப்பதால், அவைகளுக்குக் காரணமாகக் கடவுள் என்கிற சக்தியைக் கற்பனை செய்து, அந்தக் கற்பனைச் சக்திக்கு ஆலயம் எழுப்பி, அதற்கெனப் பொருளும் ஒதுக்கி, அக்கற்பனைப் பொருளைக் குனிந்து கும்பிடுவதோடு நில்லாமல் அதைப்பற்றிப் பொய்யும், புரட்டுமாக நூல்கள் எழுதி, அவைகளை உண்மை என்று நம்பும்படிச் செய்து, மக்களை மடையர்களாக்குவதுதான் மதத்தின் நோக்கம் என்று நினைத்தேன். அரசர்கள் குடிகளையும், பணக்காரர்கள் ஏழைகளையும், படித்தவர்கள் பாமரர்களையும் சுரண்டிப் பிழைப்பதற்காகக் கற்பிக்கப்பட்ட ஓர் ஏற்பாடாகவே மதத்தைக் கண்டேன். சரித்திரமும் என் கருத்துக்கு ஒப்பம் இடுவதாக எனக்குத் தோன்றியது. மதத்தின் பெயராலும், கடவுளின் பெயராலும் நடந்த போராட்டங்கள் எத்தனை! உயிரைக் கொடுத்தவர்கள் எத்தனை! கடவுளின் மீதும், விதியின் மீதும் பாரத்தைப் போட்டுவிட்டு, இழிநிலையில் அழுகுகிறவர்கள் எவ்வளவு பேர்! எல்லாம்—கடவுள் என்கிற ஒரு பொய்யினல்; இல்லாத ஒரு பொருளை அடைய வேண்டும் என்கிற ஆசைக்காக; அறியாமையின் ஆட்சியை வலுப்படுத்துவதற்காக.

கடவுள் என்கிற இந்தக் கொடிய பொய்யை இன்றைய சமூக அமைப்பி

நம் நாட்டின் நகரங்களிலும் கிராமங்களிலும் எல்லோராலும் விரும்பப்பட்டு அதிக விற்பனையாவது T. A. S. ரத்தினம் பட்டணம் பொடி. அதிக விற்பனையே உயர் குணத்துக்கு அத்தாட்சியாகு பொது மக்களின் தீர்ப்பு அல்லவா?

T·A·S ரத்தினம்
பட்டணம் பொடி
தபால் பெட்டி 1151, சென்னை - 21

நீரிழிவுக்கு
நிவாரணம்

சிறுநீரில் சர்க்கரை இருப்பின் நீரிழிவு (**DIABETES**) என்று சொல்லப்படும். இப்பயங்கர வியாதியுள்ள நோயாளி நாளுக்கு நாள் தன் முடிவு நெருங்குவதைக் காண்கிருன்

அதிகதாகம், பசி, அடிக்கடி சிறுநீர் சர்க்கரையுடன் போதல் எரிச்சல் ஆகியவைகள் இந்த வியாதிகளின் முக்கிய அறிகுறிகள், வியாதி முற்ற ராஜப் பிளவை கட்டிகள், சாளேஸ்வரம் இதர கொடிய வியாதிகள் ஏற்படும்

பல வருட ஆராய்ச்சிக்குப்பின் வீனஸ் சார்ம் தயாரிக்கபபட்டிருக்கிறது இதை உபயோகிப்பதால் பலர் மரணத்தினின்றும் தப்பியுள்ளனர் சில தினங்களுக்குள் குணம் அடைந்து வருவதை உணர்வீர்கள் இந்த மருந்துக்குப் பத்தியம கிடையாது நன்கு விளக்கும் இலவச ஆங்கில புத்தகத்திற்கு எழுதிக் கேளுங்கள்

50 வில்லைகள் கொண்ட புட்டி 1-க்கு விலை ரூ. 6.12.0. பாக்கிங் தபால் செலவு இனும்.

வீனஸ் ரீஸர்ச்லாபரட்டரி
(S M W.)
Post Box No. 587. CALCUTTA.

லிருந்து நீக்கிவிட்டால், சமூகம் ஓர் ஒழுங்கான அமைப்புப் பெறும் என்று நம்பினேன். என் நம்பிக்கையைக் கட்சி ஆக்குவதில் உள்ள கஷ்டங்கள் எனக்குத் தெரியாமலில்லை. மதம் என்று ஏற்பட்டதோ, அன்றே அதை எதிர்த்தவர்களும் இருந்திருக்கிறார்கள். நாத்திகமே ஒரு மதமாக மாறிவிட்ட விந்தையும் அறிவேன். இந்நாட்டில் 'தெய்வம்' இல்லாத எந்தக் கட்சியும் வாழ முடிந்ததில்லை என்பதையும் அறிவேன். நாத்திகத்தின் அடிப்படையில் கட்சி கட்டிப் பிறகு 'ஒரே ஒரு தேவன் இருக்கிறான். அவனுக்கு உருவம்தான் இல்லை' என்று மடை மாறுகிறவர்களையும் பார்த்து விட்டேன்.

ஆனால், ஸ்தாபன ரீதியில் கட்டுப்பாடாகக் கிளர்ச்சி செய்தால் என் இயக்கம் வலுவடையும் என்னும் நம்பிக்கை எனக்கு இருந்தது. முன் எக்காலத்தையும்விட, இந்தக் காலத்தில் மனிதனைக் கடவுளின் பிடியிலிருந்து சுலபமாக விடுவித்துவிடலாம் என்று தோன்றியது. இன்று விஞ்ஞானம் அடைந்துள்ள முன்னேற்றம், கடவுள் என்கிற பொய்யைப் பிளந்துவிடும் என்று நினைத்தேன். . . ஆக, நாத்திகத்தைக் கோட்பாடாகக்கொண்ட கட்சியொன்றை அமைத்துவிடுவது என்ற முடிவுக்கு வந்தேன். அதற்குத் துணை புரியக்கூடியவர்களையும் சேர்த்து வந்தேன்.

சுமார் ஏழு மாசங்களுக்கு முன்—இன்று அமாவாசை. ஆறு அமாவாசைகளுக்கு முந்தி—தாராசுரத்தில் ஒரு சங்கத்தின் ஆண்டு விழாவுக்குத் தலைமை வகிக்க என்னை அழைத்தார்கள். அந்த விழாவில் மன்னார்குடியைச் சேர்ந்த வெண்ணிலா பேசுவாள் என்று சங்கத்தவர்கள் சொன்னார்கள். அவளை அது வரை நான் நேரில் கண்டதில்லை. என்னைப்போலவே அவளும் கடவுளை மறுக்கிறவள் என்று கேள்விப்பட்டிருந்தேன். அவளைக் காண வேண்டும் என்னும் எண்ணத்தால் சங்கத்தின் அழைப்பை ஏற்றுக்கொண்டேன்.

நேரில் பார்த்தபோது என் கட்சிக்கு ஒரு பெரிய மூலதனம் கண்ட மகிழ்ச்சி எனக்கு ஏற்பட்டது. நான் எதிர் பார்த்ததைவிட அதிகமாய் அவள் கடவுளை வெறுத்தாள். தனித்துப் பேசும் போதுகூட, தெய்வத்தை நம்புகிற மடமையை இகழ்ந்தாள். நான் எதிர் பார்த்ததைவிட அவள் அழகாகவும் இருந்தாள். கண்டதும் காதல் என்று கதை சொல்லுகிறார்களே, அது என் விஷயத்தில் உண்மை ஆயிற்று.

எங்களுடைய பெயர், ஏராளமான கூட்டத்தைச் சேர்த்திருந்தது. கூட்டத்தவருக்கு அவளை அறிமுகம் செய்து வைத்துச் சுருக்கமாகப் பேசிவிட்டு, 'கடவுளின் கொடுமை' பற்றிப் பேசும்படி வெண்ணிலாவை அழைத்தேன்.

அவள் அன்று பேசியதை இன்று வரை என்னால் மறக்க முடியவில்லை.

அவள் பேசினாள்: "... இதோ இடிபாடுகளால் அலங்கரிக்கப்பட்டுத் தெரிகிறதே, உங்கள் ஆலயம்—அந்த ஆலயத்தில் எழுந்தருளியுள்ள உங்கள் கடவுளை ஓயாமலும், ஒழியாமலும் கும்பிட்டு நீங்கள் கண்ட பயன்தான் என்ன? அக்கறையைப் பண்ணுகிறீர்கள்? நான் உங்களைக் கேட்கிறேன். கடவுள் என்று ஒன்று உண்டு என்றால்—பல்லாயிரம் ஆண்டுகளாக மனிதன் செய்யும் பிரார்த்தனைக்கு அது இரங்கிற்றா? இரங்கிற்று என்றால்—சமூகத்தில் இத்தனை பிரச்னைகள் இருப்பானேன்? இரங்கவில்லை என்றால்—அந்தக் கடவுள் நமக்கு எதற்காக?...நான் சொல்கிறேன்: கடவுள் என்றொரு பொய் கட்டினார்கள். அதற்கு மகிமை கற்பிக்கும் புராணங்களையும், இதிகாசங்களையும் எழுதினார்கள். நரகம் காட்டிப் பயமுறுத்தினார்கள். யார்? அரசர்கள், பிரபுக்கள், புரோகிதர்கள். நாம் ஏமாந்தோம். ஆண்டைகளாக அவர்களைக் குனிந்து கும்பிடப் பழகினோம். கட்டுக் கதைகளுக்கு அஞ்சி, இந்த உலகத்தையே—நீங்கள் சொல்லும் நரகம் போல் ஆக்கிக்கொண்டோம். என்ன பேதமை இது?

'—மனிதனால் பறக்க முடியுமா?' என்று கேட்டான் ஞானி. 'வானில் பறந்து, விளையாடி மகிழவும் முடியும்' என்று காட்டிவிட்டான் விஞ்ஞானி. 'அந்த ஊரில் நடப்பதை இங்கிருந்தே சொல்லுவேன்' என்று பெருமை பேசினான் ஞானி. பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் நிகழ்வதை இருக்கிற இடத்தில் காண முடியும் என்பதை நிரூபித்துவிட்டான் விஞ்ஞானி. 'மனிதனைப் படைக்க முடியுமா?' என்று சவால் விட்டான் ஞானி. 'முடியும்' என்று சொல்லுகிறான் விஞ்ஞானி. செயற்கைக் கரு மூலம் பெண்கள் மகவு பெறுவதை நீங்கள் அறிவீர்கள். இன்னும் எத்தனை எத்தனையோ விந்தைகளைச் செய்கிறது விஞ்ஞானம். இருந்தும், இந்நிலையிலும் தெய்வம் என்னும் பொய் முன் தலைவணங்குகிறோம். என்ன அறியாமை இது! அந்தப் பொய்யைப் பொதுபடுத்தும் மதம் நம்மைப் பெருநோயாகப் பீடித்து வதைத்து வருகிறது. அந்த நோயை வளர்க்கும் கிருமிகள்தான் புராண இதிகாசங்கள். இந்தக் கிருமிகளைச் சுட்டுப் பொசுக்கி, அந்த நோயை அகற்றினாலொழிய இந்நாடு முன்னேற முடியாது. சமூகத்தின் எந்தப் பிரச்னையும் தீராது. இன்று இந்த நாட்டிற்கு வேண்டியது அகாரம் அல்ல, உகாரம் அல்ல, மகாரம் அல்ல – ஆகாரம்தான். இன்று, இந்த நாட்டுக்கு வேண்டியது ஓங்காரம் அல்ல; 'மனிதனால் முடியாதது ஏதும் இல்லை' என்கிற ஆங்காரம் தான். இந்த ஆங்காரத்தை வளர்ப்போம்..."

அவள் பேசி முடிக்கும் வரை நான் வியப்புடன் கேட்டுக்கொண்டிருந்தேன். என் மனத்தில் உள்ளதை, என்னைவிட அழகாக அவள் சொல்லிக்கொண்டிருந்தாள். அவளுக்குப் பிறகு நான் பேசிக் கூட்டம் முடியும்போது இரவு ஒன்பது மணிக்கு மேல் ஆகிவிட்டது. எப்படியாவது புதிய கட்சிக்கு அவளை இழுத்து விட வேண்டும் என்று எண்ணி அவளை வீட்டுக்கு அழைத்துச் சென்றேன். என் பேச்சை மிகவும் ரஸித்த அவளும் என் அழைப்பை உடனே ஏற்றாள்.

பங்களா முழுவதிலும் போலீஸ்காரர்கள் நிரம்பியிருந்தார்கள். ஜமீன் சொத்துக்கள் திருட்டுப் போன விஷயம் ஊர் முழுவதும் பரவி விட்டது. ஆனல், சேகரும், மல்லாரியும் பங்களாவுக்கு வந்து திருட்டு சம்பந்தமாக விசாரிக்காதது விச்சுவுக்கு வியப்பாக இருந்தது. தவிர, முதல் நாள் காலை மல்லாரியின் பேச்சு விச்சுவின் மனதிலே விஷமம் செய்ய ஆரம்பித்தது. அவர்களைப் போய்ச் சந்திக்கத் தீர்மானித்தான். எல்லோரும் போலீஸ்காரர்களின் விசாரணையில் கவனம் செலுத்திக் கொண்டிருந்தபோது, மெதுவாக விச்சு அங்கிருந்து நழுவி நகரத்துக்கு ஓடினன்.

சேகரும், மல்லாரியும் தங்கி இருந்த ஹோட்டலை அவன் அடைந்தபோது, ஹோட்டல் முதலாளி விச்சுவைப் பார்த்ததும், "ஏன் தம்பி . . . குட்டி ஜமீன்தாரைப் பார்க்க வந்தியா? உனக்குத் தெரியாது? அவங்க நேத்தி ராத்திரியே ரூமைக் காலி செய்துவிட்டுப் போய்விட்டாங்களே...உங்கிட்ட சொல்லல்லே?" என்று கேட்டார்.

விச்சுவுக்கு மூச்சே நின்று விடும்போலிருந்தது. அவனுக்கு என்ன சொல்வதென்றே தோன்றவில்லை...ஸ்தம்பித்து விட்டான். ஆனல், உடனே சமாளித்துக் கொண்டு, "பங்களாவில் சொல்லிக் கொண்டு போயிருப்பார்கள்...நான் அவர்கள் குடும்பத்தைச் சேர்ந்தவனில்லை பாருங்கள். என்னிடம் சொல்லிக்கொண்டு போகவேண்டுமென்பதில்லையே..ம்..சேகர் எனக்கு ஒரு புத்தகம் கொடுத்து விட்டுப் போவதாகச் சொன்னன். அதை உங்களிடம் கொடுத்தான?" என்று கேட்டான் விச்சு. எப்படியாவது சேகர் தங்கியிருந்த அறைக்குள் சென்று சோதனை போட வேண்டுமென்று விரும்பினன் விச்சு.

"இல்லையே. என்னிடம் எந்தப் புத்தகமும் தரவில்லையே" என்ருர் ஹோட்டல் முதலாளி.

"ஒருவேளை அவனிருந்த அறையில் அதை எனக்காக விட்டுப் போயிருக்கலாம் என்று நினைக்கிறேன். அவசியம் அந்தப் புத்தகத்தைத் தருவதாகச் சொன்னன். நான் அந்த அறையில் போய்ப் பார்க்க அனுமதிக்கிறீர்களா?" என்று கேட்டான் விச்சு.

"ஓ! தாராளமாக. இன்னும் அந்த அறையை வேலைக்காரன் கூட்டிச் சுத்தம் செய்யக்கூடவில்லை. இந்தா சாவி" என்று சாவியை நீட்டினர் முதலாளி. சாவியை வாங்கிக் கொண்டு, மாடிப் படிகளில் ஏறிக் கொண்டிருந்த விச்சுவின் மனதில் 'சேகரும் மல்லாரியும் இந்தத் திருட்டில் சம்பந்தப்பட்டிருப்பார்களோ? இருக்காது. ஏன் இருக்கக் கூடாது—திருட்டு நடந்த அன்று இரவு அவர்கள் மறைந்ததிலிருந்து அவர்கள்மீது சந்தேகப்படுவதற்கு ஆதாரமிருக்கிறதே. சேகரையும் மல்லாரியையும் விரும்பாதவர்களுக்கு இது சாதகமாக இருக்குமே?' என்ற எண்ணங்கள் ஓடிக்கொண்டிருந்தன.

அறைக்குள் ஒன்றுமில்லை என்று திரும்பிப் போகும்போது, கதவு மூலையில் ஏதோ கறுப்பாக ஒரு வஸ்து தெரிந்தது. விச்சு தாவிப் போய், அதை எடுத்துப் பார்த்தான். அது ஒரு டைரி. அதைப் பிரித்துப் பார்த்தபோது, அதில் பழங்காலத்து தினசரிப் பத்திரிகையின் செய்திகள் இரண்டு, வெட்டி, ஒட்டப்பட்டிருந்தன. மல்லிகைக் கொல்லை ஜமீனிலுள்ள விலையுயர்ந்த வைர நகைகளின் வர்ணனைதான் அந்தச் செய்திக் குறிப்பு. இன்னும் புரட்டியபோது, ஏதோ இடத்தின் பிளான் ஒன்று வரையப்பட்டிருந்தது. குகைகள் போலவும் நடுவில் ஒரு வீடுபோலவும், குகைகளின் முடிவு அந்த வீட்டில் போய் முடிவதாகவும் புரியாதபடி கிறுக்கி இருந்தது. விச்சு அந்த டைரியைப் பரிசோதித்துக் கொண்டிருக்கும்போது, அவன் பின்னல் ஒரு கட்டைக் குரல், "அந்த டைரியை இப்படிக் கொடுத்து விடு தம்பி" என்றது.

திடுக்கிட்டுத் திரும்பிய விச்சு, அறையின்வாசல்படியில் போலீஸ் இன்ஸ்பெக்டர் கையை நீட்டிக் கொண்டு நிற்பதைக் கண்டான். பேசாமல் அவர் கைகளில் டைரியைக் கொடுத்தபோது அவர் 'வேறு ஒன்றும் இங்கிருந்து நீ எடுக்கவில்லையே?' என்ருர். இல்லை என்

பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்துவிட்டு வீட்டுக்கு வந்தான் விச்சு. தான் பங்களாவை விட்டு நழுவி ஹோட்டலுக்கு வருவதை இன்ஸ்பெக்டர் கண்காணித்துப் பின்தொடருவார் என்று அவன் எதிர்பார்க்கவேயில்லை.

விச்சுவுக்கு மனதை என்னவோ செய்தது. எந்த நிகழ்ச்சியும் சேகரையும், மல்லாரியையும் குற்றவாளி ஆக்குவதை அவன் மனது விரும்பவில்லை. வேதனையோடு தவித்தான். சேகரின் மறைவையும், டைரி விஷயத்தையும் சகுந்தலாவிடம் சொல்ல விச்சுவுக்குத் துணிவில்லை. சகுந்தலா இதைக் கேட்டால் எப்படி வருத்தப்படுவாள்– சேகரை முழு மனதுடன் தன் தம்பியாக நம்பும் அவள் மனது எப்படிப் புண்படும் என்று எண்ணி பங்களாவுக்குப் போகாமலேயே வீட்டுக்குத் திரும்பிவிட்டான்.

வீட்டிலும் அவன் கலகலப்பாக இல்லை. எதையோ பறி கொடுத்தவன்போல, ஏதோ குற்றம் செய்ததுபோல முகத்தை உம்மென்று வைத்துக்கொண்டு தனியாக உட்கார்ந்திருந்தான். மாலை இருட்டியவுடன் சரசுவும், ராமுவும் பங்களாவிலிருந்து விச்சுவைத் தேடிக்கொண்டு வந்துவிட்டார்கள். விச்சுவிடம் காணப்பட்ட மாறுதலைக் கவனித்து விட்டார் அவன் அப்பா.

அவன் வாடிய முகத்தையும், சோர்ந்த உள்ளத்தையும் மாற்றத் தீர்மானித்து, இரவு சாப்பாட்டிற்குப் பிறகு அவனையும், சரஸா, ராமுவையும் அழைத்துக்கொண்டு கடற் கரைக்கு உலாவக் கிளம்பினார், அவன் அப்பா. நல்ல நிலாக் காலமாதலால் கடற் காற்றை வாங்கிக்கொண்டு மணலில் நடந்து போவது சுகமாக இருந்தது. வெகு தூரம் வந்தபிறகு ரகுபதி மணலில் உட்கார்ந்தார். அவர் குழந்தைகளும் உட்கார்ந்துகொண்டனர்.

“விச்சு! இன்றைக்கு லைப்ரரியிலிருந்து ரொம்ப காலத்துப் புஸ்தகம் ஒன்று வாங்கிப் படித்தேன். அதில் சாமுண்டிக் கோட்டை வரலாறு விவரமாகப் போட்டிருந்தது. அதாவது ஸ்தல புராணம் போல. அதோ தெரிகிறது பார், ஒரு மலைச்சரிவு” என்று சுட்டிக் காட்டினார் ரகுபதி.

“கடலுக்குள்ளே சரிஞ்சு போறதே அந்த மலையா, அப்பா?” என்றாள் சரஸா.

“ஆமா, அதிலே ஒரு குகை இருக்கிறதாம். அதுபோல இந்த வட்டாரத்தில் நாலைந்து குகைகள் இருக்கின்றனவாம். ஒரு குகை சாமுண்டிக்குப் போகிறதாம். ஒரு காலத்தில் இந்த ஊரில் பெரிய கொள்ளைக் கூட்டம் தங்கி இருந்ததாகவும் அவர்களின் தங்குமிடமாக இப்போதுள்ள ஜமீன் பங்களா பயன் பட்டதாகவும் அந்தப் புத்தகத்தில் போட்டிருக்கிறது. ஜமீன் பங்களா அப்போது இத்தனை பிரும்மாண்டமானதாக இல்லையாம். சாதாரணமாகத்தான் இருந்ததாம். மல்லிகைக் கொல்லை ஜமீனின் முதல் பூபதி இதை வாங்கி விஸ்தாரமாகக் கட்டிவிட்டார் என்று தெரிகிறது. இந்தப் புத்தகத்தில் நாலைந்து குகைகள் ஜமீன் பங்களாவுக்குள் போய் முடிவதாக ஒரு பிளான்கூடப் போட்டிருந்தது. அதைக்கூட அப்படியே காப்பி செய்துகொண்டு வந்தேன். அந்தப் பிளான்படி பார்த்தால் பங்களாவில் சமையலறையிலிருந்து இரண்டு குகைகளுக்கு வழி இருக்குமென்று தெரிகிறது” என்றார் ரகுபதி.

இத்தனை நேரம் அவர் பேச்சை அசுவாரஸ்யமாகக் கவனித்து வந்த விச்சு சட்டென்று “நீங்கள் காப்பி செய்து வந்த அந்தப் பிளான் எங்கே, அப்பா?” என்று கேட்டான்.

“இதோ இருக்கிறது” என்று ரகுபதி தன் சட்டைப் பையிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்துக் கொடுத்தார். விச்சு அதைப் பரபரப்புடன் ஆராய்ந்துகொண்டிருக்கும்போது ராமு சொன்னான்: “ஏனண்ணா, நேற்று கோபு சொன்னானே, அந்தக் குகை வழியாக உள்ளே போய் படி வழியாக ஏறி ஒரு கதவின் முன்னால் போய் நின்றபோது, கதவின் பின்னால் ஏதோ பாத்திரங்கள் உருளுவது போலவும், விறகு எரிவது போலவும் சப்தம்கேட்டதாக–ஒரு வேளை அது பங்களாவின் சமையல் கட்டிடமாக இருக்குமோ?”

ஆனால், விச்சு பேசவில்லை. தகப்பனாரிடமிருந்து வாங்கிய காகிதத்திலுள்ள பிளானையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான். அவன் கைககள் நடுங்கிக் கொண்டிருந்தன.

“என்னடா விச்சு...என்ன, ஏன் இப்படி திகைத்துப் போய் அதைப் பார்க்கிறே?” என்று கேட்டார் ரகுபதி.

அடைபட்ட குரலில் “இந்தப் பிளானை நான் முன்னாலேயே பார்த்தாகி விட்டது” என்றான்.

“என்னடாது..நான் சாயந்திரந் தானே லைப்ரரியிலேருந்து எழுதிண்டு வந்தேன். நீ எப்படி இதை முதல்லேயே பார்த்திருக்க முடியும்?” என்று கேட்டார் ரகுபதி. ஆனால், விச்சு அதற்குப் பதில் சொல்லவில்லை. அவன் மனக் கண் முன்னால் ஹோட்டலின் அறையில் கண்டெடுத்த டைரியும், அதில் உள்ள பிளானும் சினிமாப் படம் போல வந்து நின்றன. அந்தப் பிளானின் நடுவில் கோட்டை போலக் குறிப்பிட்டிருந்தது போலவேதான் அவன் அப்பாவும் குறித்திருந்தார். கடற் கரையும் குன்றுகளும் அப்படியே டைரியில் பார்த்ததுபோலவேதான் ரகுபதி எடுத்து வந்த குறிப்பிலும் இருந்தன.

காலையில் சரஸாவும், ராமுவும் எழுந்திருப்பதற்கு முன்பே விச்சு எழுந்திருந்து பங்களாவுக்குக் கிளம்பி விட்டான். அவன் பங்களாவுக்குப் போனபோது அங்கே நடு ஹாலில் ராஜ்குமாரும்,

கோவிந்தசாமியும், இன்ஸ்பெக்டரும் கூடியிருந்தார்கள். விச்சு அவர்களிடம் முதல் நாள் ஹோட்டல் அறையில் தான் கண்டெடுத்த டைரியைப் பற்றியும், பிறகு தன் தகப்பனுர் லைப்ரரியிலிருந்து நகல் எடுத்து வந்த பிளானைப்பற்றியும் இரண்டுக்குமுள்ள ஒற்றுமையையும் பற்றி விவரமாகச் சொன்னுன். இன்ஸ்பெக்டருக்கு கடற் கரையை அடுத்துள்ள குன்றுகளில் குகைகள் இருப்பது தெரியும். ஆனால், தன் அதிகாரத்தில் அந்தக் குகைகளில் திருடர்கள் தங்கிக் கொள்ளையடிப்பார்கள் என்று அவர் நம்பத் தயாராக இல்லை. ஜமீன் பங்களாவில் சமையலறையில் உள்ள ரகசிய வழியைப் பற்றியோ, அது குன்றுகளிலுள்ள குகைக்கும் சாமுண்டிக் கோட்டைக்கும் போவதைப்பற்றியோ அவருக்கு ஒன்றும் தெரியாது.

விச்சு சொன்ன விவரங்களை கவனமாகக் கேட்டுக்கொண்டு வந்த இன்ஸ்பெக்டர், ஜமீந்தாரிடம் ஏதோ சொல்லி விட்டு தன் ஆபீஸ் டிராயரில் வைத்திருக்கும் டைரியைப் போய்ப் பரிசோதித்து மேலே நடக்கவேண்டியவைகளுக்கு ஏற்பாடு செய்ய விடை பெற்றுக்கொண்டு போனுர். அன்று பகலில் குழந்தைகள் எல்லோரும் மாஞ்சோலையில் கூடியபோது, சகுந்தலா, எல்லாரும் திகைக்கும் படியான செய்தியைச் சொன்னுள். அவள் கொள்ளுப் பாட்டி மாணிக்கவல்லிக்கு வரதராஜன் வாரிசு விஷயமாக நடந்த குளறுபடிகள் எதுவும் தெரியக்கூடாதென்று மறைத்துவைத்திருந்தார்கள் அல்லவா? ஆனல், நூறு வயதுக் கிழவி மாணிக்கவல்லிக்கு சேகர், மல்லாரி, புது மனிதன் ஆகிய சகலரையும் பற்றித் தெரியுமாம்.

அந்த ஜமீனின் பழங் காலத்து வேலைக்காரன், கிழவன் வேலப்பன். ஜமீந்தாரிணி மாடியில் தனியறையில் கட்டிலில் படுத்திருந்தாலும் பங்களாவில் நடக்கும் ஒவ்வொரு விஷயத்தையும் வேலப்பன் அவளிடம் விவரமாகப் போய்ச் சொல்லிவிடுவானும். அப்படி அவனுக்கு உத்தரவு.

"வீணையை அந்தப் பொம்மையில் பொருத்தினதுகூடத் தெரியுமா, சகுந்தலா? அப்படியானல் பாட்டி தன் உண்மைப் பேரனுக யாரை ஏற்றுக்கொள்ளுகிருள்?" என்று கேட்டான் பரபரப்புடன் விச்சு.

"யாரையுமே பாட்டி நம்பவில்லை. வீணை வாசிக்கும் பெண்ணின் கைகளில் வீணைப் பொம்மையைக் கொண்டுவந்து வைத்த அந்தப் புது மனிதனைக்கூட பாட்டி வரதராஜன் என்று ஏற்றுக் கொள்ள முடியாதென்கிருளாம். அந்த மனிதன், தான்தான் வரதராஜன் என்பதை நிரூபிக்க அவன் இன்னும் ஏதோ ஒரு விஷயத்தை எதிர்பார்ப்பதுபோலத் தெரிகிறது" என்ருள் சகுந்தலா.

விச்சுவுக்கு மூளை குழம்பிற்று. இது என்ன மர்மத்தின் மேல் மர்மமாக இருக்கிறதே. யார் வீணையைக் கொண்டு வந்து அந்தப் பெண் பொம்மையின் கைகளில் வைத்து பூர்த்தி செய்கிருனே அவன்தான் வரதராஜன் என்று முடிவு செய்ய வேண்டும் என்று சொன்னவள் இப்போது இன்னும் ஏதோ ஒரு விஷயத்தை எதிர்பார்ப்பதாவது?

அதன் பிறகு விச்சு, தாங்கள் செய்யவேண்டியதைப் பற்றித் திட்டம் வகுத்தான். "போலீஸ்காரர்கள் தங்கள் வேலையைச் செய்தபோதிலும், குழந்தைகளான தாங்களும் தங்களாலான வரை திருட்டுப்போன பொருள்களை மீட்பதில் முயற்சி செய்ய வேண்டும்" என்று வாதித்தான் விச்சு. "நமக்கோ குகை தெரியும்–கோபு அதற்குள் போயிருக்கிருன்–ஆகவே, பயப்படத் தேவையில்லை..." என்று உற்சாகமாகச் சொன்னுன். அவன் திட்டத்திற்கு எல்லாக் குழந்தைகளும் கைதூக்கின.

அன்றிரவு.. நடுநிசி... மங்கலான நிலவு வீசிக்கொண்டிருந்தது. சகுந்தலா, பட்டு, சரஸா, ராமு, கோபு, விச்சு எல்லோரும் பளிங்கு மண்டபத்தில் கூடினுர்கள். கோபுவும், ராமுவும் கறுப்பு உடை அணிந்திருந்தார்கள். விச்சு, சரஸா இருவரைத் தவிர, மற்றவர்களின் கைகளில் உறுதியான தடிக் கம்புகள் இருந்தன. ஜமீனின் ஆயுத சாலையிலிருந்து இரண்டு பிச்சுவாக்களை எடுத்து வைத்திருந்தான் கோபு. அதில் ஒன்றை ராமுவிடம் கொடுத்தான். கோபுவிடம் ஒரு டார்ச் லைட்டும் இருந்தன. எல்லோரும் வந்து சேர்ந்ததும் விச்சு "நாம் செய்யவேண்டியதெல்லாம் நினைவிருக்கிறதல்லவா?" என்று கேட்டான். எல்லோரும் தலையசைத்தார்கள், மௌனமாக. விச்சுவின் ஏற்பாடு இதுதான்:—

முதலிலேயே குகைக்குள் புகுந்து அனுபவமுள்ள கோபுவுடன் ராமுவும் சேர்ந்துகொண்டு இருவரும் அந்த குகைக்குள் புகுந்து அங்கிருந்து பங்களா சமையலறைக்கு வர வழி இருக்கிறதா என்று ஆராயவேண்டியது. சரஸாவும், பட்டுவும் குகை வாசலில் காவல் இருக்கவேண்டியது. விச்சு மட்டும் தனியாக சமையலறைக்குப் போய் ஏதாவது ரகசிய அறை இருக்கிறதா என்ருே அல்லது யாராவது குகைக்குள்ளிருந்து வருகிருர்களா என்ருே பார்க்க வேண்டியது. சகுந்தலா எங்கும் போகவேண்டியதில்லை. ஆனல் விடிந்த பிறகும் குகைக்குப் போனவர்கள் திரும்பாவிடில் உடனே அப்பாவிடம் தங்கள் ஏற்பாட்டைச் சொல்லி தகுந்த நடவடிக்கை எடுக்கச் சொல்லவேண்டியது.

விச்சு சமிக்ஞை செய்து உத்தரவு கொடுத்ததும் பட்டு, கோபு, சரஸா, ராமு நால்வரும் கடற் கரையை நோக்கிப் பயணமானுர்கள். விச்சு சமையற்கட்டை நோக்கிப் பயணமானுன். (தொடரும்)



மணி பன்னிரண்டிருக்கும் போலிருக்கிறது. இந்த நேரத்தில் யமுனு வீட்டிலிருந்து என்ன செய்தி வந்திருக்கப் போகிறது?

"யார் நீங்க?" என்று கேட்டான் பாபு. வந்திருந்த பையன் எழுந்து நின்றுன்.

"நீங்கதானே பாபுங்கிறது?"

"ஆமாம்."

"பார்வதி அம்மா அனுப்பிச்சாங்க. நான் அவங்க வீட்டுக்கு எதித்த வீடு. .. இந்தக் கடுதாசைக் கொடுக்கச்சொன்ருங்க. , கையோட அழச்சுக்கிட்டும் வரச் சொன்னுங்க", என்று கடுதாசை நீட்டினுன் பையன். பாபு உறையைக் கிழித்தான். பென்சிலில் எழுதியிருந்தது கடிதம். விளக்குக்கருகில் பிரித்து வாசித்தான்.

"அன்புள்ள பாபுவுக்கு வணக்கம். இன்று மாலை ஏழு மணிக்கு ஊரில் என் அப்பா காலமாகிவிட்டதாகத் தந்தி வந்திருக்கிறது. உடனே புறப்பட்டு வரவும். ராத்திரியே ஊருக்குப் போகவேண்டியிருப்பதால் அதற்குத் தகுந்தாற்போல வரவும்.

—யமுனு."

" எப்ப தந்தி வந்தது?"

"பத்து பத்தரை மணி இருக்கும். அவசரத் தந்தி வந்தது. எங்களுக்குக்கூடத் தெரியாது. பார்வதியம்மா வந்து கதவை இடிச்சாங்க. இந்த மாதிரி தந்தி வந்திருக்கின்ற சேதியைச் சொன்னுங்க. எங்கப்பா என்னை உடனே புறப்பட்டு போகச்சொன்னுங்க. லெட்டர் எழுதித் தயாரா வச்சிருந்தாங்க. எடுத்துக்கிட்டு வந்தேன். நீங்க இல்லே. எப்ப வருவீர்களோ தெரியாதுன்னுங்க இவங்க. சரின்னு காத்திருந்தேன்."

"எதிர்த்த வீடுன்னு முனிசிபாலிட்டியிலே யாரோ வேலையா யிருக்காங்கன்னு சொன்னுங்களே. . ."

"இல்லீங்க. அவரு பக்கத்து வீடு. நாங்க அதுக்குக் கீழண்டை வீடு."

"ம் . . இப்ப ரயில்கூட இல்லியே. காலமேதானே ரயில்."

"டாக்ஸியாவது வச்சுக்கிட்டுப் போகலாங்கிருங்க."

"யாரு பாபு?" என்ருர் கைலாசம். "சொந்தக்காராளா?"

"சொந்தம் இல்லெ. தெரிஞ்சவா. தஞ்சாவூர்லெ முப்பது வருஷமாகத் தெரிஞ்சவா."

"என்ன சேதி, உடம்பு கிடம்பு சரிப்படலியா?"

"காலமாயிட்டுதாம்."

"யாரு?"

"இந்தக் கடுதாசு கொடுத்தனுப்பியிருக்காளே, அவ அப்பா."

"என்ன உடம்பாம்?"

"என்னன்னே தெரியலியே.."

"என்ன வயசாறது?"

"அறுபதுக்குள்ளதான் இருக்கும்."

"பாவம்,..ம்.. குறச்ச வயசில்லே. இருந்தாலும்.."

"என்னுங்க, அறுபது வயசு ஒரு வயசா?" என்றுன் வந்திருந்த பையன்.

"அது சரி.. அட நான் என்னதுக்குச் சொன்னேன்னு, இருபது முப்பதுன்னைப் போல அநியாயச் சாவில்லேன்னேன். தொண்ணூறு நூறு வயசு இருந்தா வாண்டாம்னு சொல்லப்போருேம்... இல்லே தொண்ணூறுவயசு இருக்கணும்னு ஆசைப் பட்டாத்தான் நடக்கப்போறதோ?.. அப்ப என்ன நீ போகணுமா பாபு இப்ப?"

"ஆமாம்"

"அப்ப கிளம்பு. யோசிச்சிண்டே நின்னு?.. எந்த ஊரு?"

"நந்தமங்கலம்னு.."

"என்னது?" என்று சரியாகக் காதில் விழாததுபோல் கேட்டார் கைலாசம்.

"நந்தமங்கலம்"

"தஞ்சாவூர் கிட்டன்னு அது?"

"ஆமாம்."

"இப்ப போறதுன்னு டாக்ஸி வச்சிண்டுதான் போகணும். எத்தனே மணக்குப் போச்சாம்?"

"ஏழு மணிக்கு."

"ஏழு மணியா! அப்படீன்னு நீங்க் போறதுக்குள்ளியும் தகனம் எல்லாம் ஆயிருக்குமோ என்னவோ! பிள்ளே இருக்கானு?"

"இருக்கார்."

"ஏழு மணக்குப் போயிட்டுதுன்னு எத்தனே நாழி போட்டு வச்சிருப்பா.. வச்சிருக்கிறதும் உண்டு. வக்ரிச்சுக்கிற ஊராயிருந்ததுன்னு என்ன பண்றது? சரி நீ கிளம்பு. நீ டாக்ஸியிலே எத்தி விட்டுட்டு திரும்பி வந்துடலாமோல்லியோ?"

"இல்லெ, நானும் போக வேண்டியிருக்கும்."

"இன்னிக்கித்தான் ஊருக்குப் போயிட்டு வந்தே. மறுபடியும் அலேச்சல்.என்ன செய்யறது?.. அதுவும் இது மாதிரி வந்தா வாண்டாம்னு இருக்க முடியுமா? மாப்பிள்ளே இங்கேதானே இருக்கார்?"

"இன்னும் கலியாணமே ஆகலே பெண்ணுக்கு."

★ தொடர் நாவல் ★

"கலியாணமமே ஆகலியா?"

"ஆமாம்."

"இஞ்ச யாராவது உறவுக்காராளாத்துக்கு வந்திருக்காளோ?"

"ஆமாம். நவராத்திரி, கும்பகோணம் கலகலன்னு இருக்குமேன்னு வந்தா."

"பாவம். கலகலன்னு வந்துட்டு, கண்ணுலே ஜலம் விட்டுண்டே திரும்ப வேண்டிருக்கு.. கஷ்டம். கலியாணம் வேற ஆகலேங்கறே.. மனுஷன் கலியாணத்தைப் பண்ணி வச்சிப்பிட்டுப் போயிருக்கலாம். அவ்வளவுதான் பிராப்தம். சரி கிளம்பு."

பாபு மாடிப் படியேறி அறையைத் திறந்து ஒரு வேஷ்டி, துண்டு, சட்டையை பையில் போட்டுக்கொண்டு, ஜன்னல் கதவைச் சாத்தப்போனபோது....யார் அது? அவள்தான். அடுத்த வீட்டு மொட்டை மாடியில், நிலவில் தோள்பட்டை பளபளக்க மேற்கே பார்த்துக்கொண்டு நின்றிருந்தாள். வெகு நேரமாக நிற்கிறாள் போலிருந்தது.

பாபு சற்று நின்றான். சல்லா போட்டது போல முழுவதையும் காட்டாத நிலவில் கூட அந்த செதுக்கின உடலின் கட்டும் உறுதியும் பளிச்சென்று தெரிந்தன. நந்தியாவட்டை இதழ்போல அந்த நைப்பும் வழவழப்பும் நிலவோடு நிலவாகப் பொலிந்தன. ஹ்ம்.., தலைமை குமாஸ்தா அரைக் கண்ணும், அரை வாயும் திறந்து உடலை மடித்து உள்ளங்கையில் தலை வைத்து, ஒருக்களித்து உறங்குகிறது போலிருக்கிறது. 'நிச்சயமாகத் தூங்கத்தான் வேண்டும்!' மொட்டை மாடிக்குப் போகலாமா?.,..கிழம் தூங்காமல் விழித்துக்கொண்டிருந்தால்? காற்று வாங்க மட்டும் அனுமதி கொடுத்து விட்டு, சாய்வு நாற்காலியில் படுத்தபடியே பார்த்துக்கொண்டிருக்கிறதோ என்னவோ?...நிலவின் முக்கால் இருட்டில் அதோ அறையில் ஏதோ வெள்ளையாகத் தெரிகிறது. சாய்வு நாற்காலியில் அது படுத்திருக்கிறாப்போல்தான் இருக்கிறது.

தலை மயிரின் படிவும், கன்னத்தின் ஒளியும், திரும்பும்போது மின்னுகின்றன. பாவம்!

"லைட் வேணுமா பாபு" என்று கீழிருந்து குரல் வந்தது.

"வாண்டாம்."

திடீரென்று அடுத்த வீட்டு உள்ளிருந்து வரும் குரலைக் கேட்டுத்தானோ என்னவோ, அவள் ஜன்னல் பக்கம் பார்த்தாள். உடனே தன்னுடைய உள் பக்கம் பார்த்துவிட்டு மறுபடியும், ஜன்னல் பக்கம் திரும்பிற்று பார்வை. வெளிச்சம் இருந்தால் அந்தக் கண்களைத்தான் பார்க்கிறோம் என்று தெரியும் அவளுக்கு.

"வேணும்னா விளக்கைக் கொண்டு வரேன்."

"வாண்டாம். கிளம்பியாச்சு."

ஜன்னலைச் சாத்தினான் பாபு.

சிரிப்பு வந்தது ராஜம் சொன்னதை நினைக்கும்போது. விசித்ரமான சந்தேகம். இவளைக் கண்டா? பாவம், நாட்டுப்புறம்! சூதும் வாதும் முளைக்காத, புல்லும் பூண்டும் மணக்கும் நாட்டுப்புறத்தில் வளர்ந்தவள். தாயார் தகப்பனார் கஷ்டம் சகிக்காமல், தலைமை குமாஸ்தாவிடம் கழுத்தை நீட்டி வந்துவிட்டது. ....சீதாராமன்கூட முழுவதும் சொல்லவில்லை. தலைமை குமாஸ்தாவைப்பற்றி பேசுவதற்குள் ஓடம் கரை தட்டிவிட்டது.

ராஜத்திற்கு எப்படி இந்தக் கோணல் நினைவு வந்தது என்றுதான் புரியவில்லை. பாபு கண்ணை இறுக மூடி, அவள் முகத்தையும் அடிகளையும் புருவங்களுக்கிடையே வைத்து வணங்கினான். "ராஜத்திற்காக நானே மன்னிப்புக் கேட்டு விடுகிறேன்" என்று அந்த புருவத்து வடிவிடம் இறைஞ்சினான். கதவை மெதுவாக சாத்திப் பையை எடுத்துக்கொண்டு, அறையைப் பூட்டிக் கொண்டு கீழே இறங்கினான்.

"விளக்கை எடுத்துண்டு போகப்படாதோ?" என்றாள் கைலாசத்தின் மனைவி நடையில் நின்று.

"பரவாயில்லே. நிலா இருக்கே. உள்ளே பளிச்சுனு தெரியறது. வரட்டுமா?"

"சரி."

பையனும் பாபுவும் தெருவில் நடந்தார்கள்.

"இன்னும் அரை மணி கழிச்சு நீங்க வந்திருந்தா நான் போயிருப்பேன்," என்றான் பையன்.

"ஏன்?"

"இவங்களை வந்து கேட்டேன். பாபுவா? அவர் வரது பகவானுக்குத்தான் தெரியும்னாரு. நீ சும்மா காத்திட்டிருக்கிறதிலே என்ன லாபம், சங்கதியைச் சொல்லு நான் சொல்லிப்பிடறேன்னு தட்டிக்கழிச்சுட்டாரு. நான் உட்காந்துகிட்டப்பறம்தான் லைட்டைக் கொண்ணாந்து, விடமாட்டான் போலிருக்கேன்னு அவரும் உக்காந்துகிட்டாரு."

"தூக்கக் கலக்கம்."

"நீங்க எங்க போயிருந்தீங்க? சினிமாக்குப் போயிருந்தீங்களா?"

"இல்லே. சும்மா கடலங்குடித் தெருவுக்குப் போயிருந்தேன்."

"நான் வந்த நேரத்துக்குப் புறப்பட்டிருந்தா, இத்தினி நாழி கார்லே பாதி தூரம் போயிருக்கலாம்."

பாபுவின் கண்ணில் சுப்ரமண்யத்தின் உடல் உயிரற்று மல்லாந்து கிடக்கும் தோற்றம் வந்து நின்றது.

பார்வதியின் முகத்தை சாயங்காலம் கண்கொண்டு பார்க்க முடியவில்லை. பறிகொடுத்தாற்போல பதறிக் கிடந்தது. அதே சமயம்தான் அவர் நந்தமங்கலத்தில் மரணாவஸ்தையில் கிடந்து துடித்திருக்கவேண்டும். அவர் உள்ளத்தின் ஏக்கம்தான் பார்வதியைத் தாக்கிக் கொண்டிருந்ததோ என்னவோ!

சுப்ரமண்யம் கொடுத்துவைத்தவர்தான். ஏகப்பட்ட சொத்து. அடக்கமும் அறிவுமாக ஒரு மனைவி. கணவனுக்கு விட்டுக்கொடுப்பதையே ஒரு பணியாகக் கருதுகிற மனைவி. பார்வதிக்கு அவள் விட்டுக்கொடுத்தது ஆச்சரியமான விஷயமில்லைதான். இப்படி ரோஷமில்லாமல் ஒரு பெண்பிள்ளை கணவனுக்கு விட்டுக்கொடுப்பது, அடிப்படையான மனித தர்மத்திற்குப் புறம்பாக இருக்கலாம். ஆனால் அவள் விட்டுக்கொடுத்தது என்னவோ உண்மை. முதல் முதலில் அசூயைப்பட்டிருக்கலாம். ஆனால் பார்வதியின் கம்பீர ஸ்வபாவமும், வடிவமும், அழகும் அவளைச் சாந்தப்படுத்திவிட்டன என்று அக்கா சொல்வதிலிருந்து தெரிகிறது. இவையே சாதாரணமாக பொறாமைக்கு இன்னும் தூபம் போட்டிருக்கலாம். பாலம்மாள் போன்ற சிலரைத் தவிர வேறு ஸ்திரீகளிடம் இதே காரணங்கள் ஆற்றாமையை வளர்த்திருக்கும். வளர்ப்பதுகூட இயற்கையாகவும் இருக்கலாம். பாலம்மாளின் சுபாவம் இதையெல்லாம் ஜீரணித்துவிட்டு உயர்ந்துவிட்டது.

பையன் மூச்சுவிடாமல் பேசிக் கொண்டு வந்தான். 'ம்ம்'. 'ஆமாம்' என்று அவன் சொன்னதை சரியாகக் காதில் வாங்காமல் பதில் சொல்லிக்கொண்டே நடந்தான் பாபு.

சுப்ரமண்யம் கொடுத்துவைத்தவர்தான். சொத்து, சாப்பாடு, பொழுது போக சீட்டாட்டம். காசு வைத்து ஆடமாட்டாராம். ஆனால் கலியாணம் என்று எங்காவது போனால், பெரிய ஜமாவோடு உட்கார்ந்து சவரன் வைத்து ஆடுவாராம். வேலை என்பது என்னவென்று தெரியாமல், முன்னோர்களும், பழங்காலமும், பிறப்பும் தந்த வரத்தால் வாழும் நிலச்சுவான்தார்களில் ஒருவர். உள்ளூர் நிலத்தைக் கவனித்துக்கொள்ள காரியஸ்தன். வேறு ஊர்களில் இருந்த நிலங்கள் குத்தகை, கணக்குப் புஸ்தகத்தைப் பார்ப்பதும், நெல் விற்ற பணத்தை வாங்கி வைத்துச் செலவழிப்பதும்தான் சுப்ரமண்யத்துக்கு வேலை. கோடை காலத்துக்குத் திருக் குத்தாலம், கோடைக்கானல், நீலகிரி இவற்றையும் வெள்ளைக்காரன் அல்லாத 'வெள்ளை' இந்தியர்கள் மாதிரி வருஷ ஒழுங்காகச் செய்யாவிட்டாலும் இரண்டு வருஷங்களுக்கு ஒரு தடவையாவது செய்துவிடுவார். குத்தாலத்துக்கு பாலம்மாள்

அமிர்தம் போன்ற

அனங்க பிரபாயாகுதி

அழகுள்ள வாலிபத்திற்கும் பிரகாசிக்கும் வன்மைக்கும் ஓர் ஊற்று. அது ரத்த சுத்தியும், விருத்தியும் அளிக்கிறது. சோர்வடைந்த நரம்புகளுக்கு ஊக்கமளித்து நேர்மையான மண வாழ்க்கையை அனுபவிக்கச் செய்யும் உத்தரவாதமுள்ள ஓர் சஞ்சீவி.

முழு கோர்ஸ் ரூ. 10. ½ கோர்ஸ் ரூ. 5.

மதன் மஞ்சரி பார்மஸி

ராம்வாடி, கல்பாதேவி ரோட், பம்பாய்-2

ஏஜண்டுகள்:— சென்னை: மேத்தா டிரேடிங் கார்ப்பொரேஷன். 52, பந்தர் தெரு; சேலம்: மாடர்ன் ஆயுர்வேதிக் ஸ்டோர்ஸ்; பெங்களூர்: சிடி மெடிகல் ஸ்டோர்ஸ், சிக்பேட்.

மற்றஇடங்களுக்கு ஏஜண்டுகள் தேவை

கூட வரவேண்டும் அடுத்த வருடம். இந்தப் பிரயாணத்தில் இரண்டு பேரை யும் சேர்த்து அழைத்துப்போவதில்லை யாம் அவர்.

"டாக்ஸிகூட வந்துட்டாப்பலே இருக்கே" என்றான் பையன், ஆனையடி திரும்பியதும். "வாசல்லெ கார் நிக்கு துங்க."

ஆமாம். வாசலில் கான்வாஸ் விதானம் போட்ட கார் ஒன்று நின் றிருந்தது.

துக்கம் விசாரித்துப் பழக்கமில்லை. போய்ப் பார்த்தவுடன் என்ன சொல்வது என்று புரியாமல் குழம்பிக்கொண்டே போனான் பாபு. வாசலில் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. திண்ணையில் இருவர் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந் தார்கள்.

"சார்தானா?" என்றார் ஒருவர்.

"ஏன் இத்தனை நாளி?" என்று பைய னைப் பார்த்துக் கேட்டார் மற்றவர். "அப்பவே போயிட்டியே."

"நான் சற்று முன்னாலேதான் வந் தேன்" என்று சொல்லிக்கொண்டே உள்ளே போனான் பாபு. மூன்றாவது பெண் குரல் ஒன்று கேட்டது.

கூடத்தில் உட்கார்ந்திருந்த பார்வதி, பாபுவைக் கண்டதும் ஒன்றும் சொல்லா மல், பாதி வாய்விட்டு அழத்தொடங்கி விட்டாள். யமுனாவின் அழுகை காதில் விழவில்லை.

"ஒரு வாரமாவே உடம்பு சரியில்லை யாம். போகணும் போகணும்னு சொல் லிக்கிட்டிருந்தாங்களாம். இப்படி தலை கண்டாங்க?" என்றாள் அந்த மூன்றாவது ஸ்திரீ பாபுவிடம்.

"இன்னிக்கு சாயங்காலம்கூட போக ணும்னு சொன்னாங்க. . .அப்படி கவலைக் கிடமாயில்லேன்னு எழுதியிருந்தார் இல்லே உங்கண்ணா, ஏன் யமுனா?" என்று கேட்டான் பாபு.

"அவன் எழுதினதைப் பார்த்தா தைரியமாத்தான் இருந்தது. அப்பறம் திடீர்னு மோசமாயிட்டாப் போலிருக்கு."

இருவர் முகமும் அழுது கலங்கியிருந் தன. கூந்தலை இருவரும் முதுகில் புரள, நுனி தெரிய கொளகொளவென்று முடிந் திருந்தார்கள். அழும்போதுகூட இவர் கள் எவ்வளவு அழகாக இருக்கிறார்கள்! கண்களின் கீழ் கண்ணீர் வடிந்து, வற் றிய பளபளப்பு மங்கலாகத் தேங்கி யிருந்தது. முழங்காலைக் கட்டி தாணில் சாய்ந்து உட்கார்ந்திருந்தாள் யமுனா.

பார்வதியை எந்த வார்த்தைகளைச் சொல்லிச் சமாதானம் செய்வது என்று புரியவில்லை பாபுவுக்கு. "சும்மா அழுது அழுது என்ன செய்கிறது? நடந்தது நடந்துவிட்டது" என்று சொல்லவந்த வாயை மூடிக்கொண்டான். பிரிவில் துடிக்கிறவர்களுக்கு இதுவா ஆறுதல்!

"டாக்ஸி யார் கொண்டு வந்தா?" என்று கேட்டான் கடைசியில்.

"இவங்க வீட்டுக்காரங்கதான்" என்று வந்திருந்த ஸ்திரீயைப் பார்த்தாள் யமுனா. "அவங்க இல்லாட்டா ரொம்ப சிரமமாயிருக்கும்."

அசல்னா இதுக்குக்கூடவா சிரமம்? ரொம்ப நல்லாயிருக்கே நீங்க சொல் றது."

"அண்டை அசல்தான் கவனிப்பாங்க. உறவுகாரங்களா கவனிக்கப்போறாங்க?" என்றாள் யமுனா.

"புறப்படலாமா? . . .எழுந்திருங் கோம்மா. நேரமாச்சு" என்றான் பாபு.

"தந்தி வந்தது. அப்ப உக்காந்தவங்க தான். சாப்பிடக்கூட இல்லே. இவங்க ளுக்கு சாதம் போட்டுப்பிட்டு, அப்பறம் உக்காரப்போனாங்க. தந்தி வந்திடிச்சு. இவங்ககூட மோர் சாதம்கூட சாப்பிட லியாம்."

"கொஞ்சம் ஏதாவது சாப்பிட்டுட்டுக் கிளம்புங்களேன். . .பசியோட எத்தனை நாழி கடத்த முடியும்."

பார்வதி பிடிவாதமாக மறுத்துவிட் டாள்.

வீட்டைப் பூட்டிக்கொண்டு கிளம்ப கால் மணி ஆயிற்று.

பார்வதி ஏறியதும் யமுனாவும் ஏறி னாள். முன் சீட்டில் ட்ரைவருக்கு உத விக்கு வந்திருந்த ஆள் ஒருவர் உட் காரவே, பாபு தயங்கினான்.

"நீங்க பின்னாடி உட்காருங்க சார்."

"பாபு, இங்கேயே வந்துடு."

"அங்கியா? . ."

"பரவாயில்லே. வா."

பாபு கூனிக் குறுகி உட்கார்ந்துகொண் டான்.

ஃ ஃ ஃ

பழைய கார்தான். பட படவென்று மண்காப்பு படபடக்க, மோட்டார் சைகிள் சத்தத்துடன் போய்க் கொண் டிருந்தது.

"இப்படியே, கால், கை, உடம்பெல்லாம் 'ஜாம்ப் காட்' மாதிரி எத்தனை நாழி மடக் கிக்கிட்டு வரப்போறே?" என்று கேட் டாள் யமுனா. கார் திருவலஞ்சுழி தாண்டி யிருந்தது அப்போது.

"சரியா உட்காரு."

பாபு சரியாக உட்கார்ந்துகொண் டான். அப்போதும் மனம் கூனிக் குறு கிற்று. உடல் லேசாக நடுங்கிற்று. மனித உடல் வடிவின் லட்சியமான இவள் மேல் பட்டுக்கொண்டு உட்கார்வது அபசாரம்



அவள் முகம் பூஜையைப் பெற்றுக் கொண்டு நிறைந்திருக்கிறது. இவள் சாதாரண மனித ஸ்திரீ அல்ல. மனிதர்களிடத்தில் இல்லாத ஒரு தன்மை இவள் உடலிலும் பேச்சிலும் எண்ணத்திலும் இருந்து கொண்டேதானிருக்கிறது. இவள் மேலே படும்போது ஏதோ தவறிழைக்கிற மாதிரி உள்ளம் வெட்டிச் சிலுப்புகிறது.

அப்பாவும் போய்விட்டார். இவளை யார் காக்கப்போகிறார்கள்?

யமுனா ஒன்றும் பேசவில்லை. பார்வதி சற்றைக்கொருதரம் நினைத்து நினைத்து 'அம்மா' என்று வாய்விட்டு அரற்றி வந்தாள். "நான் என்ன பாபு செய்வேன். வயித்துலே அடிச்சிட்டுப் போயிட்டாங்களே" என்று மூன்று நாலு தடவை புலம்பிவிட்டாள்.

"பேசாம வாம்மா" என்றாள் யமுனா.

கார் வாழைப்பழக் கடைச்சாலையைத் தாண்டிற்று.

"பாபநாசம் வரது. வீட்டிலேவாணு இறங்கிப் பார்த்துட்டுப் போகலாமா?" என்றான் பாபு.

"வாண்டாம் பாபு" என்றாள் பார்வதி.

"இறங்கி ஏதாவது தண்ணியாவது சாப்பிட்டு வரலாமே, சாப்பிடவே இல்லியாமே நீங்க?"

"வாண்டாம். நல்லா தூங்கிக்கிட்டிருப்பாங்க. அவலம் மாதிரி இந்த சேதியைச் சொல்லிட்டு இந்த மூஞ்சியைப் போய்க் காமிக்கணுமா?. வாண்டாம். நேரே போயிடுவோம்."

"நேரவே போயிடுவோம் பாபு" என்றாள் யமுனாவும்.

"வித்யாசமா நெனச்சுக்கற மனுஷாளா அங்கே?"

"நான் அப்படிச் சொல்லலே பாபு. உங்க அக்கா சேதியைக் கேட்டுதுன்னா புலம்பித் தீத்துபிடும். அதுக்கு உலகத்

.. இப்ப வாண்டாம் சொன்னதைக்கேளு"

"சரி...அப்புறம் உங்க சௌகரியம்."

அப்பாவைப் பார்த்து விட்டுப் போகலாம் இவர்கள். தெம்பாக நாலு வார்த்தை சொல்லி நெஞ்சின் ரணங்களை ஆற்றும் குரல் அது. பிறர் கஷ்டங்களைப் புரிந்து அந்தந்த மனங்களுக்கு ஏற்ப, இதமாகச் சொல்லித் தேற்றும் அனுபவமும் அனுதாபமும் உள்ளவர் அவர். பார்வதியோ பிடிவாதமாக மறுக்கிறாள்.

"நீ ஒண்ணும் நெனச்சுக்காதே பாபு. அம்மா இஷ்டம்போல விட்டு விடு" என்று யமுனா கடைசி முறையாகச் சொல்லி விட்டாள்.

பாபநாசத்தைக் கடந்து போகும்போது அவனுக்கு இருப்பாக இருக்கவில்லை. நம் ஊர் வழியாக, நம் வீட்டில் இறங்காமலேயே கடந்துபோகிறோம்! வாசல் திண்ணையில் அப்பா படுத்து உறங்கிக் கொண்டிருப்பார். அல்லது கிலி கிலி என்று சிறு உத்ராட்ச மாலையை விரலில் கடத்திக் கொண்டிருப்பார். நாம் ஐம்பது கெஜ தூரத்தில் போகிறோம் என்று அவருக்குத் தெரியுமா? அம்மாவும் அக்காவும் பாபு பாபநாசம் வழியாகப் போவதாக தூக்கத்தில் கனவு கண்டு கொண்டிருப்பார்களா?

"நீ சொல்றாப்போல இறங்கிப்போகலாம். ஆனா இந்த சமயத்திலே நேரே போக வேண்டிய இடம்தான் மனசிலே

நிக்கிது. அங்க என்ன செஞ்சிருக்காங்களோ? நாம நடுவிலே இறங்கி இறங்கி நேரத்தைப் போக்கறதிலே என்ன லாபம்?" என்று அவன் முகத்தைப் பார்த்துக்கொண்டிருந்த யமுனா சொன்னாள்.

"அதனால் என்ன இப்ப? பாதகமில்லை" என்று பாபு, லட்சக்கால் மண்டபம்போல நின்ற ராஜகிரி தென்னந் தோப்புகளைப் பார்த்துக்கொண்டே சொன்னான்.

னாற்போல மின்னிக்கொண்டிருந்தன. மரங்கள் மெதுவாக அசைந்தன. குடிசை வாசல்களில் யார் யாரோ படுத்து உறங்கிக்கொண்டிருந்தார்கள். கால் தூக்கங்கள், கார் சத்தத்தைக் கேட்டு விழித்து, கார் விளக்கின் கூச்சத்தில் கண்ணை இறுக்கிக்கொண்டார்கள். தஞ்சாவூருக்குப் போகும் போக்கு வண்டிகளின் மாடுகள், தலையை சாவதானமாக ஆட்டிக் கொண்டு தூங்கி வழிந்து ஊர்ந்துகொண்டிருந்தன. தூங்குகிற வண்டிக்காரர்களை எழுப்பாமல், சிரமம் கொடுக்காமல், கார் சத்தத்தைக் கேட்டு இடது பக்கமாக ஒதுங்கிப் போய்க்கொண்டிருந்தன. நிலவில் வெண்ணெய் மாதிரி, ஆனால் உறுதி பெற்ற வலுவுடனும், வனப்புடனும், சாலையில் போகிற காரைக்கூட லட்சியம் செய்யாமல், மூச்சு முட்டும் சுமைகளை இழுத்து நடந்தன அந்த மாடுகள். தூரத்தில் தூங்கி வழிகிறதுபோல் நடந்தனவே தவிர, அருகில் பார்க்கும்போது தீர்மானமாக, திடமாகக் காலை வைத்து நடப்பது தெரிந்தது. எதிரே வரும் வண்டி மாடுகளின் கண்கள் பெரியனவாக வெள்ளைப் புலத்தில் கன்னங்கறேலென்று எடுப்பாக மின்னின. மாடுகளுக்கு எவ்வளவு பெரிய கண்கள்!

பாபு உள்ளே யமுனாவின்பக்கமோ,பார்வதியின் பக்கமோ திரும்பவில்லை. பாய்ந்து கடக்கும் சாலை மரங்களையும் வண்டிகளையும் வயல்களையும் முன்னே ஓடும் சந்திரனையும் மினுங்காது விழிக்கும் ஒரு விண் மீனையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தான். பார்வதி மற்ற ஸ்திரீகளைப்போல விதவையாகி விட்டாள் என்ற உண்மையை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. விதவையாயிருப்பது ஏதோ குறை, ஏதோ அசுபம் மாதிரி எண்ணத்தில் வளர்ந்த உள்ளத்திற்கு பார்வதியும் இந்தக் குறைக்கு பலியாகக் கூடிய சாதாரண மனுஷி என்று சமாதானப்படுத்திக்கொள்ள முடியத்தான் இல்லை. இவ்வளவு அங்க அழகும், நிறைவும் உள்ளவள் இந்த மாதிரி ஒதுக்கிவைத்திருக்கிற போன்ற நிலைக்கு ஆளாவது சாத்யமா என்பதும் புரியவில்லை. . .விதவையாவதும் ஒரு சாதாரண நிகழ்ச்சிதான். இதை அமங்கலம் என்று நினைப்பது மனித இயற்கை அறிவுதான். கூடிவாழ்கிற மனிதன் கட்டி எழுப்பிய உணர்ச்சிதான். . .ஆனால் மனம் என்னமோ இதை வாங்க மறுக்கிறது. ஆண்டு ஆண்டாக, காலம் காலமாக இது அசுபம் என்று யாரோ கொட்டிக் கொட்டி வைத்திருக்கிறார்கள். செய்தியைக் கேட்டவுடனே, தேவைக்கு மீறிப் பரிதாபமும் இரக்கமும் படக் கூடிய நிலை ரத்தத்தில் ஊறிவிட்டது. மனுஷ்ய இயற்கைபோல மாறிவிட்டது... இருந்தாலும் இந்த அழகோடும் நிறைவோடும் இந்தத் துயரமும் பங்கமும் ஒட்டாத விஷயங்கள் என்றுதான் தோன்றுகிறது.

சுப்ரமண்யம் அதிர்ஷ்டசாலிதான். பார்வதியைப் பார்த்தது, விரும்பியது, அவள் ஏற்றுக்கொண்டது – எல்லாம் அவருக்கு அதிர்ஷ்டம்தான். இப்போது

அவர் தனியாகப்போவது அவருடைய துரதிர்ஷ்டம். இவளை இனிமேல் எங்கு பார்க்கப்போகிறார் அவர்?

ஃ ஃ ஃ

சாலையிலிருந்து வாய்க்கால் மதகில் திரும்பி நந்தமங்கலம் தெருவில் கார் நுழைந்தபோது ஊர் அடங்கிக்கிடந்தது. கார் சத்தத்தைக் கேட்டு திடீரென்று அரண்டுபோன நாய் துள்ளி ஓடி தூரத்தில் போய் நின்றுகொண்டு வள் வள் என்று ஊரே எழுந்துவிடும்படி குரைத்தது. பெரிய தொண்டை அதற்கு. இவ்வளவு கோழைகளுக்கு ஏன் இவ்வளவு பெரிய தொண்டை என்றுதான் புரியவில்லை. இந்தச் சத்தத்தைக் கேட்டு வேறு தெருவிலிருந்து ஒரு நாய் முறை வைத்தது. திண்ணைக்குத் திண்ணை சிறியதும் பெரியதுமாகக் குறட்டைகள்தான் கேட்டன. ஒரு கீரிப் பிள்ளை இந்தச் சாரியிலிருந்து அந்தச் சாரிக்கு ஓடிற்று.

"அதோ பந்தல் போட்டிருக்கே... அந்த வீடுதான் பார்" என்றாள் யமுனா.

அறிவிப்பு

கீழ்க்கண்டவிடங்களில் உள்ள எமது ஏஜண்டுகளிடம் சந்தாதாரர்கள் தங்கள் சந்தாக்களைச் செலுத்தி பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

பம்பாய்

ஸ்ரீ பி. எஸ். கதிரேசன்,
நியூஸ் ஏஜண்டு,
மதுங்கா மான்ஷன், மதுங்கா.
பம்பாய்-19.

பூனா

ஸ்ரீ N. S. குல்கர்னி,
நியூஸ் ஏஜண்டு,
307, சோமவார்பேட்டை,
பூனா

சர்குலேஷன் மானேஜர்,
சுதேசமித்திரன்,
மவுண்ட்ரோட், மதராஸ்-2.

பந்தல் போட்ட பெரிய வீட்டின் முன் கார் நின்றது.

பெரிய வீடு. உயரமான வாசலில் கீழே ஒரு திண்ணை; மேலே ஒரு திண்ணை. அகலத்தில் ஒவ்வொன்றும் ஒன்றரை ஆள் நீளம். வாசல் கதவுக்கு முன்னாலிருந்த இந்த பாகமே ஒரு வீடு பெரிது இருந்தது. மேலே இருந்த ஓட்டுத் திண்ணையில் ஒரு விளக்கு. ஒரு ஆள் ஜமுக்காளத்தைப் படபடவென்று தட்டிப்போட்டு தலைமாட்டில் தலையணையைப் போட்டவன், கார் நின்றதைப் பார்த்து விளக்கை எடுத்துக் கீழே வைத்தான்.

"அம்மாவா?" என்றான்.

அதற்குள் யமுனாவின் அண்ணா உள்ளே இருந்து வந்துவிட்டார். முழுகின ஈரம் காய குடுமியை நுனி முடிப்பு முடிந்திருந்தார். காதில் பளபளவென்று ஒற்றைக்கல் வைரக் கடுக்கன். தலையில் பின்னோடிய மயிருக்கு விளிம்பு கட்டிய கன்னுக்குடுமி. மொத்தமாக இல்லாவிட்டாலும் இரட்டை நாடி என்று சொல்லவேண்டிய உடம்புதான்.

வாசலில் ஏறியதும் ஜில்லென்றிருந்தது தரை. திண்ணையில் ஈரம் காய்ந்ததும் காயாததுமாகச் சுட்டி சுட்டியாக இருந்தது. உடலைக் கொண்டுபோய் அடக்கம் எல்லாம் செய்துவிட்டார்கள் என்று தோன்றிற்று.

யமுனாவும், பார்வதியும் உள்ளே போனார்கள். பாபு வாசலிலேயே அவருக்குப் பக்கத்தில் மேல் திண்ணை மீது உட்கார்ந்து கொண்டான். அழுகைச் சத்தம் உள்ளிருந்து கேட்டது.

"யார் நீங்க, தெரியலியே" என்றார் அவர்.

"நான் வைத்தி மாமா பிள்ளை."

"அட, அடையாளமே தெரியலியே. நாலஞ்சு வருஷத்துக்கு முன்னாடி பார்த்தது."

"ஆமாம்."

"கும்பகோணத்திலே வாசிக்கிறது நீங்கதானே."

"ஆமாம்."

"உங்களுக்கு எப்படி சமாசாரம் தெரியும்?"

"ராத்திரி இவாவீட்டு எதிர்த்த வீட்டுப் பையன் கிட்ட சொல்லியனுப்பிச்சா."

"தந்தி எப்ப கிடைச்சுதாம்?"

"பத்து பத்தரை மணி இருக்கும் போலிருக்கு."

"பத்து மணிக்கா! நான் எக்ஸ்பிரஸிலேன்னா கொடுத்தேன்."

"என்னமோ! எனக்குப் பன்னிரண்டு மணிதான் சமாசாரம் வந்தது. உடனே புறப்படணும்னு – துணைக்கு யாருமில்லேன்னு சொல்லியனுப்பிச்சா. உடனே ஒரு டாக்ஸி எடுத்திண்டு வந்தோம்."

"பத்து மணி வரையில் பாத்தது. வரலை. சாயங்காலம் 6 மணிக்கே ஆயிடுத்து. ஊர்லே எல்லோரும் பட்டினி. ஏதாவது ரொம்ப நாழியா சுவாசம் கீசம் வந்து எதிர்பார்த்திருந்தாலாவது எல்லாரும் ஜாக்ரதையா இருந்திருப்பா. அஞ்சரை மணி வரையில் சாதாரணமாத்தான் இருந்தார். தஞ்சாவூரிலேர்ந்து டாக்டர் வந்திருந்தார். ஒரு க்ளூகோஸ் இன்ஜக்ஷனைப் போட்டு பின்பு கவலையில்லேன்னு சொல்லிட்டுப்போனார். அவர் போய் இருபது நிமிஷத்துக்கெல்லாம் குடிக்க ஜலம் கொண்டான்னாராம். நான்கூட அப்ப இல்லே. டாக்டரை அனுப்பிச்சுட்டு கிழக்கே வாழைக் கொல்லைப் பக்கம் போயிருந்தேன். தஞ்சாவூர் வியாபாரி ஒருத்தன் இலைக்கட்டு வாங்க வந்திருந்தான். என்ன சேதி பாக்கலாம்னு போனேன். பத்து நிமிஷத்துக்கெல்லாம் ஆள்வந்து சொல்லிப்பிட்டான். ஜலம் கொண்டுவான்னாராம். அம்மா உள்ளேபோய் எடுத்துண்டு வந்து பாத்தா, தலை தொங்கலிட்டுப்பிட்டுது. ஆறு மணி அடிக்கப்போற சமயம். உடனே தந்தி கொடுக்கச்சொன்னேன். சைகிளைக் கொடுத்து அனுப்பிச்சேன். ஆறரை மணிக்குக் கிடைச்சாலும் உடனே புறப்பட்டு வந்தா ஒன்பது மணி பத்து மணிக்குள் இவா வந்துடுவான்னு நெனச்சேன். பத்தாச்சு வரலே. ஊரிலே குஞ்சு குழந்தைகள்ளாம் பட்டினி. டவுனா இருந்தா இதெல்லாம் பாக்கமாட்டா. இதுவோ குக்ராமம். ப்ரேதம் கிடக்கறபோது சாப்பிடுவாளோ? சரிதான்னு உடனே ஏற்பாடெல்லாம் ஆரமிச்சுப்பிட்டேன். பன்னண்டரை மணிக்குத்தான் முடிஞ்சு திரும்பி வந்தோம்."

பாபு பேசவில்லை. கோபம் கோபமாக வந்தது அவனுக்கு. அவர் குரல் சாதாரணமாக, நடந்ததைச் சொல்வதுபோல் இல்லை. சற்று ஆர்வம், தயக்கம், எதிராளி நம்பவேண்டும் என்ற கவலை எல்லாம் தொனித்துக்கொண்டிருந்தன. இந்த மனிதன், காலையில்தான் நடக்கவேண்டும் என்று தீர்மானமாகச் சொன்னால் ஊரார் என்ன செய்ய முடியும்? வேண்டாம் என்றா சொல்லப்போகிறார்கள்? குழந்தைகள் பட்டினி கிடக்குமாம்! குழந்தைகளை பசிக்கப் பசிக்கவா விட்டுவிடுவார்கள்? பெரியவர்களே பத்து மணி வரையில் நிஜப் பட்டினியாகவா இருந்திருப்பார்கள்?.... பார்வதியின் உணர்ச்சிகளைப்பற்றி இவர் நினைத்துப் பார்த்திருந்தால்.... பார்த்தது மாதிரிதான் பேசுகிறார். இந்தத் தயக்கமும் அதிகப்படியான ஆர்வமும் முக்கால் உண்மையை முழு உண்மையாகச் சொல்லவைக்கிறதற்குத்தான்.

உள்ளே ஓலமாகக் கேட்டது. இரு குரல்கள் அடக்கியும் விட்டும் அழுதுகொண்டிருந்தன. எங்கேயாவது எழுந்துபோய் விட்டால் தேவலை போலிருந்தது அவனுக்கு. அழுகையைக் கேட்டுக்கொண்டு உட்கார தெம்பில்லை. உடம்பைப் போட்டு வைத்திருந்தால் இந்த மாதிரி அழுகையைக் கேட்காமலிருந்திருக்கலாமே என்றுகூடத் தோன்றிற்று.

"பத்து மணி வரையில் காத்திருந்தவா இன்னும் சில மணி நேரம் காத்திருந்திருக்கலாம்" என்றான், தயங்கிய குரலில்.

"பொட்டல்லெ தனி வீடா இருந்தாத்தான் முடியும்" என்றார் அவர். பாபுவுக்கு முகத்தில் அறைந்தாற்போலிருந்தது. சற்று பயந்துகொண்டேதான் சொன்னான் அவனும். எதிராளியைத் தாரான



மாகப் பேசிக்கொள்ள விடக்கூடிய முகம் இல்லே அது. இயற்கையாலேயே முகத்தில் ஒரு கடுப்பு; கண்ணில் ஒரு அலட்சியம். துடுக்குத்தனமாக ஏதாவது சொல்லுவேன் என்று காத்துக்கொண்டிருக்கிற கண். அதையும் மீறி பாபுவை வருத்தமும் கோபமும் சொல்லத் தூண்டின. பதில் துடுக்கென்று வந்ததும் அடங்கி விட்டான்.

"மத்தியானம் மூணு மணி இரண்டு மணியா? ராத்திரி வேளேயா? அஸ்தமன வேளே. அதுவும் சௌகரியமாறதுன்னு நெனச்சுண்டிருக்கிறபோது திடும்னு நடந்துட்டுது, மனுஷா வரவேண்டியது தான். அதுக்காக ஊரைப் பட்டினி போடறதா? பகைச்சுக்கறதா?.... உடம்பு சரியாயில்லேன்னு லெட்டர் போட்டிருந்தேனே. அப்ப வந்து பாக்கப்படாதா?... எரிஞ்சு சாம்பலானப்பறம்தான் வருவேன்னு உட்காந்திருந்தா அதுக்கு யார் பாணே?"

"வராதத்தான் சொல்லிண்டிருந்தாளாம். நீங்க கவலேயில்லேன்னு எழுதியிருந்தேளாம்!"

"கவலேயில்லேன்னு வந்துகூட பாக்க வாண்டாம்னு அர்த்தமா? கவலேக்கிடமாயிருந்தாத்தான் வந்து பாக்கணுமா?"

மேலே பேச்சு கொடுக்க கொடுக்க, தான் செய்தது நியாயம் என்று அவர் சாதித்து விடுவார்போலிருந்தது.

"எங்களே அனுப்பிச்சிடறீங்களா?" ன்னு ஆளோடியில் வந்து நின்றான் டாக்ஸிக்காரன்.

"காலமே இருந்து அழச்சிண்டு போயிடேன்" என்றார் அவர்.

"காலமே எப்ப புறப்படுவாங்க?"

"ஆறு மணிக்குப் புறப்படுவாங்க."

"இப்ப மணி என்ன இருக்கும்."

டாக்ஸிக்காரன் மணிக்கட்டை ஒட்டுத் திண்ணேயருகில் வெளிச்சத்தில் பிடித்து "ரண்டு இருபதுங்க" என்றான்.

"இன்னும் மூணு மணி நேரம்தானே. நீங்க எங்க படுக்கிறீங்க? இப்படியே திண்ணேயிலே ஒரு ஓரமாப் படுத்திருங்கோ."

"இல்லீங்க. வண்டியிலே படுத்திடறோம்" என்று கீழே இறங்கினன்.

"நீங்களும் படுத்துக்கிறேளா? காளீ!" என்று, டாக்ஸியருகில் நின்று அதன் முன் பின் புறங்களேப் பார்த்துக்கொண்டிருந்த ஆளேக் கூப்பிட்டார் அவர்.

"எங்க."

"ஐயாவுக்கு ஒரு ஜமுக்காளமும் தலாணியும் கொண்டு போடு.... ஜலம் கிலம் சாப்பிடறேளா?"

"வாண்டாம், ஸார்."

"காளீ, நீ வூட்டுக்குப் போவாண்டாம். இங்கியே படுத்துக்க" என்ற உத்தரவு போட்டு, மடியில் செருகியிருந்த பொட்டணத்தை எடுத்துப் பிரித்து, ஒரு கை புகையிலேயை எடுத்துப் பிடித்து வாயில் அதக்கிக்கொண்டு "தூங்குங்கள்" என்று சொல்லிவிட்டு உள்ளே நகர்ந்தார் அவர்.

"நீங்க படுத்துக்கலியா?"

"இதோ....நானும் இங்கதான் படுத்துக்கப்போறேன்" என்று உள்ளே போய் விட்டார் அவர்.

வெறும் புகையிலேயை மட்டும் வாயில் அதக்கிக்கொண்டு போகிறார். அப்பா செத்த துக்கம் கொண்டாடுவதற்காக வெற்றிலேயை நிறுத்தியிருக்கிறார் போலிருக்கிறது. புகையிலேயை நிறுத்த முடியாது என்றுதான் தோன்றுகிறது. அதற்கு மேல் துக்கம் கொண்டாடவும் அவர் தயார் இல்லே. பேச்சும் சாவும் அப்பாவைக்கொண்டு அடக்கம் செய்துவிட்டு வந்ததைவிட, இடத்தை அடைத்துக் கொண்டிருந்த ஏதோ பழைய சாமானே விற்றுவிட்டார்போல்தான் இருந்தன.

கடியாரத்தை யமுனு வீட்டிலிருந்து கொண்டுபோனவர் இவர்தான். இனிமேல் எதையெல்லாம் தூக்கிக்கொண்டு போகப் போகிறரோ. மல்லாந்து படுத்திருந்த பாபுவுக்குத் தூக்கம் வரவில்லே.

(தொடரும்)

பலே டிரைவர்!

டாக்ஸியில் ஒரு நாள் ஏறிச் சென்ற வின்ஸ்டன் சர்ச்சில், காமன்ஸ் சபைக்கு எதிரில் இறங்கிக்கொண்டு, டிரைவரைப் பார்த்து, "நான் இன்னும் ஒரு மணி சவகாசம் இவ்விடம் இருப்பேன். எனக்காகக் காத்திரு" என்று கூறினர்.

"முடியாதுங்க, நான் வீட்டுக்குப் போய் சர்ச்சில் சொல்லுவதை ரேடியோவில் கேட்க வேண்டும்" என்றான் டிரைவர்.

உடனே சந்தோஷமடைந்த சர்ச்சில், அவனுக்கு வழக்கத்துக்கு மாருக அதிக "பக்ஷீஸ்" கொடுத்தார். அதிக சில்லறையைப் பெற்ற டிரைவர், உடனே அவரைப் பார்த்து, "நான் இங்கேயே இருக்கிறேன், சர்ச்சில் எப்படி வேண்டுமானலும் போகட்டும்" என்றான்.

அடிக்கத் தெரியாதவர்!

எஸ். விஜயராகவன்



அன்று ஆபீஸிலிருந்து திரும்பி வீட்டிற்குள் நுழைகையில், வழக்கம்போல் முறுவலுடன் முகமன் கூறுவதற்கு என் மனைவி ஹேமா முன் வாசலில் நிற்கக் காணோம்; அதோடு என் ஏழு வயசு 'இளவரசு' மாதுவும், "அப்பா வந்துட்டார்!" என்று கூவிக்கொண்டே, என் கையிலிருந்த பையைப் பறித்துச் சோதனை போடவும் வரவில்லை!

வியப்புடன் கூடத்தை அடைகையில், மாது கட்டிலில் உடம்பைப் போர்த்துக் கொண்டு படுத்திருந்தான். அதே சமயம் அடுக்களையிலிருந்து வந்த ஹேமா, "சட்டையைக் கழட்டவேண்டாம்! காபி குடித்துவிட்டு, நேராகப் போய், உங்கள் நண்பர், வாத்தியார் வாதபுரியைப் பார்த்துவிட்டு வாருங்கள்!" என்று கடுமையாக உத்தரவிட்டாள்.

ஒரு கணம் அயர்ந்து நின்ற நான், "எதற்கு...?" என்றேன், சாவதானமாக.

"எதற்கா...? போய், அவர் சட்டைக் காலரைப் பிடித்துக் கொண்டு, 'நீ என்ன மனிதனா, மிருகமா?' என்று கேளுங்கள்; அத்துடன் 'பச்சைக் குழந்தையை இப்படி அடித்திருக்கிறாயே, 'பிள்ளை இல்லை' என்று கதறும் உனக்குக் குழந்தை எப்படிப் பிறக்கும்' என்றும் கேளுங்கள்!"

பூடகமான இப் பேச்சோடு உள்ளே விரைந்த ஹேமாவின் கண்கள் கோபத்தால் சிவந்து, குரூரத்தை உமிழ்ந்தன. எனக்கு விஷயம் விளங்கிவிட்டது; மாதுவை வகுப்பில் வாதபுரி அடித்திருக்கிறான்! உடனே, உறங்கும் மாதுவிடம் சென்று உடம்பைத் தொட்டுப் பார்த்தேன். ஜுரமில்லை. கன்னம் மட்டும் சற்று வீங்கிச் சிவந்திருந்தது. உறங்கும் நிலையிலும், விட்டு விட்டுத் தேம்பிக்கொண்டிருந்தான், குழந்தை!

"பாவம்; ஏன்தான் குழந்தைகள் இப்படி விஷமம் செய்து உதைபடுகின்றதோ?" என்று கூறுவதற்குள், ஹேமா காபி தம்ளருடன் மீண்டும் அங்கே வந்தாள். அவளது முகச் சிவப்பு இன்னமும் மாறவில்லை.

"என்னதான் விஷமம் செய்யட்டுமே! அடிப்பதற்கு ஒரு அளவு இல்லையா...?" எனும்போதே, அவள் குரல் விசும்பலாக மாறியது. பாவம், பெற்ற மனம் பொருமுகிறது!

இந்நிலையில் அவளுடன் வாதாடி, பள்ளிச் சிறுவர்களை ஆசிரியர் அடிப்பது சகஜம் என்று சமாதானம் செய்ய முடியுமா? அவள் விருப்பப்படி வெளியே செல்வதுதான் வழி; வாதபுரியைக் காணாமலேகூடத் திரும்பி வந்து, கண்டு எச்சரித்ததாகச் சொன்னால்தான் அவள் திருப்தியடைவாள்! எனவே, காபி குடித்ததும் வெளியே புறப்பட்டேன்.

'பனகல் பார்க்'கின் ஓரமாகத் தெருவில் நடக்கையில், வாதபுரியே எதிரில் வரக் கண்டேன். வாதபுரீசுவரன் எனது பால்ய நண்பன்; நான் ஆபீஸ் வேலையில் நுழைகையில், அவன் விதி அவனை ஆசிரியனாக்கியது. வருமானம் குறைவுதான். ஆனால், அவனுக்குப் பிள்ளைப் பேறும் இல்லை. அதைத்தான் சற்று முன் ஹேமா அப்படிக் குத்திக் காட்டினாள்!

ஏதோ சிந்தித்தவண்ணம் வந்த அவனைப் பார்த்ததும், "வாதபுரி!" என்று விளித்தேன். நிமிர்ந்து நோக்கிய அவன் முகம் மலர்ந்தது. "எதிர்ப்படுபவனைக் கூடக் கவனியாது என்ன யோசனை, வாதபுரி? எங்கே போகிறாய்?" என்று மேலும் வினவினேன்.

"மனசு ஒன்றும் சரியில்லை; 'பார்க்'குப் பக்கம் கிளம்பினேன். வாயேன்... உட்கார்ந்து பேசலாம்."

இருவரும் தோட்டத்திற்குள் நுழைந்து ஓரமாக ஒரு பெஞ்சியில் அமர்ந்தோம். உடனே, "உனக்கு என்ன வந்து

கம்?" என்றேன்.

"எனக்கு ஒன்றுமில்லை; எங்கள் ஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் பரமானந்தத்தைப் பற்றித்தான் கவலை!"

"அவருக்கு என்ன நேர்ந்தது? நல்ல மனிதராச்சே?"

"அந்த நல்லதனத்தால் வந்த வினைதான் அவரை ஒரு துயரக் கதைக்கு நாயகனாக்கிவிட்டது!" என்று ஆரம்பித்துக் கதைபோலச் சொன்னான், வாதபுரி.

உள்ளூர் ஸ்கூலில் சென்ற இருபது வருஷங்களாகத் தமிழ் ஆசிரியராகவிருக்கும் பரமானந்தம் தங்கமான மனிதர்; கண்யமும், பண்பும் நிறைந்த தமிழ்ப் பேரறிஞர். மிக மிக இளகிய மனசு அவருடையது.

வெளியெல்லாம் இப்படி நற்பெயர் எடுத்த அவருக்குப் பள்ளியில் மட்டும் ஏனோ பாராட்டுக்கள் கிட்டுவதில்லை. அதற்கென்று, அறிவாளியான அவரிடம் போதிக்கும் திறமைக்கும் பஞ்சமில்லை. ஆனால், பையன்களை 'அடக்கத் தெரியாதவர்' என்ற பட்டம் அவருக்கு உண்டு. அதற்கேற்ப, அவர் எடுக்கும் வகுப்புக்களிலெல்லாம் எப்போதும் கலவரமும், குழப்பமும்தான்.

அன்று பாடப் பிரிவின் மணி அடித்தது. பரமானந்தம் முதல் படிவத்திற்குப் போய் முக்கால் மணி நேரம் 'அழுதாக' வேண்டும். எனவே, தலைப்பாகையை அணிந்துகொண்டு, கையில் புத்தகங்களுடன் புறப்பட்டார். அவர் மனசிலே அப்போது உற்சாகமில்லை. ஏனெனில், மிகச் சங்கடமான நிலைமை அவருக்கு இந்த வகுப்பில் ஏற்படுவதுண்டு. பையன்கள் அவ்வவளவு துஷ்டர்கள்!

வகுப்பிற்குள் பரமானந்தம் நுழைந்ததுமே, 'ஹோ...'வென்று ஒரு கூச்சல். 'ஸைலன்ஸ்!' என்று மேஜையைத் தட்டிவிட்டு, நாற்காலியில் அமர்ந்த பரமானந்தம்,மறு விநாடியே அலறி எழுந்தார். நாற்காலியில் ஒரு குண்டூசி!

"ஐயோ பாவம்!" . . "ரத்தம் வரவில்லையே!" . . "நல்ல வரவேற்பு! . ." என்றெல்லாம் வகுப்பிலிருந்து கூச்சல் கிளம்பியது. பண்டிதர் வலியைப் பொறுத்துக்கொண்டு மீண்டும், "ஸைலன்ஸ்!" என்று அதட்டினார். பிறகு, "யார் வேலை இது? செய்தவன் எழுந்திருக்கட்டும்!" என்றார்.

ஒருவரும் எழவில்லை. ஆனால் வகுப்பின் பார்வை முழுவதும் கோடி பெஞ்சியில் அமர்ந்துள்ள கோதண்டுவின் மீது திரும்பியது. உடனே, "கோதண்டு! இது உன் வேலையா?" என்றார் பண்டிதர்.

"இல்லை ஸார்! நான் வேணுமென்று ஊசியைப் போடவில்லை ஸார்! . . ." என்று இழுத்தவாறு கையைப் பிசைந்தான் கோதண்டு.

"ஏறு பெஞ்சிமேல்!" என்று பேச்சை வெட்டிய பண்டிதர் கையில் பிரம்புடன் கோதண்டுவை நெருங்கினார். தொடர்ந்து, "நீட்டு கையை!" என்ற கட்டளை.

கோதண்டு தன் பிஞ்சுக் கைகளை நீட்டினான். ஆனால் பண்டிதரின் ஓங்கிய கை ஏனோ ஒடுங்க ஆரம்பித்தது. பாவம், அவ

ரது சுபாவம் அப்படி. பையன்களை அடிப்பதென்பது அவர் மனம் இடங்கொடாத ஒரு காரியம். இருப்பினும் அன்று மனதைத் திடம் செய்துகொண்டு எப்படியோ நான்கு அடிகள் கொடுத்துவிட்டார்! ஒவ்வொரு அடிக்குப் பிறகும் கோதண்டுவின் கையைப் பார்க்கப் பயப்படுபவர்போல் பார்த்துக்கொண்டே அடித்தார்.

உடனே வகுப்பில் 'குபீ'ரென்று ஒரு சிரிப்பு; "ஆந்தைகூட அடிச்சுடுத்தே!" என்ற குரல்கள். 'ஆந்தை' என்பது பண்டிதருக்குப் பையன்கள் இட்ட 'காரணப் பெயர்'!

கோதண்டுவோ சிரித்துக்கொண்டிருந்தான். அவன் பெற்றது அவ்வளவு மென்மையான அடி. பண்டிதர் அவனைக் கவனிக்காமல் மேசைக்குத் திரும்பினார். பிறகு கையில் சாக்கட்டியுடன், "நேற்று பிசிராந்தையாரின் பாடல்களைப் படித்தோமல்லவா?" என்றவாறு கரும்பலகையை அடைந்த பண்டிதர் அப்படியே திகைத்து நின்றார், காரணம், பலகையில் 'ஆந்தை' என்று யாரோ எழுதியிருந்தார்கள்!

"சட்! என்ன விஷமம்? பெயர்தான் வைத்துப் பழசாகிவிட்டதே! இன்னுமா தொந்தரவு?" என்று வாய்விட்டே முணுமுணுத்துவிட்டார் பண்டிதர். உடனே, "பழைய ஆந்தை! கிழ ஆந்தை!" என்ற கூப்பாடு பிறந்தது.

"ஸைலன்ஸ்!" என்றவாறு மறுபடி மேசையண்டை வந்தார். அதற்குள் சில பையன்களுக்குத் தாகமெடுத்துவிட்டது. அவர்களுக்கு உத்தரவு கொடுப்பதற்குள் கோடிப் பெஞ்சியில் ஏதோ அடிதடி. அதையும் சமாதானம் செய்துவிட்டு மீண்டும் பிசிராந்தையாரின் பாடல்களுக்கு வருவதற்குள், பாடம் முடிந்துவிட்ட மணி ஒலித்துவிட்டது!

சட்டைசெய்யாமல், பண்டிதர் புத்தகங்களையும், தலைப்பாகையையும் கையில் எடுக்கையில் திடீரென வகுப்பில் ஒரு அதிசய நிசப்தம்! பண்டிதர் வியப்புடன் திரும்பினார். அடுத்த வகுப்புக் கணித ஆசிரியர் கார்மேகம் வெளியே நின்றுகொண்டிருந்தார்! அவரைக் கண்டதும் வகுப்பிலே என்ன அமைதி? பண்டிதர் வெளியே நடக்கையிலும், புத்தகங்கள் புரட்டப்படும் சப்தத்தைத் தவிர அங்கே வேறு அரவமில்லை!

பண்டிதருக்குக் கணித ஆசிரியர்மீது பொறாமையாகக்கூட இருந்தது. கார்மேகத்தைக் கண்டாலே பையன்கள் நடுங்குவார்கள் என்பது பிரசித்தம். மூச்சுப் பிரிந்தால், கண் மூக்குத் தெரியாமல் மாணவர்களை 'உரித்து'விடுவாராம் அவர்! ஆனால் அப்படி நடக்கப் பண்டிதரின் மனசு என்றுமே இடமளிக்க மறுக்கிறதே! அவர் கோழையா. . ?

இவற்றை நினைத்து வருந்தியவாறே வீடு திரும்புகையில், "எனக்குப் பையன்களை அடக்கும் திறமையில்லைதான்; ஆசிரியர் தொழிலில் நான் தோல்வியுற்றவனே!" என்று தன்னம்பிக்கையின்றிப் பொருமியது பண்டிதரின் உள் மனம். ஆனால் வீட்டிலே அவருக்கு ஒரு ஆனந்தச் செய்தி காத்திருந்தது. உள்ளே நுழைந்ததுமே, அவர் மனைவி காமாட்சி, "கடிதம் வந்திருக்கு; ஒங்க புத்தகம் பத்து நாளிலே வெளி வருதாம்!" என்றவாறு 'பத்மா பிரசுராலய'த்திலிருந்து வந்திருந்த கடிதத்தைப் பண்டிதரிடம் கொடுத்தாள்.

"அப்பாட. . ! ஆறு வருஷம் உழைத்து எழுதிய நூல் அச்சாகிறதென்றால் எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறது! பள்ளியில் என்ன நடந்தால் என்ன? வெளியிலே என் புத்தகம் எனக்குப் புகழைக் கொடுக்கப்போகிறது!" என்று பெருமிதமடைந்தார் பண்டிதர்.

அதேபோல் அடுத்த வாரமே பண்டிதரின் 'கம்ப ராமாயண விளக்கம்' வெளி வந்தது; பத்திரிகைகள் நூலைப் புகழ்ந்து மதிப்புரைகள் எழுதின. அவரது பள்ளித் தலைமை ஆசிரியரும் ஒரு பாராட்டுக் கூட்டமே கூட்டிவிட்டார்!

அக்கூட்டத்தில் தலைமை ஆசிரியர் பேசுகையில், "இந்த நூல் மூலம் பண்டி

ஹோமியோபதி

வைத்தியம் மிகச் சிறந்தது சுலபமாகக் கற்றுக்கொள்ளக்கூடியது. தமிழில் தபால்மூலம் குறைந்த செலவில் இவ்வைத்திய முறையைக் கற்றுக்கொள்ள இதுவே கடைசி சந்தர்ப்பம். விருப்பம் இருந்தால் முழு விவரங்களுக்கு இன்றே எழுதுங்கள்

ஹோமியோபதி ஹௌஸ், S. W.
77, ராமகிருஷ்ணமடம் ரோடு, மதருஸ்-28.

ழையும் உயர்த்திவிட்டார். இளகிய மனசு காரணமாக அவாது வகுப்புகளில் அமைதியில்லை யென்று அவரைத் தாழ்மையாக நினைத்தவர்களை அவர் தாழ்த்தித் தாம் உயர்ந்துவிட்டார். குடத்துள் விளக்குப்போலிருந்த பண்டிதரின் தமிழறிவு, இப்போது சுடர்விட்டுப் பிரகாசிப்பதைக் காண நாம் மகிழ்கிறோம்!" என்றார்.

ஒரு புறம் பண்டிதரின் மனசு மகிழ்ந்தது; மறுபுறமோ, மாணவர்களை அடக்க இயலாத தன் நிலைகண்டு வெட்கியது. இனியாவது விடுமுறைக்குப்பின் பள்ளி திறந்ததும், அத்துறையிலும் தன்னை உயர்த்திக்கொள்ளத் துடித்தது அவர் உள்ளம்!

நூல் வெளியானதைத் தொடர்ந்து பண்டிதருக்கு முதன் முதலாக உள்ளூர் 'இலக்கியக் கழக'த்திலிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் பண்டிதரின் நூலைப் பாராட்டிவிட்டு, கழகம் ஆரம்பிக்க இருக்கும் கம்பராமாயண வகுப்பை அறிஞர்கள் முன்னிலையில் பண்டிதர் ஆரம்பித்துவைக்க வேண்டுமென்றும், கேட்டிருந்தார்கள்.

"இதென்ன தொந்தரவு?" என்று முனகினார் பண்டிதர்.

"அப்படிச் சொல்லலாமா? உங்கள் பெருமையறிந்து அழைக்கிறார்கள்; போய் ஒரு பிரசங்கம் செய்தால்தான் என்ன?" என்றாள் அவர் மனைவி காமாட்சி.

எனவே பரமானந்தம் அழைப்பை ஏற்றுக்கொண்டார். கோடை விடுமுறை காரணமாக அவகாசமும் இருந்ததால், அரியதொரு பிரசங்கத்துக்கான குறிப்புகள் தயாரிப்பது... கம் புரிவது பண்டிதருக்குப் புதிதல்ல; இருப்பினும் பிரபல நூலின் ஆசிரியர் என்ற ஹோதாவில் செய்யப்போகும் பிரசங்கமல்லவா? சிரமப்பட்டு உற்சாகத்துடன் தன்னைத் தயார் செய்துகொண்டார் பண்டிதர்.

ஆனால் பிரசங்க நாள் நெருங்க நெருங்க ஏனோ அவர் மனம் திடீரென்று திகிலடைந்தது. சொல்லொணாத ஒருவேதனை அவரைக் கப்பிக்கொண்டது. பிரசங்க தினத்தன்று காலை முதல் அவாது ஹிருதயத் துடிப்பே வேகமாக இயங்கியது.

ஆயினும், அவரை இட்டுச்செல்ல வாசலில் மோட்டார் வந்துவிடவே வேறு வழியின்றி அதில் ஏறிக்கொண்டார். பிரசங்கக் கூடத்திற்குள் நுழைகையில் அவாது கால்கள் பின்னின. மெல்லச் சமாளித்துக்கொண்டு எப்படியோ மேடைமீதிருந்த நாற்காலியில் போய் அமர்ந்துவிட்டார்!

உடனே சபையில் பெருத்த கரகோஷம். அப்போது பண்டிதரின் உடலே நடுங்கியது. பொட்டு நரம்புகள் 'விண்' ணென்று தெறித்தன. நெஞ்சு வேறு அடைத்தது. அதற்குள் கழகக் காரியதரிசி பண்டிதரை வரவேற்றுப் பேசலானார். அவாது நூலைப் புகழ்ந்துவிட்டுக் கடைசியில் பண்டிதரைப் பேசுமாறும் கேட்டுக்கொண்டார்.

பண்டிதர் மெல்ல எழுந்ததும் மறுபடியும் நீண்ட கரகோஷம். முதல் படிவ வகுப்பை நினைவூட்டிய அந்த இரைச்சல் பண்டிதரின் மண்டையைத் தாக்குகையில் ஒரு கணம் பொறி கலங்கினாற்போல் விழித்தார். மறு விநாடியே, "ஸைலன்ஸ்!" என்று மேசைமீது தட்டினார்!

அந்த நிசப்தத்தினிடையே, 'இதென்ன கூத்து?' என்று யாரோ கூவியது தெளிவாகக் கேட்டது. உடனே குரல் எழுந்த திசையை நோக்கி, "யார் அங்கே? எல்லாரும் வாயை மூடுங்கள்! மூச்சுக்காட்டினால் ஹெட்மாஸ்டரிடம் போகவேண்டும்; அல்லது நானே தோலை உரித்துவிடுவேன்! இனியும் நான் அடிக்கத் தயங்கமாட்டேன்; ஜாக்கிரதை!" என்று கூவினார் பண்டிதர்.

கழக நிர்வாகிகள் ஒருகணம் அயர்ந்து போனாலும், பண்டிதரின் மூளைக் குழப்பத்தை உணரத் தவறவில்லை. 'புத்தகம் எழுத ஓய்வின்றி உழைத்ததன் பலனாகப் பண்டிதருக்கு உடல் நலமில்லை' என்று கூறி, கூட்டத்தைக் கலைத்தார்கள். பண்டிதரையும் வலுக்கட்டாயமாக ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய்விட்டார்கள்!

கதையை இத்துடன் முடித்த வாதபுரி தொடர்ந்து, "விஷயம் எட்டியதும், நானும் ஹெட்மாஸ்டரும் ஆஸ்பத்திரிக்கு ஓடினோம். மன அதிர்ச்சியால் ஏற்பட்ட இக்கோளாறு இரண்டு மாசங்களில் சரியாகிவிடலாம் என்று நம்புகிறார்கள் டாக்டர்கள். அந்த நம்பிக்கை நிசமாக வேண்டும்!" என்றான்.

"பாவம்! ஆசிரியர்கள் சிறுவர்களை அடித்துக் கற்பிப்பது தவறு என்கிறது ஒரு கூட்டம்; அவர்கள் அறிய வேண்டிய கதை இது!" என்றேன்என்னையறியாமல்.

"வாஸ்தவம்! நம் மாதுவைக்கூட இன்று கன்னத்தில் ஓங்கியடித்துவிட்டேன். நண்பனின் குழந்தை என்ற உணர்வில் அதிக சிரத்தை காட்டியதன் விளைவு அது. குழந்தை எப்படி இருக்கிறான்?"

"அதெல்லாம் ஒன்றுமில்லை, வாதபுரி! கன்னம் சிவந்து சிறிது வீங்கியிருக்கிறது. அவ்வளவுதான்! காலையில் சரியாகிவிடும்!" என்று கூறிய நான் மெல்ல எழுந்தேன். பண்டிதரின் கதையைக் கேட்ட பிறகும் அவனிடம் நான் வேறென்ன சொல்லத் துணிவேன்?

ஃ ஃ ஃ

ஆனால் வீட்டை அடைகையில், "அந்தப் பாவி மனிதர் என்ன சொன்னார்?" என்று பழைய ஆத்திரக் குரலிலேயே வினவினாள் ஹேமா.

"மாதுவின் விஷமம் தாங்காது கோபத்தில் அடித்துவிட்டானாம்; வருந்தி மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். நானும் எச்சரித்துவிட்டு வந்தேன்!" என்று ஒரு பச்சைப் புளுகைத் திரித்த நான் தொடர்ந்து, "ஆனால் . ." என்று இழுத்தேன்.

"என்ன ஆனால் . .?"

ஆனால், அடிக்கத் தெரியாத தமிழ் வாத்தியார் கதையை அப்படியே ஹேமாவிடம் விவரித்தேன். வாயைத் திறந்துகொண்டு கேட்ட அவள் நெஞ்சை அக்கதை நெகிழச் செய்துவிட்டது.

இறுதியில், "பாவம், இந்த விஷமப் பையன்கள் பண்டிதரையே பைத்தியமாக்கிவிட்டார்களே! அடிக்கக்கூடாது என்று பார்த்தால் முடியுமா?" என்ற அளவுக்கு அவள் மனம் மாறிவிட்டது.

★

எதிர்பார்த்ததும் எதிர்பாராததும்!



நாராயணீயம்

செங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர்.

6. மஹாபலியின் பெருமை

निस्सन्देहं दितिकुलपतौ त्वय्य
शेषार्पणं त—
द्व्यातन्वाने मुमुचुरृषयः सामराः
पुष्पवर्षम् ।
दिव्यं रूपं तव च तदिदं पश्यतां
विश्वभाजा—
मुच्चैरुच्चैरवृधदवधीकृत्य विश्वाण्ड
भाण्डम् ॥

நிஸ்ஸந்தேஹம் திதிகுலபதௌ
த்வய்ய சேஷார்ப்பணம் தத்-
வ்யாதன்வானே முமுசுர்ருஷய:
ஸாமரா: புஷ்பவர்ஷம்,
திவ்யம் ரூபம் தவ ச ததிதம்
பச்யதாம் விச்வபாஜா-
முச்சைருச்சைரவ்ருத தவத⁴க்ருத்ய
விச்வாண்ட பாண்டம்

பதவுரை:—

திதிகுலபதௌ-திதியின் வம்சத்தில் (அரச குலத்தில்) சிறந்தவனை மஹாபலி, நிஸ்ஸந்தேஹம் - சந்தேகமில்லாமல், த்வயி-உங்களிடத்தில், தத்-அவ்விதமான, அசேஷார்ப்பணம் - எல்லாவற்றையும் கொடுப்பதை, வ்யாதன்வானே-செய்யும்பொழுது, ஸாமரா:- தேவர்களுடன் கூடின, ரிஷய:-முனிவர்கள், புஷ்பவர்ஷம்-பூமாரியை, முமுசு:- பொழிந்தனர், விச்வபாஜாம் - எல்லோரும், பச்யதாம் - பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே, தவ-தங்களுடைய, திவ்யம்-தெய்வ⁴கமான, தத் இதம்-அந்த இந்த, ரூபம்-வாமன ரூபம், விச்வாண்ட பாண்டம்-பிரும்மாண்டத்தை, அவத⁴க்ருத்ய - எல்லையாகச் செய்து, உச்சை: உச்சை:- மேலும் மேலும், அவ்ருதத்- வளர்ந்தது.

கருத்துரை:—

"ஹே குருவாயூரப்பா! சந்தேகத்துக்கு இடமில்லாமல் தன்னிடமுள்ள ஸகலத்தையும் மஹாபலி தானம் செய்து கொடுத்த தருவாயில், முனிவர்களும், தேவர்களும் புஷ்பவர்ஷத்தைப் பொழிந்தார்கள். எல்லோரும் பார்த்துக்கொண்டிருந்த போதே, அந்த தெய்வ⁴கமான வாமன ரூபத்தையுடைய வாமனமூர்த்தி, இந்த பிரம்மாண்டத்தையே எல்லையாக வைத்துக்கொண்டு, மேலே, மேலே வளர்ந்துவிட்டாராமே" என்று ஸ்ரீ நாராயண நம்பூதிரி கேட்க, ஸ்ரீ குருவாயூரப்பனும், "ஆம்" என்று தலையை ஆட்டி அங்கீகரித்தாராம்.

விளக்க உரை:—

கச்யபரின் மனைவிகள் இரண்டு பேர். ஒரு மனைவியின் பெயர் அதிதி. இன்னொரு மனைவி திதி. அதிதியிடத்தில் கச்யபருக்குப் பிறந்த குழந்தைகள் தேவர்கள். திதியிடத்தில் பிறந்த குழந்தைகள் அஸுரர்கள். அஸுரர்களின் குல சிரேஷ்டனாகவும், சிறந்த மன்னனாகவும் மஹாபலி விளங்கினான். தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் நிரந்தரமான பகைமை ஏற்பட்டு, தேவர்கள் பகவானின் உதவியை அடிக்கடி நாடினார்கள். மஹாபலி விஷயத்திலும் பகவான் தேவர்களுக்கு உதவி செய்யவே அங்கு வந்துள்ளார். அஸுர குலத்திற்கே விரோதிகளான தேவர்களுக்கு ஒவ்வொரு சமயமும் உதவி செய்துவரும் பகவானையும் அஸுரர்கள் தங்களுடைய எதிரிகளாகவே பாவித்து வந்தனர். அந்த அஸுரர் குலத்திலுதித்த மஹாபலி வாமன மூர்த்தியாக வந்திருப்பவர் பகவான் என்று தெரிந்த பிறகும், சுக்ராசார்யரின் சாபம் பலித்துவிடப் போகிறது என்று தெரிந்த பிறகும், மஹாபலி கொஞ்சங்கூட ஸந்தேகத்திற்கு இடமில்லாமல் அவருக்குத் தானம் செய்ய ஆரம்பித்துவிடுகிறான்.

இந்த மாதிரியான ஒரு பக்தியை ரிஷிகளும், தேவர்களும் இதுவரையில் பார்த்ததே கிடையாது; இந்த அதிசயத்தைப் பார்த்து பிரமித்துப் போனார்கள். சுக்ராசார்யர், வாமனரின் உண்மை ஸ்வரூபத்தை விளக்கிய பிறகும், மஹாபலி மனம் தளரவில்லை. சுக்ராசார்யர் சபித்த பிறகும்கூட, மஹாபலி மனம் மாறவில்லை. நிர்மலமான மனதோடு பகவானுக்கு எல்லாவற்றையுமே தானம் செய்கிறான். இந்த ஆச்சரியத்தைக் கண்ணுற்ற அந்த ரிஷிகளும், தேவர்களும், மஹாபலியின் மேல் புஷ்ப வர்ஷத்தைப் பொழிகிறார்கள். மஹாபலியும் பகவானும், ஒரே இடத்தில் இருக்கிறார்கள். பகவானை ஸர்வ காலமும் அர்ச்சித்து வரும் ரிஷிகளும், தேவர்களும், அந்த ஸந்தர்ப்பத்தில் பகவானின் மேல் ஒரு புஷ்பத்தைக் கூடப் போடாமல், மஹாபலியின் மேல் புஷ்ப வர்ஷத்தைப் பொழிகிறார்கள்.

மஹாபலி இவ்வாறு தானம் செய்து முடிந்தவுடன், அந்த வாமனமூர்த்தி, மளமளவென்று ஆகாயத்திற்கும் பூமிக்கும் வளர்ந்துவிட்டார். எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுதே, அந்த சிறிய உருவம், இந்த பிரும்மாண்டத்தை எல்லையாக வைத்துக்கொண்டு, வளர்ந்துகொண்டே போயிற்று.

நம்பூதிரி "தத் இதம் ரூபம்"-அந்த இந்த உருவம் என்று குறிப்பிடுகிறார். இந்தச் சிறிய உருவமான வாமன மூர்த்தி ஆச்சரியமாக வளர்ந்துவிட்டதைத்தான் இங்கு வெளிப்படுத்துகிறார்.

மேலும் நம்பூதிரி இந்த நாராயணீயத்தை ஸ்ரீ குருவாயூரப்பனின் ஸந்நிதியில் எழுதினார். ஸ்ரீ குருவாயூரப்ப[illegible] களுடைய சிறிய உருவம்தானே அவ்வாறு விசுவ ரூபமாக வளர்ந்தது?" என்று கேட்கிறார். ஸ்ரீ குருவாயூரப்பன் நாராயண நம்பூதிரிக்கும் விசுவ ரூபத்துடன் காட்சியளித்திருக்கிறார்.

"இதம்" என்ற வார்த்தை ஸமீபத்திலுள்ளதைக் குறிப்பிடும் சொல். நாராயண நம்பூதிரி 'இதம்' என்று குறிப்பிடுவது, ஸமீபத்தில் தன் எதிரிலுள்ள ஸ்ரீ குருவாயூரப்பனைப் பார்த்துச் சொல்வதாகவும் எடுத்துக்கொள்ளலாம்.

புண்யத்தினால் ஸம்பாதித்த ஸகல சொத்துக்களையும் பகவானுக்கு அர்ப்பணம் செய்வது என்பது, ஸர்வ கர்மபலத் தியாகம் எனச் சொல்லப்பட்டிருக்கிறது. எவனொருவன் தான் செய்த நல்ல கர்மாவின்மூலம் கிடைக்கும் பலன்களை பகவானுக்கு அர்ப்பணம் செய்துவிடுகிறானோ, அவனே நிஷ்காம கர்மத்தைச் செய்தவனாகிறான். அவனே மோட்சத்தை அடைவதற்குரிய யோக்யதையைப் பெறுகிறான். மஹாபலி தனது புண்யத்தின் பலனான தனது ராஜ்யங்கள் முழுவதையும் நேரே வந்திருக்கும் பகவானுக்கு அர்ப்பணம் செய்யும் ஆச்சரியமான காட்சியைப் பார்த்து, தேவர்களும், ரிஷிகளும் மஹாபலியின் மேல் பூமாரி பொழிவதை ஸ்ரீமத் பாகவதத்தில் காணலாம்.

तदाऽसुरेन्द्रं दिवि देवतागणाः
गन्धर्व विद्याधर सिद्धचारणाः ।
तत्कर्म सर्वेऽपि गृणन्त आर्जवं
प्रसूनवर्षैः ववृषुः मुदान्विताः ॥

ததா (அ) ஸுரேந்த்ரம்
திவி தேவதாகணா:
கந்தர்வ வித்யாதர
ஸித்த சாரணா:
தத்கர்ம ஸர்வேபி
க்ருணந்த ஆர்ஜவம்
ப்ரஸூன வர்ஷை;
வவ்ருஷு: முதான்விதா:

(ஸ்ரீமத் பாகவதம் 8-வது ஸ்கந்தம், 20-வது அத்தியாயம்).

ஆகாசத்திலுள்ள தேவ கணங்கள், சாரணர்கள், ஸித்தர்கள், வித்யாதரர்கள் எல்லோரும் அவனுடைய கார்யத்தையும், சொன்னதைச் செய்யும் ஸ்வபாவத்தையும் புகழ்ந்துகொண்டு புஷ்பங்களை மஹாபலியின் மேல் பொழிந்தனர்.

7. பிரம்மதேவன் ஸ்ரீ பகவானின் சரணங்களை அலம்புதல்

त्वत्पादाग्रं निजपदगतं पुण्डरी
कोद्भवोऽसौ
कुण्डीतोयैरसिचदपुनाद्यज्जलं
विश्वलोकान् ।

हर्षोत्कर्षात् सुबहु ननृते खेचरे

रुत्सवेऽस्मिन्

भेरीं निघ्नन् भुवनमचरज्जाम्बवान्

भक्तिशाली ॥

த்வத் பாதாக்ரம் நிஜபத கதம்
புண்டரீகோத்பவோ (அ) ஸௌ
குண்டீ தோயை ரஸிசதபுனத்யஜ்
ஜலம் விச்வ லோகான்
ஹர்ஷோத் கர்ஷாத் ஸுபஹு
நந்ருதே கேசரை ருத்ஸவே
(அ)ஸ்மின்
பேரீம் நிக்னன் புவனமசரஜ்
ஜாம் பவான் பக்தி சாலீ

பதவுரை:— அஸௌ–அந்த, புண்டரீ கோத்பவ–பிரம்மதேவர், நிஜ பத கதம்–தனது ஸ்தானமாகிய ஸத்ய லோகத்தை அடைந்த, த்வத் பாதாக்ரம்–உமது திரு வடியை, குண்டீ தோயை–கமண்டலு ஜலத்தால், அஸிசத்–அலம்பினரோ, யத் ஜலம்–எந்த ஜலம், விச்வலோகான்–எல்லா உலகங்களையும், அபுனத்–பாசுத்தமாக் கிற்றோ, அஸ்மின்–இந்த, உத்ஸவே–உத்ஸவத்தில், கேசரை–ஆகாசத்தில் சஞ் சாிப்பவர்களான தேவர்களால், ஹர்ஷோத் கர்ஷாத்–சந்தோஷ மிகுதியால், ஸுபாஹு நந்ருதே–நன்முக நர்த்தனம் செய்யப்பட்டது, பக்திசாலீ–பக்தியால் பிரகாசிக்கின்ற, ஜாம்பவான்–ஜாம்ப வான், பேரீம்–பேரீ வாத்யத்தை, நிக்னன்–முழங்கிக் கொண்டு, புவனம்–பூமியை அசரத்–சுற்றி வந்தார்.

கருத்துரை:—

"ஹே குருவாயூரப்பா! பிரம்ம தேவர் ஸத்ய லோகத்தை அடைந்துவிட்ட உங்களுடைய பாத கமலங்களைத் தன் கமண்டலு ஜலத்தினல் அலம்பினர். அந்தப் புண்ய தீர்த்தம் எல்லா உலகங்களையும் பாிசுத்தமாக்கிற்று. இம்மாதிாி விச்வ ரூபத்துடன் உலகங்களை அந்த மூர்த்தி தன் கால்களால் அளக்கும் காட்சி ஒரு மஹோத்ஸவமாக விளங்கிற்று. ஆகாசத்தில் சஞ்சாிக்கும் தேவ கணங்கள் ஸந்தோஷ மிகுதியால் வெகுவாக நடன மாடினர். சிறந்த பக்திமானன ஜாம்பவான், அந்த ஸந்தர்ப்பத்தில் பேரீ வாத்யத்யத்தை முழக்கிக்கொண்டு பூமியைப் ப்ரதட்சிணம் செய்தாராமே!" என்று ஸ்ரீ நாராயண நம்பூதிாி பிம்பமாக நிற்கும் ஸ்ரீ குருவாயூரப்பனைப் பார்த்துக் கேட்க, அந்த பிம்பமும் தலையை அசைத்து அங்கீகாரம் செய்தாராம்.

விளக்க உரை:—

வாமன மூர்த்தி ஆச்சாியமான வகையில் ஆகாயத்தை எட்டும்படி வளர்ந்த பொழுது அவருடைய தேகம் இந்த உலகம் முழுவதையும் வியாபித்துக் கொண்டுவிட்டது; பத்து திக்குகளிலும் பரவியிருந்தது. உலகத்தை அவருடைய பாதம் ஒரே அடியால் அளந்துவிட்டது. இரண்டாவது அடியை அளப்பதற்கு, பகவான் தனது காலைத் தூக்கி ஆகாச வீதியில் அடியெடுத்து வைக்கப் போகும் தருவாயில் அந்தப் பாதம் பிரம்ம லோகத்தை எட்டிவிடுகிறது. புனிதமான அந்தப் பாதம், தான் இருக்குமிடம் தேடி வந்தது போல் பிரம்ம லோகத்தை அடைந்த போது, பிரம்மா, மிகுந்த ஸந்தோஷத்தோடும், பக்தியோடும், அந்தப் பாதத்தைத் தனது கமண்டலு ஜலத்தால் அலம்பு கிறர். அவ்வாறு அந்த த்ாிவிக்ரமனுடைய பாதத்தை பிரம்மா அலம்பிய ஜலமே ஆகாச கங்கையாகப் பிரவஹித்து நமது பாரத தேசத்தைச் செழிக்கச் செய்து கொண்டு வருகிறது. த்ாிவிக்ரமனுடைய பாதத்தை அலம்பிய ஜலம் என்றதாலும், ப்ரம்மாவே த்ாிவிக்ரமனுடைய பாதத்தை அலம்பினர் என்றதாலும், அந்த ஜலம் மஹா புனிதமானது. கங்கைக்கு இவ்வாறு இரண்டு விதங்களிலும் பெருமை.

உலகளந்த பெருமானின் திருவடியை பிரம்ம தேவன் ஸத்திய லோகத்தில் அலம்பும் ஒரு காட்சியை, தேவர்களும், முனி கணங்களும், ஒரு உத்ஸவமாகவே கண்டு களிக்கிறர்கள். ஸத்ய லோகத்திலிருந்து உலகளந்த பெருமானின் திருவடியை அலம்பிய ஜலம், ஆகாச கங்கையாகப் பிரவஹித்து, பூமியை அடைந்து, அதைப் புனிதப்படுத்தும் நாள் ஒரு திருநாள் என்பதில் என்ன ஸந்தேஹம்? பகவானின் சாீரம், உலகம் முழுதும் பரவி நிற்க, அந்த விச்வ ரூபியின் அங்கங்கள் பத்து திசைகளிலும் வியாபித்துக் கிடக்க, ஸகல தேவர்களும் ஆனந்த நடனம் செய்கிறர்கள். அந்த ஸமயம் மஹா பாகவத சிரோமணியான ஜாம்பவான், சந்தோஷத்தால் பேரீ வாத்யத்தை முழக்கிக்கொண்டு பூமியை வலம் வருகிறர். பூமியைச் சுற்றிவருவதால், பூமி முழுவதையும் வியாபித்துக் கொண்டிருக்கும் பகவானை வலம் வரும் புண்யத்தைப் பெற்றுவிடுகிறன் ஜாம்பவான்.

இந்த விஷயத்தை ஸ்ரீமத் ராமாயணத்தில் ஜாம்பவான் மிகப் பெருமையுடன் பேசுகிறர். ஸீதா தேவியைத் தேட தென் திசையில் சமுத்திரத்தைத் தாண்டிப் போய்ப் பார்க்க வேண்டும் என்று சுக்ாீவன் ஆக்ஞை செய்தவுடன் ஒவ்வொரு வானரமும், தன்னல் எவ்வளவு தூரம் தாண்டமுடியும் என்பதைக் கூறுகிறர்கள். அது ஸமயம் மிகவும் வயதானவராய்க் காணப்பட்ட ஜாம்பவான் தன்னல் தொண்ணூறு யோஜனை தூரம் (900 மைல்கள்) தாண்ட முடியும் என்றும், தனது இளமைப் பருவத்தில் எவ்வளவு தூரம் வேண்டுமானலும் தன்னல் தாண்டிப் போக முடியுமென்றும் சொல்கிறர். அந்த ஸந்தர்ப்பத்தில் தனது இளமைப் பருவத்தில் மஹாபலியிடம் மூன்றடி மண் யாசித்த வாமன மூர்த்தி த்ாிவிக்ரமனுக வளர்ந்து, பூமியெங்கிலும் வியாபித்துக்கொண்டு ஆகாயத்தில் காலைத் தூக்கி மேலுலகங்களையும் தன் காலடியால் அளந்த அதிசயத்தைச் சொல்லி மகிழ்கிறர். பூமி பூராவும் த்ாிவிக்ரமனுன பகவானின் உடல் வியாபித்துக்கொண்டிருந்த ஸமயம் தான் பேரீ வாத்யத்தை முழக்கிக்கொண்டு பூமியை வலம் வந்ததை வர்ணிக்கிறர். அவ்வாறு பூமியைப் பிரதட்சிணம் செய்த புண்ணியத்தோடு பூமி முழுவதும் வியாபித்திருந்த பகவானைப் பிரதட்சிணம் செய்த மகத்தான புண்யமும் அவருக்குக் கிட்டிவிடுகின்றது. இந்த சமாசாரத்தை ஸ்ரீமத் ராமாயணத்தில் கிஷ்கிந்தா காண்டத்தில் உள்ள கீழ்க்கண்ட சுலோகத்தில் காணலாம்:—

मया महाबलेश्चैव यज्ञे विष्णुः

सनातनः ।

प्रदक्षिणी कृतः पूर्वं क्रममाणस्त्रि

विष्टपम् ॥

ம யா மஹா பலேஸ்சைவ
யக்ஞே விஷ்ணு: ஸனுதன:
ப்ரதக்ஷிணீக்ருத: பூர்வம்
க்ரமமாணஸ்த்ாிவிஷ்டபம்
(ஸ்ரீமத் ராமாயணம் கிஷ்கிந்தா காண்டம்)

பகவானைப்பற்றிக் காதால் கேட்பதும், பகவானின் உருவத்தைக் கண்ணுல் பார்ப்பதும், பகவானின் நாமங்களை வாயால் கீர்த்தனம் செய்வதும், பகவானுடைய ஆராதனத்திற்காகக் கால்களால் நடந்து செல்வதும், மிகுந்த புண்யம் என்று நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஜாம்பவான் பகவானையே, காலால் நடந்து, பிரதக்ஷிணம் செய்கிறர்; கண்களால் த்ாிவிக்ரமனின் திவ்ய ரூபத்தைக் காண்கிறர்; வாயால் த்ாிவிக்ரமனுடைய ஜயபோிகையை முழக்குகிறர். தான் முழக்கும் பகவானுடைய ஜயகோஷத்தைத் தன் காதுகளாலேயே கேட்டு இன்புறுகிறர். அந்த பெரும் பாக்யத்தை மஹாபக்தரான ஜாம்பவான் தான் அடைய முடியும். அன்று அடைந்த அந்த மஹத்தான பாக்யத்தை அவர் ஒரு நாளும் மறக்கவில்லை.

ஸ்ரீமன் நாராயணன் எழுந்தருளியிருக்கும் ஸகல திவ்ய க்ஷேத்திரங்களிலும், பகவானுடைய இடது கையில்தான் சங்கு காணப்படும். திருக்கோவிலூர் என்னும் திவ்ய க்ஷேத்திரத்தில் பகவான் உலகளந்த பெருமாளாகக் காக்ஷியளித்துக்கொண்டிருக்கிறர். அங்கு பகவான் தன்னுடைய வலது கையில் சங்கை வைத்துக்கொண்டிருப்பதைப் பக்தர்கள் காணலாம். மஹாபராக்ரமசாலியான மஹாபலியை த்ாிவிக்ரமனுக வந்து ஜயித்து, ஆட்கொண்டதைத் தொிவிப்பதற்காக தனது இடது கையிலிருந்த சங்கை வலது கையில் வாங்கி, அதிலிருந்து ஜயகோஷத்தைக் கிளப்பிய அவஸரத்தில் பகவான் திருக்கோவிலூாில் காக்ஷியளித்துக்கொண்டிருக்கிறர்.

(தொடரும்)

நடந்த விஷயம்

என்.பி.ஹரிஹரன்

தனது குட்டியைக் கவர்ந்து சென்ற மோட்டாரைப் பின்தொடர்ந்து எவ்வளவு தூரம் அந்தக் குட்டியின் தாய் வர முடியும்? அதுவும், அக்குட்டியை இரையாக்கிக்கொள்ள முயற்சித்த கொடிய விலங்குக்கு 'டிமிக்கி' கொடுத்துவிட்டு வந்து, அபாயமில்லாத தருணத்தில் குட்டியை மீட்பது சுலபமான காரியமா? ஆனால், இதைச் சாதிக்கும் வழிதான் சிருஷ்டியின் ரகஸ்யம்! அதைக் காணும் வாய்ப்பு பல ஆண்டுகளுக்கு முன் எனக்குக் கிட்டியது.

யுத்த சமயம் அது. ஜப்பானியர் படையெடுத்தால், கொடைக்கானலிலிருந்து வெள்ளைக்காரரைக் கொச்சிக்குக் காலி செய்ய பிரத்தியேக ரஸ்தா அமைத்திருந்தனர், ராணுவ அதிகாரிகள். அவர்களில் ஒருவர் தயவால், அந்தப் பிரத்தியேக ரஸ்தாவில் மூணாறிலிருந்து கொடைக்கானலுக்கு எனது பொிய மோட்டாரில் புறப்பட்டேன். என் மனைவியும், வேறு இருவரும் கூடவந்தனர். "வழி நெடுக அடர்ந்த காடு. யானைக்கூட்டமோ வேறு விலங்குகளோ குறுக்கே வந்தால் சுட வேண்டாம். 'ஹார்ன்' சப்தம் கேட்டு அவை ஒதுங்கிப்போய்விடும். ஆனால், அஜாக்கிரதையாக மோட்டாரை விட்டிறங்கி நடமாடினால் ஆபத்து" என்றார் எனது ராணுவ நண்பர். பனி வேளையில் உபயோகமாயிருக்கும் என்று ஒரு 'டார்ச் லைட்'டும் கொடுத்தார். அதில் சிகப்பு நிறக் கண்ணாடி பொருத்தப்பட்டிருந்தது. சிகப்பு வெளிச்சம் உதவிகரமாயிருக்கும் போலும்.

மூணாறிலிருந்து 45 மைல் பிரயாணத்தைத் தொடங்கினேன். பலவிடங்களில் புல்லும், பூண்டும் ஆள் உயரத்துக்கு ரஸ்தா அருகே மண்டியிருந்தன. அதில் யானையோ, புலியோ பதுங்கியிருந்தால் கூடத் தெரியாது. தூரத்தில் யானைகள் பிளிறுவது காதில் ஒலித்தது. முதன் முதலாகப் பாதையில் குறுக்கே வந்தது ஒரு காட்டுப்பன்றி. அது எங்களை லட்சியம் செய்யவேயில்லை! கூட்டங் கூட்டமாக யானைகளும், காட்டெருமைகளும் தொலைவில் செல்வதைக் கண்டோம்.

தொடர்ந்து மலையில் ஏறி வந்ததால் என்ஜினுக்கு ஓய்வு கொடுக்க, மோட்டாரை அங்கங்கே நிறுத்தினேன். இயற்கை வனப்பைக் கண்டு களித்தோம். போட்டோக்களும் எடுத்தோம். கடைசியாக நின்ற இடம் கொடைக்கானல் அடிவாரத்தில். திடீரென பனித்திரை எங்களைக் கவ்விக்கொண்டது. நண்பரின் புத்திமதியை நினைவுகூர்ந்து வண்டிக்குத் திரும்பினோம். கதவைத் தாளிடும் சமயம். முன்பக்க ஜன்னல் வழியே ஏதோ வேகமாக வந்து விழுந்தது. பின் ஸீட்டிலிருந்த ஸ்திரீகள் அலறினர். தூக்கிவாரிப்போட்டது. அவசரமாகக் கதவைச் சாத்தினேன். மடியில் விழுந்தது ஒரு கிருஷ்ண மிருகம். பேந்தப் பேந்த விழித்தது. சுதந்திரக் காட்டைவிட்டு, மோட்டாரில் அது அடைக்கலம் புகும் மர்மம் என்ன? அது வந்த திக்கில் 'டார்ச் லைட்' வெளிச்சத்தை வீசினேன். புதருக்குள்ளிருந்து இரு ஜ்வலிக்கும் கண்கள் சூரிட்டு நோக்கின. புலியோ! வேறென்னவோ! ஆராய்ச்சிக்கு மனமின்றி அங்கிருந்து விரைந்தோம்.

நாங்கள் தங்கும் பங்களாவை அடைந்தவுடன் முதல் காரியமாகக் கதவு ஜன்னல்களை அடைத்தோம். ஆனால் கிருஷ்ண மிருகத்துக்கு அச்சம் அடங்கவில்லை. நடுங்கிக்கொண்டே படுத்திருந்தது. பால்கூடச் சாப்பிட மறுத்துவிட்டது.

நடு நிசியிருக்கும். பங்களாவுக்கு வெளியில் விசித்திர அரவம் கேட்டது. இதுவரை கேட்டிராத ஒலி அது. பட்லரை எழுப்பிக் கேட்டோம். அவன் சிறிது நேரம் சப்தத்தைக் கேட்டுவிட்டு, "புலி சார்" என்றான். ஆவலுடன் மேல் மாடிக்குச் சென்று வெளியே பார்த்தால், டார்ச் வெளிச்சத்தில் ஒரு வேங்கைப் புலி தென்பட்டது. தன் பிடியிலிருந்து தப்பிய இரையைத் தேடிக்கொண்டு அது வந்திருக்கிறது. சிறிது நேரத்தில் அரவம் அடங்கினாலும் தூக்கம் எங்களுக்குப் பிடிக்குமா?

அதிகாலையில் கிருஷ்ண மிருகத்தின் அசாதாரண பரபரப்பு எங்களைக் கவர்ந்தது. வெளியிலிருந்து வந்த மிருகத்தின் குரலைக் கேட்டு அது குதிகுதித்தது. மீண்டும் பட்லரின் உதவியை நாடினோம். "மான் வந்திருக்கிறது, வெகு அருகாமையில்" என்றான் அவன். எட்டிப் பார்த்தோம். உண்மைதான். அதற்கு மேல் மனம் தாளவில்லை. கதவைத் திறந்துவிட்டோம். மான் குட்டி துள்ளிக் குதித்து தாயினிடம் ஓடியது. அன்னையின் அரவணைப்பில் சொக்கி நின்றது. இரண்டுமாக, ஆனந்தத்தில் மூழ்கி சுதந்திரப் பாதையில் மறைந்தன.

அட்டைப் படம்

ஒருவிதமாய்ப் படாத பாடுபட்டு, மூட முடியாத அளவு சாமான்களை வைத்து மூடிவிட்ட பெருமிதம் அவனுக்கு வாய்த்துவிட்டது. பெட்டியை இனிப் பூட்டிவிட்டு, பிரயாணத்திற்கான அடுத்த படலத்தை (டாக்ஸி தேடு படலம்) ஆரம்பிக்கலாம் என்று நிமிர்ந்தபோது, மனையரசி இன்னும் இரண்டு புடவைகளுடன், 'இதையும் வைத்து விடுங்கள் பெட்டிக்குள்' என்று வந்து சேர்ந்தாள். அவளுடைய இந்தக் கட்டளை அவனை இந்த திகைப்பு திகைக்க வைத்துவிட்டது.

இந்த ரஸமான காட்சியை அட்டைப் படமாகத் தீட்டியிருப்பவர், சைத்ரீகர் 'அருண்'.

இலங்கை லிகிதம்

இலங்கையின் முதல் ஸ்திரீ மந்திரி ஸ்ரீமதி விமலா விஜயவர்த்தனே.

மதுவுக்கு முற்றுப்புள்ளி!

மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவரான ஸ்ரீ பண்டாரநாயகாவின் புதிய மந்திரி சபை சென்ற வாரம் இலங்கையில் பதவியேற்றுக்கொண்டிருக்கிறது. பத்து வருட காலமாகத் தொடர்ந்து ஆட்சி நடத்திய கொத்தலாவலையின் ஐக்கிய தேசீயக் கட்சியை சாதாரணமாகத் தோற்கடிக்காமல், இருந்தஇடம் தெரியாமல் தோற்கடித்துவிட்டு மக்கள் ஐக்கிய முன்னணி அதிகாரத்துக்கு வந்திருக்கிறது. இந்தத் தேர்தல் முடிவுகளை ஸ்ரீ பண்டாரநாயகாவின் வெற்றி என்று கூறுவதைவிட ஸர் ஜான் கொத்தலாவலையின் படுதோல்வியென்று வர்ணிப்பதே மிகப் பொருத்தமாகும்.

ஸ்ரீ பண்டாரநாயகாவின் மந்திரி சபை ஒன்றல்ல, இரண்டல்ல, எல்லா அம்சங்களிலுமே புதியது. சகல மந்திரிகளும் புதியவர்கள். அவர்களுடைய கொள்கையும், மனோபாவமும், போக்கும் புதியவை. பதவியேற்றுக்கொண்ட தினத்திலேயே அவர்கள் ஒரு புதிய சகாப்தத்தை ஆரம்பித்து வைத்திருக்கிறார்கள். எல்லா மந்திரிகளும் பதவிப் பிரமாணமெடுத்துக் கொள்ளுகையில் ஐரோப்பிய உடையைத் திரஸ்கரித்து, வேஷ்டியும், சட்டையும் அணிந்திருந்தது ஒரு குறிப்பிடத்தகுந்த அம்சம். பதவிப் பிரமாணம் முடிந்தவுடன் கவர்னர் ஜெனரல் மாளிகையில் "காக்டெயில்" (மதுபான) விருந்து நடப்பது வழக்கம். இம்முறை இந்தச் சம்பிரதாயத்துக்கு மாறாக காப்பியும், டீயும், பாயசமும் வழங்கப்பட்டன.

இம்மட்டல்ல. மந்திரி சபையின் முதலாவது கூட்டத்திலேயே மதுபானத்தை ஒழிக்க திட்டவட்டமான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. நாட்டில் மதுவிலக்கு படிப்படியாக அமுலுக்கு வரவேண்டுமானால் அதற்கு அரசாங்கம் முன் மாதிரி காட்ட வேண்டும். இதற்காக பார்லிமெண்ட் கட்டிடங்கள், பார்லிமெண்ட் மெம்பர்களின் விடுதி, அரசாங்க வைபவங்கள், வெளி நாடுகளிலிருக்கும் இலங்கை ஸ்தானீகர்கள் நடத்தும் விருந்துகள் ஆகியவற்றிலெல்லாம் மதுபானத்தைத் தடை செய்ய வேண்டுமென்று மந்திரிசபை அதன் முதலாவது கூட்டத்தில் தீர்மானித்திருக்கிறது. பிரிட்டிஷ் கௌரவப் பட்டங்களை ஒழித்துவிடுவதென்றும், மந்திரி சபை முடிவு செய்திருக்கிறது.

புதிய மந்திரி சபையில் தமிழர்கள் யாருமில்லாததுதான் ஒரு பெரிய குறை. பழைய ஆளும் கட்சியைப் போலவே புதிய ஆளும் கட்சியும் சிங்களத்தை மாத்திரம் அரசாங்க பாஷையாக்கும் கொள்கையுடையதாகையினால் மந்திரி சபையில் தமிழர்கள் யாரும் சேருவதற்கில்லை. முன்பெல்லாம் எதிர்க் கட்சியில் பல மாதிரியானவர்களுமிருந்தார்கள். புதிய பார்லிமெண்டிலோ தமிழர்களே முக்கிய எதிர்க் கட்சியாயிருக்கப் போகிறார்கள்.

சிங்களப் பிரதேசங்களில், கொத்தலாவலை கட்சி தொடர்ந்து ஆட்சி நடத்த வேண்டுமா வேண்டாமா என்ற பிரச்னையே தேர்தலில் அடிப்படையான பிரச்னையாயிருந்தது. தமிழ்ப் பிரதேசங்களிலோ, தமிழ் மொழியை ஒதுக்கி சிங்களத்தை மட்டும் ராஜாங்க மொழியாக்கும் கொள்கையை எதிர்ப்பதே முக்கிய பிரச்னையாயிருந்தது. தமிழ் மக்களுக்கு சுய நிர்ணய உரிமையளிக்க வேண்டுமென்ற கொள்கையை ஆதரித்து தமிழ் பேசும் மக்கள் ஓட்டுக் கொடுத்திருக்கிறார்கள். இலங்கையில் தமிழ் சிங்கள ராஜ்யங்கள் இரண்டைத் தோற்றுவித்து, இரண்டையும் ஒரு சமஷ்டியில் இணைக்க வேண்டுமென்ற கொள்கையுடைய தமிழ் அரசுக் கட்சி பொதுத் தேர்தலில் 10 ஸ்தானங்களைக் கைப்பற்றி அமோகமான வெற்றியடைந்திருக்கிறது. சிங்களத்தை ராஜாங்க பாஷையாக்குவதில் சிங்களவர்கள் எவ்வளவு தீவிரமாயிருக்கிறார்களோ அதேபோல அதை எதிர்ப்பதிலும் தமிழர்கள் தீவிரமாயிருக்கிறார்களென்பதை இந்தத் தேர்தல் அறிவுறுத்தியிருக்கிறது.

புது டில்லியில் நடைபெற்ற 'ஸௌத் இந்தியா க்ளப்' உறுப்பினரின் 'வஸந்தஸேனா' நாடகத்தில் ஒரு காட்சி.

இலங்கையின் பிரதம மந்திரியாக ஸ்ரீ பண்டாரநாயகா பதவியேற்றுக் கொண்ட பின்னர் கவர்னர் ஜெனரல் ஸர் ஆலிவர் குணதிலகாவுடன் வெளியே வருகிறார்.

இம்மாதம் 20-ந் தேதி புதிய பார்லிமெண்ட் சபை முதன் முதலாகக் கூடும் பொழுது கூட்ட நிகழ்ச்சி நிரல், மசோதாக்கள் முதலிய எல்லாமே சிங்களத்தில் தான் அச்சிடப்பட்டிருக்குமென்றும், கவர்னர் ஜெனரலின் சிம்மாசனப் பிரசங்கமும் சர்க்கார் கட்சி மெம்பர்களின் பிரசங்கங்களும் சிங்களத்திலேயே இருக்குமென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. சிங்களத்தை ராஜாங்க மொழியாக்குவதற்கு அரசியல் சட்டத்தையும் பிரதம மந்திரி திருத்தத் தீர்மானித்திருக்கிறாராம். சகலமும் சிங்கள மயமாகிவிடும் போலிருக்கிறது.

இலங்கை இந்தியப் பிரச்னை சம்பந்தப்பட்டமட்டில் நிலைமை சற்றே அபிவிருத்தியடையலாமென்று இந்திய வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றன. இலங்கை ஜன நாயக காங்கிரஸ் தலைவர்களான ஸ்ரீ ராஜலிங்கம், ஸ்ரீ தொண்டைமான், ஜனாப் அஸிஸ் ஆகியவர்கள் புதிய பிரதம மந்திரியைச் சந்தித்துப் பேசிவிட்டு நம்பிக்கை தெரிவித்திருக்கின்றனர். கூடிய சீக்கிரம் இலங்கை–இந்தியப் பிரதம மந்திரிகளின் சந்திப்பு நடைபெறக்கூடுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

—ரவி

கலாமண்டபம்

திரையுலகில் கொஞ்சம் காலூன்றிக் கொண்டால் போதும், அதில் நுழைய உதவியவர்களை இழிவாகப் பேசுவது தான் நாம் சாதாரணமாகக் காணக் கூடிய காட்சி. நட்சத்திரங்களாகட்டும், நிபுணர்களாகட்டும், முதல் உதவி செய்தவர்களை மட்டம் தட்டாமலிருப்பதில்லை. 'அவனுக்கென்ன தெரியும்? ஏதோ என் விதி, அவனிடம் போய் மாட்டிக்கொண்டேன்; பாடாய்ப்படுத்தி வைத்துவிட்டான். அவனிடம் போகாதிருந்தால் இன்னும் முன்னமேயே முன்னுக்கு வந்திருக்கலாம். . . என் சொந்த முயற்சிதான் இன்றைய என் நிலைக்குக் காரணம். . .'—இந்த ரீதியில் பேசுபவர்களை, குறிப்பாக தென்னிந்தியத் திரையுலகில், காணுதிருப்பது அபூர்வம்.

இத்தகையதொரு நிலையில் இன்று பிரஸித்தமாகவுள்ள டைரக்டர்களும், நிபுணர்களுமாகப் பலர் சேர்ந்து குருவென ஒருவரை, அதுவும் பல பேர் அறிய பகிரங்கமாகப் போற்றிக் கொண்டாடுவது என்பது புதுமையேயல்லவா? இந்தக் குரு பூஜைக்காளானவர் வேறு யாருமல்ல, பிரஸித்த டைரக்டர் பிரஸாத் தான். அவரைக் கௌரவித்தவர்கள் வேறு எவருமல்ல, டைரக்டர்களும், பட நிபுணர்களுமான எர்ரா அப்பாராவ், டி. பிரகாச ராவ், யோகானந்த், ரஜனிகாந்த், ஸி. வி. ரங்கநாத தாஸ் ஆகியோர் தான்.

கடந்த வியாழனன்று வாஹினி ஸ்டூடியோவை அடுத்த 'சந்த மாமா' கட்டிடத்தில் சங்கீத-நாடக அகடமித் தலைவரும், சென்னைப் பிரதம நீதிபதியுமான கனம் ராஜமன்னர் தலைமையில் இந்த விந்தை வைபவம் நடந்தேறியது. திரையுலகமே திரண்டு வந்திருந்த அக்கூட்டத்தில் ஷி சிஷ்யர்கள் சார்பாக வெள்ளிப் பட்டயமொன்றை ஸ்ரீ பிரஸாதுக்கு வழங்கி ஸ்ரீ ராஜமன்னர் பேசுகையில், பழங்கால குரு-சிஷ்ய பாந்தவ்யத்தை விளக்கி, அம்முறையில் இந்நிகழ்ச்சி நடப்பதைப் பெரிதும் பாராட்டினர். ஸ்ரீ ரஜனிகாந்த் பாராட்டுரை வாசித்தளிக்க, ஜுபிடர் பிக்சர்ஸாரோ வெள்ளிக்குத்து விளக்குகளை வழங்கினர் ஸ்ரீ பிரஸாதுக்கு.

அவருடைய மேதையைச் சிலாகித்துப் பேசினர் பல படவுலகப் பிர

சினிமாச் செய்திகள்

முகர்கள். டைரக்ஷனில் மட்டுமன்றி நடிப்புத்துறையிலும் அவர் தேர்ந்தவரென்ருர் படவுலக முத்தண்ணுவான ஸ்ரீ எச். எம். ரெட்டி. அரிய ஆக்கத்திறன் படைத்தவர் ஸ்ரீ பிரஸாத் என்று புகழ்ந்தார் ஸ்ரீ எஸ். எஸ். வாஸன். மற்றும் பி. என். ரெட்டி, நாகையா, சிவாஜி கணேசன், என். டி. ராம ராவ், கே. சாரங்கபாணி, ஏ. நாகேஸ்வர ராவ் ஆகி

'காலம் மாறிப்போச்சு' என்ற படத்தில் ஜெமினி கணேசனின் கோலம்.

யோரும் புகழுரைகள் கூறிய பின் ஸ்ரீ பிரஸாத் நன்றி தெரிவிக்கையில், படவுலகின் பல்வேறு பிரிவினரிடையே ஒற்றுமை ஒத்துழைப்பின் அவசியத்தை அறிவுறுத்தினர்.

இம்மாதிரி வைபவங்கள், திரையுலகில் மலிந்துவிட்ட போட்டி, பொருமையை ஓரளவாவது போக்க உதவுகின்றன என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

• • • •

சம்பூர்ண ராமாயணத்தைப் படம் பிடிப்பதென்ருல் சாமான்யமானதா? பூர்வாங்கமாக எவ்வளவோ வேலைகளைச் செய்தாக வேண்டுமே! அவற்றில் முழு மூச்சுடன் முனைந்திருக்கிருர் எம். ஏ. வி. பிக்சர்ஸ் அதிபர் ஸ்ரீ வேணு. பிரதான பாத்திரங்களில் சிவாஜி கணேசன், என். டி. ராம ராவ், நாகையா, பத்மினி, ஜி. வரலட்சுமி, டி. கே. பகவதி, நரசிம்ம பாரதி, எம். என். ராஜம் மற்றும் வி. கே. ராமசாமி, எம். ஆர். சந்தானலட்சுமி, கருணாநிதி, ஏழுமலை, சகாதேவன், முத்துலட்சுமி, இ. வி. சரோஜா, லட்சுமிப்ரபா, ராஜகாந்தம் போன்றோரைப் போடுவதெனத் தீர்மானித்த கையோடு, படப் பிடிப்புக்கான ஸ்தலங்களையும் பொறுக்கியெடுக்கத் துவங்கிவிட்டார். சமீபத்தில் இதற்காக அவர், 'சம்பூர்ண ராமாயண'த்தை டைரக்ட் செய்யப்போகும் சோமு, திரைக்கதை—வசனகர்த்தா ஏ. பி. நாகராஜன் முதலானேரோடு கன்யாகுமரி வரையில் சென்றிருந்தார். அங்கு ஹனுமான் கடல் தாண்டுவது, சேதுபந்தனம், பாற்கடலில் தேவர்கள் மஹாவிஷ்ணுவிடம் முறையிடுவது போன்ற காட்சிகளுக்கான இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனவாம். பின்னர் மைசூர் சென்று சிவசமுத்திரம் நீர்வீழ்ச்சியருகே ராமனின் பர்ணசாலைக்கான இடத்தையும், ஸீதையைத் தேடி ராம லட்சுமணர் அலைவதற்கான காட்டைத் தலைக்காடுக்கருகிலும் தேர்ந்தெடுத்தனராம். அப்புறம் கேரளத்துக்கும் சென்று, கொயிலாண்டிக்கருகே கணையங்கோடு நதியில் குகன் படகோட்டும் காட்சியைப் படம் எடுப்பதென்றும், அவ்வட்டாரத்திலேயே விஸ்வாமித்ராின் யாகசாலையைப் பாலராமன் காக்கும் காட்சியை எடுப்பதென்றும் தீர்மானித்தனராம்.

இவ்வாறு தமிழ் நாட்டுக்கு அப்பாலும் சென்று ஏராளமான பொருட் செலவில் ராமாயணத்தைப் படம் பிடிக்கத் திட்டமிட்டு வருகையில், எம். ஏ. வி. பிக்சர்ஸார் தங்கள் மற்றொரு படமான 'செங்கமலத் தீவை'யும் தயாரிக்கிருர்கள். இதில் சிவாஜி கணேசன், வி. கே. ராம

சாமி, டி. கே. ராமச்சந்திரன், சகாதேவன், கருணாநிதி, ஏழுமலை, எம். என். ராஜம், முத்துலட்சுமி தவிர குமாரி பத்மினி பிரியதர்சினியும் நடிப்பது வாசகர்கள் அறிந்ததே. இதுவன்றி ஸ்ரீ வேணு மேற்பார்வையிலேயே ஸ்ரீ லட்சுமி பிக்சர்ஸாரின் 'பாட்டி சொன்ன கதை'யும் வளர்ந்து வருகிறது. இதிலும் சிவாஜி கணேசனுடன் மேற்கூறியவர்களில் பத்மினி பிரியதர்சினி தவிர மற்றவர்களும், இன்னும் கண்ணாம்பா, ஜி. வரலட்சுமி, சாய்ராம், பி. டி. சம்பந்தம், ராஜகாந்தம் முதலானவர்களும் நடிக்கிறார்கள். இரண்டுக்கும் டைரக்டர் கே. சோமு தான். ஏ. பி. நாகராஜன்தான் இரண்டின் கதை–வசனத்தை எழுதியிருப்பவரும். இரு படங்களுக்கும் பாடல்களை எழுதியிருப்பவர் கா. மு. ஷெரீப்; இசை அமைப்பவர் கே. வி. மகாதேவன்.

* * * *

அமரர் 'கல்கி'யின் தலைசிறந்த சரித்திர நாவலெனலாம் 'சிவகாமியின் சபத'த்தை. ராமாயணம், பாரதத்தைப் படம் பிடிக்க எவ்வளவு அசுர முயற்சி தேவையோ அவ்வளவு முயற்சி இதற்கும் அவசியமாகும். எனவேதான் அவசரப்பட்டு படம் பிடிக்க முற்பட்டுவிடாமல் ஆற அமரப் பூர்வாங்க வேலைகளைச் செய்து, பிரமாதமான முறையில், தென்னாடு பெருமைப்படும் வகையில் படம் பிடிப்பதென்றும், இடையில் சமூகப் படமொன்றை எடுத்து விடுவதென்றும் அருணா பிலிம்ஸார் தீர்மானித்தார்கள். ஆனால், நல்ல கதையாகக் கிடைக்கவில்லையாதலால் அதற்குப் பதில் சகுந்தலை–துஷ்யந்தன் கதையைப் படம் பிடிப்பதென இப்போது முடிவு செய்திருக்கிறார்கள். 'சிவகாமியின் சபத'த்தில் பிரதான பாகங்கள் ஏற்கவிருக்கும் சிவாஜி கணேசனும், பத்மினியுமே இதில் துஷ்யந்தன், சகுந்தலையாகத் தோன்றப் போகின்றனர். ஆர். எம். கிருஷ்ணசாமி டைரக்ட் செய்யப்போகும் இப்படத்துக்கு வசனம் எழுத 'இளங்கோவனை' அமர்த்தியிருக்கிறார்கள். விரைவில் படப் பிடிப்பு துவங்குமாம்.

'சகுந்தலை' யோடு மற்றுமொரு பழைய கதை–'அதிரூப அமராவதி'–யும் திரும்பவும் படமெடுக்கப்படவிருக்கிறது. நியூடோன் ஸ்டூடியோவினரும் விஜய்ஹிந்த் ப்ரொடக்ஷன்ஸாரும் கூட்டாக எடுக்கவிருக்கும் இப்படத்தில் எம். ஜி. ராமச்சந்திரன், பானுமதி, ராஜசுலோசனா, தங்கவேலு, சந்திரபாபு முதலானோர் நடிக்கப் போகின்றனர். கே. ராம்னாத் டைரக்ட் செய்யவிருக்கும் இப்படத்திற்கு கதை, வசனம், பாடல்களை எழுதுபவர் ராமையா தாஸ்.

இவையிரண்டையும் தவிர இன்னொரு பழைய கதையான 'ரத்னவளி'யும் திரும்பப் படமெடுக்கப்படவிருக்கிறது, ஏ. டி. கிருஷ்ணசாமியால். அவரே டைரக்ட் செய்யவிருக்கும் இப்படம் ரேவதியில் தயாராகுமாம்.

'ஸ்ட்ரீட்லைட்' (தெருவிளக்கு) என்ற ஹிந்திப்படத்தில் ஷியாமா.

'எதிர்பாராத'தை எடுத்து யாரும் எதிர்பாராத வெற்றி கண்ட யூனிடி–சரவணபவா பிக்சர்ஸார், தாங்கள் தற்போது புல்லையா டைரக்ஷனில் நெப்ட்யூன் ஸ்டூடியோவில் தயாரித்து வரும் படத்துக்கு 'வணங்கா முடி' என்று முடிவாகப் பெயர் வைத்திருக்கிறார்கள். சிற்பியொருவனைப்பற்றிய இப்படத்தில் சிவாஜி கணேசன், நாகையா, எம். கே. ராதா, நம்பியார், தங்கவேலு, சாவித்திரி, கண்ணாம்பா, ராஜ சுலோசனா முதலானோர் நடிக்கின்றனர். கதை–வசனம் ஏ. கே. வேலனுடையவை. பாடல்களை தஞ்சை ராமையா தாஸ் எழுத, இசை அமைத்திருப்பவர் ஜி. ராமநாதன்.

நெப்ட்யூனிலேயே தயாராகவிருக்கும் மற்றொரு படம் 'தங்கப்பதுமை'. பிரமாதமான முறையில் ஏ. எஸ். ஏ. சாமி டைரக்ஷனில் எடுக்கப் போவதாக ஜூபிடர் பிக்சர்ஸார் அறிவித்திருக்கும் இப்படத்தில் சிவாஜி கணேசன், பத்மினி, என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம் முதலானோர் நடிப்பராம். கதை, வசனத்தை அரு. ராமநாதன் எழுதுகிறாராம். கே. ராம்னாத் டைரக்ஷனில் 'கற்புக்கரசி' என்ற படத்தைச் சொந்தமாகவும், ஏ. எல். எஸ். ப்ரொடக்ஷன்ஸ் கூட்டுறவுடன் பாலசந்தர் டைரக்ஷனில் 'கன்னியின் சபதம்' என்ற படத்தையும் ஜூபிடர் பிக்சர்ஸார் ஏற்கெனவேயே தயாரித்து வருவது வாசகர்கள் அறிந்ததே.

தமிழ் நாட்டில் பெரு வெற்றி பெற்று வரும் கிருஷ்ணா பிக்சர்ஸின் 'மதுரை வீரன்' ஹிந்தியிலும் வெளியாகவிருக்கிறது....

ஏ. வி. எம். தயாரிப்பான 'பாய் பாய்' (ஹிந்தி 'ரத்த பாசம்') இந்த வாரம் வடநாட்டில் திரையிடப்படுகிறது. இதில் ஸ்ரீமதி கமலா லட்சுமணின் நடனமும் சேர்க்கப்பட்டுள்ளதாம். . .

ஃ ஃ ஃ

சமீபத்தில் இரண்டு நட்சத்திரங்கள் புதிய கார் வாங்கினர்கள். ராஜசுலோசனா ஒரு 'பிளிமத்' கார் வாங்கியுள்ளார். 'சௌகார்' ஜானகி ஒரு 'ஸ்டுடிபேக்கர்' வாங்கியுள்ளார். ரங்காராவ், ஜெமினி கணேசன், சிவாஜி கணேசன், எம். ஜி. ராமச்சந்திரன், பானுமதி ஆகியோர் ஏற்கெனவே ஆளுக்கொரு பிளிமத் கார் வாங்கியுள்ளனர். முத்துலக்ஷ்மி இப்பொழுதுதான் ஒரு 'வாக்ஸால்' கார் வாங்கியிருக்கிறார். விரைவில் வவுசும்

சென்னை வெலிங்டன் டாக்கீஸில் தற்சமயம் ஓடும் 'எக்-ஹி-ராஸ்தா'வில்

விமர்சனம்

மதுரை வீரன்

மதுரை வீரன் கதையை அறியாதார் மிகச் சொற்பம். முன்னொரு முறை படமாகவும் வந்திருக்கிறது இது. எனவே கிருஷ்ணா பிக்சர்ஸார் இப்போது தயாரித்து வெளியிட்டிருக்கும் படத்தில் கதையம்சத்தைப் பொறுத்தவரையில் புதுமையேதும் இராதென்றே பலரும் நினைக்கக்கூடும். அப்படிப்பட்ட எண்ணத்துடன் இப்படத்தைப் பார்க்கச் செல்பவர்கள் ஏமாறுவது நிச்சயம். ஒவ்வொரு சம்பவத்துக்கும் புது மெருகு கொடுக்கப்பட்டிருப்பதுடன் அவை அடுக்கடுக்காகக் கோர்க்கப்பட்டுக் கடைசி வரை படத்துக்கு விறுவிறுப்பூட்டப்பட்டிருக்கிறது. குணசித்திரங்கள் உருவாகவும் போதுமான வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. அதே சமயத்தில் சகலமும் அளவோடு நிறுத்திக் கொள்ளப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். உண்மையில், தணிக்கையாளர் ஒரு அங்குலம்கூட வெட்டும்படி நேரவில்லையாம்!— இவ்விதம் கதை கையாளப்பட்டுள்ள முறைக்காக கிருஷ்ணா பிக்சர்ஸாரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

கதையில் மட்டுமல்ல, நடிப்பிலும் பூர்ணப்பொலிவையும், அளவறிந்த நிதானத்தையும் ஒருங்கே காண்கிறோம். குறை, மிகை என்பதே இல்லை, பிரதான நட்சத்திரங்கள் எவரிடமும். வாள் வீச்சிலே வல்லமையைக் காட்டும் எம். ஜி. ராமச்சந்திரன் வாய் வீச்சிலும் வேண்டிய மட்டும்—அந்த அளவுக்கு மட்டுமே—வெளுத்து வாங்குகிறார்; மதுரை வீரன் பாகத்துக்குப் பொருத்தமானவர் வேறு எவரும் இல்லை என்று சொல்லும்படியாகவே நடித்திருக்கிறார் அவர். பொம்மியாக வரும் பானுமதி பற்றிக் கூறத் தேவையில்லை; பண்பட்ட நடிப்பு அவருடையது. மதுரை வீரனை மயக்க மாய்மாலங்கள் புரியும்போது உள்ளத்தை கிளுகிளுக்க வைக்கிறாரென்றால், அவன் வெட்டுண்டு கிடக்கையில் மன்னவன் மீது சீறும்போதோ உள்ளத்தை உருகவே செய்துவிடுகிறார் அவர். அதே கட்டத்தில், வெள்ளையம்மாள் பாகமேற்றுள்ள பத்மினியின் நடிப்பும் நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது.. படத்தின் பிற்பகுதியில்தான் வருகிறார் அவர். ஆயினும் அந்த அளவிலும் பூர்ணத்வத்தைக் காண்கிறோம் அவர் நடிப்பில். கிருஷ்ணன்—மதுரம் ஜோடியும் மெருகேறிய ஹாஸ்யத்தையே வழங்குகிறது. ஆழ்வார் குப்புசாமியோடு, வில்லனாக வரும் பாலையாவும் சிரிப்பு அலை மோதச் செய்கிறார் பல இடங்களில்.

கிருஷ்ணா பிக்சர்ஸ் படமென்றால் காட்சி ஜோடனைக்கோ நடனங்களுக்கோ கேட்பானேன்! குசலகுமாரி, குமாரி லக்ஷ்மி, ஈ. வி. சரோஜா, லலிதா—ராகினி, நடனங்கள் ஆட வைத்திருக்கின்றனர். எம். ஜி. ஆர். கூட ஆடுகிறாரென்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்! இந்த ஆட்ட பாட்டங்களோடு பானுமதி, பத்மினியை வாளேந்திப் போர் புரியவும் செய்து படத்துக்கு தனிக் கவர்ச்சியூட்டியிருக்கிறார் டைரக்டர் யோகானந்த்.

பாட்டுகள் பலவற்றுடன் பின்னணி இசையும், ஒளிப்பதிவும் பாராட்டத்தக்கனவாக அமைந்துள்ளன, 'மதுரை வீரனி'ல். பாமர ரஞ்சகமான அம்சங்களோடு ஏனையோரும் ரஸிக்கும்படியாகவுள்ள இப்படம் பெருவெற்றி பெறுவது பொருத்தமே.

*

சதாரம்

சதாரம் கதையும் சகலரும் அறிந்ததே. இதுவும் முன்பு படமாக வந்திருப்பதுதான். எனினும் கஸ்தூரி பிலிம்ஸார் தற்சமயம் தயாரித்து வெளியிட்டிருக்கும் படமானது நட்சத்திர வரிசை மூலம் புதுக் கவர்ச்சி பெற்றுள்ளது. ஒவ்வொரு பாத்திரத்துக்கும் பொருத்தமான நட்சத்திரத்தைப் பிடித்துப் போட்டிருக்கிறார்கள். இதற்காகவே பாராட்ட வேண்டும் அவர்களை.

சாஹஸம் மிகுந்த சதாரம் பாத்திரத்துக்கு பானுமதியைவிட ஏற்றவர் இருக்க முடியாது என்ற முடிவுக்கே வருகிறோம் படத்தைப் பார்க்கும்போது. குறிப்பாக, ஆண் உடையில் அவர் அல்லாடுவது அசர வைத்துவிடுகிறது. அவருடைய கணவனாக வரும் ஜெமினி கணேசனோ விதியின் சதிக்காளாகி நம் அனுதாபத்தைப் பூரணமாகப் பெற்று விடுகிறார், வீரச் செயல்கள் பல புரிந்தபோதிலும். கள்ள பார்ட் ஏற்றிருப்பது கே. ஆர். ராமசாமி. கேட்க வேண்டுமா, டப்பாங் குத்துப் பாட்டுகளிலும் நடனங்களிலும் தமக்கு நிகர் தாமேதான் என்பதை மற்றொரு முறை நிரூபித்துக் காட்டியிருக்கிறார்.

சதாரத்தின் சமர்த்துச் சகோதரனை அழகு என்ற பாத்திரத்தை ஏந்தியிருப்பவர் சாரங்கபாணி. இவருக்காகவேதான் அந்தப் பாத்திரம் நம் பழைய நாடக மேடையில் உருவாகியதோ என்று எண்ணும்படியாகவே செய்கின்றன அவருடைய கோமாளித்தனங்களெல்லாம். இப்படத்திலும் வில்லனாக வருபவர் பாலையா தான். இதிலும் கோழையாக நடித்து கொட்டகையை அதிரவைக்கிறார் அவர்.

வசனங்கள் நல்லபடி அமைந்திருப்பதும் குறிப்பிட வேண்டிய விஷயம். பாடல்களும் பரவாயில்லையென்றாலும் அழகின் அழகான ராஜ்ய நிர்வாக விளக்கப் பாட்டும், 'சுண்டல்' பாட்டும் அவ்வளவாக அவசியமில்லாதவையே. இதே மாதிரி கே. ஆர். ராமசாமி கூத்தடிப்பதும்—அவற்றை விரும்பி ரஸிப்போருக்கும் கூட—அளவுக்கதிகம்தான். அவரோடு ஜெமினி கணேசனையும் ஆடிப் பாடச் செய்து, புலி வேஷ ஆட்டத்தையும் புகுத்தி, 'ஸ்டண்டு'களையும் நிறைய நுழைத்து பட வெற்றிக்குப் படாதபாடு பட்டிருக்கிறார் டைரக்டர்—தயாரிப்பாளரான சுப்புராமன்.

★

ஆவாஸ்

மத்தியதரக் குடும்பமொன்றின் அல்லல் பற்றியது மெஹ்பூப் தயாரிப்பான 'ஆவாஸ்'. பிரத்தியட்ச வாழ்க்கைப் பிரச்னைகளைப் பிரமாதமான முறையில் காட்டப் புகுகிறதாயினும் அவற்றைத் தீர்க்கும் வழியைக் காட்டாமல் கடைசியில் வழக்கம்போல தற்கொலையில் முடிப்பது ஏமாற்றமளிப்பதாகவே இருக்கிறது. இதோடு, சம்பவங்களும் துண்டு துண்டாக, வெகு நேரம் இழுக்கடிக்கின்றன. அவற்றினால் அலுப்புத் தட்டாமல் காப்பது தகப்பனாராக வரும் அன்வர்தான்; குணசித்திரக் களஞ்சியமாக இருக்கிறது அவர் நடிப்பு. அவருக்கடுத்தபடி நற்பெயரெடுப்பவர் நாட்டுப்பெண்ணாக வரும் நளினி ஜெயவந்த். தாயார் பாகமேற்றிருக்கும் லீலா சிட்னிஸும் தம் பழைய திறனைக் காட்டுகிறார். மகளாகவும், மகனாகவும் வரும் உஷா கிரணும், ஸுல் வெல்லாணியும் சோபிக்கவேயில்லை.

சில பாட்டுகளும், ஒளிப்பதிவும் நன்கு அமைந்துள்ளன, தற்சமயம் சென்னை ஸ்டார் டாக்கீஸில் காட்டப்பட்டு வரும் இப்படத்தில்.

பிரஸித்த டைரக்டர் பிரஸாதை படத்தொழிலிலுள்ள அவரது சிஷ்யர்கள் சேர்

நகர அரங்கம்

ஆசிரியர் 'தேவன்' எழுதிய 'ஸ்ரீமான் சுதர்சனம்' எனும் நாடகத்தை ரிசர்வ் பாங்கி உத்தியோகஸ்தர்கள் பொழுது போக்குச் சங்கத்தினர் ஏப்ரல் முதல் தேதி அண்ணுமலை மன்றத்தில் நடித்தனர். ஸ்ரீமான்கள் சந்தானம் (சுதர்சனம்), கே. எஸ். மணி (பரமேஸ்வர முதலியார்), பிச்சுமணி (கோமளி), வாசுதேவன் (ஸ்ரீநிவாஸன்) ஆகியோரின் நடிப்பு நன்ருக இருந்ததாம். தலைமை வகித்த மந்திரி ஸ்ரீ பக்தவத்ஸலம் நடிகர்களின் திறமையைப் பாராட்டிப் பேசினர்.

ஃ ஃ ஃ

தென்னிந்திய சினிமாப் பத்திரிகையாளர் சங்கத்தின் நிதி உதவிக்காக அடையார் நாடக மன்றத்தினர் "அவள் நினைவு" எனும் சமூக நாடகத்தை கடந்த 12-ந் தேதி மயிலை ரஸிக ரஞ்சனி சபை ஹாலில் நடத்தினர். திருவல்லிக்கேணி பைன் ஆர்ட்ஸ் கிளப்பைச் சேர்ந்த ஸ்ரீ என். எஸ். நடராஜனின் திறமையான டைரக்ஷன், ஜெமினி ஸ்டூடியோவின் நேர்த்தியான உடையலங்காரங்கள், கலை சாகர் ராஜகோபாலனின் அழகான காட்சி ஜோடனைகள் முதலியவற்றினுல் நாடகம் வெகுவாக சோபித்தது. மிஸ்டர் மாத்ஸ் பாகமேற்ற எஸ். பிரபாகர் முன் தடவைகளைப் போலில்லாமல் அன்றைய தினம் கொஞ்சம் மிதமிஞ்சி நடித்தார். இதர நடிகர்களின் நடிப்பு பரவாயில்லை. நடிகைகளுக்கு ஆகிருதி போதாது. நாடகத்தை எழுதியவர் ஸ்ரீ என். வி. நடராஜன். பொதுவாக நடிப்பில் மெருகேறினுல் இன்னும் நாடகம் சிறந்து விளங்குவது உறுதி.

திறமையுள்ள அமெச்சூர் நடிகர்களைப் படவுலகுக்கு அறிமுகம் செய்ய வேண்டுமென்பதும் பத்திரிகையாளரின் நோக்கமாதலால் அன்றைய தினம் பிரபல நட்சத்திரங்களும், பல படாதிபதிகளும் வந்திருந்தனர். அவர்களில், இடைவேளையின்போது பேசிய ஸ்ரீ என். டி. ராம ராவ், நாடகத்தையும், அதில் பங்கு கொண்டவர்களையும் பெரிதும் பாராட்டினுர்.

ஃ ஃ ஃ

ஸ்விட்ஸர்லாந்தைச் சேர்ந்தவரும், அஞ்சலி என்று பெயர் வைத்துக்கொண்டிருப்பவருமான குமாரி அனி ப்ரன்னர், நாட்டிய கலா பூஷணம் பட்டம் பெற்றிருக்கும் குமாரிகள் ரோஷன் வஜிப்தார் (பம்பாய்), மினுதி தாஸ் (ஒரிஸா), கே. ஆர். கீதா (சென்னை) ஆகிய நால்வரும் சென்ற வியாழக்கிழமை ஒரே மேடையில் தோன்றி பரத நாட்டியமாடினுர்கள். இந்திய நுண்கலைக் கழகத்தின் மாணவிகளான இவர்கள் நாட்டிய கலா விசாரத பந்தநல்லூர் ஸ்ரீ சொக்கலிங்கம் பிள்ளையின் சிஷ்யைகள்.

மேற்படி கழக நிதி உதவிக்காக எழும்பூர் மியூஸியம் தியேட்டரில் இந் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஸ்விஸ் மாது சிரத்தையுடன் ஆடி கரகோஷம் பெற்ருர். ரோஷன் வஜிப்தார் அர்த்தபுஷ்டியுடன் அபிநயம் பிடித்தார். இவரைவிட நல்ல தாளக் கட்டுடன் ஆடினுர் மினுதி தாஸ். கச்சிதமாக ஆடி மற்ற மூவரையும் மிஞ்சினுள் சிறுமி கீதா.

ஃ ஃ ஃ

'அந்தமான்கைதி' என்னும் நாடகத்தை திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூல் அருங்கலைச் சங்கத்தினர் மார்ச் 31-ந் தேதி தங்கள் பள்ளிக்கூடத் திறந்த வெளி அரங்கில் நடித்தனர். ஏழை மாணவர்களின் மத்தியானச் சாப்பாட்டு நிதி உதவிக்காக இந்நாடகம் ஏற்பாடு செய்யப்பட்டது.

திவான் பஹதூர் பொன்னம்பலம் பிள்ளையாகத் தோன்றிய எம். வைத்தியநாதன் நடிப்பு முதல் தரம். 'லீலா'வாக வந்த ஆர். கணபதி மிகவும் இயற்கையாக நடித்தார். ஆனுல் குரல் சரிப்பட்டு வரவில்லை. 'நடராஜன்' பாகமேற்ற எம். கோவிந்தராஜன் இன்னும் உழைத்து நடிக்க வேண்டும். 'காமாட்சி' எஸ். ஸ்வாமிநாதன் தம் பாகத்தை உணர்ந்து கூடியமட்டில் திறம்பட நடித்தார். 'முனியாண்டி' என். ஸ்ரீனிவாசன், 'பால சுந்தரம்' எஸ். கணேசன், 'ஜம்பு' எஸ். கோதண்டராமன் ஆகியோர் பரவாயில்லை.

பள்ளிக்கூடத்தின் பழைய மாணவரும், பிரபல நடிகருமான ஸ்ரீ எஸ். வி. ரங்க ராவ் (பி. எஸ்ஸி.,) நாடகத்துக்குத் தலைமை வகித்து மாணவ நடிகர்களின் திறமையைப் புகழ்ந்தார். ஷை நிதிக்கு ரூ. 500-ம், ஆண்டுதோறும் சிறந்த நடிகருக்கு வழங்குவதற்கென சுழல் வெள்ளிக்கோப்பையொன்றும் அளிப்பதாக அவர் அறிவித்தார்.

ஃ ஃ ஃ

சென்னை ஹைகோர்ட் காரியாலய ஊழியர்களின் பிரத்தியேகப் பொழுது போக்குக்காக மார்ச் 29-ந் தேதி செயிண்ட் மேரீஸ் ஹாலில் சட்டம் பயிலுபவர்கள், ஜூனியர் வக்கீல்கள் சங்கத்தினர் இரு குட்டி ஹாஸ்ய நாடகங்களை நடித்தனர். ஒன்று, ஆங்கில நாடகம். அதன் பெயர் 'யோக்கியதையில்லாத வெற்றி'. மற்றதோ 'முதல் தேதி' என்னும் தமிழ் நாடகம். ஆங்கில நாடகத்தைத் தயாரித்தவர் அட்வொகேட் ஸ்ரீ ஆர். துவாரகநாத். அவரைத் தவிர ஸ்ரீமான்கள் பி. பி. காந்தன், ஸி. லக்ஷ்மி நாராயண், எஸ். செல்லப்பா, எஸ். மீனுட்சிசுந்தரம், ஸ்ரீமதி சரோஜினி அஜ்வானி ஆகியோர் இந்நாடகங்களில் பங்கெடுத்துக் கொண்டனர். இரண்டிலும் சட்ட மாணவர் ஸ்ரீ எஸ். செல்லப்பா அமர்க்களமாக நடித்து, கூடியிருந்தோரைப் பரவசப்படுத்தினுர்.

சென்னை ஹைகோர்ட் ரிஜிஸ்ட்ராரும், சங்கத் தலைவருமான ஸ்ரீ எஸ். கே. கஜேந்திரம் நாயுடு, நடிகர்களின் திறனை வெகுவாகப் புகழ்ந்தார்.

ரிஸர்வ் பாங்கி பொழுதுபோக்குச் சங்கத்தினர் நடித்த 'ஸ்ரீமான் சுதர்சனம்' நாடகத்தில் ஒரு காட்சி.

12-ந் தேதி எழும்பூர் மியூஸியம் தியேட்டரில் நடனமாடிய இந்திய நுண்கலைக் கழக மாணவிகள் மிஸ் மினுதிதாஸ், மிஸ் அனி ப்ரன்னர், பேபி கீதா மிஸ் ரோஷன் வஜிப்தாரும், [illegible]

மைசூர் வாசுதேவாச்சார் கீர்த்தனைகள்

ராகம் : கரஹரப்ரியா.] [தாளம் : ஆதி.

ஆரோஹணம் : ஸரிகமபதநிஸ்
அவரோஹணம் : ஸ்நிதபமகரிஸ } 22-வது மேளம்

பல்லவி

கான ஸுதா ரஸ பாநமு ஜேஸே
மானவுலே தந்யுலு ஈ புவிலோ (கா)

அநுபல்லவி

ஈ நர தேஹமு ஸ்திரமனி தெலியக
காந லோலுனி வாஸுதேவுநி மரவக (கா)

சரணம்

யோகி வரேண்யுடைன நாரத முனி க்ருபதோ
பாகவதா க்ரேஸருடநி வெலஸின
த்யாகராஜுனி மரி மஹாத்முலநு தலசுகொனி
ராகலயாதுலனு பாகுக தெலுஸுகொனி (கா) (36)

ப:—கானமாகிற அம்ருத ரஸத்தை பானம் செய்யும் மனிதர்கள்தான் இவ்வுலகில் தன்யர்கள்.

அ-ப:— இந்த நர தேஹம் நிலையென்று தெரிந்துகொள்ளாமல், (நிலையில்லையென்று தெரிந்து) கானப்ரியனுன ஸ்ரீ க்ருஷ்ணனை மறக்காமல் கானம்ருத பானம் செய்யும் மனிதர்களே பெரியோர்.

ச:— மஹா யோகிகளில் உயர்ந்தவரான, தேவரிஷியான நாரதரின் க்ருபையால் பகவானிடத்தில் பக்தி செய்பவர்களில் முன் நிற்பவரென்று விளங்கும் ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமியையும், மற்றும் மஹான்களையும் மனதில் (எண்ணிக்கொண்டு) (ஸ்ரீ) த்யானித்துக் கொண்டு ராக லயாதிகளை நன்ருகத் தெரிந்துகொண்டு (கான ரஸத்தை) அனுபவிக்கும் மனிதர்கள் இவ்வுலகில் தன்யர்கள் அவார்கள்.

ராகம் : கரஹரப்ரியா.] [தாளம் : ஆதி.

பல்லவி

,,, க ரி க மா பா , , பதபா தஸ்	ஸ்நிநித மபநிதபா தபமா	, , , தப மககா ரீ
... கா ந ஸ ` . தா ..... ரஸ	பா. .... நமு	ஜே ஸே.. .
,,, ரிகமபத பத பதநிஸ் தநித பாதப	மாமக க ரி ரீ , ,	ரிகரிக ரிஸநிஸ . , ரிபபம
மா ந வு லே .... த ...	.. ந்யு லு..	ஈ .... பு. வி.
மகமகரிஸ ரி க ம மா நிதாம பாபாதப தநிரிஸ்	ஸ்நிநித மபநிதபா நிதபமா,	, , , தப மககா கரிரீ
லோ ... கா . ந .ஸ ` தா. . ..... ர . ஸ.	பா .... ந. . மு. .	... ஜே ஸே.. ...
,,, ஸ் நிதநீ பதநிஸ் ரிக்ரிஸ் தநீத பாதப	மாமக க ரி ரீ , ,	ரிகமப தநிஸ்ரி ஸ்நிதநி பமகரி
மா . நவு லே. . ... த...	.. ந்யு லு. ...	ஈ .... பு ..வி

, ப மகரிஸ (கானஸ ` தா)
. லோ ....

அநுபல்லவி

, , , ஸ்ா ஸ் ஸ்ா ஸ்ா, நிதா, நி ஸ்ஸ்ஸ்ா	, , , நிக் ரிஸ்ா	ஸநி தநி ஸ்ாரிஸ் நிதநீ தநிதநி
ஈ ந ர . தே. .... ஹ மு	.. ஸ்திரமனி	தெ. வி. . ... ய க . . .
தப மபதநி ஸ்ாஸ்ஸ்ா த நிஸ்ரி ம்க்ாரீஸ் ஸ்ஸ்ா	, , . ரிம்க்ரி ஸ்ஸ்ா	ஸ் நி தநிஸ்ாரிஸ் நீதநீ நிததா
. ... ஈ ந ர . தே ... . ஹமு	ஸ்திர மனி	தெ. வி . ... ய க. .
, , , நிஸ்நிக்ரீ ஸ்ா நீ நி ததா தநி தநிஸ்நி	ஸ்ா, த நித பதநித	தநிதநிதநி தபமாகா ரிகமப
... கா . . ந லோ லுநி ... வா ஸ ` ...	. . தே.வு நி ...	.... ம ... ர. வ. க.

மக மகரிஸ (கான ஸ ` தா ரஸ)
.. ....

சரணம்

, , , பா ப ப பா பா , , , ம ப த	பதநிதநீ தநி தபா	பம மக மபாம மாமக ரிக
... யோ\ கிவ . ரே . . ண்யுடை.	ந .... நா. ரத.	மு னி. .... க்ருப
கரிரீ , , ரிபம மாபம கரிரீ ரி க மக கரிரிஸ	ஸா, ரி க ம பா	, தா பா தநி தா நிபா
தோ. . பா .க வ .. தா .. க்ரே	... ஸருடநி.	. வெ.ல... ... ஸின.

த்யாகராஜு ` னி மரிமஹாத்முலநு தலசுகொனி (ஸ்ரீ)
ராகலயாதுலனு பாகுக தெலுஸ ` கொனி ..

விருது விழா

சங்கீத, நாடக அகெடமி ஆதரவில் இம்மாதம் 11-ந் தேதி டில்லி செங்கோட்டையில் நடைபெற்ற வைபவமொன்றிற்குத் தலைமை தாங்கிய ஜனாதிபதி ராஜன் பாபு, அகெடமியின் வருடாந்தர விருதுகளைக் கலைஞர்களுக்கு வழங்கினர்.
விருதுகளைப் பெற்ற கலைஞர்கள் (இடமிருந்து வலம்):— 1. ஸ்ரீ பிஸ்மில்லாகான் (ஷனாய் வாத்திய சங்கீத நிபுணர்) 2. ஸ்ரீ டி. எஸ். பாலக்காடு மணி அய்யர் (கர்நாடக வாத்திய இசை நிபுணர்) 3 ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலட்சுமி (கர்நாடக ச[illegible] நிபுணர்) 4. குரு குஞ்சு குருப் (கதகளி [illegible]

கிருஷ்ணா பிக்சர்ஸ் 'மதுரை வீரனில்' ராகினியின் நடனத் தோற்றம்.

L. 259-X52 TM

இந்தியாவில் தயாரித்தது

Printed and Published by N. Rajagopalan, at the 'Swadesamitran' Press, 'Victory House' Mount Road, Madras, Editor: C. R. Srinivasan, B. A.